

பெரியபுராணம் திருமுறைகளின் கவசம்

முதுமுனைவர் தீ.ந. இராமச்சந்திரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பெரியபுராணம்
திருமுறைகளின் கவசம்

முதுமுனைவர் தி.ந. இராமச்சந்திரன்
கௌரவ இயக்குநர்
சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்
தருமபுரம் ஆதினம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப்
பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113

இராமலிங்கம் அபிராமி அறக்கட்டளை

அறக்கட்டளைச் சொற்பொழிவு - 1

(10-6-2005)

அறக்கட்டளை நிறுவியவர்: **டாக்டர் ஏ.ஆர்.ஏ. சிவக்குமார்**, சிங்கப்பூர்

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Periyapurāṇam tirumuṟaikaḷiṉ kavasam
Author	:	Dr. T.N. Ramachandran, D.Litt.
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Chennai - 600 113. Ph: 22542992
Publication No.	:	539
Language	:	Tamil
Edition	:	First Edition
Year of Publication	:	2005
Paper Used	:	18.6 Kg. TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	10 points
No. of Pages	:	vi + 178
No. of Copies	:	1200
Price	:	Rs. 55/- (Rupees fifty five only)
Printing	:	United Bind Graphics 101-D, Royapettah High Road Luz, Mylapore, Chennai - 600 004
Subject	:	Doctrine of Saiva Siddhantam

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அணிந்துரை

இந்நிறுவனத்தில் திருமுறைகள் பற்றிய ஆய்வுக்கென்று ஓர் அறக்கட்டளையைச் சிங்கப்பூர் தமிழ்ப் பேராசிரியர் சிவநேயர் முனைவர் ஏ.ஆர்.ஏ. சிவக்குமார் அவர்கள் தம் பெற்றோர் பெயரால் நிறுவினார்.

இவ்வறக்கட்டளை **இராமலிங்கம் அபிராமி அறக்கட்டளை** என்ற பெயரில் இந்நிறுவனத்தில் அமைக்கப் பெற்றுள்ளது. இது இவ்அறக்கட்டளையின் முதற் சொற்பொழிவாகும். இவ் அறக்கட்டளைச் சொற்பொழிவை நிகழ்த்துபவர் தஞ்சையைச் சேர்ந்த வழக்குரைஞர் சேக்கிழார் அடிப்பொடி முதுமுனைவர் தி.ந. இராமச்சந்திரன் அவர்கள் ஆவார். இருமொழிப் புலமை வாய்ந்த இப்பெருந்தகை தமிழின் அனைத்துத் துறைகளிலும் புலமை பெற்றவர். சைவசித்தாந்தம், சைவத் திருமுறைகள், சங்க இலக்கியம் எனத் தமிழ் இலக்கியப் பரப்பின் மொத்த எல்லையையும் ஆய்ந்து கண்டவர்; சிறந்த மொழிபெயர்ப்பாளர். இத்தகு சிறப்பு வாய்ந்த முதுமுனைவர் தி. ந. இராமச்சந்திரன் அவர்கள் இவ்அறக்கட்டளையின் பொருண்மைக்கேற்பப் **பெரியபுராணம் திருமுறைகளின் கவசம்** என்ற தலைப்பில் சொற்பொழிவாற்ற இசைந்துள்ளார்கள். இப்பொழிவு பெரியபுராணத்தின் பல்வேறு சிறப்புகளை, அதில் தோய்ந்த நிலையில் ஆய்ந்து வெளிப்படுத்தியிருப்பது பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியதாகும். இவரது அறக்கட்டளைச் சொற்பொழிவை நூலாக வெளியிடுவதில் இந்நிறுவனம் பெருமை அடைகிறது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி (ம) வணிகவரித் துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் **திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இவ்வறக்கட்டளைக்குப் பொறுப்பாளராக இருந்து இந்நூலுக்குச் சிறந்த முறையில் மெய்ப்புத்திருத்தம் செய்த நிறுவன ஆராய்ச்சி உதவியாளர் திரு. த. பூமிநாகநாதன் அவர்களுக்கும் அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் நன்றி.

சென்னை
31-05-2005

இயக்குநர்

ஆசிரியர் பற்றி

"சேக்கிழார் அடிப்பொடி" என்று அறிஞர் உலகத்தில் அறியப்பட்ட தி.ந. இராமச்சந்திரன் தஞ்சை மாவட்டம் திருநெய்த்தானம் கிராமத்தைச் சேர்ந்தவர், இவருடைய பெற்றோர் நடராச ஐயர், காமாட்சி அம்மாள் ஆவர். 18-8-1934 அன்று திருநல்லம் (கோனேரிராஜபுரம்) என்ற ஊரில் பிறந்த இவர் தொடக்கக் கல்வியைத் திருநெய்த்தானத்திலும், பள்ளிக் கல்வியைத் திருவையாற்றிலும், இன்டர்மீடியட், பி.காம்., பட்டப்படிப்பைத் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியிலும், பி.எல்., சட்டக் கல்வியைச் சென்னை சட்டக்கல்லூரியிலும் பயின்றார். சென்னை உயர்நீதிமன்றத்தில் 9-8-1956 அன்று வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார்.

இவருக்கு 13-9-1956 அன்று திருமணம் நடைபெற்றது. துணைவியார் கல்யாணி அம்மையார். இவருக்கு நான்கு ஆண் குழந்தைகள், தஞ்சை மாவட்டத்தில் சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்த இவருக்குக் கவிஞர் திருலோகசீதாராமன் தொடர்பால் பாரதியாரின்பால் ஈடுபாடு அதிகரித்தது. இவர் பாரதியின் முப்பெரும் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். 1973இல் கவிஞர் திருலோக சீதாராம் மறைவுக்குப் பின்னர் அவர் நடத்தி வந்த 'சிவாஜி' இதழுக்கு இவர் ஆசிரியரானார்.

இவர் பெரியபுராணம் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். அது இரு தொகுதிகளாகத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. மாணிக்கவாசகரின் திருக்கோவையார் இவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. மாணிக்கவாசகரின் திருவாசகம் ஆங்கிலத்தில் இவரால் மொழிபெயர்க்கப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. திருநாவுக்கரசர் தேவாரத்தின் ஆறாம் திருமுறை இவரால் ஆங்கில மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுத் தருமபுரம் ஆதினத்தால் 1995ஆம் ஆண்டு உலகத் தமிழ் மாநாட்டின்போது வெளியிடப்பட்டது.

சைவசித்தாந்தச் சாத்திரங்களில் நெஞ்சுவிடுதூது, சிவப்பிரகாசம், போற்றிப் பஃறொடை, திருக்களிற்றுப் படியார், திருவுந்தியார், உண்மை

விளக்கம், இருபா இருபஃது ஆகியவற்றை இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். **வழிவழி பாரதி** என்ற நூல் இவரால் 2000ஆவது ஆண்டில் வெளியிடப்பட்டது. 2003ஆம் ஆண்டு சைவ தரிசனம் என்ற நூல் இவரால் இலண்டனில் வெளியிடப்பட்டது. இவரால் எழுதப்பட்ட, மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் 28 ஆகும்.

கலாசம்ரக்ஷண சங்கம் என்ற பெயரில் இவர் நடத்திவரும் பதிப்பகம் அரிய நூல்களை மறுபதிப்பு செய்து வருகிறது. தருமபுரம் ஆதினத்தில் நடத்தப்பட்டுவரும் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் கௌரவ இயக்குநராக இவர் 1987ஆம் ஆண்டு மார்ச் முதல் பணியாற்றி வருகிறார். அந்நிறுவனத்தில் பல்வேறு கருத்தரங்குகளை நடத்தியதோடு, அதன் ஆங்கில சஞ்சிகையையும் வெளியிட்டு வந்தார்.

இவருடைய இல்லத்தில் இவருடைய தந்தையார் பெயரில் ஒரு நூலகம் வைத்துள்ளார். நாற்பதாயிரம் நூல்கள் கொண்ட இந்நூலகத்தில் அரிய பழைய சித்தாந்த நூல்களும், இலக்கிய நூல்களும் உள்ளன. இவருடைய பணியைப் பாராட்டித் தமிழக அரசும், சைவ மடங்களும், பாரதி இயக்கங்களும் இவருக்கு விருதுகள் வழங்கியுள்ளன. பாரதி சித்தாந்த செம்மல், பாரதி சீர் பரவுவார், சைவசித்தாந்த கலாநிதி, சாகித்ய ரத்ன தீபம், சித்தாந்த கேசரி, சித்தாந்த சைவச் செம்மணி ஆகியவை இவர் பெற்ற விருதுகளாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இவரது சைவசித்தாந்தப் பணியைப் பாராட்டி 2001ஆம் ஆண்டில் இவருக்கு **டி.லிட்., பட்டம்** அளித்து சிறப்பித்துள்ளது. இவர் இலங்கை, இங்கிலாந்து, பிரான்ஸ், ஸபெயின், நேபாளம் முதலிய நாடுகளுக்குப் பயணம் செய்து அங்கே சைவசமயச் சொற்பொழிவுகள் ஆற்றிவந்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக் கழக நல்கைக்குழு நடத்தும் புத்தொளிப் பயிற்சி வகுப்புகளிலும் இவர் பாடம் நடத்தியுள்ளார். அறக்கட்டளைச் சொற்பொழிவுகளும் ஆற்றியுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதியைத் திருத்தி வெளியிட அமைக்கப்பட்டுள்ள உயர்நிலைக் குழுவில் இவர் ஓர் உறுப்பினர் ஆவார்.

எழுபது வயது நிறைவுற்றபோதும் இவரது தமிழ்ப்பணியும், ஆன்மிகப் பணியும் தொடர்ந்து வருகின்றன.

– இரா. சுப்பராயலு

முன்னுரை

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், பெரியபுராணம் பற்றி ஓர் அறக்கட்டளைச் சொற்பொழிவினை நான் நிகழ்த்த வேண்டும் என்று என்னைக் கேட்டுக் கொண்டதை நான் ஒரு பேறாகவே கருதுகிறேன். அடியார்கள் வரலாற்று நூலாகப் பெரியபுராணம் திகழ்வதை அனைவரும் அறிவர். இதுபோல் ஒரு நூல் எம்மொழியிலும் அமையவில்லை. பெரியபுராணத்திற்குப் பிறகே மராத்தியில் பக்த விஜயம் என்ற நூல் உருவாயிற்று. வைணவர்களின் குரு பரம்பரா பிரவாகம் என்ற நூலும் காலத்தால் பிற்பட்டதே. மேலும் இவ்விரண்டு நூல்களும் பெரியபுராணத்திற்கு ஒப்பான நூல்கள் என்று எவரும் கூற முடியாது.

வடமொழி தேவ பாஷை என்று போற்றப்படுகின்றது. என்றாலும் தமிழ் மகாதேவ பாஷை என்பதை யாரும் மறுக்க முடியாது. இதற்கான காரணத்தைக் கீழே நான் தர உள்ளேன்.

சைவரைப் போல் வைணவரும் தமிழுக்குத் தனியிடம் அளித்துப் போற்றுவர். வைணவ வியாக்கியானம் தமிழை 'சர்வாதிகாரம் படைத்த திராவிட பாஷை' என்று வருணித்திருக்கிறது. நிகமாந்த தேசிகர் தமிழ் ஒரு 'ஸ்வைர பாஷா' (ஒருதனிச் செம்மொழி) என்று அறிவித்திருக்கிறார். பழ மறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலாகவே திருமால் திகழ்கிறார்.

சைவத் திருமுறைகள் முத்தமிழின் நீர்மை அளவிடற்கு அரிது என்று நிறுவியுள்ளன. தமிழின் ஆற்றல் அளப்பரிது. மகாகவி பாரதியாரும் 'தமிழ்' ஆதி சிவன் வழங்கிய கொடை என்று அருளியுள்ளார்.

தமிழின் பெருமையைப் பெரிய புராணம் சாற்றியிருப்பது போல் எந்நூலும் கூறவில்லை என்பது என் துணிபு. மன்னவர் திருவும் வைதிகத் திருவும் பொங்க விளங்கியவர் நம்பி ஆரூரர். அவரை, முந்தை மறை ஆயிரம் மொழிந்த திருவாயானான கண்ணுதற் கடவுள் தடுத்தாட்கொண்ட செய்தியை அனைவரும் அறிவர். தடுத்தாண்ட

பெருமானும் சுந்தரரிடம் தம் அருள் விளையாட்டுப் பற்றி இப்படி அருளினார்.

"முன்புநீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப்
பின்பு நம் ஏவலாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர் வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாம் தடுத்தாண்டோம் ..."

மேலும் அப்பெருமான் நம்பி ஆரூரர்க்கு அருளிய செய்தி யாது?

"மற்று நீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கு அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக" என்றார் தூமறை பாடும் வாயார்.

யாண்டும் எஞ்ஞான்றும் வேதங்களைப் பாடும் சிவபெருமான் தம் மேல் சுந்தரர் சொற்றமிழ் பாடுதல் வேண்டும் என்றே பணித்ததிலிருந்து, மகாதேவர் உகக்கும் மொழி தமிழ்மொழி என்பது அற்புதமாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும் சிவனார் அருளிய மேற்சொன்ன பாடலில் 'வன்மை பேசி வன்தொண்டன்' என்ற சொற்றொடர் வருகிறது. 'பேசி' என்ற சொல்லின் ஈற்றில் வருவது 'சி' என்ற எழுத்து; 'வன்தொண்டன்' என்ற பெயரில் முதலில் வரும் எழுத்து 'வ' என்பது. இரண்டும் அடுத்தடுத்து அருளப்பட்டன. ஆகவே 'சிவ' என்ற அற்புத மந்திரம் வெளிப்பட்டது. சித்தமலம் அறுவித்துச் சுந்தரரை எம்மிறை சிவமாக்கிய அருள் இங்ஙனம் தெய்வச் சேக்கிழாரால் சூசிப்பிக்கப் பட்டிருக்கிறது.

"மெய் வைத்த காலும் ஒரு ஞாலம் அளித்த மேன்மைத்
தெய்வத் தமிழும் தருஞ் செவ்வி மணம் செய் ஈரம்."

இக்கருத்தைப் போற்றும் பாரதியார் தமிழின் பெருமையை இப்படிப் போற்றுகிறார்.

"வான மளந்த தனைத்து மளந்திடும்
வண் மொழி வாழியவே!"

"வானமறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழிய வே."

மேலும் பாரதியார் தாம் பாடிய பாடல் தொகுதி ஒன்றைச் சரசுவதிக்கு அர்ப்பணித்து, அப்பாடல்கள் பக்தியோடு சாக்கிய நாயனார் இட்ட கற்கள் என்றும் கூறியுள்ளார்.

ஆகவே பெரியபுராணம் ஒரு முத்தமிழ்ப் பெட்டகம். முத்திக்கு வித்து.

கல்வெட்டு, பழைய சோழர் காலத்து ஓவியம், செப்பேடு, சரித்திரச் சான்றுகள் அன்னபிற பெரியபுராணம் அசைக்க முடியாத, ஆதார பூர்வமான உண்மை வரலாறு கூறும் பனுவல் என்று காட்டியுள்ளன.

தேவாரப் பதிகங்களைப் பெரியபுராணம் மூலமே நாம் புரிந்து கொள்ள முடியும். பதிகம் தோன்றிய இடம், காலம், சூழல் முதலியவற்றை யோகக் காட்சியில் கண்டருளிய சேக்கிழார் அடிகள், நாம் உய்யும் பொருட்டு பெரியபுராணத்தில் பதிவு செய்து வைத்திருக்கிறார். பதிகங்களின் சாரத்தையும், உட்கருத்தையும் அவரால் மட்டுமே வெளியிட முடிந்தது.

தமிழ்ச் சைவர் பரம பாக்கியசாலிகள். அவர்களுக்கான திருமுறைகளும், சாத்திரங்களும் தமிழிலேயே அருளப்பெற்றுள்ளன. இப்படி ஒரு பேறு எவரே பெற்றார்!

"பொதிகை மலை விட்டெழுந்து சந்தனத்தின்
புது மணத்தில் தோய்ந்து பூந்தாது வாரி"

என்று தொடங்கும் ஓர் அற்புதப் பாடலை நமக்குத் தந்தவர் பாரதிதாசன். இப்பாடலில் அவர் வழங்கி உள்ள கருத்துக்கள் அனைத்தும் பண்டே சேக்கிழார் பெருமானால் அருளப்பட்டவை என்பதை நான் வரைந்த 'வழி வழி பாரதி' என்ற நூலில் விவரமாகக் காட்டியுள்ளேன். இங்கே சுருக்கமாக ஒரே ஒரு செய்தியை மட்டும் கூறுவல்.

ஒற்றியூரில் சங்கிலியாரோடு இன்ப வாழ்வு நடத்துகிறார் சுந்தரர். அக்காலத்தில் அவருக்குத் திருவாரூர் வசந்த உற்சவம் நினைவிற்கு வருகிறது.

"திருவாரூர் அணிவீதி அழகர் அவர் மங்கல நாள் வசந்தம்
எதிர் கொண்டருளும் வகை நினைந்தார்."

வசந்த உற்சவம் தென்றலோடு கூடி வரும். எப்படிப்பட்ட தென்றல் அது? சேக்கிழார் பெருமான் கூறுகிறார்.

"பொங்கு தமிழ்ப் பொதிய மலைப் பிறந்து பூஞ்சந்தனத்தின்
கொங்கணைந்து குளிர்சாரல் இடைவளர்ந்த
கொழுந்தென்றல் ..."

தென்னந்தமிழுடன் பிறந்த சிறுகால் அரும்பும் பெற்றியைச் சேக்கிழார் இங்ஙனம் வருணித்து உள்ளார்.

தெய்வச் சேக்கிழாரை மகாகவி பாரதியார் எங்ஙனம் சுவைத்திருக்கிறார் என்பது பற்றி ஒரு சிறிது காண்போம். மூர்த்தி நாயனார் புராணம் வரைய முன்வருகிறார் சேக்கிழார் அடிகள். மூர்த்தியார் அவதாரம் செய்த தலம் மதுரை. தமிழ்நாடு என்று சொன்னாலே அது பாண்டிய நாட்டைக் குறிக்கும். மதுரையில் கண்ணுதற் கடவுளும் கழகமோடு அமர்ந்து தமிழ் வளர்த்தான். ஆகவே இப்புராணத்தில் தமிழின் மேன்மையை இப்படி நம் அடிகள் அருளியுள்ளார்.

"மொய் வைத்த வண்டின் செறி சூழல் முரன்ற சந்தின்
மை வைத்த சோலை மலயந் தர வந்த மந்த"

பெரிதாந் திருப்பதிகம், பண்ணினால் நீடி அறிவரும் பதிகம், பண்தரும் இன்னிசை பயின்ற திருப்பதிகம், சந்த இசைப்பதிகம், நீடிய கோதில் திருப்பதிகம், தூமொழி நற்றமிழ் மாலை, நன்னாமத் திருவிருத்தம், மெய்ம்மை மொழி திருப்பதிகம், பரிவுறு செந்தமிழ் மாலை, கலைசேர் வாய்மை சீரியல் பதிகம், என்றெல்லாம் வருகின்ற அடிகளின் வருணனைகள் தேவாரப் பதிகங்களுக்கான திறவுகோல்கள். தேவாரத்தை நமக்குச் சேக்கிழார் அடிகள் உணர்த்தினாலன்றி அவையிற்றை நாம் உள்ளவாறு உணர முடியாது.

பெரிய புராணப் பெருமையை முறையாக எடுத்துரைக்க வாய்ப்பளித்த, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் சா.கிருட்டினமூர்த்தி அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி. இந்நூல் வரையுங்கால் உடனிருந்து என்னை ஊக்குவித்தும், மெய்ப்புக்களைத் திருத்தியும் உதவிய தஞ்சை வழக்கறிஞர் சிவத்திரு ப.அருள்நமச்சிவாயன் அவர்களுக்கும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மூத்த துணைப் பதிவாளர் திருவாளர் இரா.சுப்பராயலு அவர்களுக்கும் நான் சாலவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

வளர்க சைவம்; வளர்க சைவத்தமிழ்.

சேக்கிழார் அடிப்பொடி
தி.ந.இராமச்சந்திரன்.

1. பெரியபுராணம் : திருமுறைகளின் கவசம்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. "திரு என்பது பொருள் உடைமையும், பொருள் கொணர்ந்து துய்த்தலுமின்றி எஞ்ஞான்றுந் திருத்தகவிற்றாகியதோர் உள்ள நிகழ்ச்சி; அது வினையுள்ளுடைமை எனவும் படும்" என்றார் பேராசிரியர்.[1] திரு என்பது 'திருப்தி' என்று விளக்கம் தருபவர் பண்டித வித்வான் தி.வே.கோபாலையர். இன்ப துன்பங்களைக் கடந்து ஆன்ம நிறைவோடு நிற்றல் திருவாகும். இதையே சமநிலை என்பர்.

"விதி தந்த தாக்குதல்கள், மற்றவ்விதியே தந்த வெகுமதிகள் அனைத்துமே சரிநிகர் சமானமாகக் கொள்ளும் உள்ளமுடையோன் வதியுமிடம் யாதோ? வேட்டபடி விதி ஊதும் குழலாக மாறாமல் உணர்வும், அறிவும் சிவணிய அத்துவிதக் கலவையாய்த் திகழுமவன் வதியுமிடம் யாதோ? இராக விராகங்களுக்குக் கொத்தடிமை ஆகாமல் ஒளிரும் ஒரு புருடன் வதியுமிடம் யாதோ? அன்னானைக் காட்டுதி. என் இதயம் அவன் சிங்காதனமாம். என் உள்ளார்ந்த ஆனந்தப் பொந்திடை வைத்தவனைப் பேணுவன் யான்" என்ற ஷேக்ஸ்பியர் கூற்று பொருள் பொதிந்தது.[2]

"செற்றில் என்? சீவில் என்? செஞ்சாந்து அணியில் என்?
மத்தகத்தே உளி நாட்டி மறிக்கில் என்?
வித்தக நந்தி விதிவழி அல்லது
தத்துவ ஞானிகள் தன்மை குன்றாரே" என்றும்,

"தான் முன்னம் செய்த விதி வழி தானல்லால்
வான் முன்னம் செய்தங்கு வைத்ததோர் மாட்டில்லை
கோன் முன்னம் சென்னி குறி வழியே சென்று
நான் முன்னம் செய்ததே நன்னிலமாவதே"

என்றும் திருமூலர் அருளியுள்ளார்.

சமநிலை உள்ளாரே, கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர். இவர்கள் ஊன்றி நிற்கும் நிலையே திருநின்ற செம்மையாகும். செல்வன் கழல் ஏற்றலே செல்வம் என்ற கொள்கை வழி படர்வோரே, திருவினர் எனப்படுவர்.

முறை என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள. "கோசமும், பழமையும், ஊழுங் கூட்டும், ஆர்ப்பும், முறைமையும் முறையெனல் ஆகும்" என்று பிங்கலந்தை சாற்றுகிறது. கோசம் என்பது நூல். சைவத் திருவைத் தன்னகத்தே தேக்கி வைத்திருப்பது திருமுறை. இறைவன் உணர்த்த உணர்ந்து, உணர்ந்ததை முறைப்படி நூலாக்கியவர் திருமுறை ஆசிரியர் ஆவார். திருஞானசம்பந்தர் "எனதுரை தனதுரையாக" என்று அறிவித்துள்ளார்.

திருமுறை என்ற தொடரை முதன்முதலில் பயன்படுத்தியவர், காலத்தால் முற்பட்ட நாயனாராகிய திருமூலரே. அவர் கூறுவதாவது:

"ஏடங்கை நங்கை இறையெங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண்டாமரை
பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே."

பாடுதற்குச் சிவனார் ஆணை தர, அதன்படி பாடியவர்கள் திருமுறை ஆசிரியர்கள். திருநாவுக்கரசரும், "பன்னிய செந்தமிழ் மாலை பாடுவித்து என் சிந்தனை மயக்கறுத்த திரு அருளினானை" என்று அருளியுள்ளார். ஆலால சுந்தரரை, "முன்பு என்னைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலாலே என் பெயர் பித்தன் என்றே பாடுவாய்" என்று சிவபெருமான் ஆணையிட, நாயனாரும் "பித்தா பிறைசூடி எனப் பெரிதாம் திருப்பதிகம் இத்தாரணி முதலாம் உலகெல்லாம் உய எடுத்தார்." மேலும், சிவனார் சுந்தரருக்குத் தம் மறையளித்த திருவாக்கால் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று தொடங்கிப் பாடும்படி அருளியவாறே, சுந்தரரும் திருத்தொண்டத் தொகையைப் பாடி அருளினார். தெய்வச் சேக்கிழாருக்கும் சிவனார் "உலகெலாம்" என்று அடியெடுத்து அருள, பிரபு சேக்கிழாரும் திருத்தொண்டர் புராணம் பாடியருளினார். திருமுறை பாடிய நாயன்மாருள் சிவபிரானும் ஒருவர் ஆவார். அவர் பாடிய திருமுகப்பாசுரம் பதினோராம் திருமுறையுள் தரிசிக்கப்படுகிறது.

திருமுறை திருமறையே. வேதங்கள் எழுதாக் கிளவி. திருமுறைகள் எழுதுமறை. "வண்டமிழால் எழுது மறை மொழிந்த பிரான்" என்று தெய்வச் சேக்கிழார் திருஞான சம்பந்தப் பெருமானின் பாடல்களைப் போற்றுகிறார். தில்லைக் கலம்பகமும், ஞானப் பிள்ளையாரை "எழுது மறை மொழிந்த கழுமல முனிவன்" என்று குறிப்பிடுகிறது.

திருமுறையை எழுதுவது, வாசிப்பது சிவபுண்ணியமாம். கணநாத நாயனார் சிவத் தொண்டை நேசிக்கும் அடியார்களைச் சிவபுண்ணியத்தில் ஈடுபடுத்தினார். இதுபற்றிச் சேக்கிழார் பெருமான் அருளியது இதுவே.

"நல்ல நந்தவனப் பணிசெய்பவர்
நறுந் துணர்மலர் கொய்வோர்
பல்பணித் தொடை புனைபவர் கொணர்ந்
திருமஞ்சனப் பணிக்குள்ளோர்
அல்லு நண்பகலுந் திருஅலகிட்டுத்
திருமெழுக்கு அமைப்போர்கள்
எல்லையில் விளக்கெரிப்பவர்
திருமுறை எழுதுவோர் வாசிப்போர்."

இங்ஙனம் அவர் அவர் நாட்டத்திற்கு ஏற்ப கணநாதர் அடியார்களை நெறிப்படுத்தினார். எனவே, திருமுறைகளை வாசிப்பதும் சிவபுண்ணியமே.

திருமுறைகள் சைவ சித்தாந்தத்தின் நூல் வடிவம். சிவநேயச் செல்வர்கள் அனைவருமே சைவ சித்தாந்திகள். உண்மையில் அவர்கள் எந்நெறி பற்றி ஒழுகுகின்றனரோ அந்நெறியே சைவ சித்தாந்தச் செந்நெறி. பெரியபுராணம் என்பது நடைமுறை சைவ சித்தாந்தம். அறுபான் மூவரைப் படைத்தருளிய சிவபிரான் அவர்கள் அனைவரையும் ஓர் உருவில் காட்டவே தெய்வச் சேக்கிழாரைப் படைத்து அருளினன். சேக்கிழார் அடிகள் சகல ஆகம பண்டிதர். சைவ ஆகமங்களே சைவ சித்தாந்தம். சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணமே நடைமுறை சைவசித்தாந்தம் என்பதை மறத்தலாகாது.

சைவ சித்தாந்தமாகிய சைவ ஆகமங்களை அருளியவர் சிவனார். மன்பதை உய்யும் பொருட்டே சிவாகமங்கள் அருளப்பட்டன.

மெய்கண்டார் குடும்பத்தின் குல குருவாகவும், மெய்கண்டாரின் பிரதம சீடராகவும் விளங்கிய பெரியவர் அருள்நந்தி சிவாசாரியார். குருநாதர் ஆணையை வணங்கி ஏற்று சிவஞான போதத்திற்கு அவர் அருளிய உரையே சிவஞான சித்தியார் ஆகும். "சிவத்திற்கு மேல் தெய்வமில்லை, சித்தியாருக்கு மேல் நூலில்லை" என்பர் பெரியோர். அச்சித்தியார் அறுதியிட்டுக் கூறும் உண்மை இதுவே.

"வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்,
வேறு உரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்;
ஆதிநூல் அநாதி அமலன் தரு நூல்; இரண்டும்
ஆரணநூல்; பொது சைவம் அரும் சிறப்பு நூலாம்;
நீதியினால் உலகர்க்கும் சத்தி நிபாதர்க்கும்
நிகழ்த்தியது; நீள்மறையின் ஒழிபொருள் வேதாந்தத்
தீதுஇல் பொருள்கொண்டு உரைக்கும் நூல் சைவம்; பிற நூல்
திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்."

மேற்சொன்ன உண்மையை அறிய மறுக்கும் மூர்க்கரை,

"பித்தாந்தப் பெரும் பிதற்றுப் பிதற்றி, பாவம்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர்; இது என்ன பிராந்தி?"

என்று கூறி சித்தியார் சாடுகிறது. மேலும் திருமூலர் கூறுவதாவது:

"சித்தாந்தத்தே சீவன் முத்தி சித்தித்தலாற்
சித்தாந்தத்தே நிற்போர் முத்தி சித்தித்தவர்
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொருள் ஆதலால்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே"

அறுபான் மூவரும் சீவன் முத்தர்களே. அன்னோரின் அற்புதச் சரிதைகளைச் சாற்றுவது பெரியபுராணம்.

திருமுறைகள் பன்னிரண்டு. சிவஞானபோதச் சூத்திரங்கள் பன்னிரண்டு. இவற்றின் இறுதியில் உள்ளது செம்பொருளை அறுதியிட்டு அறைந்து உறுதி கூட்டுவது. ஆகவே பெரியபுராணம் திருமுறைகளின் கவசம் என்பது தெற்றம்.

அடிக்குறிப்பு

1. காண்க : பன்னிரு திருமுறை வரலாறு, முதற்பகுதி, பக்கம் 1, ஆக்கியோர் வித்வான் க.வெள்ளைவாரணன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1962.
2. "A man that fortune's buffets and rewards Hath taken with equal thanks; blest are those whose blood and judgement are so well commingled.

 That they are not a pipe for Fortune's finger
 To sound what stop she please. Give me that man
 That is not passion's slave, and I will wear him
 In my heart's core, ay, in my heart of hearts."

- Shakespeare, Hamlet.

2. தேவாரம் (முதல் ஏழு திருமுறைகள்)

முதல் மூன்று திருமுறைகளை அருளியவர் திருஞானசம்பந்தர்; 4, 5, 6 திருமுறைகளை வழங்கியவர் அப்பர் அடிகள், ஏழாந் திருமுறை ஆசிரியர் நம்பி ஆரூரர். மூவர் முதலிகள் பல்லாயிரக்கணக்கில் பாடல்களை அருளினர். என்றாலும் இன்று நமக்குக் கிடைத்திருப்பன ஒரு சிலவே. முதல் திருமுறையின் பாடல் எண்ணிக்கை 1469, இரண்டாம் திருமுறை 1331 பாடல்கள் கொண்டது; மூன்றாம் திருமுறையில் இன்றுள்ள பாடல்கள் 1347; திருவிடைவாய்ப் பதிகம் 11 பாடல்கள் கொண்டது; நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள் முறையே 1070, 1015, 981 பாடல்கள் கொண்டவை. ஏழாந் திருமுறைப் பாடல்கள் 1026.

மூவர் முதலிகள் பாடிய பாசுரங்களே தேவாரம். ஆனால் தேவாரம் என்ற சொல்லை தேவாரத்திலோ அல்லது மற்றைய திருமுறைகளிலோ காண முடியாது. தொடக்க காலத்தில் தேவாரப் பாடல்கள் திருப்பதிகம் என்றே சுட்டப்பட்டன. திருப்பதிகம் என்பது நாளாவட்டத்தில் திருப்பதியம் என்று மக்களிடையே வழங்கலாயிற்று. திருப்பதியம் என்ற சொல்லாட்சி, கல்வெட்டுகளிலும் இடம்பெறத் தொடங்கியது.[1]

இசைப்பதற்கு என்றே அருளப்பட்ட பாடல்கள் தேவாரப் பாடல்கள். குரல் வளம் இல்லாதாரும் இப்பாடல்களைப் பாடலாம்; கவிதை நயம் அறியாரும் இவையிற்றை இசைக்கலாம். இப்படி அனுமதி அருளியவர் திருஞானசம்பந்தர். இதற்கான பாடல் பின்வருமாறு:

கோழை மிடறாக கவி கோளும் இலவாக
　　　இசை கூடும் வகையால்
ஏழை அடியார் அவர்கள் யாவை சொன
　　　சொல் மகிழும் ஈசன் இடமாம்
தாழை இள நீர் முதிய காய் கமுகின்
　　　வீழ நிரை தாறு சிதறி
வாழை உதிர் வீழ் கனிகள் ஊறிய வயல்
　　　சேறு செயும் வைகாவி லே.

ஆக, அடியார் ஒவ்வொருவரும் தமக்கு இசை கூடும் வகையால் இப்பாடல்களை இசைக்க வேண்டும். இசைப்பதினால் கிட்டும்

பயனையும் தேவாரமே எடுத்து உரைக்கின்றது. முன் செய்த வினை ஊழாக விளையும். ஊழை அனுபவித்தே தீர வேண்டும். வெய்ய கர்மப் பயனில் நொந்து தாங்க முடியாத அல்லல் உறுவோர்க்குத் தேவாரப் பதிகங்கள் கை கொடுக்கும். அதாவது கொடிய கர்மப் பயனைத் தாங்கிக் கொள்ள அவர்கள் சக்தி பெறுவர். பதிகம் பாடினால் "தொல் வினை நீத்தல் எளிதாமே" என்றும், "வினை இல்லையாமே" என்றும், "ஊழின் மலி வினை போயி"டும் என்றும், "இடர்பாவம் அடையாவே" என்றும், ஊனத்தொடு துயர்" தீரும் என்றும், "பாடல் சொலி ஆடத் தவமாமே" என்றும், "பறையும் வினை தானே" என்றும், "இரு நிலனிடை இனிது அமர்வரே" என்றும், "நலமிகுவரே" என்றும், "உலகினில் எழில் பெறுவரே" என்றும், "உலங் கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே" என்றும், "அல்லல் தீரும்; அவலம் அடையாவே" என்றும், "கிளர் பாடல் வல்லார்க்கு இலை கேடே" என்றும், "பழியொடு பாவமிலரே" என்றும், "துயர் கெடுதல் எளிதாமே" என்றும், "உலகினில் மன்னுவர் தாமே" என்றும், "கொண்டு இவை ஏத்தச் சாரகிலா வினை தானே" என்றும், "விரும்புவார் வினை வீடே" என்றும், "பாடக் குணமாமே" என்றும், "பாடுவார்க்கு இல்லை பாவமே" என்றும், "வினை மாயுமே" என்றும் சம்பந்தப் பெருமான் அருளியுள்ளார்.

அப்பர் பெருமான் பதிகங்களில் 'பல ஸ்ருதி' பெரும்பாலும் காணப்பட மாட்டாது. "எனினும் கயிலை மலையில் சிக்கிய இராவணன் தான் அறியாமையாற் செய்த பெரும் பிழையைப் பொறுத்தருளும்படி சிவபெருமானை வேண்டி இசைபாடி உய்ந்த வரலாற்றைத் தம் பதிகங்களின் இறுதிப் பாடலாகிய பத்தாம் பாடலில் திருநாவுக்கரசர் குறித்துப் போற்றுதலை வழக்கமாகக் கொண்டார். ஆதலின், இராவணனது பேறு குறிக்கும் பத்தாம் பாடல்களே அத்திருப்பதிகத்தைக் காதலாகி ஓதி இறைவனை வழிபடுவோர் எய்தும் பெரும் பயன்களைக் கூறுவனவாக அமைந்துள்ளன" என்று வெள்ளைவாரணனார் கூறியுள்ளார்.[2]

நம்பி ஆரூரரும் பதிகம் இசைப்பார் பெறும் பயனைத் தாம் பாடிய பதிகங்களில் கூறியுள்ளார்.

தேவாரப் பாடல்கள் இசைப்பாடல்கள். தாளத்தோடு பாடுதற்காகவே ஞானப் பிள்ளையாருக்கு பொற்றாளம் அருளினார் பொன்னார் மேனியர். அத்தாளத்திற்கு ஓசை கொடுத்தார்

உமாதேவியார். பிள்ளையாரின் பாடல்களைத் தந்திரி யாழ்வீக்கி விரித்தார் திருநீலகண்டப் பெரும்பாணர்.

"தான நிலைக்கோல் வடித்துப் படி முறைமைத் தகுதியினால்
ஆன இசை ஆராய்வுற்றங் கணர்தம் பாணியினை
மானமுறைப் பாடினி யாருடன் பாடி வாசிக்க
ஞானபோனகர் மகிழ்ந்தார் நான் மறையோர் அதிசயித்தார்"

என்று இதை சேக்கிழார் பெருமான் அருளியுள்ளார். கண்டத்தாலும் கலத்தாலும் போற்றப்பட வேண்டியன தேவாரப் பாடல்கள்.

"வேதம் நிறைந்த தமிழ்நாடு" என்று மகாகவி பாரதியார் தமிழகத்தைப் போற்றிப் பாடினார். "வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத் துறை விளங்க" அவதாரம் செய்தவர் திருஞானசம்பந்தர். சம்பந்தப் பெருமான் அவதாரத் தலத்தை இப்படி வருணிக்கிறார் சேக்கிழார் பெருமான். "அப்பதி தான் அந்தணர் தங்கிடைகள் அருமறை முறையே செப்பும் ஒலிவளர்" பதி. தமிழ்நாட்டு ஆலயங்களில் வேத கோஷம் மிக்கிருக்கும். தேவாரமும் வேதமே. அதனால்தான் காசிவாசி செந்திநாத ஐயர் அவர்கள் "தேவாரம் வேத சாரம்" என்ற ஒரு திப்பிய நூலைத் தமிழுக்கு வழங்கினார். தமிழ்க் கோயில்களில் தேவாரப் பாடல்கள் முழங்கி வந்தன.

பல்லவப் பேரரசர்கள் சிவனார் கோயில்களில் தேவாரப் பாடல்கள் இசைக்க வழிவகுத்தனர். மூன்றாம் நந்திவர்மன் நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவன். இம்மன்னன் வெட்டுவித்த கல்வெட்டு ஒன்று வடஆர்க்காடு மாவட்டத்துப் பதியான திருவலம் சிவாலயத்தில் காணப்படுகிறது. இக்கல்வெட்டு கி.பி. 852இல் வெட்டப்பட்டது. விக்கிரமாதித்த வாணராயன் என்பான் திருக்கோயிலில் நாளும் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய நிவந்தம் அளித்ததை இக்கல்வெட்டு கூறுகின்றது. ஒன்பதாம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட இக்கைங்கர்யம் வளர்ந்து மரபு நிலை உற்றது.

சோழப் பேரரசர்கள் திருப்பதியம் விண்ணப்பிக்கப் பல நிவந்தங்கள் அளித்துள்ளனர். மாமன்னர் இராஜராஜன் காலத்திற்கு முன்பே இவை தோன்றி விட்டன. இன்று லால்குடி என்று கூறப்படும் ஊர் ஒரு முக்கிய சிவத்தலம். அதன் பெயர் திருத்தவத்துறை என்பதாம். ஆனைக்காவில் வழிபாடு நிகழ்த்திய பின்னர் ஞானப் பிள்ளையார், "மன்னுந் தவத்துறை வானவர் தாள் எய்தி இறைஞ்சி எழுந்து நின்றே

இன்தமிழ்மாலை கொண்டு ஏத்திப் போந்"தார் என்று சேக்கிழார் பெருமான் அருளியுள்ளார். ஆனால் பிள்ளையார் அப்போது பாடிய தேவாரப் பாடல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இத்தலத்தில் தேவாரம் விண்ணப்பிக்க அந்தணர்கள் நியமிக்கப் பெற்றிருந்தனர் என்று கல்வெட்டு மூலம் அறிகிறோம்.[3]

மேலும் குமாரவயலூர்,[4] திருவெறும்பியூர்,[5] திருநல்லம்,[6] அல்லூர்,[7] பழுவூர்,[8] திருமணஞ்சேரி,[9] குத்தாலம் (திருத்துருத்தி)[10] போன்ற ஊர்களிலும் நிவந்தங்கள் வழங்கப் பட்டிருப்பதை குடவாயில் பாலசுப்பிரமணியன் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இராஜராஜன், பின்வந்த சோழர்கள், கிருஷ்ணதேவராயர் ஆகியோரும், தஞ்சாவூர், சிதம்பரம், தாராசுரம், திருப்புகலூர், பிரமதேசம், திருத்துருத்தி, அமண்குடி, துக்காச்சி, உடையாளூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் நிவந்தங்கள் வழங்கியமை கல்வெட்டுக்கள் மூலம் அறியப்படுகின்றன.

அக்காலத்தில் திருப்பதியம் விண்ணப்பித்தோர் தீக்ஷை பெற்ற சிவபிராமணர்களே. இங்ஙனம் விண்ணப்பம் செய்வோர் அடிகள்மார் என்றும் பிடாரர்கள் என்றும் குறிக்கப் பெற்றனர். இராஜராஜன் காலத்துப் பிடாரர்களின் தீக்ஷா நாமங்கள் கல்வெட்டுக்களில் குறிக்கப் பட்டுள்ளன. அப்பெயர்களில் சில பின்வருமாறு: சதாசிவன், ஞானசிவன், மநோத்ம சிவன், பூர்வ சிவன், தர்மசிவன், வேத சிவன், சத்ய சிவன், வாம சிவன், ஓங்கார சிவன், தத்புருஷ சிவன், உருத்திர சிவன், அகோர சிவன், விஞ்ஞான சிவன், யோக சிவன், ஈசான சிவன், ஹ்ருதய சிவன், சிகா சிவன்.

அக்காலத்தில் கல்வெட்டுக்களில் தேவாரம் என்ற பெயர் காணப்படவில்லை. "தேவார மாணிகள் மூவர்க்கும்" என்ற குறிப்பு திருவொற்றியூர் கல்வெட்டு ஒன்றில் காணப்படுகிறது. தேவாரம் என்ற பெயர் முதன்முதலில் இக்கல்வெட்டு மூலம் வெளியாகி இருக்கிறது. இத்தேவார மாணிகள் ஓதுவார் அல்லர். இவர்கள் இறையவர்க்கு இயற்றப்படும் பூசனைகளுக்காக திருவமுது அட்டும் பரிசாரர்களே. கி.பி. 959இல் சதுரானன பண்டிதர் இறை வழிபாட்டிற்கு நியமித்த பணியாளர்கள் பட்டியலில் தேவார மாணிகள் என்ற தொடர் காணப்படுகிறது. பண்டிதர் அவர்கள் இராஜாதித்த சோழனின் தளபதியாக விளங்கி, பின்னர் துறவு பூண்டு சதுரானன பண்டிதர் ஆனார்.

தேவாரம் என்பது ஆதியில் சமணக் கோயிலையே குறித்தது. பிறகு திருமடத்தைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்பட்டது. அதன்பிறகு அரசனுடைய ஆன்மார்த்த மூர்த்திக்கு அமைக்கப்பட்ட கோயிலும் தேவாரம் என்று குறிக்கப்பட்டது.

தேவாரச் சுற்றுக் கல்லூரி என்ற ஒன்று கி.பி.1034 கல்வெட்டு ஒன்று மூலம் அறிமுகம் பெறுகிறது. திருப்புள்ளமங்கை சாசனம் ஒன்று "அம்பலத்துக்கும் சுற்றுக் கல்லூரிக்கும்" என்று குறிப்பிடுகிறது. இது இராஜராஜன் காலத்துக் கல்வெட்டு. இதற்குப் பிறகு முதலாம் இராஜேந்திரன் கல்வெட்டில் (கி.பி. 1034) "தேவாரச் சுற்றுக் கல்லூரி" என்ற குறிப்பு காணப்படுகிறது.

மன்னர்கள் தங்கள் பிரத்தியேக வழிபாட்டிற்கு என்று நிறுவிய கோயிலே தேவாரம் என்று பெயர் பெற்றது. இக்கோயிலில் எழுந்தருளுவிக்கப்பட்ட இறைவனுக்கு "தேவார தேவர்" என்று பெயர். மேலும் தீக்ஷை பெற்றவர்கள் தங்களுக்கு என்று பூஜைப் பெட்டிகள் அமைத்துக் கொள்வர். வெளியூர் செல்லும் போது இப்பெட்டிகள் அவர்களோடு எடுத்துச் செல்லப்படும். ஆகவே தேவாரம் என்பது பூஜைப் பெட்டியையும் குறிக்கும். இச்செய்தி ஸ்ரீரங்கம் உ.வே.ஸ்தானிகம் பார்த்தசாரதி ஐயங்கார் தொகுத்த நாலாயிர திவ்வியப் பிரபந்த அகராதியில் காணப்படுகிறது. வீடு பற்றி எரியும் போது அவசர அவசரமாக எல்லாப் பொருள்களையும் அகற்றும் போது, என்ன செய்கிறோம் என்று அறியாமல் செயல்படுவர். அப்போது "தேவாரமும் செருப்பும் ஒக்கக் கட்டி" எடுத்துச் செல்லப்பட்டதை வைணவ வியாக்யாநம் (ஈடு) கூறியுள்ளது.

சிவபூஜா காலங்களில் திருப்பதிகமே விண்ணப்பம் செய்யப்பட்டது. பாடுவோர்க்கு அளிக்கப்பட்ட காணி (உரிமை நிலம்) திருப்பதிகக்காணி என்ற பெயர் பெற்றது.

மன்னரின் தேவாரக் கோயிலை நிர்வகித்தவன் பெயர் தேவார நாயகம் என்பதாம்.

இதுவரை கிடைத்த கல்வெட்டுக்களைக் கொண்டு ஆராயுமிடத்து, திருப்பதிகம் தேவாரம் என்ற பெயரால் முதன்முதலில் சுட்டப்பட்ட ஆண்டு கி.பி.1286 என்று தெரிய வருகிறது. திருக்குவளை என்ற பெயரில் இன்று விளங்கும் ஊரின் பழைய பெயர் கோளிலி என்பதாகும். இங்கு பாண்டியன் ஜடாவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு (கி.பி.1286) ஒன்று, ஆளுடைய பிள்ளை முன்பு தேவாரம்

பாடுவதற்காக மாங்குடி வணிகன் கணபதி ஆசாரி 106 பொன் முதலீடு செய்தது பற்றிப் பேசுகிறது. இக்கல்வெட்டைக் குடவாயில் பாலசுப்பிரமணியன் கண்டுபிடிப்பதற்கு முன்பு, தேவாரம் என்ற சொல்லை முதன்முதலில், பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த இரட்டையரே பிரயோகித்தனர் என்று கூறிவந்தனர். இரட்டைப் புலவர்கள் ஏகாம்பர நாதர் உலா பாடினர். அதில்

"மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்

தேவாரம் செய்த திருப்பாட்டும்"

என்ற அடிகள் காணப்படுகின்றன. இன்று மூவர் முதலிகள் தேவார மூவர் என்றே குறிக்கப் பெறுகின்றனர்.

அடிக்குறிப்பு

1. கபிலக்கல் (குடவாயில் பாலசுப்பிரமணியன்), பக்கம் 90, பிரபு பதிப்பகம், பட்டுக்கோட்டை, 2004.
2. பன்னிரு திருமுறை வரலாறு, பக்கம் 7.
3. ARE No.99 (1928-29).
4. ARE No.149 (1936-37).
5. ARE No.123, 129 முதல் 131 முடிய (1914).
6. SII, Vol.III, No.151.
7. Ibid. Vol.VII, No.687 (ARE 373 A (1903).
8. ARE No.349 (1918).
9. ARE No.21 (1914).
10. ARE No.349 (1918).
11. நாலாயிர திவ்யப் பிரபந்த அகராதி, ஸ்ரீ ரங்கம்.

3. எட்டாம் திருமுறை

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகும். முதன்முதலில் அச்சேறிய நூல் திருவாசகமே. கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், திருவாசகத்தை ஜய ஆண்டு தை மாதம் (1835 : ஜனவரி-பிப்ரவரி) முதன்முதலில் அச்சில் பதிப்பித்தார். திருவாசகத்தை அடுத்து அச்சான நூல் திருக்கோவையாரே. இந்நூல் 1841இல் புதுவை நயநப்ப முதலியாரால் முதல் பதிப்புப் பெற்றது. ஏனைய திருமுறைகள் 1841க்குப் பிறகே அச்சில் வெளிவந்தன.

மாணிக்கவாசகர் காலம் பற்றிப் பெரியதொரு குழப்பமே நிலவி வந்தது. இக்குழப்பத்திற்கு முடிவு கட்டியவர் குடந்தை சேதுராமன் அவர்களே. கல்வெட்டுக்கள், தாமிர சாசனங்கள், சரித்திர ஆய்வுகள் அனைத்தையும் முறையாகப் பயின்று தம் முடிவை இவர் 1984இல் தருமபுரத்தில் நடந்த அனைத்துலக முதற் சைவ சித்தாந்தக் கருத்தரங்கில் வெளியிட்டார். தட்டச்சு செய்யப்பட்ட அவரது ஆய்வின் படி ஒன்றை எனக்குத் தந்தார். அமரர் சேதுராமனின் முடிவுகள் அசைக்க முடியாத ஆதாரங்களின் அடிப்படையில் எழுந்தவை.

முதலாம் வரகுண பாண்டியன் கி.பி.768இல் அரசுக்கட்டில் ஏறினார். இவரது ஆட்சிக்காலம் கி.பி.811இல் முடிவடைந்தது. இவ்வாண்டில் இவருடைய மகன் ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன் முடி சூடினார். இம்மன்னரின் 18 ஆம் ஆட்சி ஆண்டில், இவரால் ஸ்ரீலங்கா வெல்லப்பட்டது. ஆனால் இம்மன்னரின் வயதான காலத்தில், இவரை ஸ்ரீலங்கா அரசு தோற்கடித்தது. இந்நிகழ்ச்சிக்கு மஹா வம்சம் சான்று பகர்கின்றது.

ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபனின் மகனே இரண்டாம் வரகுணன். இவருடைய இளவல் முதலாம் வரகுணன். முதலாம் வரகுணன் பெயர் நெடுஞ்சடையன் பராந்தகன்.

கி.பி.860இல் ஸ்ரீ லங்கா மன்னன், பாண்டிய இளவரசன் உதவியோடு பாண்டிய நாட்டை வென்றான். இளவரசன் பாண்டிய மன்னனாக சில காலம் ஆண்டான். இரண்டாம் வரகுணன் இவனை அடித்துத் துரத்தி விட்டார். பிறகு அவரே மன்னர் ஆனார். இம்மன்னர்

பெரிய சிவபக்தர். இவரைத் திருவாசகம் இப்படிப் போற்றுகின்றது. "நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல் பரகதி பாண்டியற்கு அருளினை போற்றி!" மேலும் திருப்பாண்டிப் பதிகத்தின் ஆறாம் பாடல் இம்மன்னரையே குறிக்கின்றது.

திருக்கோவையாரும், இரண்டாம் வரகுணனைப் போற்றியிருப்பது கண்டும் இம்மன்னர் காலத்தவர் மாணிக்கவாசகர் என்பதை உணரலாம். இரண்டாம் வரகுணன் காலம் கி.பி.863-911 ஆகும்.

திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது உலகு ஒப்பிய உண்மை. பாவை பாடிய வாயால் மணிவாசகர் கோவை (திருக்கோவையார்) பாடி அருளினார். சைவர்கள் எட்டாம் திருமுறையில் திருவாசகத்தையே பெரிதும் ஓதி வருகின்றனர். என்றாலும் திருக்கோவையார் ஓர் அற்புத நூல் என்பதை எவரும் மறந்திலர்.

"கல்லைப் பிசைந்து கனியாக்கிச் சைவரசம்
புல்லப் பிழிந்து புதுமை செயும் பொல்லாத
தொல்லைக் கடற்பிறவித் துன்பகல ஈதென்ன
மல்லற் கரைகாட்டும் வான்சோதி வாசகமே"

என்று இந்நூலை நவநீதகிருஷ்ண பாரதியார் போற்றியுள்ளார்.

பழம்பாடல் ஒன்று கோவையாரின் பெருமையை இப்படிப் புகழ்கிறது:

"ஆரணம் காண் என்பர் அந்தணர்; யோகியர் ஆகமத்தின்
காரணம் காண் என்பர்; காமுகர் காம நன்னூல் அது என்பர்;
ஏரணம் காண் என்பர் எண்ணர்; எழுத்துஎன்பர் இன்புலவோர்
சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே."

4. ஒன்பதாம் திருமுறை

ஒன்பதாம் திருமுறையில் இரண்டு நூல்கள் அடங்கி உள்ளன. அவை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்ப. திருவிசைப்பா ஆசிரியர்கள் ஒன்பதின்மர். அவர்கள் திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி காட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டு அடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமர், சேதிராயர் ஆகியோர்.

மனமுருகி இசைப்பதற்கு என்றே அருளப்பட்ட பாடல்களே திருவிசைப்பா பாடல்கள். சீவனைச் சிவனோடு இசைவிக்கும் பெற்றி உடைய கீதங்களே திருவிசைப்பா.

ஒன்பதாம் திருமுறையின் இறுதிப் பதிகமாக அமைந்திருப்பது திருப்பல்லாண்டு. இதனை அருளிச் செய்தவர் சேந்தனார் என்னும் அடியார்.

இத்திருமுறையின் இசைத்தன்மை ஒரு தனிச்சிறப்புடையது. ஏழிசை வல்லாராக விளங்கும் சிவனாரை, சொல்லின் வளமெல்லாம் முறுகுற்று கனிந்து கசிவந்த தித்திப்பாம் கவிதையில் குழைத்துப் பாடப்பட்ட பாடல்களே திருவிசைப்பா.

இசைப்பாடல்களில் சிவனாரைப் போற்றி முதன்முதலில் பாடியவர் காரைக்கால் அம்மையார். அப்பர் அடிகள் பத்துப் பண்களில் பரமனைப் பரவினார். இருபத்து நான்கு பண்களில் சிவனாரைத் தோத்தரித்துத் திருப்பாடல்கள் அருளியவர் திருஞானசம்பந்தர். ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்கள் புறநீர்மை, காந்தாரம், சாளரபாணி, நட்டராகம், பஞ்சமம், இந்தளம் ஆகிய ஆறு பண்களில் தங்கள் பாடல்களை அமைத்துப் பாடியிருக்கிறார்கள். இத்திருமுறை ஆரூர், ஆவடுதுறை, இடைக்கழி, இராசராசேச்சுரம், இடைமருது, கங்கை கொண்ட சோழபுரம், களந்தை, ஆதித்தேச்சரம், கீழ்க்கோட்டூர் மணியம்பலம், தில்லை, சாட்டியக்குடி, திரைலோக்கிய சுந்தரம், பூவணம், முகத்தலை, வீழிமிழலை ஆகிய பதினான்கு திருப்பதிகளில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் சிவபெருமானை ஏற்றுகிறது, போற்றுகிறது.

உயிருக்குத் துணை, வாழ் முதலாம் சிவபரம்பொருளே. அம்முதல்வனை பத்திச் சுவை நனி சொட்டச் சொட்ட, பாடிப் பரவுவதே செயற்குரிய செயல். இசையால் எம்மிறையை ஏத்துதலே ஒரு வழிபாடு. திருமுறை சாற்றும் பாடல் நெறி இதுவே. "இந்தப் பாடல் நெறி, "பாடல் சான்ற புலனெறி வழக்கம்" சங்க காலத்தே, தொல்காப்பியர் காலம் தொடங்கி வளர்ந்து முறுகி முகிழ்க்கும் ஒன்றே" என்று முனைவர் சிங்காரவேலன் கூறியுள்ளார்.

கருவூர்த் தேவரின் பாடல்கள் நூற்றிரண்டு இத்திருமுறையை அலங்கரிக்கின்றன. அவற்றுள் ஒன்று பின்வருமாறு.

"இவ் வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற்கு என்னுடன் பிறந்த
ஐவரும் பகையே; யார் துணை? என்றால்
அஞ்சேல் என்று அருள் செய்வான் கோயில்
கை வரும் பழனம் குழைத்த செஞ்சாலிக்
கடைசியர் களை தரும் நீலம்
செய்வரம் பரும்பு பெரும் பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே."

இப்பாடலில் வரும் "அஞ்சேல் என்று அருள் செய்வான் கோயில்" என்ற வாசகம் ஞானப்பிள்ளையார் ஐயாறன் திருக்கோயிலை, "அஞ்சேல் என்று அருள் செய்வான் அமரும் கோயில்" என்று வருணித்திருப்பதைப் பொன்னே போல் போற்றி எடுத்துக் கையாளப்பட்டதாகும்.

திருவிசைப்பா பாடல்கள் சிவானுபூதியைப் பண் சுமந்த பாடலில் சிமிழ்ப்புற வைத்துள்ளன. இக்காரணம் பற்றியே, பஞ்ச புராண விண்ணப்பத்தில் திருவிசைப்பா பாடல் ஒன்றும் திருப்பல்லாண்டுப் பாடல் ஒன்றும் இடம்பெற்றுத் திகழ்கின்றன.

"அழுதால் உன்னைப் பெறலாமே" என்றார் மணிவாசகர். கருவூர்த் தேவரும்,

"அழுவதும் நின் திறம் நினைந்தே
அதுவன்றோ பெரும்பேறு"

என்று திரைலோக்கிய சுந்தரம் திருவிசைப் பாவிலே அருளியுள்ளார். இத்திருமுறையின் மொத்தப் பாடல்கள் 301.

சேந்தனார் அருளிய பதின்மூன்று பாடல்கள் திருப்பல்லாண்டு எனப்படும். திருக்கோயிலில் பல்லாண்டு பாடுதல் தேவார காலத்திற்கு முன்பிருந்தே ஒரு பெருமரபாக விளங்கியிருக்கிறது.

"நாடினார் கமலம் மலர் அயனோடு
இரணியன் ஆகம் கீண்டவன்
நாடிக் காண மாட்டாத் தழலாய நம்பானைப்
பாடுவார் பணிசெய்வார்
பல்லாண்டு கூறு பத்தர்கள் சித்தத்துள் புக்குத்
தேடிக் கண்டு கொண்டேன் திருவாரூர் அம்மானே."

இப்பாடலை அருளியவர் அப்பர் அடிகள்.

"சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண்டு இசைமின்"

என்ற பாடலடி மாணிக்கவாசகர் அருளிய திருப்பொற்சுண்ணத்தில் வருகிறது.

ஆகவே பல்லாண்டு இசைப்பது நெடுஞ்சேய்மையான காலத்திலிருந்து விளங்கி வரும் மரபு என்பது தெளிவாகிறது. ஆனால் அக்காலத்தில் பாடப்பட்ட பல்லாண்டுப் பாடல்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

"மன்னுக தில்லை வளர்க நம் பத்தர்கள்
வஞ்சகர் போய் அகலப்
பொன்னின் செய் மண்டபத்து உள்ளே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோன்அடி
யோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே"

என்று சேந்தனார் அருளிய பல்லாண்டு அவதாரமாகிறது.

பல்லாண்டு பாடி இறைவனை அடியார் வாழ்த்துவர். ஆண்டவனை அடியார்கள் வாழ்த்துதல் முறையோ என்றால் அது முறையான செயல் என்றே விடை கிடைக்கும். வாழ்த்துவதின் நோக்கம் என்ன என்பதை மணிவாசகர் விளக்கியுள்ளார்.

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான், மனம் நின்பால்
தாழ்த்துவதும், தாம் உயர்ந்து, தம்மை எல்லாம் தொழவேண்டி;
சூழ்த்த மதுகரம் முரலும் தாரோயை, நாய் அடியேன்
பாழ்த்த பிறப்பறுத்திடுவான், யானும் உன்னைப் பரவுவனே."

இப்பாடல் திருச்சதகத்தின் 15 ஆம் பாடல்.

பல்லாண்டு என்னும் பதம் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதல் சைவருக்கும் வைணவருக்கும் பொதுவான மரபாகத் திகழ்கிறது.

எட்டி எட்டிச் சென்றாலும் எட்ட எட்ட நிற்கும் பரம்பொருளை எட்ட வழி செய்யும் ஒன்பதாம் திருமுறையை முறையாகப் பயில்வோர் இறையருள் பெற்றுப் பேரின்பம் ஆர்ந்திருத்தல் ஒருதலை.

5. பத்தாம் திருமுறை

திருமூலர் அருளிய திருமந்திரமே பத்தாம் திருமுறை. இதைத் திருமந்திரமாலை என்றும் சொல்லுவர். இது ஒன்பது தந்திரங்கள் கொண்டது. தந்திரம் என்னும் சொல் ஆகமம் என்றும் பொருள்படும். ஒன்பது ஆகமங்களின் சாரமாக உள்ளது திருமந்திரம். இவ்வாகமங்கள் காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்ப. ஆகமங்கள் வழி எழுப்பப்படுவனவே தென்னாட்டுத் திருக்கோயில்கள். அந்தந்தக் கோயிலுக்கும் அதற்குரிய ஆகமம் உண்டு.

சைவ சமயம் வைதிக சமயம். வேதத்தை ஆகமத்தின் வழி உணர்ந்து கொள்ளல் வேண்டும். வேதம் பொது; ஆகமம் சிறப்பு. "வேதங்கள், ஐயா! என ஓங்கி ஆழ்ந்து அகன்று" நிற்பவர் சிவபெருமான். அப்பெருமானை ஆகமமாகி நின்று அண்ணிப்பவராகக் காட்டுகிறது திருவாசகம்.

வேதத்தை ஒதுக்கி விட்டு வைதிக சமயம் எழ முடியாது. திருமூலரும்,

"வேதத்தை விட்ட அறம் இல்லை; வேதத்தில்
ஓதத்தகும் அறம் எல்லாம் உள, தர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே"

என்று அருளியுள்ளார். மேலும் அவர் "சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே" என்றும் கூறியுள்ளார்.[1]

சிவாகம சாரத்தைத் தாம் அருளியுள்ளதையும் அவரே கூறியுள்ளார்.

"நந்தி இணையடி நான் தலைமேற் கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்
தந்தி மதிபுனை அரனடி நாள்தொறுஞ்
சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே."[2]

வேத ஆகமங்கள் வடமொழியில் உள்ளன. ஆகவே அம்மொழியைப் பயில வேண்டும் என்ற கருத்துடையவர் திருமூலர். தமிழும் ஒரு தெய்விக மொழி. ஆகவே இவ்விரண்டு மொழிகளும் நம்மைப் பரம்பொருளுக்கு இட்டுச் செல்லும். இதையே,

"மாரியுங் கோடையும் வார்பனி தூங்க நின்று
ஏறியும் நின்று அங்கு இளைக்கின்ற காலத்து
ஆரியமும் செந்தமிழும் உடனே சொலிக்
காரிகையார்க்குக் கருணை செய்தானே"[3]

என்றும்,

"அவிழ்க்கின்ற வாறும் அது கட்டுமாறுஞ்
சிமிட்டலைப் பட்டு உயிர் போகின்ற வாறும்
தமிழ்ச் சொல் வடசொல் எனும் இவ்விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலும் ஆமே"[4]

என்றும் திருமூலர் அருளியுள்ளார்.

மேலும், வேதமும் ஆகமமும் அபேதம் என்பதே திருமூலருடைய மதம். அவர் கூறுவதாவது:

"வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்பும் என்று உள்ளன்
நாதன் உரை அவை; நாடில் இரண்டு அந்தம்
பேதமது என்பர்; பெரியோர்க்கு அபேதமே."[5]

திருமந்திரம் ஆறு அந்தங்கள் பற்றி விரித்துரைக்கின்றது. இவற்றுள் சைவ சித்தாந்தம் முதலிடம் பெறுகிறது. சைவ சித்தாந்த நுட்பக் கருத்தை திருமூலர் விளக்கிய பாடலை அனைவரும் அறிவர்.

"பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசுபாசம் அனாதி;
பதியினைச் சென்று அணுகா பசுபாசம்;
பதி அணுகில் பசு பாசம் நிலாவே."[6]

சிவனாரைத் தவிர ஏனையோர் பசுக்களே (சிற்றான்மாக்களே). சிவனாரே பசுபதி.

"பசுப் பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசம் மூன்றுண்டு;
பசுத்தன்மை நீக்கிப் பாசம் அறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே."[7]

நம்மாழ்வாரால் ஏற்கப்பட்ட ஜீவன் முக்தி நிலையை இராமாநுஜர் ஏற்கவில்லை. ஜீவன் முக்திக்குப் பிறகே விதேக முக்தி. இதுவே சைவ சித்தாந்தக் கொள்கை. திருமூலரும்,

"சித்தாந்தத்தே சீவன் முத்தி சித்தித்தலால்
சித்தாந்தத்தே நிற்போர் முத்தி சித்தித்தவர்;
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொருள் ஆதலால்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே"[8]

என்று அருளியுள்ளார்.

சிவயோகத்திலிருந்து அந்நிலையில் ஆண்டுக்கு ஒரு பாடல் அருளினார் என்று தெய்வச் சேக்கிழார் அருளியுள்ளார். "ஊன் உடம்பிற் பிறவி விடந் தீர்ந்து உலகத்தோர் உய்ய ஞானமுதல் நான்கு மலர் நற்றிரு மந்திர மாலை பான்மை முறை ஓர் ஆண்டுக்கு ஒன்றாகப் பரம்பொருளாம் ஏன எயிறு அணிந்தாரை 'ஒன்றவன் தான்' என்று எடுத்து[9]

"முன்னிய அப் பொருள் மாலைத் தமிழ் மூவாயிரஞ் சாத்தி
மன்னிய மூவாயிரத் தாண்டுஇப் புவிமேல் மகிழ்ந்து இருந்து
சென்னி மதி அணிந்தார்தம் திருவருளால் திருக்கயிலை
தன்னில் அணைந்து ஒரு காலும் பிரியாமைத் தாள்
அடைந்தார்."[10]

மூவாயிரம் ஆண்டு ஒருவர் வாழ முடியுமா? முடியும். சாதாரணமாக ஆணோ, பெண்ணோ 8 அங்குல அளவு காற்றை உள்வாங்கி பன்னிரண்டு அங்குல அளவு காற்றை வெளியிடுகிறார். இதில் ஒவ்வொரு சுவாசத்தாலும் நான்கு அங்குல காற்று நட்டமாகிறது. ஆகவே குறிப்பிட்ட ஆண்டுகளே ஒருவர் வாழ முடிகிறது. மேலும் நோய்களும் ஒருவருடைய வாழ்வைத் தேய்க்கின்றன. யோகம் பயின்றார் காற்றின் கணக்கறிவார். அதன்மீது ஆட்சி செலுத்தவும் அவர் அறிவார். ஒரு நாளைக்குச் சில ஆயிரம் சுவாசங்கள் நிகழ்கின்றன. இவற்றைப் படிப்படியாகக் குறைத்து ஒரு நாளைக்கு ஒரு சுவாசமே போதும் என்று நிலையை யோகியர் எய்துவர். இந்த சுவாச சேமிப்பை (breath-bank) சுவாச வங்கி என்பர் மேனாட்டார். மூச்சுக்காற்று சேமிப்பால் வாழ்நாள் நீட்டிக்கப்படும். ஆதிமனிதன் ஆதாம் 930 ஆண்டுகளும், ஸெத் 912 ஆண்டுகளும், ஈனோஸ் 905 ஆண்டுகளும் நோவா 950 ஆண்டுகளும் வாழ்ந்ததாக விவிலியம் சாற்றுகிறது.[11]

திருமந்திரத்தில் சூனிய சம்பாஷணை என்று ஒரு பகுதி உண்டு. இதில் 70 பாடல்கள் காணப்படுகின்றன. இப்பகுதியை விளக்கி தமிழ் வேத நாவலர், வைத்திய மணி சித்.வே.ஷண்முகநாத பிள்ளை வரைந்திருக்கும் நூலை[12] அனைவரும் பயில வேண்டும். இப்பகுதியில் உள்ள முதலாம் பாடலுக்குப் பிள்ளை அவர்கள் வழங்கியுள்ள ஒரு பகுதியை மட்டும் இங்கு தருகிறேன்.

> காயம் பலகை கவறைந்து கண்மூன்று
> ஆயம் பொருவதோர் ஐம்பத்தோ ரக்கரம்
> ஏயபெருமான் இருந்து பொருகின்ற
> மாயக் கவற்றின் மறைப் பறியேனே.

"காயம் - காம குரோதிகளால் காயப்படும் தன்மை பெரிதும் உள்ளதால் உடம்பிற்குக் காயம் என்ற பெயர் உள்ளது. 'காமக் கனலில் கருகும் சருகு' என்பார் பட்டினத்தார். சித்தர்கள் காய்ந்த பொருளையும் காயம் உள்ள பொருளையும் காயச் சரக்கு என்று கூறுவர்.

"காயம் பலகை என்பதால் - பலகை என்பதை கையாளப்பெறும் பொழுது சிறப்புடைத்தாய் இருக்கும். அல்லாதபோது கட்டையாகி விடும். ஆகவே, உயிரும் உயிர்ப்பும் உயிருக்கு உயிரான ஆதியும் அமைந்திருக்கும் பொழுது பலகை பீடு பெற்றுக் காணும் பீடம் எனப் பெறும். இல்லையேல் பயனற்றுக் கிடக்கும் கட்டையாகி விடும். இத்தகவு பற்றி திருமூலர் காயம் பலகை என்று சொல்லுகிறார் ... சூனிய சம்பாதனையில் காயம் பலகையைக் குறிக்கின்றது. காயப் பலகை என்னும் சொல்லே உரிமைப்பாடு கொள்ளப்படும் பலகை ... அதேபோன்று சரீரத்தில் உயிரும் உயிர்ப்பும் உயிர்க்கு உயிராம் ஆதியும் உரிமைப்பாடு கொண்டு இலங்குகின்றன. அவ்வுரிமைப் பாட்டின் பதிவுச் சுவடே தாயப்பலகையில் தோன்றும் பதிவுக் கட்டங்கள். அப்பதிவுக் கட்டம் கொண்ட பலகையில் செயற்பாடு கொள்ளும் தாய விளையாட்டில் பயன்படுத்தப் படுவது கவறு என்னும் சோழியாகும். அதற்குக் கவறு என்று பெயர் வரக் காரணம் காயம் பலகையாம். நம் சரீரத்தில் செயற்பாடு கொள்ளப் பெறும் பொருள் ஐந்து ஆகிய ஐம்பூதம். ஐம்பூதத்தால் இயக்கப்படுகின்ற படியால் சரீரத்திற்கும் பூதியம் என்று பெயர். ஆகவே, 'க' என்னும் ஒன்றோடு சேர்ந்து அது ஆறு ஆகின்ற படியாலும் ஐந்துதான் தோன்றும் பொருள். ஒன்று தோன்றாப் பொருளாக இருக்கின்ற படியாலும் கவறு ஐந்து என்று சொல்லுகின்றார்.

"ஆய விளையாட்டின் தொடக்கம் கொள்ளும் ஐந்திற்கு உண்டு. ஆறிற்கு இல்லை."

சிவபெருமான் ஐந்தொழில்களையும் தம் திருக்கூத்தின் மூலமே இயற்றுகின்றார். இத்திருக்கூத்து ஓய்வு ஒழிவு இன்றி நடைபெறுகிறது. கூத்தப் பெருமான் பெருமை அளவிடற்கு அரிது. பெருமானின் கூத்து வகைகளை திருமூலர் 'திருக்கூத்துத் தரிசனம்' என்ற பகுதியில் அருளியுள்ளார்.

சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து, பொற்பதிக் கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக் கூத்து ஆகியவை பற்றி திருமூலர் அருளியுள்ளார்.

தூய உள்ளமே தில்லை அம்பலம்; அதில் எப்பொழுதும் ஆடல் வல்லானின் திருநடனம் நிகழ்ந்தபடி உள்ளது. அதைத் தரிசித்துத் தாம் பெற்ற இன்பம் அனைவரும் பெறவே திருமூலர் திருமந்திரத்தை அருளியுள்ளார்.

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
நான் பற்றப் பற்றத் தலைப் படுந்தானே."

அடிக்குறிப்பு

1. திருமந்திரம், பாடல் 77, சைவ சித்தாந்த மகா சமாஜம், 1940.
2. மேற்படி, பாடல் 63.
3. மேற்படி, பாடல் 65.
4. மேற்படி, பாடல் 66.
5. மேற்படி, பாடல் 2397.
6. மேற்படி, பாடல் 115.
7. மேற்படி, பாடல் 2406.
8. மேற்படி, பாடல் 2394.
9. பெரியபுராணம், சைவ சித்தாந்த மகா சமாஜம், 1950, பாடல் 3594.
10. மேற்படி, பாடல் 3596.
11. Old Testament, Genesis, 5-5, 5-8, 5-10, 6-29.
12. சூனிய சம்பாதனை, ஞானத் தெளிவு உரை விளக்கம், முத்தமிழ் வேதத் திருச்சபை, தேவகோட்டை, 2001.

6. பதினோராம் திருமுறை

பிற திருமுறைகளுக்கு இல்லாத ஒரு தனிச்சிறப்பு பதினோராம் திருமுறைக்கு உண்டு. இதில் அமைந்துள்ள முதற்பாடல் சிவபெருமானாலேயே பாடப்பட்டது. இத்திருமுறையின் அருள் ஆசிரியர்கள் பன்னிருவர். சிவபெருமான், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமான், நக்கீரதேவர், கல்லாட தேவர், கபில தேவர், பரண தேவர், இளம்பெருமான் அடிகள், அதிரா அடிகள், பட்டினத்து அடிகள், நம்பியாண்டார் நம்பி ஆகியோரே இப்பன்னிருவர்.

இத்திருமுறையில் நாற்பது நூல்கள் அடங்கியுள்ளன. இவை அனைத்தும் பிரபந்த வகையைச் சேர்ந்தவை.

திருமுகப் பாசுரத்தை அடுத்து வருவன பேயார் பாடல்கள். இவரே தமிழ் இசையின் தாயுமாவார். இவ்வம்மையாரை, "நம்மைப் பேணும் அம்மை காண்" என்று உமையம்மைக்குச் சிவனாரே அறிமுகம் செய்து வைத்தார் என்பதிலிருந்தே, இப்பெருமாட்டியின் பெருங் கீர்த்தியை ஓரளவேனும் உய்த்து உணரலாம்.

"இடர் களையாரேனும் எமக்கு இரங்காரேனும்
படரும் நெறி பணியா ரேனும் சுடர் உருவில்
என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்பு அறாது என் நெஞ்சு அவர்க்கு"

என்றுள்ள இப்பாடலே அடியார்க்கு உள்ள குணநலம் 'இதுவே' என்று காட்டுகிறது.

அன்பிற் சிறந்த பொருள் ஏதும் எவ்வுலகத்தும் இல்லை என்பதை அம்மையார் விளக்கியுள்ள பாங்கு அற்புதமானது. ஏழு சமுத்திரங்களையும் உலைநீராக ஆக்கி, அது கொள்ளுகின்ற அளவிற்குக் காய்களை நறுக்கி இட்டு, சமையலை முடித்து, பின்னர் சமைத்தது அத்தனையும் சிவனார் கையில் உள்ள கபாலத்தில் கவிழ்த்தாலும், அப்பண்டம் ஒரு மூலையில் தங்கிற்றே அல்லாமல், கபாலத்தை நிறைக்கவில்லை. ஆனால் எம்மிறை பலி தேர வீதியில் வந்த போது அன்பாலே பெண்கள் இட்ட சிறு பலி கபாலத்தை நிறைத்தது. பிச்சைப்

பாத்திரம் என்றால் அது சிவனார் கையுள்ள கபாலம்தான். இதை நிறைக்கும் சக்தி அன்பிற்கே உண்டு.

"ஓத நெடுங்கடல் எத்தனையும் உய்த்துஅட்ட
ஏதும் நிறைந்தில்லை என்பரால் - பேதையர்கள்
எண்ணாது இடும் பலியால் என்னோ நிறைந்தவக
கண்ணார் கபாலக் கலம்" - அற்புதத் திருவந்தாதி, 74.

'க்ஷேத்திரத் திருவெண்பா' பல்லவ மன்னனாகிய ஐயடிகள் காடவர்கோன் பாடியது. நிலையாமையை வற்புறுத்தி, காலம் உள்ள போதே காலகாலன் கழல் பணிதல் கடன் என்று அடிகள் கழறுகிறார்.

"குந்தி நடந்து குனிந்து ஒரு கை கோல் ஊன்றி
நொந்து இருமி ஏங்கி நுரைத்து ஏறி - வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை" - சேத்திரத் திருவெண்பா, 1.

ஐ மேலுந்தி அலமந்த போதாக, 'அஞ்சேல்' என்று அருள் செய்வான் கோயில் ஐயாற்றில் விளங்குவதை ஞானப் பிள்ளையாரும் கூறி அருளியுள்ளார்.

சேரமான் பெருமான் கழறிற்று அறிவார் ஆவர். இவர் ஆலால சுந்தரரின் தோழரும் ஆவார். தம் பூசை முடிவில் சிவனாரின் சிலம்போசை கேட்டே நிறைவு உறுபவர். இவர் பாடிய பனுவல்கள் பொன் வண்ணத்து அந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, திருக்கைலாய ஞானஉலா ஆகியவை. இவர் உலாவே ஆதிவுலா என்று போற்றப் பெறுவது. பெருமான் உலா வந்த போது இயக்கப்பட்ட பல்லியங்களின் பட்டியலைப் பார்க்கும் போது பண்டைய தமிழ் இசைக் கருவிகள் பற்றி அறிய முடிகிறது. இவற்றில் பல கருவிகள் என்ன ஆயின என்று அறியக்கூடவில்லை.

"சல்லரி தாளம் தகுணிதம் தத்தளகம்
கல்லலகு கல்லவடம் மொந்தை - நல்லியத்
தட்டழி சங்கம் சலஞ்சலந் தண்ணுமை
கட்டழியாப் பேரி கரதாளம் - கொட்டும்
குடமுழவம் கொக்கரை வீணை, குழல் யாழ்
இடமாம் தடாரி படகம் - இடவிய
மத்தளம் துந்துபி வாய்ந்த முருகு . . ." எத்திசையும் முழங்கின.

- ஞான உலா, 44-47.

பதினோராம் திருமுறையில் நக்கீரர் பனுவல்கள் இடம்பெற்றுள்ளன. இவர் சங்க காலத்து நக்கீரரா என்பது தெரியவில்லை. என்றாலும் இவருடைய நூல்களான கைலைபாதி காளத்திபாதி அந்தாதி, திருஈங்கோய் மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழு கூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப் பிரசாதம், கார் எட்டு, போற்றித் திருக்கலி வெண்பா, திருமுருகாற்றுப்படை, திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்ற பத்துப் பிரபந்தங்களும் பக்திப் பனுவல்களே. திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தகுந்தது.

இயமன் தன் தூதுவர்களுக்கு அறிவுரை கூறுவது கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதியின் ஒரு பாடலில் இடம்பெற்றுள்ளது. இறையடியார்களைக் கண்டால் தூதுவர்கள் அவர்களைப் பணிந்து விலகி அப்பாற் செல்லல் வேண்டும்.

"தொழுது நமனும் தன் தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில் சீர்க்காளத்தி மன்னன் - பழுதிலாப்
பத்தர்களைக் கண்டால் பணிந்து அகலப் போமின்கள்
எத்துணையும் சேய்த்தாக என்று."

அப்பர் அடிகளும் தாம் பாடிய காலபாசத் திருக்குறுந்தொகைப் பதிகம் முழுதும் இயமன் கூறும் அறிவுரையைப் பதிவு செய்து வைத்திருக்கிறார். காட்டாக ஒரு பாடல்:

"படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன்மின் நமது ஈசன் அடியரை
விடைகொள் ஊர்தியினான் அடியார் குழாம்
புடை புகாது போற்றியே போமினே."

கல்லாடர் 'திருக்கண்ணப்ப தேவர் திருமறம்' என்ற பாடலின் ஆசிரியர். இப்பாடல் 38 அடிகள் கொண்டவை. இதே தலைப்பில் நக்கீரர் பாடிய பாடல் 158 அடிகள் கொண்டது. கண்ணப்ப தேவ நாயனார் கழல் வணங்கப் பிறவிப் பிணி அகலும். இது இவரது பாடலின் சாரமான செய்தி.

"திருவேட்டுவர்தந் திருவடி கைதொழக்
கருவேட்குழல் வினைக் காரியங் கெடுமே."

கபிலர் இயற்றிய மூன்று பனுவல்கள் இத்திருமுறையில் இடம்பெற்றுள்ளன. அவை மூத்த நாயனார் திருவிரட்டை

மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி என்ப. அக்காலத்தில் பிள்ளையார் என்ற சொல் முருகனையே குறித்தது. விநாயகரை மூத்த பிள்ளையார், மூத்த நாயனார் என்றே வழங்குவர். மூத்த நாயனார் திரு இரட்டை மணிமாலையின் முதற் பாடல் எல்லோராலும் போற்றப்பட்டு வரும் பாடலாகும்.

"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை."

ஔவையார் அருளிய மூதுரையின் காப்புப் பாடல் கபிலரது பாடலை வழிமொழிகின்றது.

"வாக்குண்டாம், நல்ல மனம் உண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு."

101 பாடல்கள் கொண்டு பரணர் அமைத்த நூல் சிவபெருமான் திருவந்தாதி ஆகும். கபிலர், பரணர் ஆகிய இருவர் அந்தாதிகளுக்கும் பொருள் கூறுவது சற்றுக் கடினமே. இவற்றிற்குப் பண்டித வித்துவான் தி.வே.கோபால ஐயர் வரைந்து வைத்திருக்கும் உரை இன்னும் அச்சில் வரவில்லை.

இளம்பெருமான் அடிகள் அருளிச் செய்த சிவபெருமான் திருமும்மணிக்கோவை இத்திருமுறையில் 24 ஆவது நூலாக அமைக்கப் பட்டிருக்கிறது. இந்நூலில் ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக்கலித்துறை என்னும் மூன்று பாவினங்களும் விரவி வருகின்றன.

"சடையே
நீரகம் ததும்பி நெருப்புக் கலிக்கும்மே!
மிடறே
நஞ்சகம் துவன்றி அமிர்து பிலிற்றும்மே!
வடிவே
மிளியெரி கவைஇத் தளிர் தயங் கும்மே!
அடியே

மடங்கல் மதம் சீறி மலர் பழிக்கும்மே!
அஃதான்று
இனைய என் றறிகிலம் யாமே; முனைதவத்
தலைமூன்று வகுத்த தனித்தாள்
கொலையூன்று குடுமி நெடுவே லோயே!"

இங்ஙனம் திரிபுரம் எரித்த சிவனாரின் திரிசூலம் போற்றப்படுகிறது.

இத்திருமுறையின் 26, 27, 28, 29, 30 என்ற எண்களைப் பெற்றுள்ள நூல்கள் முறையே கோயில் நான்மணி மாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, திரு ஏகம்பம் உடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என்பனவாம். இவையிற்றின் ஆசிரியர் பட்டினத்துப் பிள்ளை. பட்டினத்து அடிகள் என்ற பெயரில் நால்வர் வாழ்ந்ததாகத் தெரிகிறது. இங்குக் கூறப்பெறும் அடிகள் காலத்தால் முந்தியவர்.

பலப்பல பிறவிகளில் தாம் அனுபவித்தவற்றைப் பற்றி அடிகள் கூறுவதாவது:

"பாவையுடன் இருந்த பரமயோகி
யான் ஒன்று உணர்த்துவன் எந்தை மேல்நாள்
அகில லோகமும் அனந்த யோனியும்
நிகிலமும் தோன்ற நீ நினைத்த நாள் தொடங்கி
எனைப்பல யோனியும் நினைப்பரும் பேதத்து
யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்
தாயராகியும் தந்தையராகியும்
வந்திலாதவர் இல்லை; யான் அவர்
தந்தையர் ஆகியும் தாயர் ஆகியும்
வந்திராத தும்இல்லை; முந்து
பிறவா நிலனும் இல்லை; அவ்வயின்
இறவா நிலனும் இல்லை; பிறிதில்
என்னைத் தின்னா உயிர்களும் இல்லை; யான் அவை
தம்மைத் தின்னாது ஒழிந்ததும் இல்லை."

அனைத்தும் சிவன் செயல் என்ற அனுபூதியில் திளைத்து நின்றவர் அடிகள். இதையே, அவர்,

"வழுவா ஓசை முழுதும் நின் வாய்மொழி
வானவர் முதலா மன்னுயிர் பரந்த

ஊனமில் ஞானத்தொகுதி நின் உணர்வே
நெருங்கிய உலகு நீர்மையின் நிற்றலும்
சுருங்கலும் விரிதலும் தோற்றல் நின்தொழிலே ...''

என்று திருவொற்றியூர் ஒருபா ஒருபஃதில் அருளியுள்ளார்.

நம்பியாண்டார் நம்பி பத்து நூல்களின் ஆசிரியர். அவை திருநாரையூர் விநாயகர் திரு இரட்டை மணிமாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தம், திருத்தொண்டர் திருஅந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருஅந்தாதி, ஆளுடைய பிள்ளையார் மீது திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருஉலா மாலை, திருக்கலம்பகம், திருத்தொகை, திருநாவுக்கரசு தேவர் திருஏகாதச மாலை என்பன.

நம்பியாண்டார் நம்பி தம் பனுவல்கள் மூலம் பலப்பல முக்கிய செய்திகளைத் தந்திருக்கிறார். ஒரு சிலவற்றை இங்குக் காண்போம்.

மாணிக்கவாசகன் என்ற திருநாமம் அடிகளுக்குச் சிவனார் வழங்கியது. அவர் வாதவூரில் பிறந்ததால் அவரை வாதவூர் அடிகள் என்பர். சரி. அடிகளின் இயற்பெயர் என்ன? நம்பியாண்டார் நம்பி வரைந்த பனுவல் கோயில் திருப்பண்ணியர் விருத்தமாகும். இதன் பாடல் 58 பின்வருமாறு:

"வரு வாசகத்தினில் முன்றுணர்ந் தோனை வண்தில்லை மன்னைத்
திருவாதவூர்ச் சிவபாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தரு திருக்கோவை கண்டேயு மற்றப்பொருளைத்
தெருளாத வுள்ளத்தவர் கவி பாடிச் சிரிப்பிப்பரே.''

இப்பாடலில் இரண்டு செய்திகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. (1) திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் பெயர் சிவபாத்தியன் என்பது. (2) இவரே திருச்சிற்றம்பலக் கோவை எனப்படும் திருக்கோவையாரின் ஆசிரியருமாவார். அமரர் மு.அருணாசலம் போன்றோர் மாணிக்கவாசகர் திருக்கோவையாரின் ஆசிரியர் அல்லர் என்ற கருத்துடையவர். இன்னும் சிலர் இக்கருத்தைப் பேணி வருகின்றனர். இக்கருத்து தவறானது என்பதை நம்பியாண்டார் நம்பியின் பாடல் நிறுவியுள்ளது.

ஆலால சுந்தரர் திருத்தொண்டத் தொகையை அருளியவர். இதில் தொகையடியார் ஒன்பதின்மர், தனியடியார் அறுபத்து மூவர் போற்றப் பட்டுள்ளனர். இத்தொகை நூலை விரித்து நம்பியாண்டார்

நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி அருளினார். இவ்விரண்டு நூல்களும் சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்திற்கு ஆதாரநூல்கள் ஆகும்.

"இங்கிதன் நாமம் கூறின் இவ்வுலகத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுள் சார்ந்துநின்ற
பொங்கிய இருளைப் புற இருள் போக்கு கின்ற
செங்கதிரவன் போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்"

என்று சேக்கிழார் பெருமான் அருளியுள்ளார். மூல நூல் திருத்தொண்டத் தொகை; வழி நூல் திருத்தொண்டர் திருவந்தாதி; விரி நூல் திருத்தொண்டர் புராணம். இச்செய்தியைச் சேக்கிழார் பெருமானே திருமலைச் சிறப்பில் அருளியுள்ளார்.

"அந்த மெய்ப் பதிகத்து அடியார்களை
நந்தம் நாதனாம் நம்பியாண்டார் நம்பி
புந்தி ஆரப்புகன்ற வகையினால்
வந்தவாறு வழாமல் இயம்புவாம்."

மெய்ப்பதிகம் என்று சேக்கிழார் அடிகள் போற்றுவது திருத்தொண்டத் தொகையையே. இச்செய்தியை மேலேகுறித்த பாட்டிற்கு முன்னதாக அமைந்துள்ள பாடலில் சேக்கிழார் பெருமான் அருளியுள்ளார்.

திருக்களிற்றுப் படியார் என்னும் சாத்திர நூல், திருஞானசம்பந்தர் தம் தாயார் ஊரான திருநனிபள்ளிக்குச் செல்லும் போது அங்கிருந்த பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கி அருளினார் என்று கூறுகிறது. இந்தச் செய்தி பெரிய புராணத்தில் இடம்பெறவில்லை. ஆனாலும், திருக்களிற்றுப்படியார் தோன்றுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே அவதாரம் செய்த நம்பியாண்டார் நம்பி இச்செய்தியை அறிவித்திருக்கிறார். ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் பாடல் 4 கூறுவது இதுவே:

"கள்ளம் பொழில் நனிபள்ளித் தடங்கட மாக்கி யஃதே
வெள்ளம் பணிநெய்த லாக்கிய வித்தகன் வெண்குருகு
புள்ளொண் தவளப் புரிசங்கோ டாலக் கயல்உகளத்
தள்ளந் தடம் புனல் சண்பையர் காவலன் சம்பந்தனே."

மேலும், ஆளுடைய பிள்ளையார் திருத்தொகையில்,

> "தாழும் சரணச் சதங்கைப் பருவத்தே
> பாலையும் நெய்தலும் பாட வலான்"

என்றும் நம்பியாண்டார் நம்பி அருளியுள்ளார். இத்திருத்தொகை சாற்றும் அதிசயங்கள் பெரிய புராண நூலாக்கத்திற்குப் பெரிதும் பயன்பட்டமை துல்லியமாகத் தெரிகின்றது.

திருநாவுக்கரசு தேவர் திருஏகாதச மாலையில், திருநாவுக்கரசரை, நம்பிகள் "பதிகம் ஏழெழு நூறு பகருமா கவியோகி" என்று போற்றியுள்ளார். ஆக அப்பர் அடிகள் பாடிய பதிகங்கள் நாலாயிரத்துத் தொள்ளாயிரம் பதிகங்கள் என்று தெரிய வருகிறது.

கவியோகி என்று ஒரு தொடரை முதன்முதல் உருவாக்கியவர் நம்பி ஆண்டார் நம்பி.

நம்பிகள் அருளிய பனுவல்கள் நம்பனையும் நம்பன் அடியார்களையும் போற்றுவன. பெரிய புராணமும் அங்ஙனே.

7. பெரியபுராணம்

(பன்னிரண்டாம் திருமுறை)

பெரியபுராணம் : பெயர்க்காரணம்

சைவ, வைணவ மதங்கள் அடியார்களுக்கு மேல் உயர்ந்தவர் எவரும் இலர் என்றே சாற்றுகின்றன. மணிவாசகப் பெருமானும் சிவபெருமானிடம் முத்தி வேண்டும் என்று கேட்டருளவில்லை. கோயில் மூத்த திருப்பதிகம், முதற்பாடல் மூலம் அவர் வேட்ட பேறு, நமக்குத் தெரிய வருகிறது.

"உடையாள் உன்தன் நடுவு இருக்கும்
உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால், அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம்பலத்து எம்
முடியா முதலே, என் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே."

அடியார்களே நனி சால மிகப்பெரியோர். தமிழ்க் கடவுளான முருகப் பெருமான், ஔவையாரைக் குளிர நோக்கி, "பிராட்டியே, பெரியது எது?" என்று கேட்டருளினான். தமிழ் மூதாட்டி, அக்கடாவிற்கு, அவன் அருளாலே இங்ஙனம் விடை இறுத்தார்:

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்

கலசமோ புவியிற் சிறு மண்
புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே."

ஆகவே, சிவன் அடியார்கள் பெருமைக்கு ஈடும் இல்லை; இணையும் இல்லை.

அடியார்களின் பெருமையை சிவபெருமானே நம்பி ஆரூரருக்கு எடுத்துரைத்து அருளினார்.

"பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்;
ஒருமையால் உலகை வெல்வார் ஊனம்மேல் ஒன்று மில்லார்;
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையுங் கடந்து நின்றார் இவரை நீ அடைவாய் ..."

அடியார்கள் தியாகிகள். ஆசையை அடக்கி, அன்பில் திளைத்து, அருளால் உயர்ந்து, தியாகத்தில் ஒன்றி இருப்பர்.

உயர்ந்தது எது? இழிந்தது எது? என்பதை, வல்வில் ஓரி மீது கழைதின் யானையார் பாடிய பாடல் மூலம் அறியலாம்.

" 'ஈ' என இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்
'ஈயேன்' என்றல் அதனினும் இழிந்தன்று."

இழிந்தன்று என்பது ஒரு சொல். அதன் பொருள் இழிந்தது என்பதாம். யாசகன் ஒருவன் 'எனக்குக் கொடுப்பாயாக' என்று இரப்பது இழிவான செயல். அதைவிட இழிவானது யாதெனில், யாசிக்கப் பட்டவன், 'உனக்கு ஒன்றும் தர மாட்டேன்' என்பதுதான். அது போல்,

"கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன் எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று."

உயர்ந்தன்று என்பது உயர்ந்தது என்று பொருள் படும்.

கடவுளிடம் கூட இரப்பது இகழ்ச்சி என்று தெய்வத் தமிழன் கருதினான் போலும். உயர் பொருளை கடவுளே உவந்து வழங்க முன் வந்தாலும், 'வேண்டாம்' என்று கூற வல்ல விறல் படைத்தவர் அடியார் ஆவர்.

தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரன், வேதம் தமிழ் செய்த மாறன் குருகூர் சடகோபராகிய நம்மாழ்வாருக்கு முக்தி அருள முன்வந்தான். ஆழ்வார், 'அது எனக்கு வேண்டாம்' என்று கூறிவிட்டார்.

"எம்மா வீட்டுத் திறம் செப்பம்; நின்
செம்மா பாதபற்புத்தலை சேர்த்து ஒல்லை
கைம்மா துன்பம் கடிந்த பிரானே
அம்மா அடியேன் வேண்டுவது ஈதே"

என்று பாடியவர் நம்மாழ்வார்.

எம்மா வீட்டுத் திறம் செப்பம்: "முத்தியை அருளும் என்று நான் கேட்கவில்லை." இப்படிச் சொன்னார் ஆழ்வார். இங்கு உரையாசிரியர் வரைந்திருப்பதை நினைவுபடுத்துகிறேன். "ஆழ்வீர்! மோக்ஷத்தைக் கொள்ளும்" என்றான் ஈசுவரன். "வேண்டாம்" என்றார் ஆழ்வார். ஈசுவரன் "மாவீடு கிடீர்" (சாதாரண பரம் அன்று; மாவீடு, பெரிய மோக்ஷம்) என்றான். அதற்கும் ஆழ்வார் "அதுவும் வேண்டாம்" என்றார். மேலும் தொடர்ந்து ஈசுரன் "எம்மா வீடு கிடீர் - ஐசுவர்யம், ஆன்ம லாபம் என்றிருக்க வேண்டா. பரம புருஷார்த்த லக்ஷண மோக்ஷம்" என்றான். இதற்கு மேற்பட்ட பேற்றினை வழங்க என்னாலும் முடியாது என்றும் சொன்னான். இதற்கும் ஆழ்வார் மசியவில்லை.

அடியார்கள் நேசிப்பது அடியார்களையே. திருக்கூட்டத்திற்கு 'சத்சங்கம்' என்றும் 'புனிதர் பேரவை' என்றும் பெயர். இதன் சிறப்பை விஞ்சியசிறப்பு யாண்டும் இல்லை. ஆரூர் தேவாசிரியன் மண்டபத்தில் அடியார் ஈண்டி இருப்பர். அக்காவணம், "அரந்தை தீர்க்கும் அடியவர்"க்கு இடமாவது. அவர்தம் மேனி மேல், "நிரந்தர நீற்றுஒளி" படர்ந்திருக்கும். மேலும் அவர்கள் மத்தியில் "புரந்த அஞ்செழுத்து ஓசை" பொலியும். ஆகவே, தேவாசிரியன் மண்டபம் "பரந்த ஆயிரம் பாற்கடல் போன்றதே." இவ்வடியார்களின் "மாசிலாத மணிதிகழ் மேனிமேல்" பூசப்பட்ட வெண்ணீறு எவ்வளவு புனிதமானதோ, அதேபோல் அவர்தம் உள்ளங்களும் புனிதமானவை. இவர்கள்,

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்."

முத்தியையும் திரஸ்காரம் செய்ய வல்லவர் திருத்தொண்டர். மேலும் இவர்தம் பெருமையை, தெய்வச் சேக்கிழார் இப்படி வருணிக்கின்றார்.

"ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன்பணி அலது ஒன்றிலர்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ!"

அகப்பகையை வென்று, ஞான முடி சூடித் திகழ்தலே வீரம். ஐம்புலனை வென்றார் தம் வீரமே உண்மையில் வீரம். இவர்தம் வீரத்தைக் கண்டு விசுவேசுவரனே விதிர்விதிர்த்துப் போனான். சேணிடையும் தீங்கு அடையாத் திருத்தொண்டராகிய திருநீலகண்டத்துக் குயவனாரையும், அவர் துணைவியாரையும், அருளோடு நோக்கி, "வென்ற ஐம்புலனால் மிக்கீர்" என்றே விளித்து அருளினான். இவ்வடியார் பெற்றிருந்த வீரமே வீரம். அத்தகு வீரத்தை 'என்னால் விளம்ப முடியுமோ?' என்று சேக்கிழார் பெருமான் அருளியுள்ளார். கா.மதகனம் செய்யும் ஆற்றல் கறைக் கண்டனுக்கு மட்டுமா உண்டு? அவனுடைய அடியார்களுக்கும் அவ்வல்லபம் உண்டு.

பெரியபுராணம் இதிகாசம் போல் அளவில் பெரிதன்று. என்றாலும் தியாகிகளான திருத்தொண்டர் வரலாற்றைத் தன்னகத்தே தேக்கி வைத்துள்ள திப்பிய கிரந்தமாக இது திகழ்வதால் இதைப் பெரிய புராணம் என்று உலகமே போற்றுகிறது.

இங்கு, புராணம் என்ற சொல்லுக்கான பொருளை நன்கு விளங்கிக் கொள்ளல் வேண்டும். பெரியவர், உத்தமர், தமிழ் அறிஞர் என்று நம்மால் போற்றப்படும் திரு.வி.க. கூட புராணம் என்ற சொல்லிற்கான முக்கிய பொருளைப் புரிந்து கொள்ளவில்லை. ஆகவே அனைவரும் அதி கவனமாகச் செயல்பட வேண்டும். திரு.வி.க. கூறுவதாவது: "சேக்கிழார் உள்ளமாகிய ஊற்றினிடத்துத் தேங்கிய அன்பு நீர் பொங்கி எழுந்து அருவிகளாக வழிந்து வழிந்து ஆறுகளாகப் பெருகி ஓடிப் பெரியபுராணக் கடலாயிற்று. அவ்வன்பு நீரால் வளர்ந்து செழித்த தமிழ்ச் சோலைகள் பல. பெரியபுராணம் பத்தியை உயிராகக் கொண்டு பிறவற்றை உடல் உறுப்புகளாகக் கொண்ட காவியம் என்று சுருங்கச் சொல்லலாம்." இவ்விதம் அற்புதமாகப் பெரியபுராணம் பற்றிக் கூறிய திரு.வி.க. அடுத்து ஒரு செய்தியைக் கூறுகிறார்.

"பெரியபுராணம் பௌராணிகத்தை வித்தாகக் கொண்டு எழுந்த நூல் அன்று. அது சரித்திரத்தை வித்தாகக் கொண்டு எழுந்த காவியம்."

புராணம் என்ற சொல்லுக்குச் சரித்திரம் என்ற பொருளும் உண்டு. புராணம் என்ற சொல்லை பழமையைக் குறிக்கும் ஒரு சொல்லாகவே எல்லோரும் கூறிவருகின்றனர். புராணம் பழமை என்ற பொருளும் தரும். இப்போது இச்சொல்லுக்கான சிறப்புப் பொருளைக் காண்போம். "பூரணாத் புராணம்." எது பூரணமோ, பரிபூரணமோ, சம்பூரணமோ அது புராணம்.

திருப்பாசுர விளக்கம் அருளிய தெய்வச் சேக்கிழார் சாற்றிய அரிய செய்தியை இங்குக் கூறுகிறேன்.

"வேத முதல்வன் எனும் மெய்த் திருப்பாட்டினி னேர்
ஆதி உலகோர் இடர்நீங்கிட ஏத்த ஆடும்
பாத முதலாம் பதினெண் புராணங்கள் என்றே
ஓது என்று உரை செய்தனர் யாவும் ஓதாதுணர்ந்தார்."

ஞானசம்பந்தப் பெருமான்,

"பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே"

என்று அருளியுள்ளார். சூதன் என்பார் சூத பௌராணிகரே. புராணம் பூரணமாதலால் பூரணனை நமக்கு அறிவிக்கின்றது. இத்தகு புராணங்களின் சிகரம் பெரிய புராணம். இதை விஞ்சும் நூல் உலகில் இல்லை. ஞானியருள் சேக்கிழார் பெருமான் பரம ஞானி ஆவார். அதனால் தான் உமாபதியார்,

"மதுர இராமாயண கதை உரைசெய்த
வான்மிக பகவனும் ஒப்பல்லன்,
விதிவழி பாரதம் உரை செய்து கரை செய்த
வேத வியாதனும் ஒப்பல்லன்
சிதைவற ஆயிர நாவுடன் அறிவுள
சேட விசேடனும் ஒப்பல்லன்;
பொதிய மலைக்குறு முனியும் ஒப்பல்லன்
புகழ் புனைகுன்றை முனிக்கு" என்பார்.

குன்றை என்பது குன்றத்தூர். இதுவே சேக்கிழார் பெருமான் அவதாரத் தலமாகும். இங்குள்ள சேக்கிழார் பெருமானின் திருமாளிகையைச் செப்பம் செய்து சேக்கிழார் பெருமான் கோயிலாக

அமைத்துத் தந்திருக்கும் தருமபுரம் சுவாமிநாதன் அவர்கட்குச் சைவ உலகம் நன்றிக் கடன் பட்டிருக்கிறது.

இங்கு சேக்கிழார் பெருமான் பூர்வோத்தரம் பற்றிச் சில செய்திகளைக் கூறுவது பொருத்தம் உடைத்து. நம் பெருமானின் முன்னோர்கள் சோழ நாட்டைச் சார்ந்தவர்கள். சோழ நாட்டில் வாழ்ந்து வந்த வேளாண்குடி மக்கள் நாற்பத்து எண்ணாயிரவரைக் கரிகால் பெருவளத்தான் தொண்டை நாட்டில் குடியேற்றினான். அங்ஙனம் குடியேறிய பெருமரபினர் கூடல்கிழார், புரிசை கிழார், வெண்குளப் பாக்கிழார், சேக்கிழார் என்போர்.

சேவூர் கிழாரே சேக்கிழார். சேவூர் சேவை என்றும் வழங்கிற்று. உமாபதியார் தெய்வச் சேக்கிழாரை சேவையர் கோன் என்றும், சேவையர் காவலர் என்றும், கங்கை குல திலகர் என்றும் தாழ்ந்து, பணிந்து, புகழ்ந்து போற்றுகிறார்.

சேவூர்கிழாரே சேக்கிழார் என்றும், சேவூர் சேவை என்று வழங்கிற்று என்றும், 1888 ஆம் ஆண்டு பெரியபுராணத்தின் முதற்பகுதியை உரையோடு வெளியிட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் அறிவிக்கின்றார்.

1203 ஆம் ஆண்டில் மூன்றாம் குலோத்துங்கச் சோழனால் திருவாஞ்சியம் திருக்கோயிலில் ஒரு சாசனம் கல்லில் வெட்டப்பட்டிருக்கிறது. சேக்கிழார் பெருமானுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அமுது படையலைப் பற்றி இக்கல்வெட்டு பேசுகிறது. “தொண்டர் சீர் உரைத்தார்” என்று ஒரு விருது சேக்கிழார் அடிகளுக்கு உண்டு. தென்னிந்திய கல்வெட்டுக்கள், எட்டாம் புத்தகம், இதுபற்றி, 48 என்ற எண் உடைய பகுதியில் சாற்றுகிறது. சேக்கிழான் வைராதராயன், சேக்கிழார் அடிகள் பெயராலே தில்லையிலே ‘தொண்டர் சீர் உரைத்தான் நந்தவனம்’ என்று ஒரு நந்தவனம் நிறுவினான். இவன் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்து வந்தவன். திருவாவடுதுறை ஆதினம் 1988இல் வெளியிட்ட பெரிய புராண நூலின் முகவுரையில் இச்செய்திகள் அமரர் க.வெள்ளைவாரணன் அவர்களால் கூறப்பட்டிருக்கின்றன.

நன்னிலம் தாலுகாவில் கிடைக்கின்ற கல்வெட்டுக்கள் மூலம் பல சேவூர்கள் பண்டு இருந்தன என்று அறிய முடிகிறது. மூன்று சேவூர்கள் பற்றி நிச்சயமாக நாம் அறிய முடிகிறது. அவை வீரராஜேந்திர சேவூர், வடகுடியான சேவூர், வீராக்க நல்லூரான சேவூர். இவை அடுத்தடுத்து

விளங்கிய ஊர்கள். ஒரு காலத்தில் இவை எல்லாம் ஒரு பெரிய ஊராக இருந்திருக்கக் கூடும். இப்பகுதிக்கு அண்மையிலுள்ள அச்சுதமங்கலத்தை ஒரு கல்வெட்டு 'பிரிந்த அச்சுத மங்கலம்' என்று பேசுகிறது.

சேக்கிழார் பெருமானுக்கு ஒரு கோயில் எடுத்து, அமுது படையலுக்கு ஓர் ஏற்பாடு மூன்றாம் குலோத்துங்கனால் செய்யப்பட்டது பற்றி மேலே குறிப்பிட்டிருக்கிறேன். சேக்கிழார் அடிகள் கோயில் நாளடைவில் சிதிலமுற்றதால் அங்கிருந்த சேக்கிழார் பெருமான் திருவுருவச்சிலை அச்சுதமங்கலத்தில் இருக்கும் திருக்கோயிலில் வைத்து காப்பாற்றப்பட்டு வருகிறது. அடிகள் திருவுருவச் சிலையின் பக்கத்திலே மூன்றாம் குலோத்துங்கன் திருவுருவச் சிலையும் இருக்கிறது. 22.09.1990 அன்று வெளிவந்த தினமணிச் சுடரில், தொல்லியல் ஆய்வாளர் குடவாயில் பாலசுப்பிரமணியன் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

அன்பர்களோடு இக்கோயிலுக்குச் சென்று சேக்கிழார் அடிகளை வணங்கி மகிழ்ந்தேன். 'செயின்டு சேக்கிழார்' என்ற தலைப்பில் நான் ஆங்கிலத்தில் வரைந்த நூலை சாகித்திய அகாதமி 1994இல் வெளியிட்டிருக்கிறது. இந்நூலின் அட்டையை அச்சுதமங்கலத்தில் எழுந்தருளியிருக்கும் சேக்கிழார் பெருமானின் திருவுருவப் படம் அலங்கரிக்கின்றது.

'சே' என்றால் ரிஷபம். ஆகவே சேவூர் ஒரு நந்திபுரம். சேக்கிழார் பெருமான் பிள்ளைத் திருநாமம் இராம தேவர் என்பதாம். திருமழபாடிக் கல்வெட்டு ஒன்றில் இச்செய்தி காணப்படுகிறது என்று வைணவப் பெரியாரான மு.இராகவ ஐயங்கார் அறிவித்திருக்கிறார். இரண்டாம் இராஜராஜன் காலத்தில், கி.பி.1162இல் வெட்டப்பட்ட திருமழபாடிக் கல்வெட்டின் மூலம், "கங்கை கொண்ட சோழ மண்டலத்துக் குலோத்துங்க வளநாட்டின் புலியூர் கோட்டத்துக் குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள் இராமதேவன் என்ற உத்தம சோழப் பல்லவராயன்" சேக்கிழார் பெருமான் என்றும், அவர் பிள்ளைத் திருநாமம் இராமதேவன் என்றும் தெளிவாகத் தெரிகிறது.

சேக்கிழார் அடிகள் இரண்டாம் குலோத்துங்கனான அநபாய சக்கரவர்த்தியின் முதல் அமைச்சர் ஆவர். இச்சோழனுக்கு எதிரிலி சோழன் என்ற பெயரும் உண்டு என்பதைத் திருமாணிகுழி கல்வெட்டு

ஒன்று கூறுகிறது. இச்சோழ மன்னர் மன்னனே பெரியபுராணத்தைப் பாடுவித்தவன். இவன் அவையோருக்கும் இப்பணியில் பங்கு உண்டு.

> "மேய இவ்வுரைகொண்டு விரும்புமாம்
> சேயவன் திருப்பேரம்பலம் செய்ய
> தூயபொன் அணிசோழன் நீடூழி பார்
> ஆய சீர் அநபாயன் அரசவை."

- பெரியபுராணம், பாயிரம், பாடல் 9.

8. மாமன்னர் அநபாயர்

சேக்கிழார் பெருமான் அநபாயச் சோழரின் முதன் மந்திரி ஆவார். இம்மன்னரே சேக்கிழார் பெருமானைப் புராணம் பாட வைத்தவர். இச்செய்தியைச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணப் பாயிரத்தின் எட்டாம் பாட்டில் பதிவு செய்திருக்கிறார்.

முதல் சோழப் பேரரசர் முதலாம் இராஜராஜனே. உலகப் புகழ் பெற்ற தஞ்சைப் பெரிய கோயிலை நிறுவியவர் இவரே. இவர் கி.பி. 985இல் அரியணை ஏறினார். இவரது கீர்த்தியையும் வென்ற சீர்த்தி படைத்தவர் இவருடைய மகனான முதலாம் இராஜேந்திரன். இவர் கப்பற்படையை வலுப்படுத்தி வைத்திருந்தார். தம்முடைய பராக்கிரமத்தால் பெரு, சுமத்திராவின் சில பகுதிகள், மலேயா, அந்தமான், நிகோபார் தீவுகள் ஆகியவற்றை வென்று கைப்படுத்தியவர். இந்தியாவின் வடபுலத்தில் உள்ள பீஹாரையும், வங்காளத்தையும் ஆண்டு வந்த மகிபாலனை கி.பி.1023இல் வென்றார். இவரது சாதனை இவருக்கு 'கங்கை கொண்டான்' என்ற விருதினை ஈட்டித் தந்தது.

தம் தந்தையாரைப் போலவே இவரும் கங்கை கொண்ட சோழபுரத்தில் தஞ்சைப் பெரிய கோயிலை நிகர்த்த அற்புதக் கோயில் ஒன்றை அமைத்தார். தெய்வச் சேக்கிழார் மீது பாடப்பட்ட புராணத்தில் குறிக்கப்பெறும் சிவாலயத் தேவர் இவரே என்று ஆய்வாளர் குடந்தை நா.சேதுராமன் அறிவித்திருக்கிறார். இராஜேந்திர சோழர் சிவனார் உகக்கும் மார்கழித் திருவாதிரை நாளில் பிறந்தவர் என்று திருவொற்றியூர் கல்வெட்டு ஒன்று சாற்றுகிறது. இவர் கி.பி.1044 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். இவர் 1028 ஆம் ஆண்டே தம் புதல்வாரன முதலாம் இராஜாதிராஜ சோழருக்கு முடிசூட்டி வைத்தார். இவருக்குப் பிறகு இரண்டாம் இராஜேந்திரனும், அவருக்குப் பிறகு வீரராஜேந்திர சோழரும் சோழ நாட்டை ஆண்டு வந்தனர்.

வீரராஜேந்திரன் கி.பி.1067இல் தம் மகனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி அன்னாருக்கு அதிராஜேந்திர சோழன் என்னும் சிறப்புப் பெயரையும் நல்கினார். இவ்விளவரசருக்கு சில எதிர்ப்புகள்

உண்டாயின. என்றாலும் இவருடைய மைத்துனராகிய சளுக்க இளவரசர் விக்ரமாதித்தன் இவருக்கு உறுதுணையாக விளங்கியதால் அதிராஜேந்திரர் அரசுக் கட்டில் ஏறி ஆட்சி புரிய முடிந்தது.

சோழ அரசர்கள் அடுத்தடுத்து மாறிவரும் பெயர்களான ராஜகேசரி, பரகேசரி என்ற பெயர்களைச் சூட்டிக் கொள்வர். வீரராஜேந்திரன் இராஜகேசரி; அதிராஜேந்திரர் பரகேசரி. இப்பரகேசரி கி.பி.1070இல் சில மாதங்களே ஆட்சி செலுத்தி இருக்க வேண்டும். 1070 ஜூன் மாதம் 9 ஆம் நாள், முதல் குலோத்துங்கன் முடிசூட்டிக் கொண்டதிலிருந்து மேற்சொன்ன செய்தி விளங்குகிறது. சளுக்க மன்னர் ஆன விக்ரமாதித்தனின் வரலாற்றை இயற்றிய பில்ஹணன், அதிராஜேந்திரர் உள்நாட்டுக் கலகத்தில் கொலையுண்ட செய்தியைக் கூறியுள்ளார்.

முதலாம் குலோத்துங்கன் சளுக்க மன்னர் இராஜராஜ நரேந்திரனின் மகன். அவருடைய தாய் ஒரு சோழ இளவரசி. அவர்தம் தாய்வழிப் பாட்டனால் வளர்க்கப் பட்டவர். முதலாம் குலோத்துங்கன் ஆட்சி அரை நூற்றாண்டு நடைபெற்றது. இம்மன்னர், "சுங்கம் தவிர்த்து இருள் நீக்கி உலகாண்ட ஸ்ரீஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்" என்று போற்றப்பட்டார். கி.பி.1112 ஆம் ஆண்டு இம்மன்னர் வடகலிங்கத்து அனந்தவர்மன் மீது போரிட்டு அவனை வென்றார். இவ்வெற்றிப்பாடே ஜெயங்கொண்டார் யாத்த கலிங்கத்துப் பரணியின் பாடுபொருள். பரணி நூல்களில் கலிங்கத்துப் பரணிக்கு ஒரு தனிச் சிறப்பிடம் உண்டு.

முதலாம் குலோத்துங்கன் சீன நாட்டோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தார். சீன அரசு அவருக்குக் கண்ணாடிப் பொருட்கள், கற்பூரம், கிம்வா என்ற பெயருள்ள சித்திரப்பூ வேலைபாடுடைய பட்டு வகைகள், தந்தங்கள், காண்டா மிருகத்தின் கொம்புகள், வாசனைத் திரவியங்கள், பன்னீர், பெருங்காயம், கிராம்பு, இலவங்கம், தூபத் திரவியங்கள், மேலும் அன்ன பிற பொருட்களையும் அனுப்பி வைத்தது. குலோத்துங்கனும் எண்பத்து ஓராயிரத்து தொண்ணூறு செப்புக் காசுகளை பல மாலைகளாக்கி, 72 நபர்கள் கொண்ட தூதுவர் குழு மூலம் சீன நாட்டுக்கு அனுப்பி வைத்தார். சோழ நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்குச் சீன நாடு சோழ நாட்டிற்கு உதவியது.

கி.பி.1120 ஆம் ஆண்டு விக்கிரம சோழர் அரியணை ஏறினார். அவர் சிறந்த போர் வீரர். வீரச் செயல் பல விளைத்துப் பெரும் புகழ்

ஈட்டினார். அவர் நிகழ்த்திய கலிங்கத்துப் போர் பற்றி, அவருடைய அரசவைப் புலவரான ஒட்டக்கூத்தர் ஓர் அற்புதமான பரணி பாடியுள்ளார். இப்பரணி இப்போது கிடைக்கவில்லை. விக்கிரம சோழர் மிகச் சிறந்த சிவபக்தர். கி.பி.1128இல் பெருஞ்செலவில் சிதம்பரம் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்தார். தில்லை நடராஜரே இம்மன்னரின் ஆத்மார்த்த தெய்வம். திருக்கோயிலுக்குப் புதிய கட்டடங்களைச் சேர்த்ததுமன்றி, கொடைகள் பலவும் உவந்து நல்கினார் இம்மன்னர்.

ஈகையில் பெரியவரான இம்மன்னர் தியாக சமுத்திரம் என்ற விருதினைப் பெற்றார். வண்மை பெருவலி உடைத்து.

"கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்
அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தார் எனப்படுஞ் சொல்." - நாலடியார்

பராக்கிரம விக்கிரம சோழர் கி.பி.1135இல் சிவன் கழல் சார்ந்தார். தாம் நிலவுலகை நீப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே இம்மன்னர் தம் மகனைப் பட்டத்து இளவரசர் ஆக்கினார். இவரே இரண்டாம் குலோத்துங்கனாகிய அநபாயர். இவருடைய முதல் மந்திரியாக விளங்கியவரே சேக்கிழார் அடிகள். கோல் நெறி திருத்தி வாழும் கொள்கையராகிய அடிகள், தம் மன்னரை நெறிப்படுத்திச் சிவ வாழ்வு வாழ வைத்தார்.

தொடக்க காலத்தில், இளமை மீதூர, இன்பத் துறையைப் போற்றும் காவியமான சீவக சிந்தாமணியில் இம்மன்னர் தோய்ந்து கிடந்தார். அக்காலச் சூழலும் அப்படி அமைந்திருந்தது. இந்நிலை உமாபதியாரால் இங்ஙனம் வருணிக்கப் பட்டிருக்கிறது.

கலகமிடும் அமண்முருட்டுக் கையர் பொய்யே
கட்டிநடத்திய சிந்தாமணியை மெய்யென்று
உலகில் உள்ளோர் சிலர்கற்று நெற்குத்துண்ணாது
உமிக்குத்திக் கைவருந்திக், கறவை நிற்க
மலடு கறந்து உளம் தளர்ந்து குளிர் பூஞ்சோலை
வழியிருக்கக் குழியில் விழுந்து அளறு பாய்ந்து
விலைதரு மென்கரும்பிருக்க இரும்பைமென்று
விளக்கிருக்க மின்மினித் தீக் காய்ந்து நொந்தார்."

சிந்தாமணி காமச் சுவையைப் போற்றும் நூல்.

"பவழவாய் பரவை அல்குல் என்றிவை பருகும் வேலான்
கவழமார் களிறு போன்றான் காதலி கரும்பை ஒத்தாள்
தவழ்மதுக் கோதை மாதர் தாமரைப் பூவதாக
உமிழ்நகை வேலினானும் ஒண்சிறை மணிவண்டு ஒத்தான்"

எனவரும் நாமகள் இலம்பகத்தின் 191 ஆம் பாடலும், அதற்கு நச்சினார்க்கினியர் வரைந்த உரையையும் பார்த்தாலே சிந்தாமணி காம நூல் என்பது விளங்கும்.

சிற்றின்பத்தைப் போற்றிய மன்னருக்கு மடைமாற்றம் அருளி, சேக்கிழார் அடிகள் தம் மன்னரைச் சிவகாமச் செம்மல் ஆக்கினார்.

மேலும், சீவகசிந்தாமணியின் தத்துவக் கோட்பாடும் பாரத மண்ணிற்கு உகந்தது அன்று. சமணர் போற்றும் அஸ்தி-நாஸ்தி (உண்டு-இல்லை) என்ற கொள்கையும் மம்மரே விளைக்கும். அவர்கள் காட்டும் சப்தபங்கி, அநேகாந்த வாதம் ஆகியவையும் மெய்யியல் வாழ்க்கைக்கு ஊறு விளைப்பன.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்"

என்பது தமிழ் மறை அன்றோ! ஆகவே சேக்கிழார் அடிகள், அநபாயருக்கு நன்னெறி காட்டுதல் தம் கடமை என்று கொண்டு, அடித்தடித்து அக்காரம் தீட்டினார். மன்னரும் 'பயில வேண்டிய நூல் யாது?' என்று வினவ, சேக்கிழார் அடிகள்,

"ஞாலத்து அம்பலவர் திருத்தொண்டர் பெருமை, ஆரூர் அடிகள் முதலடி எடுத்துக் கொடுக்க, நாவல் நம்பி பதினொரு திருப்பாட்டாகச் செய்த நலமலி தொண்டத் தொகைக்கு நாரையூரில், தும்பி முகன் பொருள் உரைக்க நம்பியாண்டார் சுருதி மொழிக் கலித்துறை அந்தாதி செய்தார்" என்று கூறி அந்நூல்கள் சாற்றும் அடியார் வரலாறுகளே ஆன்ம லாபம் அருள வல்லன என்று எடுத்துரைத்தார். அதன்பேரில், மன்னரும் அவ்வரலாறுகளை அடைவுபட அருள வேண்டும் என்று அடிகளை வேண்ட, அவரும் அத்திருப்பணியில் இழிந்தார்.

அநபாயச் சோழருக்கு எதிரிலி சோழர் என்ற ஒரு பெயரும் உண்டு. அண்மையில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள கோனுலாம்பள்ளம் என்ற ஊரில் அநபாயச் சோழர் சிவன் கோயிலுக்கு வழங்கிய சிவ பூஜா

பொருள்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றுள் நவ தீபம் என்ற விளக்கின் கைப்பிடியில், சோழர் கால எழுத்தில், 'எதிரிலி சோழன்' என்ற பெயர் காணப்படுகிறது.

இன்றும், என்றும் சைவம் தழைப்பதற்குக் காரணமாக விளங்குவது பெரிய புராணம். இப்புராணம் தோன்றக் காரணமாக இருந்தவர் அநபாயர். இதை எந்த சைவரும் மறத்தல் கூடாது. ஆகவே தாம் அருளிய பெரியபுராணத்தில் சேக்கிழார் அடிகள் அம்மன்னர் பெயரை அங்கங்கும் பதிவு செய்திருக்கிறார். இதற்கான பட்டியல், 1950இல் சமாஜம் வெளியிட்ட பெரியபுராணம், பக்கம் 11இல் உள்ளபடி கீழே தந்திருக்கிறோம்.

"அநபாயன் கூறப்படும் இடங்கள்:

பேரம்பலம் செய்யதூய பொன்னணி சோழன் நீடூழிபார் ஆயசீர் அநபாயன் 8, வென்றிவெண்குடை அநபாயன் செய்யகோல் அபயன் திருமனத்தோங்கும் திருக்கயிலாய நீள் சிலம்பு 22, பொதுக்கடிந்தினிது காக்கும் கொற்றவன் அநபாயன் 85, மன்னுசீர் அநபாயன் வழிமுதல் ... மனுவேந்தனே 98, சென்னி வெண்குடை நீடநபாயன் 404, புதுமலையிடித்துப் போற்றும் அந்நெறி வழியேயாக அயல்வழியடைத்த சோழன் மன்னிய அநபாயன் 552, சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் தில்லைத் திருவெல்லை பொன்னின் மயமாக்கிய வளவர் போரேறென்றும் புவிகாக்கும் மன்னர் பெருமான் அநபாயன் 1218, அம்புய மலராள் மார்பன் அநபாயன் என்னும் சீர்த்திச் செம்பியன் செங்கோலென்னத் தென்னன் கூன் நிமிர்ந்த தன்றே 2750, தில்லை நகர் மணிவீதி அணி விளக்கும் சென்னி நீடநபாயன் 3954, வள்ளல் கொடை அநபாயன் முந்தை வருங்குல முதலோராயமுதற் செங்கணார் 4215."

சேக்கிழார் அடிகள் போற்றிய அநபாயரை ஏற்றுவோம், போற்றுவோம்; சொன்னேன் அதுவே சுகம்.

9. முதலே முடிவும்

சைவராகப் பிறந்த கம்பர் வைணவத்தைத் தழுவினார் என்பர். கம்பன் என்ற பெயர் ஏகம்பன் என்ற பெயரின் சுருக்க வடிவம். "கால காலனைக் கம்பன் எம்மானைக் காணக் கண் அடியேன் பெற்றவாறே" என்று காஞ்சி ஏகாம்பரேஸ்வரரை, தாம் இடக்கண் பார்வை பெற்ற போது நம்பி ஆரூரர் போற்றியுள்ளார்.

நாராயணக் கடவுளின் பரத்துவத்தை நிறுவவே கம்பர் இராமாயணம் பாடினார். அவர், தம் இதிகாசத்தை இப்படித் தொடங்கினார்:

"உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலைபெ றுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகுஇல் விளையாட்டு உடையார் - அவர்
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே."

இப்பாடல் கூறும் கடவுட்டன்மை சைவ, வைணவ, சாக்த, காணாபத்திய, கௌமார, சௌர சமயக் கடவுள்கள் அறுவருக்கும் பொதுவானது.

கம்பர் அருளிய இரண்டாம் பாடல் இப்படி அமைந்துள்ளது.

"சிற்குணத்தர் தெரிவு அருநல்நிலை
எற்கு உணர்த்த அரிது; எண்ணிய மூன்றினுள்
முற்குணத்தவரே முதலோர்; அவர்
நற்குணக் கடல் ஆடுதல் நன்று அரோ."

நாராயணரைச் சாத்துவிகக் கடவுள் என்றும், பிரமனை ராஜஸக் கடவுள் என்றும், உருத்திரரைக் தாமஸக் கடவுள் என்றும் கூறும் மரபு ஒன்று உண்டு. மேலே சொன்ன பாட்டில் சத்துவ குணக் கடவுளை, கம்பர் போற்றுகிறார். மேலே சொன்ன மரபு சரிதானா என்று இங்கு நான் ஏதும் கூறுவதற்கு இல்லை.

அடுத்து,சு கம்பர் பாடிய மூன்றாம் பாடலைப் பார்ப்போம்.

"ஆதி, அந்தம், அரி, என யாவையும்
ஓதினார், அலகு இல்லன, உள்ளன,

வேதம் என்பன - மெய்ந்நெறி நோன்மையன்
பாதம் அல்லது பற்றிலர் - பற்று இலார்."

இப்பாடலில்தான், தாம் குறிப்பிடும் தெய்வத்தின் பெயரை விளக்கமாகக் கம்பர் அறிவிக்கின்றார். பரத்துவம் உடைய கடவுள் அரி என்று இப்பாடல் தெளிவாகச் சாற்றுகிறது.

சேக்கிழார் பெருமான் சோழச் சக்கரவர்த்தியின் முதல் மந்திரி; அருட்கவி. அப்பெருமான் பாடிய ஒரே நூல் பெரியபுராணம். சுற்றி வளைக்காமல் எடுத்த முதல்பாட்டிலேயே பரம்பொருள் சிவனாரே என்று ஐயம் திரிபுகளுக்கு இடம் இன்றி, சேக்கிழார் அடிகள் தெளிவாகவும், அழுத்தமாகவும் அறிவிக்கின்றார். 'உலகெலாம்' என்று சேக்கிழார் பெருமானுக்கு அடி எடுத்து அருளியவர் அம்பலவாணர். பொது நீக்கி, சிவனாரையே வழிபடல் வேண்டும் என்பது சைவ சித்தாந்தத்தின் உயிர்க் கொள்கை.

ஆகவே, தாம் வரைந்த முதற்பாடலிலேயே சிவபரத்துவத்தை இப்படிப் பாடினார்.

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நில வுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

உலகெலாம் என்ற தொடர் பொருள் பொதிந்த ஒரு தொடர். உலகு என்பது ஈண்டு பிரபஞ்சத்தைக் குறிக்கும். திருக்களிற்றுப்படியாரும், "அம்மை யப்பரே உலகிற்கு அம்மை யப்பர்" என்று சாற்றுகின்றது. புவனங்கள் 224 என்று சாற்றும் சைவ சித்தாந்தம். இவற்றுள் அடங்கிய உலகங்களுக்குக் கணக்குக் காட்ட முடியாது.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பு அரும் தன்மை, வளப்பெரும் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்று எழில் பகரின்
நூற்று ஒரு கோடியின் மேற்பட விரிந்தன"

என்று மணிவாசகர் அருளியுள்ளார்.

மேலை நாட்டு விஞ்ஞானிகளும் உலகங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட முயன்று கைசோர்ந்து போயினர். 'சிந்தனைக்கு உரிய தகவல்கள்' என்ற தலைப்பில் 1972, நவம்பர் 'ரீடர்ஸ்

டைஜஸ்ட்' இதழில் மோரிஸ் மாண்டல் வரைந்த குறிப்பு ஒன்றைக் காண்பம். "நம் பூமி எவ்வளவு பெரிது அவ்வளவு பெரிய பூமிகள் பத்து லக்ஷத்திற்கும் மேல் ஒரு சூரியனில் அடங்கும். வானவெளியில் உள்ள பல நட்சத்திரங்கள் ஒவ்வொன்றிலும் 50 கோடி சூரியன்களை வைத்து அடைக்கலாம். ஒவ்வொரு காலக்ஸியிலும் (விண்வெளி பால் மண்டலத்திலும்) 10,000 கோடி நட்சத்திரங்கள் உள. இத்தகு விண்வெளி பால் மண்டலங்கள் கண்டறியப்பட்ட ககனவெளியில் ஆயிர லக்ஷம் உள."

'உலகெலாம்' என்ற தொடரை சேக்கிழார் அடிகளுக்கு அசரீரி மூலம் அருளினான் சிவபெருமான். ஆகவே இத்தொடர் பசுவாக்கு அன்று; பாச வாக்கும் அன்று. இது பதிவாக்கு. பதி உதவிய வாக்கைக் கொண்டு ஒரு பசு புராணம் பாடி விட முடியுமா?

ஓங்கி உலகளந்த உத்தமனாலும் அறியப்படாத சிவனார், உலகம் உவப்ப உலகெலாம் என்று அருளிய பிறகு, சேக்கிழார் அடிகள் திரு உள்ளத்தில் அமர்ந்து புராணம் பாடியுள்ளார். ஓசை ஒலியெலாம் ஆன பரமசிவனார் உதவிய தொடர், ஒலி மிக்கு இலகு சீரடியார் செவிப் புலத்து எங்குமாகி நிறைந்தது. இது அதி சூக்கும அசரீரி என்று போற்றப்படுகிறது. இவ்வுணர்வு நிலவிய நிலையில், சேக்கிழார் அடிகள் புராணத்தை வரைந்து தலைக்கட்டினார். ஆகவே பெரியபுராணம் என்பது பதிவாக்குப் பெட்டகமே.

சிவபெருமான் உணர்ந்து ஓதற்கரியவன். இதுவே இறை நிலை என்று ஓர் இலத்தின் வாசகம் இயம்புகின்றது. "Verius cogitator Deus quam dictur, et verius est quam cogitator." இதன் பொருள்: "கடவுளைச் சொல்லில் சிமிழ்ப்புற வைத்தலை விடக் கற்பனைக் காட்சியாகப் பெறுவது சுலபம். (ஆனாலும்) கற்பனை கடந்த உண்மைப் பொருளே கடவுள்."

'ஓதற்கரியவன்' என்பதற்கான விளக்கத்தை அருள வேண்டும் என்று தருமை ஆதீனத்து 26 ஆம் குரு மஹா சந்நிதானத்தை நான் வேண்டிய போது, அத்தவச் செல்வர் கூறியவதாவது:

"மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்" என்று அருளிய மணிவாசகர்,

"பூதங்கள் தோறும் நின்றாய் எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்

கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் நினைக் கண்டறிவாரை"

என்றும் ஓதி அருளியிருப்பதைத் தியானம் செய்வாயாக என்றனர்.

'கடலைக் கையிட்டு காட்டுமா போலே' என்ற வைணவ வியாக்கியான வரியே என் நினைவிற்கு வருகிறது.

சிவனாருக்கு உள்ள சிவஞானம் ஒரு தனிச்சிறப்புடையது. அப்பதிஞானம் பெற்றுத் திகழ்ந்தார் வரலாற்றைப் பாடும் நூலே பெரியபுராணம். என்றாலும் இப்பெருமக்கள் பெற்றிருந்த பதிஞானம் சிவனார்க்கு உள்ள சிவஞானம் ஆகாது. அவர்கள் மிகச் சிறப்பான, வேறு எவரும் பெறாத, ஞானம் உடையவராயினும், அந்த ஞானம் கொண்டும் சிவனாரை அவர்கள் முற்றுமாக ஓத முடியாது. ஆனால் அவர்கள் போல சிவனாரின் பெருமையே வேறு எவரும் ஓத முடியாது.

சிவபரத்துவம் சாதிக்கவும், அடியாரின் அலகில் பெருமையை அறிவிக்கவும் சேக்கிழார் அடிகள் புராணம் பாடினார்.

"மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன்
துதிசெயும் நாயன்மார் தூயசொல் மலர்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே."

இப்படி அடியார் பெருமை சேக்கிழார் அடிகளால் அருளப்பட்டிருக்கிறது.

சிவபரத்துவம் சாதிக்க வந்த சேக்கிழார் பெருமான், "நில வுலாவிய நிர்மலி வேணியன்" என்று அருளி, தாம் வேட்ட சாதனையைச் சாதித்திருக்கிறார்.

வேணி என்பது கேசம், தலை மயிர், ஒருவன் உடலில் உள்ளவற்றுள் மிகமிகப் பலஹீனமான பொருள் தலைமயிரே. இத்தலைமயிரில் மகா வல்லமையைப் பொதிந்து வைத்து ஸாம்ஸன் என்பானை யூதர்களின் கடவுளான எஹோவா படைத்தார். ஆனால் இவன் செருக்குற்றுப் பற்பல பாவங்களைச் செய்தான். ஒரு வேசியின் சூழ்ச்சியால் இவன் தலைமுடி மழிக்கப்பட்டு, இவன் கண்களும் குருடாக்கப்பட்டன. முடியும், கண்ணும், இழந்த நிலையில், இவன் பெரிதும் வருந்தி, "என்னால் அறியாப் பதம் தந்தாய்; நான் அஃது அறியாமல் கெட்டேனே" என்று புலம்பினான். ஈடு இணையற்ற சரீர

பலம் தந்த இறைவன் அவ்வல்லமையைப் புன்மயிரில் அல்லவா தொங்க விட்டான் என்று கதறினான். அற்பமான மயிரில் அமைக்கப்பட்ட வல்லமை முடிவில் நல்குவது அழிவே. ஸாம்ஸன் கூற்றாக மாமுநி மில்டனார் கூறியது இதுவே:

> "God, when he gave me strength, to show withal
> How slight the gift was, hung it in my hair."

இயற்கையில் நொய்தான பொருள் மயிர் என்றால், மிகமிகப் பலம் பொருந்திய பொருள் யாது? நீர், நீர்ப்பெருக்கு. ஒடுக்கம் பிரளயத்தின் மூலம் நிகழ்த்தப்படுகிறது. அப்போது,

> "மண்பாதலம் புக்குமால் கடல் மூடி மற்று ஏழுலகும்
> விண்பால் திசைகெட்டு இருசுடர்" வீழும் என்றார் அப்பர்.

இன்னொரு செய்தி, ஒரு பெண் சினந்தால் குடிகெட்டுப் போகும். கண்ணகி மதுரையை அழித்தவள். அதிகாரமோ, பலமோ பொருந்திய பெண் ஒருத்தியின் சீற்றத்தால் சர்வ நாசம் விளையும். "வான உலகில் வளைய வரும் என்னை மண்ணிற்கு இழுக்கின்றானே! இந்த பகீரதன் கொண்ட எண்ணம் பாழ்த்துப் போம்படி மண்ணுலகை அழிக்கிறேன் பார்" என்று அதி உக்கிரத்தோடு சாடி, நொறுக்க வந்த கங்கையைச் சிவனார் தம் கற்றைச் சடை முடியில் உள்ள ஓர் உரோமத்தால் வாங்கினார். சினமடங்காப் பேதையாம் கங்கை எம்மிறையின் சடைக்காட்டில் ஓராயிரம் ஆண்டுகள் திக்குத் திசை புரியாமல் சுழன்று சுழன்று வந்து சோர்ந்து போனாள். இல்லீலையைச் சுவைத்த கவி காளமேகம் பாடிய பாடலைப் பார்ப்போம்.

> "விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
> மண்ணுக் கடங்காமல் வந்தாலும் - பெண்ணை
> இடத்திலே வைத்த இறைவர் சடாம
> குடத்திலே கங்கை அடங்கும்."

நிலவுலாவிய நீர்மலி வேணியனே பரம்பொருள். அப்பர் அடிகளும், "நில்லாத நீர்சடைமேல் நிற்பித்தான்" என்று அருளியுள்ளார்.

எம்பெருமான் அலகில் சோதியன். அவனே ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி. நெருப்பு என்பது ஒரு பொருளையே சார்ந்திருக்கும். தனி நெருப்பை, சுயஞ்சோதியை எவருமே கண்டதில்லை என்னலாம்.

எளியேனின் ஆசிரியரான வேங்கடத்துக் கந்தனார் நெருப்பிலும் பல சாதிகள் உண்டு என்று சாற்றியுள்ளார். அவர் அருளிய செய்தி பயனுடையதாகும்.

சில வாழைப் பழங்களை உரித்து நெருப்பில் போட்டால் நெருப்பு அவிந்து போகும். ஆனால் உரித்த அப்பழங்களை வாயில் இட்டால் அவை வயிற்றில் உள்ள அக்னியால் (சாடராக்னியால்) சீரணிக்கப்பட்டு விடும். பௌதிக அக்னியை விட சாடராக்னி நுட்பமானது, வலிமை உடையது. உத்யுத் என்னும் மின்னல் தேக்கி வைத்திருக்கும் அக்னி ஓர் ஊரையே அழித்து விடும். ஆனால் எந்த அக்னியும் வினையை, ஆசையை அழிக்க வல்லது அன்று. காமத்தால் அதாவது விருப்பால், அதை ஒட்டி வரும் விருப்பு வெறுப்புக்களால் வினை செய்கிறோம். இக்காமத்தை அழிப்பது ஞானாக்னி. இவ்வக்னி உள்ள ஒரே இடம் சிவபெருமானின் நெற்றிக்கண். இக்கண்ணே காமனை அழித்தது. இதில் தோன்றும் அக்னியே அலகில் சோதி. இது ஒன்றே காமத்தை வேரும் வேரடி மண்ணுமில்லாமல் அழித்துப் போடும். அழிக்கும் இதுவே அருளை விளைவிக்கும் சோதி. இதுவே சுயஞ்சோதி, பரஞ்சோதி. இதுவே நல்லூர்ப் பெருமணத்தில் நிகழ்ந்த ஞானப்பிள்ளையாரின் திருமணத்தில் அனைவருக்கும் முக்தி அளித்தது.

"ஆறுவகைச் சமயத்தில் அருள் தவமும் அடியவரும்
கூறுமறை முனிவர்களும் கும்பிட வந்து அணைந்தாரும்
வேறு திருவருளினால் வீடு பெற வந்தாரும்
ஈறில் பெருஞ் சோதியினுள் எல்லாரும் புக்க அதற்குப் பின்
காதலியை கைப்பற்றிக் கொண்டு வலங்கொண்டு அருளித்
தீதகற்ற வந்தருளும் திருஞானசம்பந்தர்
நாதன் எழில் வளர் சோதி நண்ணி அதன் உட்புகுவார்
போத நிலை முடிந்த வழிப் புக்கு ஒன்றி உடனானார்."

ஈறில் பெருஞ்சோதி, நாதன் எழில் வளர் சோதி. இதுவே அலகில் சோதி. இச்சோதியே அம்பலத்தில் சுடர் விடுகின்றது. அம்பலம் என்பது மாசற்ற அடியார் உள்ளம். உள்ளக் கோயிலின் ஒண் சுடரே அம்பலவன். இவ்வம்பலம் சிவபரமேட்டிக்கே உரியது. இதையே திருக்கோவையார் "ஆம்பல் அங்கைத் தலத்து அன்பர் என்பு ஊடு உருகக் குனிக்கும் பாம்பலங்காரப் பரன் தில்லை" என்று போற்றுகிறது.

அடியார் உள்ளத்தில் அனவரதமும் நிகழ்வது ஆனந்தத் தாண்டவம். பிறர் உள்ளத்தில் நிகழ்வது ஆணவத் தாண்டவம். தகத்தக அருள்புரியும் சிவனார் சிலம்படிகளே நம்மைத் திருத்திப் பணிகொள்ளும். இவ்வடிகளை வியந்தும் நயந்தும் நாமும் போற்றுவோமாகில் வெற்றிப் பாடான உந்தி பறத்தல் நமக்கு சாத்தியமாம்.

"திருச்சிலம்பு ஓசை வழியே சென்று
நிருத்தனைக் கும்பிடு என்று உந்தீ பற!
நேர்பட அங்கே நின்று உந்தீபற!"

"வாழ்த்தி வணங்குவாம்" என்று கூறித் தம்முடைய முதற்பாட்டைத் தலைக்கட்டுகிறார் சேவையர் கோன். இம்முடிவை சேக்கிழார் அடிகள் அப்பரடிகளிடமிருந்து பெற்றுக் கொண்டார். "மருகலான் அடி வாழ்த்தி வணங்கவே" என்பது அப்பரடிகளின் அருள் வாக்கு.

அம்பலத்து ஆடுவான் ஆடல்வல்லான். இப்பெருமானை இருக்கு வேதம் தாண்டவேச்வரர் என்று குறிக்கும். இப்பெருமானே முழுமுதற்கடவுள். இவரே பரதர். பரதர் வரதரும் ஆவார்.

"எது இதயத்துள் ஆகாசமாய் (சிற்றம்பலமாய்) இருக்கின்றதோ, அதில் அனைத்தையும் வசீகரிப்பவரும், அனைத்துக்கும் அதிபதியும், அனைத்துக்கும் ஈசானரும் ஆயினார் அமர்கின்றார்" என்று பிரகதாரணிய உபநிடதம் சுட்டிக்கூறிய அந்த அத்தியக்ஷராகிய ஈசானரே அநுக்கிரக சக்கரத்துச் சதாசிவராம். இருக்கு வேதத்தில் கூறப்பட்ட வியோமமும், பிருகதாரணியத்துக் கூறப்பட்ட ஆகாயமும் திருச்சிற்றம்பலத்தை உணர்த்துவனவாம் ..."

- சிவஞானபோத வசனாலங்கார தீபம், முதற்சூத்திரம், பக்கம் 8

இவ்வுபநிடதக் கூற்றே சேக்கிழார் பெருமானால் ஏற்கப்பட்டு பெரியபுராணத்துள் பதிவாகி உள்ளது.

"கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி, போற்றி!"

- தில்லை வாழ் அந்தணர் புராணம், பாடல் 2

சர்வ ஞானோத்திர ஆகமம் சிவபரம்பொருளின் பெருமை பகர்வது. சர்வசங்காரக் கடவுள் மகா உருத்திரரே. இவரே பரதர் என்று இருக்கு வேதத்து இரண்டாம் மண்டலத்து 36 ஆம் சூக்தத்து, இரண்டாம் மந்திரம் சாற்றுகிறது. ஆகவே சிருட்டியாதி பஞ்ச கிருத்திய நடனம் இவரால் இயற்றப்படுவதால் இவர் பரதர் என்று போற்றப்படுகிறார். இவரையே முழுமுதற் கடவுளான தாண்டவேசுவரர் என்று இருக்குவேதம் கூறுகிறது. சிவபரத்துவத்தை முதலாம் பாடலில் சாதித்தசேக்கிழார் பெருமான், இது இருக்கு வேதக் கூற்று என்பதைத்தான் தம்முடைய இரண்டாம் பாட்டில் வெகு அழகாகச் சூசிப்பிக்கின்றார். அப்பாடலைத் தரிசிப்போம்.

> "ஊன் அடைந்த உடம்பின் பிறவியே
> தான் அடைந்த உறுதியைச் சாருமால்
> தேன் அடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
> மாநடஞ்செய் வரதர் பொற்றாள் தொழ.

வரதரே பரதர் ஆவார் என்பதை முன்னமேயே கூறியுள்ளோம். நடனம் செய்பவர் பரதர் தாமே.

அவன் அருளாலேதான் அவன் தாளைக் காண்டல் ஒல்லும். அவன் அருளே கண்ணாகக் காணின் அல்லால் இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்று எழுதிக்காட்ட முடியுமா? தன்னை அறிவித்துத் தான் தானாச் செய்தவனை, 'தான்' தந்த அருளால் மட்டுமே அறிய முடியும். அவன் அடியாருக்கு அருளுவது, திவ்ய சக்ஷுஸ் (அருட்கண்). பக்தன் இறைவன் அருளிய கண்கொண்டே அவனைக் காண்டல் வேண்டும் என்று கருதிய கண்ணுதல், கண்ணப்பரிடமிருந்து பெற்றுக் கொண்ட கண்ணாலேயே கண்ணப்பரைக் கண்டான். இப்படி விளக்கம் தந்தவர் அமெரிக்கப் பேராசிரியர் ஆன முனைவர் கிளென் யோகும் என்னும் பெரியார்.

பெரியபுராணம் கயிலையில் தொடங்கி கயிலையில் நிறைவுறுகின்றது. கயிலைநாதனும் அப்பெருமான் அடியார்களும் பெரியபுராணம் சாற்றும் பொருள். உலகெலாம் என்று தொடங்கும் இப்புராணத்தின் முதற்பாடல், இப்புராணத்தின் முடிவில் அமைந்த பாடலின் முடிவான சொற்றொடரும் ஆம்.

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்."

பெரியபுராணத்தின் முதலும் முடிவும் தெய்வச் சேக்கிழார் பேணிவந்த, முடிந்த முடிபையே நமக்கு அருளியிருக்கிறது.

10. பெரியபுராணம் : ஓர் பத்திப் பனுவல்

பக்தி எனும் வடசொல் பத்தி என்று தமிழில் வரும். பக்தரைப் பத்தர் என்பர். பத்தி நெறி என்று போற்றப்படும் நெறியைப் பக்தியோகம் என்று சான்றோர் போற்றினர். பகவத்கீதை காட்டும் ஞான, பக்தி, கர்ம மார்க்கம் பெரியபுராணத்தில் பரக்கக் காணலாம். இது வகையில் ஒரு தனிநூலே வரையப்படவேண்டும்.

பத்திநெறி படர்தல் பெறற்கரிய பேறு. "முத்தி நெறி அறியாத மூர்க்கரோடும் முயல்வேனை பத்திநெறி அறிவித்து, பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்து, சிவம் ஆக்கி எனை ஆண்ட அத்தன் எனக்கு அருளிய ஆறு ஆர்பெறுவார் அச்சோவே!" என்று மணிவாசகர் அருளியுள்ளார்.

நாயன்மார் அனைவரும் பெரும் பக்தர்கள். பத்திநெறி என்பது சுலப மார்க்கம் என்பர். இக்கூற்று தவறான ஒன்று. பத்தி செய்தல் அருமையிலும் அருமை. இதைச் சாதாரண மக்கள் சாதிக்கவே முடியாது. பட்டினத்தார் "வாளால் மகவு அரிந்து ஊட்ட வல்லேன் அல்லேன்; மாது சொன்ன சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லேன்; தொண்டு செய்து நாள் ஆறில் கண் இடந்து அப்ப வல்லேன் அல்லேன், நான் இனிச் சென்று ஆளாவது எப்படியோ திருக்காளத்தி அப்பருக்கே!" என்று அருளியுள்ளார். சங்கர பகவத் பாதரும் சௌந்தரிய லஹரி, சிவானந்த லஹரி, சிவபுஜங்கம் என்றுள்ள பனுவல்களில் நாயன்மாரின் பத்தியை வியந்து போற்றியுள்ளார். பத்தி என்றாலே நினைவிற்கு வருவோர் நாயன்மாரே.

நாயனார் என்ற சொல் சிவனாரையே குறித்தது. இச்சொல்லே பின்னாளில் சிவனடியாரைக் குறிக்கப் பயன்பட்டது. நாயகன் என்பதே மூலச்சொல். இதில் உள்ள ககரம் நழுவி விழ, அச்சொல் நாயன் ஆயிற்று. நாயன் ஆர் விகுதி பெற்று நாயனார் ஆயிற்று. இதன் பன்மை நாயன்மார் என்பதாகும்.

பத்தியின் பெருமையை பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்ரீமத் பாகவதத்தில் எடுத்துரைக்கிறார். பகவான் கூறியதாவது: "நான் முத்தியைக் கொடுத்தாலும் கொடுப்பேன்; பத்தியைக் கொடுக்க மாட்டேன்." இதிலிருந்தே பத்தியின் பெருமையை நாம் அறிய முடியும்.

தம்மால் பத்தி செய்ய முடியவில்லை என்று பரம 'பக்தரான அப்பர் அடிகள் வருந்திப் பாடிய பாடலைப் பார்ப்போம்.

"பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினால் பத்தி செய்கேன் என்னை நீ இகழ வேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை அம்பலத்து ஆடுகின்ற
அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்த ஆறே."

"பத்தியால் ஏத்தி நின்று பணிபவர் நெஞ்சத்துள்ளார்" சிவனார் என்றும் அப்பர் அடிகள் அருளியுள்ளார். இத்தகு பத்தியைக் கடைப்பிடிக்காமல் தாம் காலத்தைக் கழித்ததை எண்ணி அப்பர் அடிகள் மிகவும் வருந்திப் பாடிய பாடல்கள் பல உள. ஒரு பாடலை மட்டும் கீழே தருகிறோம்.

"பத்திமையாற் பணிந்து அடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித்தானை
எத்தேவர் ஏத்தும் இறைவன் தன்னை எம்மானை
என் உள்ளத்து உள்ளே ஊறும்
அத்தேனை அமுதத்தை ஆவின்பாலை
அண்ணிக்கும் தீங்கரும்பை அரனை ஆதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே."

தமிழ் என்ற சொல்லுக்கு சைவத்தில் பத்தி என்று பொருள். "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்று ஞானப்பிள்ளையாரை நம்பி ஆரூரர் போற்றுகிறார்.

பத்தருக்கு பத்தியே எங்கும் காட்சிப்படும். பரம பத்தர் சேக்கிழார் பெருமான். அவரது இவ்வனுபூதியைக் காட்டும் பாடல் ஒன்றைக் காண்பம்.

"பத்தியின் பாலராகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர்
தத்தமில் கூடினார்கள் தலையினால் வணங்குமா போல்
மொய்த்த நீள் பத்தியின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலியெல்லாம்."

ஊனடைந்த உடம்பின் பிறவி உறுதி பெறுவது பத்தியால். உய்வு தருவது பத்தியே. 'உய்யல் ஆம் பத்தி தந்து', வழி நடத்தி, 'முத்தி தந்து, இந்த மூவுலகத்துக்கும் அப்புறத்து எமை வைத்திடும்' என்று மணிவாசகர் அருளியுள்ளார். மேலும் அவரே,

"பத்தர்காள்! இங்கே வம்மின், நீர்; உங்கள்
பாசம் தீரப் பணி மினோ"

என்று அருளினால் அறிவித்திருக்கிறார். பத்திசெய் அடியவரைப் பரம்பரத்து உய்ப்பவர் உமாமகேசர்.

ஞானப்பிள்ளையாரும்,

"பத்த ராயினீர் அத்தர் அன்னியூர்ச்
சித்தர் தாள் தொழ, முத்தர் ஆவரே" என்றும்,

"பத்தர் ஏத்தும் பட்டினத்துப் பல்லவனீச் சரத்து அத்தன்" என்றும்,

"பத்தர்கணம் பணிந்து ஏத்த வாய்த்த பான்மை" என்றும் பத்தியின் பெருமையைப் பரவியுள்ளார்.

பத்தரே அன்பர் ஆவார். அவர்களையே அடியவர் என்றும் திருத்தொண்டர் என்றும் கூறுவர். சீவான்மா பரமனாருக்கு அன்பு செய்ய, அப்பரமேட்டி அவ்வான்மாவிற்கு அருள் பாலிப்பர்.

பத்தர் இன்ன சாதியர் என்று கூறுதல் அடாது. சாதி மதம் கடந்தவர்கள் அருளாளர்கள். இதைக் கூற வந்த புராணமே பெரிய புராணம். சாதிகளை உடைப்பது சரியன்று. "சாதிகள் நெறியில் தப்பா" என்றே சேக்கிழார் பெருமான் கூறியுள்ளார். இதன் பொருள் சாதிகளைக் கடத்தல் வேண்டும் என்பதே. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்பது வேதம்.

பெரியபுராணம் அறுபத்து மூன்று தனி அடியார்களையும் ஒன்பது தொகை அடியார்களையும் போற்றும் நூல். இவருள் பிறப்பால் ஆதிசைவர் நால்வர்; சுமார்த்த அந்தணர் பதின்மூவர்; மாமாத்திரர் ஒருவர். மாமாத்திரர் அந்தணருக்கும் க்ஷத்திரியருக்கும் இடைப்பட்டவர் என்று சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் அறிவிக்கிறார். முடியுடை வேந்தர் அறுவர்; குறுநில மன்னர் ஐவர்; வணிகர் ஐவர்; வேளாளர் பதினொருவர்; சுத்த குலத்தில் பிறந்தவர் என்று ஆகமம் போற்றும் சூத்திரப் பெரியார் இருவர்; இடையர் இருவர்; நெசவாளர் ஒருவர்; குயவர் ஒருவர்; செக்கார் ஒருவர்; மீனவர் ஒருவர்; சாணார் ஒருவர்; வண்ணார் ஒருவர்; வேடர் ஒருவர்; பஞ்சமர் ஒருவர்; பாணர் ஒருவர்.

இவர்கள் அனைவரையும் தாழ்ந்து பணிந்து சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையே பெரியபுராணத்திற்கான மூல நூல்.

இவ்வறுபான் மூவர் பெயர், குலம், நாடு, ஊர் தொண்டு ஆகியவை பற்றிய சுருக்கமான விவரம் சிவஸ்ரீ மா.பாலசுப்பிரமணிய முதலியார் வரைந்தபடி கீழே தரப்பெறுகிறது. சிறு மாற்றங்கள் தேவைக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன.

அறுபத்துமூவர் பெயர், குலம், நாடு, ஊர், தொண்டு விவரங்கள்:

1. அதிபத்த நாயனார்

நுளையர் (மீன்பிடிப்பவர்), சோழ நாடு, நாகபட்டினம் - நவரத்தினமிழைத்த மீனைத் தாம் வைத்துக் கொள்ளாமல் சிவார்ப்பணம் செய்தவர்.

2. அப்பூதியடிகள் நாயனார்

அந்தணர், சோழநாடு, திங்களூர் - பிள்ளை இறந்ததையும் மறைத்துத் திருநாவுக்கரசு சுவாமிகட்கு அமுதளிக்க முன்வந்தவர்.

3. அமர்நீதி நாயனார்

வணிகர், சோழநாடு, பழையாறை - கோவணத்துக்கு நிறையாக மனைவி, மக்கள் சொத்துக்களுடன் தம்மையும் சிவனடியாருக்குத் தருதல்.

4. அரிவாட்டாய நாயனார்

வேளாளர், சோழநாடு, கணமங்கலம் - சிவ நிவேதனத்துக்குரிய பொருள் சிந்தியதற்காகத் தமது கழுத்தையரிதல்.

5. ஆனாய நாயனார்

இடையர், மழநாடு, மங்கலவூர் - பசு மேய்க்கும்போது ஐந்தெழுத்தைப் புல்லாங்குழலில் அமைத்து வாசித்தல்.

6. இசை ஞானியார்

ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பிள்ளையாகப் பெற்ற பெண்மணியார்.

7. இடங்கழி நாயனார்

அரசர், கோனாடு, கொடும்பாளூர் - அடியார் வழிபாடு செய்ய நெல் திருடினவர்க்கு மேலும் பொருளும் நெல்லும் தருதல்.

8. இயற்பகை நாயனார்

வணிகர், சோழநாடு, காவிரிப்பூம்பட்டினம் - சிவனடியாருக்குத் தமது மனைவியையே தானமாகக் கொடுத்தல்.

9. இளையான்குடிமாற நாயனார்

சூத்திரர், இளையான்குடி - விதைத்த நெல்லெடுத்து உணவு அட்ட வீட்டின் அலக்கெரித்து அடியார்க்கமுது அமைத்தவர்.

10. உருத்திர பசுபதி நாயனார்

அந்தணர், சோழநாடு, திருத்தலையூர் - அல்லும் பகலும் திருக்குளத்தில் கழுத்தளவில் நின்று ஸ்ரீருத்திர மந்திரம் ஜெபித்தல்.

11. எறிபத்த நாயனார்

சோழநாடு, கருவூர் - பூக்குடலையைச் சிவனடியாரிடமிருந்து பிடித்திழுத்துச் சிதறிய பட்டத்து யானையை வெட்டுதல்.

12. ஏயர்கோன் கலிக்காம நாயனார்

வேளாளர், சோழநாடு, திருப்பெருமங்கலம் - சிவபெருமானைத் தூதாக விடுத்த வன்றொண்டரை இகழ்ந்து பின்பு திருவருள் விளையாட்டால் அவருடைய நண்பரானது.

13. ஏனாதி நாயனார்

சான்றார், சோழநாடு, எயினனூர் - போர் புரியும் பகைவன் நெற்றியில் திருநீற்றைக் கண்டதும் அவனாற் கொல்லப்படும்படி நடந்து கொண்டது.

14. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

குறுநில மன்னர், தொண்டைநாடு, காஞ்சிபுரம் - பதவியை வெறுத்துத் தலயாத்திரை செய்து க்ஷேத்திர வெண்பாவால் நிலையாமை கூறியது.

15. கணநாத நாயனார்

அந்தணர், சோழநாடு, சீகாழி - திருஞானசம்பந்தரை வழிபட்டுச் சரியைத் தொண்டர்க்குப் பயிற்சி தந்தது.

16. கணம்புல்ல நாயனார்

இருக்குவேளூர் - புல்விற்று நெய்கொண்டு திருவிளக்கெரித்தல், நெய்யின்மையால் தமது தலைமயிரையே எரித்தல்.

17. கண்ணப்ப நாயனார்

வேடர், தொண்டை நாடு, உடுப்பூர் - ஆறே நாளில் அளவுகடந்த பக்திசெய்து காளத்தியப்பருக்குக் கண் அப்பியது.

18. கலிக்கம்ப நாயனார்

வணிகர், நடுநாடு, பெண்ணாகடம் - தமது பழைய வேலையாள் சிவனடியானாக வந்த போது தாம் அவனை வழிபட்டு, வழிபடாத தமது மனைவி கையை வெட்டுதல்.

19. கலிய நாயனார்

செக்கார், தொண்டைநாடு, திருவொற்றியூர் - திருவிளக்குக்கு எண்ணெய் இன்மையால் தமது இரத்தங்கொண்டு எரிக்க முயலுதல்.

20. கழறிற்றறிவார் நாயனார் (சேரமான் பெருமாள் நாயனார்)

அரசர், மலைநாடு, கொடுங்கோளூர் - நடராசர் பாதச் சிலம்பொலி கேட்கத் தாழ்த்தமைகொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தோழமை பெற்றது, சிவபெருமானுடைய திருமுகப் பாசுரம் பெற்றது, கயிலைசென்று ஞானவுலா பாடியது.

21. கழற்சிங்க நாயனார்

பல்லவ மன்னர் - சிவபூசைக்குரிய பூவை மோந்தற்காகத் தம் மனைவியின் மூக்கை ஒரு சிவனடியார் அறுத்த தண்டனை போதாதென்று அவள் கையையும் வெட்டுதல்.

22. காரி நாயனார்

சோழநாடு, திருக்கடவூர் - கோவை பாடிப் பொருள் பெற்று ஆலயப் பணிசெய்தல்.

23. காரைக்காலம்மையார் (பேயார்)

வணிகர், சோழநாடு, காரைக்கால் - சிவபெருமானை வேண்டி மாம்பழமும் பேய் வடிவமும் பெற்றது, ஆலங்காட்டில் ஆடல் கண்டது.

24. குங்குலியக்கலய நாயனார்

அந்தணர், சோழநாடு, திருக்கடவூர் - மனைவியின் தாலியை விற்றுக் குங்குலியம் வாங்கியது, சாய்ந்த இலிங்கத்தைக் கழுத்தில் பூமாலை கொண்டு நிமிர்த்தியது.

25. குலச்சிறை நாயனார்

பாண்டிநாடு, மணமேற்குடி - அரசன் சமணனாயிருந்தபோதும் தாம் சிவனடியாரை வழிபட்டது, திருஞானசம்பந்தரை அழைத்து வந்து அரசனையும் நாட்டினையும் சைவமாக்கியது.

26. கூற்றுவ நாயனார்

குறுநில மன்னர், களந்தை - தில்லைவாழந்தணர் தமக்கு முடிசூட்ட மறுக்கவே, தில்லையம்பலவன் திருவடிகளையே முடியாகச் சூட்டப்பெற்றது.

27. கோச்செங்கட்சோழ நாயனார்

அரசர், சோழநாடு - எழுபது சிவாலயங்கள் கட்டியது, முற்பிறவியிற் சிலந்தியாகச் சிவபூசை செய்தது.

28. கோட்புலி நாயனார்

வேளாளர், சோழநாடு, திருநாட்டியத்தான்குடி - சிங்கடி வனப்பகை என்ற இரண்டு புதல்வியரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு அர்ப்பணம் செய்தது, சிவபூசைக்குரிய நெல்லையுண்ட சுற்றத்தாரனைவரையும் சிசுவுள்படக் கொன்று வீடு அளித்தது.

29. சடைய நாயனார்

ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பிள்ளையாகப் பெற்று எடுத்தது.

30. சண்டேசுவர நாயனார்

அந்தணர், சோழநாடு, திருச்சேய்ஞலூர் - அபிஷேகப் பாற்குடத்தை இடறிய தந்தையின் கால்களை வெட்டித் தொண்டர்க்கு நாயகம் பெற்றது.

31. சத்தி நாயனார்

வேளாளர், சோழநாடு, வரிஞ்சியூர் - சிவனடியார்களைக் குறைகூறுபவர்களுடைய நாக்கை அறுத்தல்.

32. சாக்கிய நாயனார்

வேளாளர், திருச்சங்கமங்கை - மறவாது நாடோறும் சிவலிங்கத்தின்மீது கல்லெறிந்து வழிபடல்.

33. சிறப்புலி நாயனார்

அந்தணர், சோழநாடு, திருஆக்கூர் - அடியார்கட்கு அமுதும் பொருளும் தருதல்.

34. சிறுத்தொண்ட நாயனார்

மாமாத்திரர், சோழநாடு, திருச்செங்காட்டங்குடி - வாதாபிப்போர் வென்றது, சிவனடியார்க்குத் தம் ஒரே பிள்ளையைக் கறியாகச் சமைத்து வைத்தது.

35. சுந்தரமூர்த்தி சுவாமிகள்

ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர் - திருத்தொண்டத் தொகை பாடியது, இறைவனைத் தூதுகொண்டது, முதலையுண்ட பிள்ளையை வருவித்தது முதலியன.

36. செருத்துணை நாயனார்

வேளாளர், சோழநாடு, தஞ்சாவூர் - கழற்சிங்க நாயனாருடைய மனைவி சிவபூசைக்குரிய பூவை மோந்ததற்காக அவள் மூக்கையரிந்தது.

37. சோமாசிமாற நாயனார்

அந்தணர், சோழநாடு, திருஅம்பர் - வேதவேள்விசெய்து, சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபடுதல்.

38. தண்டியடிகள் நாயனார்

சோழநாடு, திருவாரூர் - பிறவிக் குருடராயிருந்தும் திருக்குளப்பணி செய்து குருடு நீங்கிச் சமணரை வென்றது.

39. திருக்குறிப்புத் தொண்ட நாயனார்

ஏகாலியர், தொண்டைநாடு, காஞ்சிபுரம் - சிவனடியாருக்கு வாக்களித்தபடி, துணியைத் தோய்த்துலர்த்தித் தர முடியாமற் போனபடியால் தமது தலையைக் கல்லின்மீது மோதிக் கொள்ளுதல்.

40. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அந்தணர், சோழநாடு, சீகாழி - உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப்பெறுதல், தேவாரம் பாடி எலும்பைப் பெண்ணாக்குதல் முதலிய பல அற்புதங்கள் செய்து, தமது திருமணத்துக்கு வந்தவர்கள் அனைவருக்கும் முத்தி தருதல்.

41. திருநாவுக்கரசு சுவாமிகள்

வேளாளர், நடுநாடு, திருவாமூர் - சிலகாலம் சமண்சார்ந்து, பின் சைவம் தழுவி, ஐந்தெழுத்தோதிக் கருங்கல்லின்மேல் கடலில் மிதந்து கரையேறிப் பல தேவாரங்கள் பாடிக் கைத்தொண்டு செய்து முத்தியடைதல்.

42. திருநாளைப்போவார் நாயனார் (நந்தனார்)

புலையர், சோழநாடு, ஆதனூர் - தில்லையைக் காண விரும்பி தீப்புகுந்து முனிவராயெழுந்து சிற்றம்பலவனைக் கலந்தது.

43. திருநீலகண்ட நாயனார்

குயவர், சோழநாடு, சிதம்பரம் - அயலறியாவண்ணம் மனைவியின் சபதத்துக்குடன்பட்டு, அவளைத் தீண்டாது இளமையிலும் முதுமையிலும் இல்லறம் நடத்திப்பின் திருவருளால் இளமைபெற்றது.

44. திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார்

பாணர், நடுநாடு, திருஎருக்கத்தம்புலியூர் திருஞானசம்பந்தருடன் சென்று யாழ்த் தொண்டு புரிந்தது.

45. திருநீலநக்க நாயனார்

அந்தணர், சோழநாடு, சாத்தமங்கை - அன்போடு சிவலிங்கத்தை ஊதித் துமித்தல் அனுசிதமன்றெனக் காட்டப்பெற்றது, பாணர்க்கு வேதிகையின் பாங்கர் இடந்தந்தது, திருஞானசம்பந்தர் திருமணத்தை நடத்தி முத்திபெற்றது.

46. திருமூல நாயனார்

இடையர், சோழநாடு, சாத்தனூர் - மூலன் உடலில் தாம் புகுந்து மூவாயிரம் ஆண்டிருந்து திருமந்திரம் அருளிச் செய்தது.

47. நமிநந்தியடிகள் நாயனார்

அந்தணர், சோழநாடு,ஏமப்பேறூர் - தண்ணீரால் விளக்கெரித்தல், திருவாரூர்ப் பிறந்தாரை யெல்லாம் சிவசாரூப்பியராகக் காணுதல்.

48. நரசிங்கமுனையரைய நாயனார்

குறுநில மன்னர், நடுநாடு - சுந்தரமூர்த்தி சுவாமிகளை வளர்த்தல், சிவவேடம் பூண்ட காமக்குறி மலர்ந்த தூர்த்தனையும் வழிபடுதல்.

49. நின்றசீர்நெடுமாற நாயனார்

அரசர், பாண்டிநாடு, மதுரை - திருஞானசம்பந்தர் தந்த திருநீற்றால் சுரம் நீங்கி அவர் திருவாக்கால் கூன் நிமிரப் பெற்றுச் சைவராகியது.

50. நேச நாயனார்

சாலியர், காம்பீலி நகரம் - சிவனடியார்கட்கு வஸ்திரதானம் செய்தல்.

51. புகழ்ச்சோழ நாயனார்

அரசர்,. சோழநாடு, உறையூர் - பகைவனது அறுபட்ட தலையிற் சிவ சின்னமாகிய சடைகண்டஞ்சி தீக்குளித்து உயிர்விட்டது.

52. புகழ்த்துணை நாயனார்

ஆதிசைவர், செருவிலிபுத்தூர் - சிவபூசைக்குதவியாகப் பஞ்ச காலத்தில் இறைவனால் பொற்காசு அளிக்கப் பெற்றது.

53. பூசலார் நாயனார்

அந்தணர், தொண்டைநாடு, திருநின்றவூர் - மனத்தினாலேயே கோயில்கட்டிச் சிவவழிபாடு செய்தல்.

54. பெருமிழலைக்குறும்ப நாயனார்

பெருமிழலையூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டு அவர் கயிலை செல்லுதலறிந்து யோகத்தால் தாமும் கயிலை சென்றது.

55. மங்கையர்க்கரசியார் (மானியார்)

அரசியார், பாண்டிநாடு - திருஞானசம்பந்தரை வரவழைத்துத் தம் கணவரையும் நாட்டையும் சைவமாக்கியது.

56. மானக்கஞ்சாற நாயனார்

வேளாளர், கஞ்சாறூர் - கலியாணம் தொடங்கும்போது கலியாணப் பெண்ணாகிய தம் மகளின் தலைமயிரை அறுத்துச் சிவனடியாருக்குத் தருதல்.

57. முருக நாயனார்

அந்தணர், சோழநாடு, திருப்புகலூர் - புஷ்பத் தொண்டு செய்து திருஞானசம்பந்தர் திருமணத்தில் முத்தி பெற்றது.

58. முனையடுவார் நாயனார்

வேளாளர், சோழநாடு, திருநீடூர் - கூலிக்குப் போர்செய்து அக்கூலிகொண்டு சிவனடியாரை வழிபடுதல்.

59. மூர்க்க நாயனார்

வேளாளர், தொண்டைநாடு, திருவேற்காடு - சூதாட்டத்தாற் கிடைத்த பொருள் கொண்டு சிவனடியாரை வழிபடுதல்.

60. மூர்த்தி நாயனார்

வணிகர், பாண்டிநாடு, மதுரை - சந்தனம் அரைக்கும் திருப்பணியில் முட்டுப்பாடு நேரவே முழங்கையை அரைத்தல், திருநீறு, உருத்திராக்கம், சடைமுடி ஆகிய மும்மையால் உலகாளுதல்.

61. மெய்ப்பொருள் நாயனார்

குறுநில மன்னர், நடுநாடு, திருக்கோவலூர் - வஞ்சித்துத் தம்மைக் கொல்லும் சிவவேடதாரியைக் காப்பாற்றித் தாம் உயிர்விடுதல்.

62. வாயிலார் நாயனார்

சூத்திரர், தொண்டைநாடு, மயிலாப்பூர் - மானச ஞானபூசை செய்தல்.

63. விறன்மிண்ட நாயனார்

வேளாளர், மலைநாடு, செங்குன்றூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத்தொகை பாடுதற்குக் காரணராயிருத்தல்.

11. பெரியபுராணத்தின் கட்டமைப்பு

இராமாயணத்தில் கதாநாயகன் இராமன். இப்பெருமானின் கீர்த்திகளே இவ்விதிகாசத்தின் பாடுபொருள். பொதுவாக ஒரு புராணத்தின், காப்பியத்தின் தலைவன் ஒருவனாகத்தான் இருக்க முடியும்.

மகாபாரதம் பங்காளிக் காய்ச்சல் அடிப்படையில் எழுந்தது. கௌரவர்க்ள் பாண்டவர்கள் ஆகியோர் தாயாதியர். என்றாலும் இவர்களிடையே தீராப் பகை நிலவியது. ஒருநூறு கௌரவர்களை ஐந்து பாண்டவர்கள் வென்றனர். இவ்விதிகாசத்தின் தலைமைப் பாத்திரம் யார்? இதைப் பற்றிய சர்ச்சை முற்றுப் பெறவில்லை. வைணவ அன்பர்கள் கிருஷ்ணபெருமானே காப்பியத் தலைவன் என்பர். வைணவ வியாக்யானம், பாரதம் தூது நடந்தவன் ஏற்றம் கூறுவது என்னும். பாகவத புராணத்தின் தலைவன் கிருஷ்ணன் என்பது பொருந்தும். ஆனால் மகாபாரதக் கதாநாயகன் அவனே என்று கூறுதல் சரியில்லை.

பெரியபுராணம் 63 தனி அடியார்கள், 9 தொகை அடியார்கள் பெருமை கூறும் நூல். இவர்கள் அனைவருக்குமே தனித்தனிப் புராணம் அருளியுள்ளார் சேக்கிழார் பெருமான். இவருள் புராணத் தலைவர் ஒருவரே என்று கூற முடியவில்லை.

பெரியபுராணத்திற்கு ஆதார நூல் சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகையே. இது பதினோரு பாடல்கள் கொண்டது. இவையிற்றையே சேக்கிழார் பெருமான் பதினோரு சருக்கங்கள் ஆக அமைத்துக் கொண்டார். மேலும் இவையிற்றுக்கு முன் ஆரோகணமாக ஒரு சருக்கமும், முடிவில் அவரோகணமாக ஒரு சருக்கமும் அமைத்துக் கொண்டார். இப்படிப் பூரணமாக முழுவட்ட மண்டலத்தை அவர் படைத்து அருளினார்.

நம் பெருமான் பாடியது ஒரு புராணம் அன்று. பலப்பல புராணங்களைத் தன் அகத்தே அடக்கியுள்ள ஒரு மகா புராணம் என்று அதைக் கொள்ளல் வேண்டும். அடிகளும் பெரிய புராணத்தை "மாக் கதை" என்றே இனங் காட்டியிருக்கிறார். இப்புராணம் கயிலையில் தொடங்கி கயிலையில் நிறைவுறுகிறது. அதாவது சுந்தரர் வரலாற்றில்

தொடங்கி அவருடைய வரலாற்றின் முடிவைக் கூறுகிறது. ஆகவே சுந்தரரே இப் புராணத்தின் தலைவர் என்று கொள்ளப் படுகின்ற மரபு ஒன்று உண்டு. பெரும்பாலும் சருக்க முடிவில் சுந்தரர் துதி ஒன்றும் அருளப் பட்டிருக்கிறது. இதில் புராண வரலாற்றில் கூறப்படாத அருஞ் செய்தியும் வருகிறது. குறிப்பாக கூற்றுவ நாயனார் புராணத்தின் இறுதிப் பாடலைக் காண்போம்.

> "தேனுங் குழலும் பிழைத்த திருமொழியாள் புலவி தீர்க்க மதி
> தானும் பணியும் பகைதீர்க்கும் சடையார் தூதுதரும் திருநாள்
> கூனும் குருடும் தீர்த்து ஏவல் கொள்வார் குலவு மலர்ப் பாதம்
> யானும் பரவித் தீர்க்கின்றேன் எழுபிறப்பின் முடங்கு கூன்"

கூனும் குருடும் தீர்க்கப் பட்ட வரலாறு புராணத்தில் கூறப்படவில்லை. என்றாலும் இங்கு அச்செய்கை சுட்டப் பட்டுள்ளது.

பெரிய புராண அமைப்புப் பற்றி ஆங்கிலப் பேராசிரியரான அமரர் கே.ஆர்.ஸ்ரீநிவாச ஐயங்கார் கூறியதைக் காண்போம். "எல்லையற்ற பேரன்பின் மேல் அளவு படா அழுத்தம் சிவணிய ஓர் உலகமே பெரிய புராணம்." பிரமன் சிருட்டியில் இத்தகு படைப்பைக் காணமுடியாது.

பலப்பல வரலாற்றுச் செய்திகள் பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ளன. அகத்தியர் கமண்டலத்திலிருந்து காவிரி வெளிப்பட்டது (52), அம்பல முகட்டில் ஆதித்த சோழன் பொன் வேய்ந்தது (4116), இமயமலையில் சோழ அரசன் புலிக்குறி பொறித்தது (51), இமயமலையில் இருந்த பழைய வழியை அடைத்துப் புதிய வழியை சோழ மன்னன் தோற்றுவித்தது (552), உபமன்னிய முனிவர் ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சிவதீக்கை அளித்தது (24), இலக்குமி திருவாரூரில் வழிபட்டது (86), உமையம்மை காஞ்சியில் சிவபூசனை செய்தது (1134-1150), உமையம்மை 32 அறங்கள் வளர்த்தது (1152, 1153, 3443), உறையூர்ச் சோழன் ஆற்றில் இழந்த முத்தாரம் அரனார் திருமஞ்சனக் குடத்தில் புகுந்து அப்பெருமானின் முடிமீது ஏறியது (3236), ஒற்றியூர் பெருமான் அரசாணை ஆவணத்தில் 'ஒற்றியூர் நீங்கலாக' என்றெழுதி எழுத்தறியும் பெருமான் ஆனது (3363), பெண்ணை ஆறு துறையூரின் தெற்கில் இருந்தது (228), காஞ்சிபுரத்தைக் கரிகால் பெருவளத்தான் புதுக்கியது (1667), மன்னன் சிபி துலையேறியது (4202), பரசுராமன் சிவனாரை வழிபட்டு பரசு பெற்றது (491), சேக்கிழார் பெருமானுக்கு அம்பலவன் அடியெடுத்து அருளியது (9) ஆகியவை பெரியபுராணம் போற்றும் செய்திகள்.

பெண்மையின் பெருமை போற்றும் புராணம் பெரியபுராணம். சடங்கவியார் மகள், திருநீலக்கண்டத்துக் குயவனார் மனைவியார், மானக்கஞ்சாறர் புதல்வியும், ஏயர்கோன் கலிக்காமர் மனைவியுமான ஒப்பற்ற பெண்மணி, திலகவதியார், புனிதவதி, மானி, பூம்பாவை, திருவெண்காட்டு நங்கை, சந்தனத்தாதியார் ஆகியோர் பெருமை பெரியபுராணத்தால் போற்றப்படுகின்றது. திருமணமான பல பெண்மணிகளின் பெயர்களைப் பெரியபுராணம் கூறவில்லை. இங்கு வால்மீகியோ, கம்பரோ சீதையின் தாயாரின் பெயரைக் கூறவில்லை என்பதை நினைவில் கொள்ளல் நலம்.

பெரியபுராணப் பெண்மணிகளைப் போற்ற வேண்டும் என்று எண்ணி ஒருவரைக்கூட விட்டுவிடாமல் பிரமஸ்ரீ வே.இரமணன் பாடிய பெரியப்புராணப் பெண்டிர் போற்றிக் கலிவெண்பா அட்சரலட்சம் பெறும். மேலும், இப்பனுவலுக்கு அவர் வரைந்திருக்கும் அறிமுக உரை பொன்னேபோல் போற்றப்பட வேண்டிய ஒன்று. இவை பிற்சேர்க்கையாக வழங்கப்பட்டுள்ளன.

தென்னிந்தியாவின் எல்லா இனத்தவரும், சாதியினரும் பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் சமயங்கடந்த பெரியவர்கள்; வழுவிலா இறைப்பற்று கொண்டோர்கள். பெரியபுராணக் கருத்துப்படி இவர்கள் அனைவரும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள். இக்குலத்தை பக்தர் குலம் என்றும், தொண்டர் குலம் என்றும், அடியார் குலம் என்றும் போற்ற வேண்டும்.

இவ்வடியாருள் பதின்மூவர், உலகியல் கணக்கில், என்ன குலத்தார் என்று அறிய முடியவில்லை. தொகை அடியார் கூட்டத்துள் இரு கூட்டத்தினர் நாடு அறிந்த வகையினர். இவர்கள்தாம் தில்லைவாழ் அந்தணர், திருவாரூர்ப் பிறந்தார் ஆகியோர். சிவவேதியர் கூட்டம் இரண்டு. இவர்கள் தில்லைவாழ் அந்தணரும், முப்போதும் திருமேனி தீண்டுவாருமான சிவ பிராமணர்கள். பொய்யடிமை இல்லாத புலவர் சிவனருள் பெற்ற மகான்கள். கபிலர், பரணர் போன்றோர் இத்தகையோர் என்று நம்பி ஆண்டார் நம்பி சாற்றியுள்ளார். இப் பொய்யடிமை இல்லாத புலவரோடு ஆறு திருக்கூட்டத்தார் உளர். அவர்கள் பத்தராய்ப் பணிவார்கள், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர், திருவாரூர்ப் பிறந்தார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார் என்போர். இவர்தம் சாதி, குலம் ஆகியவை அறிய

முடியாதவை. தில்லைவாழ் அந்தணரின் எண்ணிக்கை 3,000. பிற தொகையடியார் எண்ணிக்கை அளவிடற்கு அரிது.

நாயன்மார்ருள் தில்லைவாழ் அந்தணர், கலயர், முருகர், உருத்திர பசுபதியார், சிறப்புலியார், கணநாதர், பூசலார், சண்டேசர், சோமாசி மாறர், நமிநந்தி, திருஞானசம்பந்தர், அப்பூதி, நீலநக்கர் ஆகிய பதின்மூவர் அந்தணர்கள். புகழ்த்துணையும், முப்போதும் திருமேனி தீண்டுவாரும் சிவாச்சாரியர். இவர்களோடு வைத்து எண்ணப்பட வேண்டியவர்கள் நம்பி ஆரூரரும், அவருடைய பெற்றோர்களும் ஆன சடையனாரும், இசைஞானியாரும் ஆவர்.

செங்கட் சோழர், புகழ்ச் சோழர், மானியார், இடங்கழியார், நெடுமாறர், சேரமான் பெருமான் ஆகியோர் பற்றிய புராணங்கள் முடி சூடிய மன்னர் அறுவர் பற்றியவை.

நரசிங்க முனையரையர், கூற்றுவர், கழற்சிங்கர், மெய்ப்பொருள், ஐயடிகள் ஆகியோர் குறுநில மன்னர்கள். வணிக குலத்தினர் ஐவர் பற்றிய புராணங்கள் உள. காரைக்கால் அம்மையார், மூர்த்தியார், கலிக்கம்பர், அமர்நீதி, இயற்பகையார் ஆகியோரே அவர்கள்.

வேளாளர் பதினொருவர்: மூர்க்கர், செருத்துணை, கோட்புலி, சத்தி, தாயனார், திருநாவுக்கரசர், சாக்கியர், மானக்கஞ்சாறர், விறன்மிண்டர், முனையடுவார், கலிக்காமர்.

ஆனாயரும், திருமூலரும் இடையர். திருநீலகண்டர் குயவர். பாணர் ஒருவர்; அவர்தாம் திருநீலகண்டத்து யாழ்ப்பாணர். ஒருவர் வலைஞர்; அவர் அதிபத்தர். ஒருவர் வேடர்; அவர் கண்ணப்பர். ஒருவர் பஞ்சமர்; அவர் திருநாளைப்போவார் என்கிற நந்தனார். ஒருவர் வண்ணார்; அவர் திருக்குறிப்புத் தொண்டர். ஒருவர் செக்கார்; அவர் கலியர். ஒருவர் சாலியர்; அவர் நேசர். இளையான்குடி மாறநாயனாரும், வாயிலாரும் சூத்திரர்.

பதின்மூவர் விவரம் அறியப்படவில்லை. அவர்கள் குலச்சிறை, தண்டி, கணம் புல்லர், எறிபத்தர், காரியார், பெருமிழலைக் குறும்பர், பத்தராய்ப் பாடுவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், பொய்யடிமை இல்லாத புலவர், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலும் அடிச் சார்ந்தார்ஆகியோர்.

அடியார்களில் பெரும்பாலோர் தமிழ் நாட்டினர். சிலர் ஆந்திரர்; சிலர் வேறு நாட்டினர். சிலர் வேறு தேயத்தவர்.

குருவருளால் விடு பேறு பெற்றவர் பதினொருவர்: திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருமூலர், நெடுமாறர், மானியார், குலச்சிறையார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், பெருமிழலைக் குறும்பர், கணநாதர், அப்பூதி அடிகள்,சோமாசி மாறர்.

சிவலிங்க வழிபாட்டால் முத்தி பெற்றவர் முப்பதின்மர்: எறிபத்தர், கலயர், முருகர், கண்ணப்பர், ஆனாயர், தாயனார், மூர்த்தியார், சண்டேசர், நந்தனார், சேரமான் பெருமான், சாக்கியர், கூற்றுவர், தண்டி அடிகள், சிறப்புலியார், உருத்திர பசுபதியார், கலிக்காமர், கலியர், காரியார், அதிபத்தர், நீலநக்கர், பூசலார், கணம்புல்லர், கோட்புலியார், நமிநந்தி அடிகள், கழற்சிங்கர், வாயிலார், செருத்துணையார், புகழ்த்துணையார், ஐயடிகள், செங்கட் சோழர்.

திருநீலகண்டர், இயற்பகையார், மூர்க்கர், சிறுத்தொண்டர், திருக்குறிப்புத் தொண்டர், விறன்மிண்டர், இடங்கழியார், முனையடுவார், சத்தி, அமர்நீதி, மெய்ப்பொருள், ஏனாதிநாதர், புகழ்ச் சோழர், மானக்கஞ்சாறர், காரைக்கால் அம்மையார், நரசிங்கர், கலிக்கம்பர், நேசர், இளையான்குடி மாறர் ஆகிய பத்தொன்பதின்மர் சங்கம (அடியார்) வழிபாட்டின் மூலம் அரனை அடைந்தோர்.

கவுணியர், அப்பர், பேயார் இம்மூவரும் இயல்,இசைப் புலவோர்கள். திருநாளைப் போவார், ஆனாயர், பரமனையே பாடுவார் ஆகியோர் இசைப்புலவர். ஐயடிகள், திருமூலர், காரியார், பொய்யடிமை யில்லாத புலவர், சேரமான் ஆகியோர் இயற்றமிழ்ப் புலவோர்.

இல்லறம் பேணியவர் திருநீலகண்டர், இயற்பகையார், இளையான்குடி மாறனார், மெய்ப்பொருள் நாயனார், பாணர் முதலியோர். அப்பர், மூர்த்தியார் துறவிகள். சண்டேசர் பிரமசாரி. கண்ணப்பரும் மணமாகாதவரே.

நம்பி ஆரூரர், பெருமிழலைக் குறும்பர், திருமூலர் ஆகியோர் சிவயோகிகள்.

சேரமான் பெருமான் கயிலை சென்றபோது, அவர் பிரிவைப் பொறாத பலர் தம் உயிரை மாய்த்துக் கொண்டனர்; அதனால் முத்தியும் எய்தினர்.

அடியார்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறியில் படர்ந்து உய்ந்தனர். அவர்க்கெல்லாம் சிவனாரே வழியும் இலக்கும் ஆயினார்.

நாயன்மாரை வகைதொகைப் படுத்திக் கூறுதல் எளிதன்று.

"கருங்கடலைக் கைநீத்துக் கொளல் எளிது
முந்நீர்க் கடற்கரையின் நொய் மணலை எண்ணி
அளவிடலாம்
பெருங்கடல் மேல் வருந்திரையை ஒன்று இரண்டு என்று
எண்ணிப் பிரித்து எழுதி கடைஇலக்கம் பிரித்து விடலாகும்
கருங் கடலின்மீனை அளவிடலாகும் வானத் தாரகையை
அளவிடலாம் சங்கரன் தாள் தமது
சிரங்கொள் திருத்தொண்டர் புராணத்தை அளவிட
நஞ்சேக்கிழாருக்கு எளிது அலது தேவர்க்கும் அரிதே."

பெரியபுராணத்திற்கு இணையான புராணம் எங்குமில்லை. அதற்கமைந்த கட்டமைப்பு கண்ணுதல் கடவுள் அருளால் அமைந்தது. இக்கட்டமைப்பில் கரைந்தவர் சிவபிரானோடு கலப்பர்.

12. சேக்கிழார் பெருமானின் கவிசெய் திறன்

தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமானின் கவித்திறனை சாதாரண மனிதர்களால் உணரமுடியாது. அதனைக் கூறும் வல்லமை அனுபூதி பெற்ற புலவருக்கே முடியும். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் இயற்றியிருக்கின்றார். சேக்கிழார் பெருமானின் பெருமையையும், கவிநயத்தையும் அந்நூலில் சிறக்கக் கூறியுள்ளார். அச்சிறப்பினைச் சற்று இங்கு கண்டு மகிழ்வோம்.

சேக்கிழார் பெருமானுக்குச் சிவபெருமானே 'உலகெலாம்' என்று பெரியபுராண நூலுக்கு அடி எடுத்துக் கொடுத்ததை அனைவரும் அறிவோம். அதேபோன்று நூலைத் தலைக்கட்டும்போதும் 'உலகெலாம்' என்றே தெய்வச்சேக்கிழார் முடிக்கிறார்.

"பார்கொண்ட தொண்டர் வரலாறு சொல் புராணம்
அம்பலவர் அருளால் அமைந்த
படிதெரித் திட உலகெலாம் எனுஞ் சுருதிநாப்
பண்ணுமீற்றும் பொருத்தி" (சே.பி.1)

என்று மகாவித்துவான் காப்புப் பருவத்தின் முதல் பாடலிலேயே முதலிலும் நடுவிலும் ஈற்றிலும் 'உலகெலாம்' என்னும் சொல் இடம் பெற்றிருப்பதைக் கூறியுள்ளார்.

பெரியபுராணத்தில் முதலிலும், ஈற்றிலும் மட்டுமின்றி இடையிலும் 'உலகெலாம்' என்னும் தொடரே பரவிக்கிடக்கிறது. மொத்தம் பதினான்கு இடங்களில் உலகெலாம் எனும் சொல் இடம் பெற்றுள்ளது.. இலண்டனில் 2003ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'சைவ தரிசனம்' என்ற என்னுடைய நூலில் இந்தப் பதினான்கு பாடல்களையும், அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் அளித்திருக்கிறேன். பதினான்கு முறை 'உலகெலாம்' என்ற சொல் கூறப்பட்டிருப்பதால் பதினான்கு புவனங்களுக்கும் பொருந்துவதாக இந்நூலை சேக்கிழார் பெருமான் அமைத்திருக்கிறார் என்று கொள்ளலாம். மேலும் பதினான்கு சாத்திரங்களுக்கும் பெரியபுராணம் இலக்கியமாகத் திகழ்கிறது என்றும் கொள்ளலாம். ஏனென்றால்,

"பேர்கொண்ட சைவபரி பாடையறி வரியசம்
பிரதாய முதலியாவும்
பிறங்கத் தெரிந்தெம்மை யாண்டகுன் றத்தூர்ப்
பிரான்" (சே.பி.1)

என்று மகாவித்துவான் கூறுவதால் சைவசாத்திரம் அத்தனையும் பரிபாஷையுடன் அறிந்தவர் சேக்கிழார் பிரான் என்பது உணரற்பாலது.. உண்மையில் சைவ சாத்திரங்கள் பதினான்கும் சேக்கிழார் பெருமான் பெரியபுராணம் அருளிய பின்னரே அவதாரம் செய்தன.

"ஒப்பரிய தொண்டர்தம் அருமையும் பெருமையும்
உவக்கும் அவரவர் செய்கையும்
உவமையில்லாச் செய்கை நுட்பமும் திட்பமும்
உம்பர்கோன் அருள் தட்பமும்
தப்பரிய செந்தமிழ்த் தொடை நடையும் அடையுந்
தவாப் பொருளணிச் சிறப்பும்
தமிழ்மறை யடங்குபல மந்தணமும் வெள்ளிடைத்
தவிரும் வெற்பென விளங்க" (சே.பி.31)

என்று மகாவித்துவான் கூறியுள்ளது பெரும்பாராட்டே. அதாவது, குறிப்பால் உணரப்படும் பொருளும், வலியுடைமையும், தண்ணிய அருள்தன்மையும், பொருட்சிறப்பும், அணிச்சிறப்பும், மறைபொருளும், வெள்ளிடைமலை போன்ற வெளிப்படையான பொருளும் பெருமான் பாடல்களில் உள்ளன என்றால் அவற்றைப் பயிலுதல் எளிதாமோ?

சேக்கிழார் பெருமான் பாடல்களை எப்படிப் புனைந்துள்ளார் என்பதையும் காண்போம்.

"சொல்லும் பொருளும் நனிசிறப்பச்
சுருங்கச் சொல்லல் முதலாய
தோட்டி அமைய அமங்கலமாம்
சொற்கள் புணராது அறக்களைந்து
வெல்லும் தகைய முரண் காட்டி
விலக்கு விலக விதி தழுவி
விரும்பும் மூல இலக்கியமே
வேறாகாது என்று உலகு ஏத்த ..." (சே.பி.44)

சொல்வளம், பொருள்வளம் பொருந்த சுருங்கச் சொல்லி, அமங்கலச் சொல் அகற்றி, மற்ற நூல்களை வெல்லும் தகையினதாய்,

விலக்கு விலகவும், விதி தழுவவும், மூல இலக்கியத்தினின்றும் வேறுபடாது அமைந்துள்ளது என்று உலகோர் போற்றும்படி சேக்கிழார் பெருமான் பாடல்களை அமைத்துத் தந்துள்ளார் என்பதை இப்பாடலில் மகாவித்துவான் உணர்த்துகிறார்.

பெரியபுராணத்தில் அணியழகு நிறைந்திருப்பதைப் பயிலுவோர் உணரலாம். இதில் சொல்லணி எனப்படும் சொற்றொடை வகைச் சிறப்பு நிறைந்துள்ளது. சொல் மடக்கு எனப்படும் அணிவகையை இங்கு நிறையவே காணலாம். 'சிவம் பெருக்குந் திருவாமூர் திருவாமூர்' என்றும், 'மறைத்திரு ஆக்கூர் ஆக்கூர்' என்றும் பல பாடல்களில் சொல் மடக்கு இடம்பெற்றுள்ளது. இத்தகைய அணிச்சிறப்புகளை மகாவித்துவான் சுட்டிக் காட்டியுள்ளார்.

"ஈற்றுத் தலையொரு மவுலி புனைந்தா
லென்னச் சொல்லணி ஒன்று
எய்திப் பொலியப் பொருளணி யாயின
எவ்விடனும் வீற்று
வீற்றுக் கிடையிறை பட்டன அமைய
விளம்பு வனப்பினொடு
மேய முதற்பொருள் ஆதிய மூன்றும்
வேண்டும் இடத்து எய்த
ஆற்றுப்புனல் நாமப் பொருள் கோள்முதல்
அறைமற்று உள்ளனவும்
அமையத் தொண்டர்புராண நவின்றவ ..." (சே.பி.30)

பொருள்கோள் வகை அனைத்தும் பெரிய புராணத்தில் இருப்பதனை மகாவித்துவான் கண்டு மகிழ்ந்திருக்கிறார். பெரியபுராணச் சிறப்பை அறிய வேண்டுமானால் சேக்கிழார் பிள்ளைத் தமிழைப் பயிலல் வேண்டும்.

சேக்கிழார் பெருமான் நூலாசிரியர், உரையாசியர், போதகாசிரியர், ஞானாசிரியர் என்ற சிறப்புக்கு எல்லாம் உரியவர் என்பதை மகாவித்துவான் விளக்கியுள்ளார். விரிநூலாகிய திருத்தொண்டர் புராணம் இயற்றியதால் நூலாசிரியர் என்றும், திருஞானசம்பந்த நாயனர் புராணத்துள் அவர் வைகையிலே ஏடு இடும்போது பாடிய 'வாழ்க அந்தணர்' எனத் தொடங்கும் பதிகப் பாடல்களுக்கு உரைகண்டு பாடியதால் உரை ஆசிரியர் என்றும், சைவசமய உண்மைகளை எடுத்துக் கூறியிருப்பதால் போதக ஆசிரியர்

என்றும், இவ்வாறு பலவிதத்திலும் ஞானம் பயப்பித்தாராதலால் ஞானாசிரியர் என்றும் மகாவித்துவான் போற்றுகிறார்.

"நாடிய விரிநூல் சொற்றிடு திறனால்
நன்னூல் ஆசிரிய
னகுபாசுரமுதனுரை செய்தலினால்
நவிலுரை ஆசிரியன்
நீடிய பரசமயக் குழி வீழ்ந்தவர்
நீப்பப் போதனை செய்
நிலையாற் போதகாசிரியன் னிலை
நிகழ்தொறு நிகழ்தொறு
மாடிய ஞானத் திறனுற லான் ஞா
னாசிரியனு நீயென்று
ஆன்றோர் பலரும் புகழப் படுபவ." (சே.பி.40)

சேக்கிழார் பெருமானின் பாத்திறனுக்கு எடுத்துக் காட்டாக நிற்பவை பல பாடல்கள் எனினும், மகாவித்துவான் எடுத்துக்காட்டும் பாடலை நாம் சுவைத்து மகிழலாம். அம்புலியைப் பார்த்து மகாவித்துவான் பாடும் அம்புலிப் பருவப் பாடலில்,

நினையீன்ற தொருபரவை யிலகுவே பாரமென
நெல் நுனைத்தனையும் எண்ணேன்
முறையினொரு சிறு தூக்கின் எழுபரவையும் புக
முடித்துற நிறுத்தான் இவன் (சே.பி.67)

என்று போற்றுகிறார். ஒரு சிறு தூக்கில் எழு கடலையும் சிறு முயற்சியின்றித் தூக்கி நிறுத்தான் என்று பாடுகிறார். பரவை என்ற சொல்லுக்குக் கடல் என்றும் பொருள். தடுத்தாட்கொண்ட புராணத்தில் ஒரு பாடலில் ஏழு முறை பரவை என்ற சொல்லைப் பயன்படுத்திச் சேக்கிழார் பெருமான் பாடியிருப்பதை இப்பாடல் நயம்பட உரைக்கிறது. இப்போது சேக்கிழார் பெருமான் அருளிய பாடலைக் காண்போம்.

பேர் பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும்பு அல்குல்
ஆர் பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை
சீர் பரவை ஆயினாள் திருவுருவின் மென் சாயல்
ஏர் பரவை இடைப்பட்ட என் ஆசை எழு பரவை
(பெரியபுராணம்.294)

இதன் பொருளை விரிக்கிற் பெருகும். ஒன்று மட்டும் அறிந்து கொள்ளல் வேண்டும். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சகலாகம பண்டிதர் என்று சேக்கிழார் பெருமானைப் போற்றிப் புகழ்கிறார். இதனினும் சிறந்த பாராட்டுரை வேறில்லை.

மகாவித்துவான், அடிகளை 'பத்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய'வர் என்று அற்புதமாக வருணித்திருக்கிறார். மகாவித்துவானால் நால் வகை ஆசிரியர் என்று அடிகள் போற்றப்பட்டதற்குக் காரணம் அடிகள் வேத, ஆகம, புராண, இதிகாச, மிருதி ஆகிய வடமொழி நூல்களிலும் துறைபோகியவர் என்பதாலே. சுவாமிகளின் வடமொழிப் புலமை பற்றிச் சிறிது கூறுவேன். அதற்கு முன்பு ஒரு முக்கிய செய்தி அறிவிக்கப்பட வேண்டும்.

திருத்தொண்டத் தொகையை முற்றுமாக அடியொற்றி, சுவாமிகள் பாடவேண்டிய சூழல். ஆகவே, காலத்தால் மேற்சொன்ன பதிகத்திற்குப் பின்னர் அவதரித்த மணிவாசகர் பற்றி அடிகள் பாட முடியவில்லை. சுவாமிகள், மணிவாசகரைப் போற்றாத புராணம் பெரியபுராணம் ஆகாது என்று உணர்ந்தவர். ஆகவே சுவாமிகள் மணிவாசகப் பெருந்தகையின், சொற்களையும் தொடர்களையும் கருத்துக்களையும் நூலில் அங்கங்கும் பொதிந்து வைத்திருக்கிறார். அப்பர் அருளிய பாடல்கள் திருவாசகம் போல் கனிவு உடையவை என்று அனைவரும் அறிவர். இதுவே உண்மை என்று சேக்கிழார் பெருமான் சாதித்திருக்கிறார்.

நம்பன் அருளால் மீண்டும் சைவராகப் பொலிந்த அப்பர் அடிகளை நம் சுவாமிகள் போற்றியுள்ள பாடல்களில் ஒன்றை மட்டும் இப்போது காண்பம்.

"மையல் துறை ஏறி மகிழ்ந்து அலர் சீர் வாகீசர்
மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய்
விரவும் சிவ சின்னம் விளங்கிடவே
எய்துற்ற தியானம் அறா வுணர்வும்
ஈறின்றி எழும் திருவாசகமும்
கையில் திகழும் உழவார முடன்கைக்
கொண்டு கலந்து கசிந்தனரே."

சமண் நீங்கி மாசைவராய் நாவுக்கரசர் பொலிந்திருக்கின்றார் என்று கூற வந்த நம் சுவாமிகள் அப்பர் அடிகள் வாக்கு திருவாசகமே

என்று வியக்தமாக அருளியுள்ளதின் மாண்பறிவார் எம் பிரான் ஆவர் என்போம். இப்போது, மணிவாசகர் போற்றிய பெரும் பேறு சுந்தரரால் பண்டே செயலாக்கம் பெற்று விட்டதைச் சுவாமிகள் காட்டியுள்ளார். மணிவாசகர்,

> "உடையான் உன்றன் நடுவு இருக்கும் உடையாள் நடுவு
> நீஇருத்தி
> அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன்
> அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்
> அம்பலத்து எம்
> முடியா முதலே என் கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே"

என்று வேண்டினார்.

ஆரூர்ப் பிரானை வேண்டி அருள் பெற்ற நம்பி ஆரூரர், மணிவாசகர் பிரார்த்தனைப் பூர்த்திக்கு ஓர் அடையாளமாகப் பண்டே திகழ்ந்தவர் என்று காட்டியுள்ளார் சேக்கிழார் பெருமான். "அடியார்தம் பெருமையை உணர்ந்து போற்றும் நாள் எந்நாளோ! இறைவா, அடியார்களே ஆறும் ஆவர்; பேறும் ஆவர்; அன்னவர்க்கு நான் அடியவன் ஆதல் வேண்டும்" என்று வேண்டிய ஆரூரருக்கு ஆரூர்ப் பெருமான், அடியாரின் பெருமையை அவருக்கு உணர்த்தி, அவர்களைப் பாட அடியும் எடுத்து உதவினான். நம்பன் அடியவர்களை நம்பனே உள்ளவாறு உணர்த்த, உணர்ந்த ஊரனார் எல்லையில் வண்புகழ் பூண்ட தொண்டர் மேல் பதிகம் அருளத் தொடங்கினார். தேவாசிரியனில் ஈண்டியிருந்த அடியார்களை எய்த, அவர் வந்தார். அப்போது,

> "தூரத்தே திருக்கூட்டம் பல முறையால் தொழுது அன்பு
> சேரத் தாழ்ந்து எழுந்து அருகு சென்று எய்தி நின்று அழியா
> வீரத்தார் எல்லார்க்கும் தனித்தனி வேறடியேன் என்று
> ஆர்வத்தால் திருத்தொண்டத் தொகைப் பதிகம் அருள் செய்தார்."

பாடியவாறே, நம்பி ஆரூரர் அடியார்கள் முன் பணிந்தார். முடிவாக,

> "உம்பர் நாயகர் அடியார் பேருவகை தாம் எய்த
> நம்பியாரூரர் திருக்கூட்டத்தின் நடுவு அணைந்தார்."

இதுவே அடியார் நடுவுள் இருக்கும் பேறு என்பதைப் பெரியபுராண பாடியகாரரான சிவக்கவிமணி அருளியுள்ளார்.

திருநீலகண்டத்துக் குயவனாரிடம் திருவோட்டை ஒப்படைத்து விட்டு, சால நாள் கழிந்த பின்னர், தாம் முன் வைத்த கோலமார் ஓடு தன்னைக் குறியிடத்து அகலப் போக்கி, நாயனாரைச் சோதிக்க வருகிறான் சிவபெருமான். நடந்த மாயம் ஏதும் அறியாத நாயனார் சிவயோகியைப் பணிவோடு வரவேற்கிறார். வரவேற்பை அலட்சியம் செய்து, சிவயோகியார் "முந்தை நாள் உன்பால் வைத்த மொய்யொளி விளங்கும் ஓடு தந்து நில்" என்று ஆணையிடுகிறார். இப்படி ஓர் ஆணையிட்டவர் யார்? என்று கூற வந்த சேக்கிழார் அடிகள், "தந்து நில் என்றான் எல்லாம் தான் வைத்து வாங்க வல்லான்" என்று அருளியுள்ளார். எவ்வளவு தூரம் திருவாசகத்தில் தோய்ந்து திளைப்பவர் சேக்கிழார் சுவாமிகள் என்பதற்கு இவ்வோர் அடியே சாலும்.

"விச்சதின்றியே விளைவு செய்குவாய்;
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்

வைச்சு வாங்குவாய்" என்றுதானே திருச்சதகம் 96 ஆம் பாடல் சாற்றுகிறது.

'திருவோட்டைக் கெடுத்தார்' என்ற குற்றம் குயவனார் மீது சாட்டப் படுகிறது. அவர் அநுசரிக்க முடியாதபடி நிபந்தனைகளை நீலகண்டன் விதிக்கின்றான். அதைக் குயவனார் ஏற்க முடியாமல் தத்தளிக்கின்ற போது அவரைப் பார்த்துப் பரமன் பகர்வான்:

"ஆவது என்? நின்பால் வைத்த அடைக்கலப் பொருளை
வௌவிப்
பாவகம் பலவுஞ் செய்து பழிக்கு நீ ஒன்று நாணாய்;
யாவரும் காண உன்னை வளைத்து நான் கொண்டே யன்றிப்
போவதும் செய்யேன் ..."

"பாவகம் பலவும் செய்து பழிக்கு நீ நாணாய்" என்ற வாசகத்திற்குச் சிவக்கவிமணி அவர்கள் செப்பும் சிறப்புரை இதுவே: "இங்கு பாவிக்கும் செயல் மேல் நின்றது. ஒன்றை வேறு ஒன்றாக எண்ணிச் செய்யும் தொழிலே பாவனை எனப்படும். இது, தானே பாவித்துச் செய்தலும், பிறரை அவ்வாறு பாவிக்கும்படிச் செய்தலும் என இருவகைப்படும்." இப்படிக்கூறிய சிவக்கவிமணி "பாவகம் பலவும் செய்து" என்ற இடத்துத் திருநீலகண்டத்தின் வைத்த உறைப்பேறிய பாவனை உபாசனையினாலே உலகப் பற்றை வென்றார் என்பதும், பழிக்கு நீ நாணாய் என்ற இடத்து நாடவர்

பழித்துரை பூணதுவாக என்றார் போலே அப்பாவனையினால் காண்க" என்றும் அருளியுள்ளார்.

வென்ற ஐம்புலனால் மிக்கு நின்ற குயவனார் தம்பதிக்கு இறையருள் சித்தித்ததை இங்ஙனம் சேக்கிழார் பெருமான் அருளியுள்ளார்.

"மன்றுளே திருக்கூத்தாடி யடியவர் மனைகள் தோறும்
சென்று அவர் நிலைமை காட்டும் தேவர்கள் தேவர் தாமும்
வென்ற ஐம்புலனால் மிக்கீர்! விருப்புடன் இருக்க நம்பால்
என்றும் இவ்விளமை நீங்காது" என்று எழுந்தருளினார்.

திருவாசகத்தின் உட்கிடையை இப்பாடல் அறிவிக்கின்றது. "இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை" என்று திருவெம்பாவையும், "பந்தணை விரலியும் நீயும் நின்னடியார் பழங்குடில் தோறும் எழுந்து அருளிய பரனே" என்றுள்ள திருப்பள்ளி எழுச்சியும் சேக்கிழார் பெருமான் போற்றும் மூலப்பாடல்கள். இவையிற்றிற்கு ஆதி மூலம் சிவாகமங்களே.

ரிஷபாரூடராகச் சிவபெருமான் தன் துணையுடனே வானிற் காட்சி தந்தருளியதைக் கண்டருளிய இயற்பகையார், அம்மையப்பரைப் போற்றத் தொடங்கும் போது "சொல்லுவது அறியேன் வாழி" என்று கூறுகிறார். "சொல்லுவது அறியேன் வாழி" என்ற போற்றியைத் திருவாசகத்தில் உள்ள திருவண்டப் பகுதியின் 163 ஆம் அடியில் தரிசிக்கலாம். இதே திருவண்டப் பகுதியில், "உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படான்" என்று அமைந்துள்ள கருத்தை, இளையான்குடி மாறநாயனார் புராணத்தில், "உணர்வினால் உணர ஒண்ணா ஒருவரை" என்று காட்டுகிறார் சேக்கிழார் சுவாமிகள். இக்கருத்தும் சிவாகம சாரமே.

சேக்கிழார் பெருமானின் வடமொழிப் புலமை பற்றி ஒரு தனி நூலே வரையப்பட வேண்டும். காமாந்தகர் ராஜ நீதியை நன்கறிந்தவர் நம் சுவாமிகள் என்று முன்னரேயே காட்டினோம். இப்போது வேறு சில செய்திகள் மட்டும் கூறுவோம்.

கன்னி நாட்டிற்கு எழுந்தருளிய பிள்ளையாரைப் பணிந்து ஆசி பெற்ற நிலையில் குலச்சிறையார் கூறியதாவது:

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர் காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்தருளப் பெற்ற பேறு இதனால்
என்றைக்கும் திருவருள் உடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றி கொள் திருநீற்று ஒளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்."

இப்படியுள்ள நல்ல நிலையை வடமொழிச் சுலோகம் ஒன்று சித்திரித்திருக்கின்றது.

"ஹரத்யகம் சம்பிரதி ஹேது ரேஷ்யா:
சுபஸ்ய பூர்வா சரிதைஹி க்ருதம் சுபைஹி
சரீர பாஜாம் பவதீய தர்சனம்
வ்யநக்தி கால த்ருதயேபி யோக்யதாம்"

இப்பாடலுக்கான பொருள்: "உயிர்கட்கு உமது காட்சி நிகழ்காலத்தின் தீவினைகளைப் போக்குகிறது. வருங்காலத்தின் மங்கலத்திற்கு ஏதுவாகிறது; சென்ற காலத்தில் செய்த நல்வினைப் பயனாகிறது; ஆதலால் முக்காலத்திலும் (அவ்வுயிர்களின்) நன்மைக்கு உரித்து ஆகிறது. "இவ்வடமொழிப் பாடலை அருளியவர் மகா கவியான மாக கவி. இவர் நம் சுவாமிகளின் காலத்திற்கு முற்பட்டவர்.

பரவையாரைக் கண்ட அளவில் பரவசமுற்ற நம்பி ஆரூரரின் நிலையைத் தெய்வச் சேக்கிழார் இப்படிச் சித்திரிக்கிறார்.

"ஓவிய நான்முகன் எழுத ஒண்ணாமை உள்ளத்தால்
மேவிய தன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ
மூவுலகின் பயனாகி முன்நின்றது என நினைந்து
நாவலர் காவலர் நின்றார்; நடுநின்றார் படை மதனார்."

இப்பாடலைத் தெய்வச் சேக்கிழார் வரையுங் காலத்து காளிதாசனின் சாகுந்தலத்தில் காணப்படும் "சித்ரே நிவேச்ய பரி கல்பித" என்று தொடங்கும் சுலோகக் கருத்தை எண்ணியிருக்கக் கூடும்.

"ஆநோ பத்ராஹ க்ருதவோ யந்து விஷ்வதஹ" (நல்லெண்ணங்கள் நான்கு திசைகளிலிருந்தும் நம்மை வந்து அடையட்டும்) என்ற இருக்குவேத வாசகம் நம் சுவாமிகளால் போற்றப்பட்டிருப்பதை அங்கங்கும் காணலாம்.

13. பெரியபுராணத்தில் இறையனுபவம்

ஆங்கிலத்தில் 'MYSTICISM' என்ற சொல்லுக்கு சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள அகராதியின்படி இறைநிலை இணைவுப்பான்மை, இறைமை இணைவுப் பண்பு ஆகிய பொருள்கள் கூறப்பட்டுள்ளன. இணைவுப்பான்மை அல்லது பண்பு என்பதை அனுபவம் என்று கொண்டு, இப்பகுதியில் 'இறையனுபவம்' என்ற அத்தொடரே கையாளப்பட்டுள்ளது.

இறையனுபவத்தை மகான் அரவிந்தர் கடவுள் ஸ்பரிசம் என்று கூறுகிறார். அது பெரும்பாலும் ஓர் அமைதியான, விவரிக்க இயலாத, பண்டறியாத பராபரானுபவங்கள் பரந்தெழும் நிலையாகும். அது அந்தமிலா அகண்டம் கடந்து, பிரேமையில் உள்ளவரை பேரின்பச் சூழலில் ஆழ்த்துகிறது. ஓர் அற்புதக் கனவுநிலையில் அவர் ஆழ்கிறார். தெய்விக எண்ணங்களிலும், பேரின்ப போகத்திலும் அழுந்துவிக்கும் அறிகுறிகள் நொடிப்பொழுதில் தோன்றிவிடுகின்றன. காயத்துள் அமுதூற ஊற, இன்னமுதாய ஆனந்த வெள்ளத்துள் அமிழ்கிறார். இவ்வாறு, நம்பும் சிந்தையுள் நணுகி, ஆடுவித்து அகம்புகுந்த ஆனந்தம் தெளியும்போது, கருத்துக்கெட்டாத ஓர் இறையனுபவம் மட்டுமே எஞ்சுகிறது.

மேற்குறிப்பிட்ட அனுபவத்தில் ஆழும் ஒருநிலை மூன்று வயதுக் குழந்தையான திருஞான சம்பந்தரின் அனுபவ நிலைக்குப் பொருந்துகிறது. தெய்விகக் குழந்தையாகிய திருஞானசம்பந்தர் தலப்பயணம் மேற்கொண்டார். தம்மைச் சூழ வருவார் வெயிலின் வெம்மையால் களைப்படைய, அஞ்செழுத்தை ஓதி இவர் வருத்தமின்றித் தலத்தையடைகிறார். திருஞானசம்பந்தர் புராணத்தின் பின்வரும் பாடல்கள் இந்நிகழ்வை விவரிக்கின்றன.

மாறன் பாடி எனும்பதி வந்துற
ஆறுசெல் வருத்தத்தின் அசைவினால்
வேறு செல்பவர் வெய்துஉறப் பிள்ளையார்
ஏறும் அஞ்செழுத்து ஓதிஅங்கு எய்திட. *(191)*

உய்ய வந்தசம் பந்தர்உடன் வந்தார்க்கு
எய்து வெம்மை இளைப்பு அஞ்சினான் போலக்

கைகள் ஆயிரம் வாங்கிக் கரந்துபோய்
வெய்யவன் சென்று மேல்கடல் வீழ்ந்தனன். (192)

அற்றை நாள்இரவு அப்பதியின் இடைச்
சுற்றும் நீடிய தொண்டர்கள் போற்றிடப்
பெற்றம் ஊர்ந்த பிரான்கழல் பேணுவார்
வெற்றி மாதவத் தோருடன் மேவினார். (193)

இந்நி லைக்கண் எழில்வளர் பூந்தராய்
மன்ன னார்தம் வழிவருத் தத்தினை
அன்னம் ஆடும் துறைநீர் அரத்துறைச்
சென்னி ஆற்றர் திருவுளம் செய்தனர். (194)

ஏறு தற்குச் சிவிகை இடக்குடை
கூறி ஊதக் குலவு பொன் சின்னங்கள்
மாறுஇல் முத்தின் படியினால் மன்னிய
நீறுவந்த நிமலர் அருளுவார். (195)

நீடு வாழ்பதி ஆகும்நெல் வாயிலின்
மாட மாமனை தோறும் மறையோர்க்குக்
கூடும் கங்குல் கனவில் குலமறை
தேடு சேவடி தோன்றமுன் சென்றுபின். (196)

'ஞான சம்பந்தன் நம்பால் அணைகின்றான்
மான முத்தின் சிவிகை மணிக்குடை
ஆன சின்னம்நம் பால்கொண்டு அருங்கலைக்
கோன வன்பால் அணைந்து கொடும்' என (197)

ஞானசம்பந்தப் பிள்ளையார் இத்தகைய கனவினைத் தாமும் காண்கிறார். காட்சி மறையும்போது பிள்ளையார் விழித்துக் கொள்கிறார். இறையனுபவச் சிலிர்ப்பில் ஆழ்ந்த அவர் அதன்பின்னர் துயில இயலவில்லை.

பெரியபுராணத்தில் இறையனுபவம் என்பது கருணையில் ஊன்றி நிற்கிறது. அது தெய்வத்திறமும், திருமறையும் தரும் பேரானந்த நிலை. இதனை அனுபவிப்பவர், தம்முள் குடிகொண்டுள்ள தலைவனை மின்வெட்டும் நேரத்தில் உணரும் நிலை, கணத்தில் உணர்ந்த அனுபவம், கடைசிவரை நீடிக்கும் ஒன்றாகும்.

இறைவன் திருமுன் நின்று உறும் பேரானந்தத்தைத் தாங்கும் சக்தி இவ்வுடலுக்கு இல்லாததால் அது வேதனைப்பட்டு ஒரு தெய்விக

மாற்றத்தை அடைகிறது; அரற்ற வைக்கிறது. அப்பர் சுவாமிகள் இவ்வாறு அரற்றுகிறார்:

அத்தாவுன் அடியேனை அன்பா லார்த்தாய்
அருள்நோக்கில் தீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியைநீ எளியை யானாய்
எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையென் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் அத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ
எம்பெருமான் திருக்கருணை யிருந்த வாறே.

(திருமுறை.6.95.8)

இறையனுபவம் என்பது இறைவன் ஆட்கொண்டு அருளும் செயலை அனுபவிப்பதாகும்.

இறையனுபவம் என்பது ஒரு கொண்டாட்டம்; அறிதல் நிலை; வரம்புக்குட்பட்ட ஆன்மா, வரம்பற்ற மெய்ம்மையுடன் நேரடித்தொடர்பு கொள்ளுதல். அது ஒரு தழுவல், அத்வைதம் என்னும் இரண்டற்ற நிலை. அருட்கதிர்களின் ஊடுருவலால் ஏற்படும் சிலிர்ப்பு. மாணிக்கவாசகர் இவ்வருட் கதிரை மாசற்ற சோதி, பரஞ்சோதி, ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி, சுயஞ்சோதி என்றெல்லாம் குறிப்பிடுகின்றார்.

இறையனுபவம் என்பது காரண காரியத்திற்கு அப்பாற்பட்டது. எனவே, பகுத்தறிவுக்கு எட்டாதது. பகுத்தறிவாளரின் மறுப்புக் கொள்கை என்னவென்றால் இதுபற்றிய மொழி பொருளறிவிப்பதில்லை என்பதே. பகுத்தறிவு என்பது, அதன் பகுத்தறியும் தன்மையால், பகுத்தறிவுக்கு உட்படாத பொருள்கள் இருக்கின்றன என்பதை ஏற்கவேண்டும் என்று நான் பெரிதும் நம்புகிறேன். பகுத்தறிவுக்கு எட்டாததும், இயல்புக்கு மாறானதும், பகுத்தறிவைக் கடந்ததுமான சோதனைக்குட்படாத நிகழ்வுகள் உள்ளன என்பதை எவர் ஏற்கிறாரோ அவர்தாம் பகுத்தறிவாளராகக் கருதப்படத்தக்கவர்.

சைவத்தில் இறையனுபவம் என்பது அத்வைதத்துடன் தொடர்புடையதாகையால் அத்வைதம் பற்றியும் ஒரு சிலவற்றைக் கூறுவது பொருத்தமாகவே இருக்கும்.

சங்கர வேதாந்தத்தில் கூறப்படும் அத்வைதமும், சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் அத்வைதமும் ஒன்றன்று. சங்கரர் கூறும் அத்வைதம், இரண்டன்மை என்னும் கொள்கையால் பொருள்படும் இரண்டற்ற தன்மை. அவருடைய "ஏகமேவ அத்வைதம்" என்பதன் பொருளாவது, மாயைதான் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை உருவாக்குவது;. மாயை "மித்ய ஞானம்" என்னும் பொய்யான அறிவை உருவாக்குகின்றது; ஆன்மாவானது இறுதியில் "சம்யக்தர்சனம்' பெறும்போது, வேறுபாடும், பன்மைநிலையும் மறைந்துவிடுகின்றன.

சங்கராச்சாரியார் தெய்வத்தையும், தெய்வதத்தையும்; கடவுளையும், மூலக்கடவுளையும் வேறுபடுத்துகிறார். ஈஸ்வரன் தனிப்பட்டவன். அவன் தோன்றுவான், மறைவான். ஈஸ்வரனுக்கு மேலிருப்பவன் பரப்பிரம்மம். சங்கரர் கூறுகிறார்: "கடவுள் ஒருவரே, நானே கடவுள் (தத்வம் அஸி)". இருந்தும் சங்கரருக்கு தமக்குள் இருக்கும் ஈஸ்வரன் போதுமானவராக இல்லை.

சைவ சித்தாந்தம் பரப்பிரம்மத்தைப் பற்றி நன்கு உணர்ந்துள்ளது. ஆகவே அது பதி என்னும் கடவுள் நிலை போதுமானதா என்று கேள்வி கேட்கவில்லை. கடவுளும், மூலக்கடவுளும் புரிதலுக்கு உட்படாதவர்களே. இதனை மாணிக்கவாசகர் உறுதிப்படுத்துகிறார். பதியை நோக்கி மாணிக்கவாசகர் கூறுவதாவது:

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டறி வாரை ...
(திருவாசகம். திருப்பள்ளியெழுச்சி.5)

தன்மை அறியமுடியாப் பரப்பிரம்மத்துடைய பெருமைக்குக் குறைந்தவராகக் கடவுளைக் கருதமுடியாது. சைவசித்தாந்தத்தின்படி பரப்பிரம்மம் உதவியைப் பதி மூலம்தான் அடையமுடியும். ஒருவிதத்தில் சைவ சித்தாந்தம் பதிக்கு அதிக முக்கியத்துவத்தை அளிக்கிறது. மாணிக்கவாசகர் கூறும் கூற்று இது :

அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையை
சிறுமை என்று இகழாதே ...

(திருவாசகம். போற்றித்திருவகவல்.75-77)

இவ்வடிகளின் ஒளியில் சைவசித்தாந்தம் கூறும் அத்வைதத்தைப் புரிந்து கொள்ள முயலுவோம். தமிழ்ச் சைவத்தில் அத்வைதம் இருநிலைகளைக் குறிக்கிறது. ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலக்கும்போது உயிர் செம்மையாய் உள்ளது. இதுதான் இறுதியான 'சுத்த' நிலை. ஆன்மாவின் நெடிய பயணம் முடிவுக்கு வந்ததால் ஏற்பட்ட இறுதி நிலை இது. இறைவனுடன் மீளாநிலையில் ஆன்மா ஒன்றிவிடுகிறது.

அத்வைதம் என்ற சொல் இறைவனுக்கும், ஆன்மாவுக்கும் உள்ள உறவையும் கூடக் குறிக்கிறது. இந்த உறவு 'ஒன்றாய், வேறாய், உடனாய்' என்ற மூன்று சொற்களில் குறிக்கப்படுகிறது. இறைவன் ஆன்மாவுடன் ஒன்றாய் இருக்கிறான். ஆன்மாவிலிருந்து வேறாய் இருக்கிறான். ஆன்மாவுக்கு ஆன்மாவாய் (உயிருக்கு உயிராய்) இருக்கிறான். கடவுள் என்ற தமிழ்ச் சொல் இந்த மூன்று நிலைகளையும் குறிப்பதாகவே உள்ளது. உள் என்றால் உள்ளே என்று பொருள். கட என்றால் கடந்து என்று பொருள். கடவு என்றால், ஆட்சி செய், செயல்பட வை, கட்டுப்படுத்து என்று பொருள்.

சைவசித்தாந்தத்தில் பசுவாகிய ஆன்மா என்றுமே பதியாக முடியாது. சங்கரரின் 'அகம் ப்ரம்மாஸ்மி' சைவசிந்தாந்தத்தில் தெய்வ நிந்தனையாகும்.

பெரியபுராணம் ஒரு மிகப்பெரிய மலைத் தொடராகும். அதில் எத்தனையோ சிகரங்கள் உள்ளன. சாதாரண மனிதர்களால் அச்சிகரங்களை எட்டிப்பிடிக்க முடியாது. அதாவது நாயன்மாரின் வாழ்க்கை வரலாறுகள் புரிதலுக்கு அப்பாற்பட்டவை. நாயன்மார் அனைவருமே மிக உயர்ந்த பெருமை பெற்றவர்கள். பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் பெருமான் கூறுகிறார்:

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணிஅலது ஒன்றுஇலார்
ஈர அன்பினர்; யாதும் குறைவுஇலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ? (பெரியபுராணம்.144)

நாயன்மார் அனைவரும் உண்மையான வீரர்கள்; புனிதர்கள். அவர்களுடைய ஒரே நோக்கம் இறைவனுக்கும், இறையடியார் களுக்கும் தொண்டு செய்வதே. இறையொளியில் மற்ற செயல்கள் எல்லாமே அவர்களுக்குப் பொருளற்றவை. இத்தகைய தன்னலமற்ற திருத்தொண்டால் அவர்கள் மற்ற மானிடர்களினின்றும்

வேறுபட்டவர்கள். அவர்கள் நடவடிக்கைகளும், செயல்களும் இறைவனால் ஏற்படுத்தப்பட்டவை. ஒவ்வொரு நாயனாரின் வாழ்க்கையும் இறைவன் காட்டிய வழியில் உருப்பெற்றது. இந்த வழிகாட்டல்கள் எண்ணற்றவை. சில சமயங்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. சுந்தரருடைய தொடர்பை விறன்மிண்டரும் ஏயர்கோன் கலிக்காமரும் வெறுத்தனர். ஆனாலும் ஒன்றை நினைவிற் கொள்ளல் வேண்டும். அருளாளர்கள் ஒருவருக்கொருவர் முரண்படுவதில்லை.

நாயன்மார் எல்லோருமே இறைவனின் அருளாசி பெற்றவர்கள். ஒவ்வொருவரும் ஆட்கொள்ளப்பட்டவரே, ஆட்கொள்பவரும் ஒருவரே. அவர்களுடைய எண்ணம், சொல், செயல் அனைத்துமே புனிதமானவை. இவை எதைக் குறிக்கின்றன என்பதை இறையருள் மட்டுமே, நம்புவோர் உள்ளத்தில் புரியவைக்கமுடியும். இறைத்தன்மையை உணர்ந்தோரே தமக்குள் இறையனுபவத்தை உணரமுடியும். சிவனின் இருப்பை அவர்கள் தமக்குள் நாள்தோறும் உணர்ந்துள்ளனர். "என் உளமே புகுந்த அதனால்" என்பது திருஞானசம்பந்தரின் அனுபவ மொழி. இறையடியாரின் உடம்பு, ஆன்மா, உணர்வு எல்லாமே சிவன் என்னும் ஒரே பரம்பொருளில் துடிப்பைக் கொண்டிருக்கின்றன.

பெரியபுராண நிகழ்வுகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டவை. இத்தகைய புராணத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது? அக்காலத்தில் எளிமையாகப் புரிந்துகொண்டவை இப்போது நமக்குவெறும் எழுத்தாக மட்டுமே தோன்றுகின்றன. அவற்றின் உட்பொருளை நம்மால் எளிமையாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆனால் உட்பொருளை நாடுபவர் உண்மையானவராகவும், பக்தியுடையவராகவும் இருந்தால், இறையருள் அவருக்கு உட்பொருளைத் துலக்கிக் காட்டும்.

பெரியபுராணத்தில் நாம் திருத்தொண்டர்களையும், இறையடியார்களையும் சந்திக்கிறோம். அவர்கள் இறையடியார்களின் தொண்டர்களும் கூட. அவர்கள் இறைவனுக்கும், இறையடியார்களுக்கும் செய்யும் தொண்டில் ஒருசிறிதும் வழுவினாரில்லை. இன்றைய உளவியலாளர்களும், உளவியல் பகுத்தாய்வாளர்களும் அவ்வடியார்களை 'இயல்பானவர்கள்' என்று ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆம், அவர்கள் இயல்புக்கு மாறானவர்கள்தாம்! கடவுள் பித்து பிடித்தவர்கள் தாம்! அவர்களுடைய

முக்கிய தருணங்களில் மனித இயல்புக்குப் புறம்பாக நடந்து கொண்டுள்ளார்கள். தங்கள் கொள்கையில் மிகவும் பிடிவாதமாக இருந்திருக்கின்றனர். மிகச் சிறிய தவற்றைக்கூட அவர்கள் மிகப்பெரிய பாவமாகக் கருதினர்.

நாயன்மாருக்குத் தாம் இயல்புக்கு ஒவ்வாமல் வாழ்ந்து கொண்டிருப்பது தெரியாமல் இல்லை. ஆனால் அவர்கள் செய்வது சரி என்பதில் அவர்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்தது. மற்றவர்கள் அவர்கள் செயல்களைப் பற்றி இழித்துப் பேசும்போது அவர்கள் அவற்றில் மேலும் உறுதியாக நின்றார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக இயற்பகை நாயனார் புராணத்தைப் பார்க்கலாம். உலக இயற்கைக்குப் பகையாக வாழ்ந்ததால் அவருடைய பெயரே இயற்பகை நாயனாராக அமைந்தது. இவர் தம்முடைய மனைவியையே ஒரு சிவனடியாருக்குத் தானம் செய்துவிட்டார். உண்மையில் சிவனடியாராக வந்தவர் சிவபெருமானேயாவார். நாயனார் மனைவியுடன் சிவனடியார் புறப்பட்டுச் சென்றபோது, நாயனாரின் உறவினர்களும், நண்பர்களும் கூடி நின்று வழி மறித்தனர். ஆகவே இயற்பகை நாயனாரே அவர்களுக்குப் பாதுகாப்பாக நின்று வழிநடத்திச் சென்றார். உறவினர்கள்,

இனையது ஒன்று யாரே செய்தார்?
இயற்பகை பித்தன் (பெரியபுராணம் 416)

என்று கூறியதோடு, சிவனடியாரை நோக்கி,

அழி தகன்! போகேல்; ஈண்டு அவ்
அரும் குலக் கொடியை விட்டுப்
பழி விட நீ போ! என்று
பகர்ந்து எதிர் நிரந்து வந்தார் (பெ.பு.418).

ஆனால் இயற்பகை நாயனார் அவர்களை நோக்கி,

"ஒருவரும் எதிர்நில்லாமே
ஓடிப்போய்ப் பிழையும்; அன்றேல்
எரிசுடர் வாளின் கூறாய்த்
துடிக்கின்றீர்" என்று நேர்ந்தார் (பெ.பு.420).

இதனைக்கேட்ட சுற்றத்தார் ஒதுங்கிச் சென்று விடவில்லை. அவர்கள் இயற்பகை நாயனாரைப் பார்த்து இவ்வாறு மொழிந்தனர்:

"ஏட! நீ என் செய்தாயால்?
இத்திறம் இயம்புகின்றாய்!
நாடுஉறு பழியும் ஒன்னார்
நகையையும் நாணாய்; இன்று
பாடவம் உரைப்பது உன்தன்
மனைவியைப் பனவற்கு ஈந்தோ?
கூடவே மடிவது அன்றிக்
கொடுக்க யாம் ஒட்டோம்" என்றார் (பெ.பு.421).

இதைக்கேட்ட நாயனார் பின்வருமாறு முழங்கினார்:

". . . உங்கள்
உடல்துணி எங்கும் சிந்தி
முற்றும் நும் உயிரை எல்லாம்
முதல் விசும்பு ஏற்றிக் கொண்டு
நல்தவர் தம்மைப் போக
விடுவேன்" (பெ.பு.422).

இதிலிருந்து ஒரு நாயனாரின் குறிக்கோள் உலகவாழ்க்கைக்கு முடிவுகட்டிவிட்டு, சிவபெருமானுக்கு உகந்த தெய்விக வாழ்வை மேற்கொள்வதே என்பதை அறியலாம். இதனை மாணிக்கவாசகர் பின்வருமாறு அறிவித்துள்ளார்.

"உத்தமன் அத்தன் உடையான் அடியே நினைந்து உருகி
மத்த மனத்தொடு மால்இவன் என்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர் திரிந்து எவரும்
தத்தம் மனத்தன பேசஎஞ் ஞான்றுகொல் சாவதுவே."

(திருவாசகம்; திருச்சதகம்.3)

இதைப்போன்றே இளையான்குடி மாற நாயனாருடைய தொண்டு மாகேசுவர பூசை செய்வதே. அதாவது அவர் இறையடியார்களை இறைவனாகவே கருதி அவர்களுக்கு அறுசுவை உணவளித்து வந்தார். இவ்வாறு செல்வராக இருந்த நாயனார் மிகவும் ஏழ்மையுற்றார். இருந்தும் அவர் தம் திருத்தொண்டைத் தொடர்ந்து வந்தார். அவருடைய பெருமையை உலகறியச் செய்ய சிவபெருமான் விரும்பினார். நாயனாரும், அவர் மனைவியும் வறுமையில் வாடி உறங்கிக் கொண்டிருந்தனர். இரவு உணவும் அருந்தவில்லை. அந்த நேரத்தைத் தேர்ந்து எடுத்து சிவபெருமான் ஓர் அடியாராய் வந்து

சேர்ந்தார். சேக்கிழார் பெருமான் இப்புராணத்தை விவரிக்கும் அழகைக் காண்போம்.

மாரிக் காலத்து இரவினில் வைகியோர்
தாரிப்பு இன்றிப்பசி தலைக் கொள்வது
பாரித்து இல்லம் அடைத்தபின், பண்பு உற
வேரித் தாரான் விருந்து எதிர்கொண்டனன் (பெ.பு. *448)*

ஈர மேனியை நீக்கிஇடம் கொடுத்து
ஆர் இன்அமுது ஊட்டுதற்கு ஆசையால்
தார மாதரை நோக்கித் 'தபோதனர்
தீரவே பசித்தார் செய்வது என்?' என்று *(449)*

'நமக்குமுன்பு இங்கு உணவுஇலை ஆயினும்
இமக்கு லக்கொடி பாகர்க்கு இனியவர்
தமக்கு நாம்இன் அடிசில் தகவுஉற
அமைக்கு மாறுஎங்'னே? அணங்கே'என *(450)*

மாதுகூறுவள் 'மற்றுஒன்றும் காண்கிலேன்;
ஏதி லாரும்இனித் தருவார் இல்லை,
போதும் வைகிற்றுப் போம்இடம் வேறுஇலை;
தீது செய்வினை யேற்கு என்செயல்?' என்று *(451)*

'செல்லல் நீங்கப்பகல் வித்திய செந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்லவாறு அமுது ஆக்கலும் ஆகும்மற்று
அல்லது ஒன்றுஅறியேன்' என்று அயர்வுஉற *(452)*

மற்றுஅம் மாற்றம் மனைவியார்கூற, முன்
பெற்ற செல்வம் எனப்பெரிது உள்மகிழ்ந்து
உற்ற காதலினால் ஒருப்பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார். *(453)*

பெருகு வானம்பிறங்க மழை பொழிந்து
அருகு நாப்பண் அறிவுஅரும் கங்குல்தான்
கருகு மைஇரு ளின்கணம் கட்டுவிட்டு
உருகு கின்றது போன்றது உலகுஎலாம். *(454)*

எண்ணும் இவ் உலகத்தார் யாவரும்
துண் எனும்படி தோன்றமுன் தோய்ந்திடில்
வண்ணம் நீடிய மைக்குழம்பு ஆம்என்று
நண்ணல் செய்யா நடுஇருள் யாமத்து. *(455)*

உள்ளம் அன்புகொண்டு ஊக்க, ஓர் பேர்இடாக்
கொள்ள முன்கவித்துக் குறியின் வழிப்
புள்உ றங்கும் வயல்புகப் போயினார்
வள்ளலார் இளை யான்குடி மாறனார். *(456)*

இளையான்குடி மாறநாயனார் இருளில் நடந்தார். இது ஆன்மாவின் பயணம். உள்ளம் அன்புகொண்டு ஊக்கியதால் இப்பயணம். உணவு சமைக்கப்பட்டு, சிவனடியார் உணவருந்த அழைக்கப்பட்டபோது அவர் ஒளிப்பிழம்பாய்த் தோன்றி மறைந்தார். "செழுந்திரு மனைவியாரும், தொண்டரும் திகைத்து நின்றார்" என்று சேக்கிழார் அடிகள் கூறும்போது, இந்தத் திகைப்பு மிகச்சிறந்த இறையனுபவமாக மிளிர்கிறது. இடபவாகனராய்ச் சிவபெருமான் அம்மையுடன் காட்சிதந்து பேசுகிறார்.

'அன்பனே! அன்பர்பூசை அளித்தநீ அணங்கினோடும்
என்பெரும் உலகம்எய்தி இருநிதிக் கிழவன்தானே
முன்பெரும் நிதியம்ஏந்தி மொழிவழி ஏவல்கேட்ப
இன்பம்ஆர்ந்து இருக்க' என்றே அருள்செய்தான்
எவர்க்கும் மிக்கான். *(465)*

இறுதியாக, கண்ணப்பநாயனார் இறையனுபவம் உன்னுதற்குரியது. கண்ணப்பரைவிடச் சிறந்த ஒரு நாயனாரைச் சைவம் கண்டதில்லை.

தேவார மூவர் முதலிகளும், மாணிக்கவாசகரும், ஆதிசங்கர பகவத் பாதரும் அவரைப் போற்றியிருக்கின்றனர். அவருடைய பாததுளியைத் தம் தலைமேற் சூடிக் கொண்டனர். அவர் ஒரு கல்லாத காட்டுவாசி. அவருக்கு வேதமோ ஆகமமோ தெரியாது. ஆகவே சமயப் பணியும் அறிய மாட்டார். சடங்குகளும், சம்பிரதாயங்களும் அவர் அறியாதவை. ஆயினும், சிவஞானபோத எட்டாம் சூத்திரப் பொருளை அவர் வாழ்க்கை முற்றிலுமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

சடங்குகளும், சம்பிரதாயங்களும், சமயவினைகளும், இன்னபிறவும் உயர்ந்தனவா? இறைவன்மீது கொண்டுள்ள அன்பும், பக்தியும் உயர்ந்தனவா? இரண்டுமே உயர்ந்தவைதாமே! இறையனுபவத்தால் எழும் மெய்யியல் ஓர் அனுபவமேயன்றி கோட்பாடாகாது. மதம் என்பது வாழப்படுவது. இறைவன் ஏற்றுக் கொண்ட சடங்குகளும், சம்பிரதாயங்களும், சமய வினைகளும் அனுபவத்தின் ஒரு பகுதியேயாகும். சாதகனுக்கு அவை சித்த சுத்தியை உறுதிப் படுத்துகின்றன. கண்ணப்ப நாயனார் புராணத்தில் பேசப்படும் இரண்டு முக்கியமான பாத்திரங்கள்: (1) கோயில் அர்ச்சகரான சிவகோசரியார், (2) அன்பு மட்டுமே அறிந்த கல்லாத காட்டுவாசியாகிய கண்ணப்ப நாயனார். முன்னவர் வேத,ஆகம விதிமுறைகளைத் தவறாது ஒழுகுபவர். பின்னவருக்கு அவைபற்றி எதுவுமே தெரியாது. இருவருக்குமே இறைவன்மீது மட்டற்ற அன்பு உண்டு. அந்த அன்பை அவரவருக்குத் தெரிந்த வழியில் செலுத்தினர். ஆனால் ஆகமங்களைக் கற்றறிந்த சிவகோசரியார் சம்பிரதாயங்கள், சமய வினைகளை விட மேலானது கண்ணப்பரின் 'கண்ணுதல்' அன்பு என்பதை உணர்ந்து கொண்டார்.

நம்முடைய நாயனாரின் இயற்பெயர், திண்ணன் ஆகும். திண்ணன் தம் முதல் வேட்டையைத் தொடங்கச் சென்றபோது அவருக்கு வயது 16. காட்டு விலங்குகள் கொல்லப்பட்டன உயிரோடு பிடிக்கவும் பட்டன. அப்போது ஒரு காட்டுப்பன்றி குன்றுபோல் தோன்றி அச்சுறுத்தியது.

திண்ணனார் அந்தக் காட்டுப் பன்றியை வேட்டையாட எண்ணினார். அதனைத் துரத்தினார். அவருடைய இரு நண்பர்களான நாணனும், காடனும் பின் தொடர்ந்து வந்தனர். காட்டுப்பன்றி நீண்ட தொலைவு ஓடி நின்றபோது, திண்ணனார் அதனைத் தம் வாளால் இருகூறாகப் பிளந்தார். இவ்வீரச் செயலை அவருடைய நண்பர்கள் புகழ்ந்தனர். நாணன் தன் நண்பர்களைப் பொன்முகலி ஆற்றின் கரைக்கு அழைத்துச் சென்றான். அங்கு பக்கத்தில் காளத்தி மலையைக் கண்ட திண்ணனார் நாம் அங்கு செல்வோம் என்று கூறினார். 'அங்கு சென்றால் நல்ல காட்சியைக் காணலாம். காளத்தி மலைமீது குடுமித்தேவர் இருப்பார். கும்பிடலாம்' என்று நாணன் கூறினான். திண்ணனார் அங்கு பொன்முகலிக் கரையில் காடனை இருத்தி, தீக்கடைந்து நெருப்பு உண்டாக்கச் சொல்லி விட்டு மலைமீது விரைந்து ஏறினார். மலைமீது ஏறிய திண்ணன்மீது அவர் முற்பிறவியின் செய்த

தவப்பயனாய்க் குடுமித் தேவரின் அருட்பார்வை பட்டது. அதன்பின்னர் அவர் திண்ணனாராய் இல்லை. இறையனுபவம் கூடிவிட்டது. அன்பில் முறுகி நின்றார். குடுமித்தேவர் உருவத்தைக் கண்டார். கட்டிக் கொண்டார். முத்தமிட்டார். சிவலிங்கத்தின் மீது நீர் ஊற்றிப் பூக்களும், இலைகளும் பெய்யப்பட்டிருப்பன கண்டு, இதனை யார் செய்திருப்பார் என்று அவர் கேட்க, அதனை ஓர் அந்தணர் செய்ததைத் தான் முன்பு பார்த்ததாக நாணன் தெரிவித்தான்.

இந்நிகழ்வைப் பற்றி சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணப் பாடல்களைக் காண்போம்.

வன்திறல் உந்தையோடு மாவேட்டை ஆடிப் பண்டுஇக்
குன்றிடை வந்தோமாகக் குளிர்ந்தநீர் இவரை ஆட்டி
ஒன்றிய இலைப்பூச் சூட்டி, ஊட்டி, முன்பறைந்து ஓர் பார்ப்பான்
அன்றுஇது செய்தான்; இன்றும் அவன் செய்தது ஆகும் என்றான்.
(பெ.பு.758)

உள்நிறைந்து எழுந்த தேனும் ஒழிவுஇன்றி ஆராஅன்பில்
திண்ணனார் 'திருக்காளத்தி நாயனார்க்கு இனிய செய்கை
எண்ணிய இவைகொலாம்' என்று இது கடைப்பிடித்துக்
கொண்டுஅவ்
அண்ணலைப் பிரியமாட்டா அளவுஇல் ஆதரவு நீட ...
(பெ.பு.759)

'இலைகளும், மலர்களும் பெய்து நீராட்டி, உணவு படைத்தல் வேண்டும். இதை நான்செய்வேன், என்று திண்ணனார் கூறி, வழிபாட்டைத் தொடங்கினார். பன்றி இறைச்சியைத் தீயில் வாட்டினார். அது நன்கு வெந்திருக்கிறதா என்று சுவைத்துப் பார்த்தார். சுவையாய் இருந்த பகுதிகளைத் தேக்க இலைகளில் தொன்னை புனைந்து சேர்த்து வைத்தார். நீராட்டுவதற்குத் தம் வாய்நிறைய ஆற்றுநீரை நிரப்பிக் கொண்டார். குடுமித்தேவர் மீது பெய்திருந்த இலை,பூ அனைத்தையும் தம் செருப்புக் காலால் அகற்றினார். பின்னர் தம் வாயிலிருந்து நீரைப் பெய்தார். தீயில் வாட்டிய இறைச்சி கொண்ட இலைத் தொன்னையை முன்வைத்து இறைவனிடம் கூறுகின்றார்:

'கொழுவிய தசைகள் எல்லாம் கோலினில் தெரிந்து கோத்து அங்கு
அழல்உறு பதத்தில் காய்ச்சிப் பல்லினால் அதுக்கி நாவில்

பழகிய இனிமை பார்த்துப் படைத்தஇவ் இறைச்சிசால
அழகிது; நாயனீரே! அமுது செய்தருளும்' என்றார்.
(பெ.பு.774)

இப்பரிசு திருஅமுது செய்வித்துத் தம்முடைய
ஒப்பரிய பூசனைசெய்து அந்நெறியில் ஒழுகுவார்;
எப்பொழுதும் மேல்மேல்வந்து எழும்அன்பால் காளத்தி
அப்பர்எதிர் அல்உறங்கார்; பகல்வேட்டை ஆடுவார்.
(பெ.பு.800)

சிவகோசரியார் வருகையைத் திண்ணனார் இல்லாத சமயம் அமைத்தது இறைவனின் திட்டம். சிவகோசரியார் இறைவன் திருமேனிமீது கிடக்கும் சமைத்த இறைச்சித் துண்டுகளைப் பார்த்து வருந்தி அவற்றை அகற்றிவிட்டு, ஆகம விதியின் முறையால் அர்ச்சனை செய்வாராயினார். இறைவனிடம் அங்கு நடைபெறும் தீமையை ஒழிக்குமாறு வேண்டினார்:

அந்நிலையில் அன்பனார் அறிந்தநெறி பூசிப்ப
மன்னியஆ கமப்படியால் மாமுனிவர் அருச்சித்து 'இங்கு
என்னுடைய நாயகனே! இதுசெய்தார் தமைக்காணேன்;
உன்னுடைய திருஅருளால் ஒழித்தருள வேண்டும்' என.
(பெ.பு.804)

அன்றிரவு சிவகோசரியார் கனவினில் சிவபெருமான் தோன்றிக் கூறிய செய்தியைச் சேக்கிழார் பெருமான் இவ்வாறு காட்டுகிறார்:

அன்றுஇரவு கனவின்கண் அருள்முனிவர் தம்பாலே
மின்திகழும் சடைமவுலி வேதியர்தாம் எழுந்தருளி,
'வன்திறல் வேடுவன் என்று மற்றவனை நீநினையேல்;
நன்றுஅவன்தன் செயல்தன்னை நாம் உரைப்பக் கேள்என்று.
(பெ.பு.825)

அவனுடைய வடிவுஎல்லாம் நம்பக்கல் அன்புஎன்றும்
அவனுடைய அறிவுஎல்லாம் நமைஅறியும் அறிவுஎன்றும்
அவனுடைய செயல்எல்லாம் நமக்குஇனிய வாம்என்றும்
அவனுடைய நிலைஇவ்வாறு; அறிநீ' என்று அருள்செய்தார்.
(பெ.பு.806)

மேலும் திண்ணனார் பெருமையை சிவகோசரியாருக்கு உணர்த்தி அவரை ஒளிந்திருந்து பார்க்குமாறு இறைவன் கூறுகிறார்.

'உனக்கு அவன்தன் செயல்காட்ட நாளைநீ ஒளித்து இருந்தால்

எனக்கு அவன்தன் பரிவுஇருக்கும் பரிசுஎல்லாம் காண்கின்றாய்;
மனக்கவலை ஒழிக' என்று மறைமுனிவர்க்கு அருள்செய்து,
புனல்சடிலத் திருமுடியார் எழுந்தருளிப் போயினார். (பெ.பு.812)

கனவுநிலை நீங்கிய பின் விழித்து உணர்ந்து கங்குலிடைப்
புனைதவத்து மாமுனிவர் புலர்வுஅளவும் கண்துயிலார்;
மனம்உறும் அற்புதம்ஆகி; வரும்பயமும் உடன்ஆகித்
துனைபுரவித் தனித்தேர்மேல் தோன்றுவான் கதிர்தோன்ற.
(பெ.பு.813)

முன்னைநாள் போல்வந்து திருமுகலிப் புனல்மூழ்கிப்
பல்முறையும் தம்பிரான் அருள்செய்த படிநினைந்து
மன்னுதிருக் காளத்தி மலைஏறி, முன்புபோல்
பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக ஒளித்திருந்தார். (பெ.பு.814)

சிவகோசரியாருக்கு அனுபூதி கிட்டிவிட்டது. அவரும் இறையனுபவத்தில் ஆழ்ந்திருந்தார். அவர் இறைவன் ஆணைப்படி மறைந்திருந்து கண்ட காட்சி செப்பரியது. திண்ணனார் வந்து பார்க்கும்போது சிவலிங்கத்தின் கண்ணொன்றிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்டு நடுநடுங்கினார். வாயில் இருந்த நீர் கீழே சிந்தியது. வில்லும் விழுந்தது. படைக்கக் கொண்டுவந்த இறைச்சித் தொன்னையும் விழுந்தது. வேதனையுடன் திண்ணனார் இதைச் செய்த பாதகன் யார் என்று சுற்றுமுற்றும் பார்த்தார். கண்டால் கொன்றுவிடச் சமைவாக இருந்தார். எங்கும் யாரையும் காணவில்லை. அவர் கண்களில் நீர் பெருகியது. பச்சிலைகளைச் சேகரித்து வந்து அவற்றைக் கசக்கிப்பிழிந்து இறைவன் கண்களில் வார்த்தார். இரத்தம் வடிவது நிற்கவில்லை. கண்ணுக்குக் கண்ணையே கொடுக்கலாகும் என்று எண்ணி, தம் அம்பு ஒன்றை எடுத்து தம் கண் ஒன்றைக் குத்திப் பெயர்த்து எடுத்து இரத்தம் கொட்டிய கண்ணில் நாயனார் அப்பினார். இரத்தம் வடிவது நின்றது. நாயனார் ஆடினார், மகிழ்ந்தார். ஆனால் அம்மகிழ்ச்சி குறுகிய காலமே நீடித்தது. இறைவனின் மறு கண்ணிலும் இரத்தம் வடிந்தது. சேக்கிழார் பெருமானின் வாக்கில் இதனைத் தரிசிப்போம்.

"கண்டபின் 'கெட்டேன்! எங்கள் காளத்தியார் கண் ஒன்று
புண்தரு குருதிநிற்க மற்றைக்கண் குருதிபொங்கி

மண்டும் மற்று இதனுக்கு அஞ்சேன், மருந்துகை கண்டேன்,
இன்னும்
உண்டு ஒருகண்அக் கண்ணை இடந்து அப்பி ஒழிப்பேன் என்று"
(பெ.பு.830)

முடிவு செய்தார்.

கண்ணுதல் கண்ணில் தம்கண் இடந்துஅப்பின் காணும் நேர்பாடு
எண்ணுவார்; தம்பிரான்தன் திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி
உள்நிறை விருப்பி னோடும் ஒருதனிப் பகழி கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவதேவர்.
(பெ.பு.831)

செங்கண் வெள்விடையின் பாகர்; திண்ணனார் தம்மை ஆண்ட
அங்கணர் திருக்காளத்தி அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்கும் கையைத் தடுக்க மூன்றடுக்கு நாக
கங்கணர் அமுதவாக்குக் 'கண்ணப்ப நிற்க' என்று கூறியருளிற்று.
(பெ.பு.832)

கண்ணப்ப நாயனார் புராணம் கண்ணப்பரின் இறையனுபவத்தையும், சிவகோசரியாரின் இறையனுபவத்தையும் விரித்துப் பேசுகிறது. இது போன்றே அறுபத்து மூன்று நாயன்மாரின் இறையனுபவங்களும் பெரியபுராணத்தில் பேசப்பட்டுள்ளன.

அப்பர் சுவாமிகள், கடலில் கல்லில் கட்டுண்டு மிதந்ததும், நீற்றறையிலிருந்து வெளிவந்ததும், அவரை மிதிக்க வந்த யானை அவரை வணங்கித் தீயோரை மிதித்ததும் அற்புதங்கள். காரைக்காலம்மையார் மாங்கனி பெற்றதும், இளமை துறந்து பேய்வடிவம் பெற்றதும் அற்புதங்கள். ஒவ்வொரு நாயனாரின் வரலாறும் இறையனுபவ வெளிப்பாடே. ஆகவே சிவானுபூதி பெற ஓதி, போற்றப்பட வேண்டிய நூல்கள் திருமுறைகள். பெரியபுராணம் இத்திருமுறைகளின் முடிமணியும் கவசமுமாம்.

14. சிவலோகத் திறவுகோல் பெரியபுராணம்

பெரியபுராண அரங்கேற்றம் 1139 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆதிரை நாளோடு கூடிய நான்காம் தேதி தொடங்கி 1140 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆதிரை நாளாகிய இருபத்து இரண்டாம் தேதி நிறைவுற்றது என்று கல்வெட்டு ஆய்வாளர் குடந்தை சேதுராமன் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

பெரிய புராணத்திற்கு 'உலகெலாம்' என்ற சொற்றொடரை நடராஜப் பெருமானே தெய்வச் சேக்கிழாருக்கு எடுத்துக் கொடுத்தார் என்று அறிவிக்கப்படுகிறோம். கொடுக்கப்பட்ட சொல் தொடர் பதியின் வாக்கு. பதி அருளிய வாக்கை வைத்து, பசுவாகிய ஆன்மா ஒரு நூலைத் தலைக்கட்ட முடியுமா என்னும் கேள்வி எழுவது பொருத்தமானதே.

இக்கேள்விக்கான அற்புத விடையை வள்ளல்பெருமான் அருளியிருக்கிறார். உலகறிய வாக்கெடுத்து அருளிய பெருமான் அந்தக் கணமே சேக்கிழார் பெருமான் திருவுள்ளத்தில் அமர்ந்து திருத்தொண்டர் புராணத்தை நிறைவு செய்து தந்திருக்கிறான். ஆகவே பெரியபுராணம் முழுவதும் சிவனால் அருளப்பட்ட நூல் என்பதை நாம் ஏற்றிப் போற்ற வேண்டும். பெரியபுராணம் ஒரு பிரமாண நூல். இதை விமர்சிப்பதோ, அனாவசிய ஆய்வுக்கு உட்படுத்துவதோ பொருந்தாச் செயல்களாகும். திருமுறைகளை அப்படியே ஏற்க வேண்டும் என்றும், சாத்திரங்களை ஆய்ந்து கோடல் வேண்டும் என்றும் சைவ மரபு சாற்றுகிறது. ஆனால், இம்முறையை ஆய்வாளர்கள் மாற்றிப் போட்டுவிட்டனர். திருமுறைகளை ஆய்கின்றனர்; சாத்திரங்களை ஆய்வதில்லை. சொல்லப்போனால் சாத்திரத்தில் தலைவைத்துப் படுப்பதுகூட இல்லை.

சேக்கிழார் பெருமான் முதன் முதலில் எந்த அடியார் சரித்திரத்தைத் தொடங்குகிறார் என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும். அடியார்கள் வரலாற்று அமைப்பில் மாற்றம் செய்ய தமக்கு அதிகாரமில்லை என்பதை அவர் அறிந்து, உணர்ந்து செயல்பட்டார்.

ஆகவே சுந்தரர் ஏன் முதலில் போற்றப்பட வேண்டிய அடியாராக திருநீலகண்டத்துக் குயவனாரைப் போற்றினார் என்று பார்க்க வேண்டும். பல ஆயிரம் ஆண்டுகள் கயிலையில் எம்பெருமானுக்குத் தொண்டாற்றிய சுந்தரர் ஒரே ஒரு நாள் உமையம்மையின் சேடியரான கமலினி, அனிந்திதை ஆகியோர்மாட்டு தம் பார்வையை ஒரு கணத்திற்கும் குறைவான நேரம் போக்கினார்.

இங்கோருண்மையை நாம் கணித்தல் வேண்டும். Dag Hammerskjoeld என்பார் அதிநுட்பமான உண்மையை இப்படி அறிவித்துள்ளார். On a really clean tablecloth the smallest speck of dirt annoys the eye. At high altitudes, a moment's self indulgence may mean death. பல்லாயிரமாண்டுகள் சிவ கைங்கர்யத்தில் ஈடுபட்டவர், கணத்திலும் குறைந்த காலம் பிறழ்ந்து நின்றார். அதற்குத் தண்டனை புவியில் ஒரு பிறப்பு. இதை உணர்ந்தே அவர் திருநீலகண்டரை முதன்முதலில் வணங்கினார். இன்பத்துறையில் எளியரான நம் நாயனார் தம்முடைய இளமைக் காலத்திலிருந்தே மனைவியார் கூறிவிட்ட பேதியா ஆணையால், எளியேனின் கணக்குப் பிரகாரம் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகக் காமதகனம் செய்த பெரியோராக விளங்கினார். நாயனார், அவர் மனைவியார் ஆகியோர் செயல் கண்டு, காமதகனம் செய்த கண்ணுதற் கடவுள், "வென்ற ஐம்புலனால் மிக்கீர்!" என்று அறைகூவி அருளினர். கணநேரம் காக்கத் தவறிய தம் சிறுமை எங்கே? குயவனார் பெருமை எங்கே என்று எண்ணியே, சுந்தரர் தில்லைவாழ் அந்தணர் போற்றும், தில்லையில் அவதரித்த திருநீலகண்ட நாயனாரை மன, மொழி, மெய்களால் வழுத்தினார்.

சிவயோகி, தம்மிடம் அளித்த திருவோடு காணாமற்போக, அதனை வைத்த இடத்தும், வேறு இடத்தும் தேடிப் பெறமுடியாது தவித்துத் தத்தளித்த நாயனாரைத் தில்லைவாழ் அந்தணர் திருச்சபையின் முன்பு இழுத்து வந்து வழக்குத் தொடுத்தனர். வழக்கைக் கேட்ட தில்லைவாழ் அந்தணர் திருநீலகண்டரைப் பற்றி நன்கு அறிவர். புதிதாக வந்தவர் ஒரு சிவயோகியாகக் காட்சியளித்தும் அவர் சொற்களை அப்படியே ஏற்காமல், உம்மை நாங்கள் அறிவோம். நீர் நீதிமுறை வழுவா நெறியில் நிற்பவர். ஆகவே நடந்தது என்ன என்பதை நீங்களே கூற வேண்டும்" என்னும் பொருள் படும்படியாக, "நிறையுடைய வேட்கோவர்! நீர் மொழியும்" என்றனர். நிறை என்றால் கற்பு என்று பொருள்; ஒழுக்கம் என்று பொருள். இந்தக் காட்சியை உங்கள் மனக்கண்முன் கொண்டு வாருங்கள். தில்லைவாழ் அந்தணர்

அமர்ந்திருக்கின்றனர். குற்றம் சாட்டப்பட்ட திருநீலகண்டரும், சாட்டிய சிவயோகியும் நிற்கின்றனர். சிவ வேடத்தைச் சிவமே என்று கொள்ளும் நாயனார் திருவுள்ளத்தில் ஓர் உறுத்தல். வந்திருக்கும் சிவயோகியாருக்கு அந்தணர் ஆசனம் வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அப்படி வழங்காதவரைக் குற்றங்கூறுதல் முறையாகாது என்றாலும் அந்தணர் செய்கையை இங்கிதமாக எடுத்துக் கூறவும் வேண்டும். ஆகவே திருநீலகண்டர் சிவயோகியாரைக் குறிக்கும்போது 'நின்ற இவர் தரும் ஓடு' என்று சமர்ப்பிக்கின்றார். 'நின்ற' என்ற ஒற்றைச் சொல்லுக்கு இவ்வளவு பொருள் உண்டு என்று மகாதேவ முதலியார் கூறியுள்ளார்.

இயற்பகை நாயனார் புராணத்தை உணர்ந்தார் உய்தி கூடுவர். மனைவியைக் கொடையாக வழங்கிவிட்டார் நாயனார். கொடையைப் பெற்றவனைக் கொன்று போட கொடை கொடுத்தார் சுற்றத்தார் படையெடுத்து வருகின்றனர். கொடை பெற்ற சிவபெருமான், நிலைகண்டு அஞ்சினார்போல் நடித்தார். அப்போது மனைவியார் கூறுவார். "இறைவனே அஞ்ச வேண்டாம்; இயற்பகை வெல்லும்." தமக்கும் தம் கணவனாருக்கும் இருந்த உறவு அற்றுவிட்டதை எடுத்துக்காட்ட அவ்வம்மையார் பண்டு கணவனாய் இருந்தவரின் பெயரைத் தம் வாயால் கூறிய நுட்பத்தை என்னவென்று போற்றுவது?

முன்னோர் அருளிய மொழியை; பின்னால் வந்தோர் பொன்னேபோல் போற்றுவர். சாக்கிய நாயனாரை அப்பர் பெருமான் வீழிமிழலைத் தாண்டகத்தில் குறிப்பிடுகின்றார். அவர் எறிந்த கற்களை எம்பெருமான் மலர்களாக ஏற்றான். இதையே அடிகள், "புத்தன் மறவாதோடி எறி சல்லி புதுமலர்கள் ஆக்கினான் காண்" என்கின்றார். சுந்தரரும் திருத்தொண்டத்தொகையில், "மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்" என்று வழிமொழிந்திருக்கிறார். ஞானசம்பந்தப் பெருமான் திருவையாற்று தேவாரப் பாடல் ஒன்றில் தம்மை "மன்னியசீர் மறைநாவன்" என்று அறிமுகம் செய்கிறார். இதையே சுந்தரரும் எப்படிக் கையாண்டிருக்கிறார்? பூசலாரைப் பற்றிப் பேசும்போது, "மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்" என்று வருணித்திருக்கிறார். ஆகவே பூசலார் மிகப்பெரிய வேத விற்பன்னர் என்பது தெளிவாகிறது. இதை சேக்கிழார் பெருமான் விளக்கும் முறையைத் தரிசிப்போம். பூசலாரை அவர் வருநெறி மாறா அன்பு வளர்ந்து எழ வளர்ந்து, வாய்மைப் பொருள் பெறு வேதநீதிக் கலை

உணர் பொலிவின் மிக்கார் என்று காட்டியிருக்கும் அற்புதத்தை என்னென்போம்! ஒவ்வொரு அடைமொழியும் ஓங்கி ஆழ்ந்து அகன்று நுட்பமாய் இருத்தலை எவ்வாச்சியம் கொண்டு இசைக்க முடியும்?

சுந்தரரும், 'சிவனெனும் ஓசை' என்று தொடங்கும், அப்பர் பெருமான் அமைத்திருக்கும் 'திருநின்ற செம்மை' என்னும் தொடரை அப்பருக்கே அர்ப்பணித்து, "திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரையன்" என்று போற்றியுள்ளார்.

பெரியபுராணத்தில் தேவார திருவாசகச் சொற்கள், தொடர்கள் எங்கெல்லாம் போற்றப்படுகின்றன என்பதற்கான பட்டியலை அமைக்கப்பாடுபட வேண்டும் என்பது என் வேண்டுகோள். அப்பரடிகள் தேவாரமும், மாணிக்கவாசகர் திருவாசகமும் ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்க வல்லன. மாணிக்க வாசகர் சரித்திரத்தை சேக்கிழார் பெருமான் வரைய முடியாமல் போனதற்குக் காரணம் அவர் திருத்தொண்டத் தொகை வழியே புராணம் அமைக்க வேண்டிய கட்டாயம் என்றாலும், திருவாசகச் சொற்றொடர்களையும், கருத்துக்களையும் அங்கங்கும் தம் புராணத்துள் பெய்திருக்கிறார்.

சேக்கிழார் பெருமான் "சாதிகள் நெறியில் தப்பா" என்று கூறியருளியவர். சாதிகளை அழிக்கவோ, உடைக்கவோ கூடாது. சாதி வழக்குகளை அனுசரித்து ஏகனாகி இறைபணியில் நின்று அதைக் கடந்துவிட வேண்டும். தொண்டர்கள் என்றும், அடியார்கள் என்றும் கொண்டாடப் பெறுவோர், சாதி சமய பேதங்களைக் கடந்து உலகோர்க்கு வழிகாட்டும் பெரியோர்கள். இதுவே சைவத்தின் சாரமான செய்தி. அப்பூதி அடிகள் அந்தணருள் மேலானவர். அவருடைய குருநாதர் வேளாளப் பெருந்தகையாகிய நாவுக்கரசர். சகல ஆகம பண்டிதராகிய அருள் நந்தி ஓர் சிவாசாரியர். அவருடைய குருநாதர் வேளாளப் பெருமானாகிய மெய்கண்ட தேவர், சேக்கிழார் பெருமான் தொண்டை மண்டல வேளாளப் பெருந்தகையார். அவர் திருவடிகளிலே ஆழங்கால்பட்டுக் கிடந்தவர் சந்தான குரவரில் நான்காமவரும், தில்லைவாழ் அந்தணருமான உமாபதி சிவம் அவர்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஒரு வேளாளர். அவருடைய பரம சீடர் காசிவாசி செந்திநாத ஐயர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை வேளாளப் பெருந்தகையார். அவருடைய பிரதமசீடர் தமிழ்த் தாத்தாவான உ.வே.சாமிநாத ஐயர். சைவத்தில் சாதியின் பெயரால் வழக்கு எழ வழியில்லை. மொழியின் பெயராலும் வழக்கு

எழவழியில்லை. உமாபதி சிவம் தெய்வச் சேக்கிழாரின் பெருமையை இங்ஙனம் இசைக்கின்றார்.

தன் செவியாற் பெரியபுராண அரங்கேற்றத்தைச் செவிமடுத்த கலைமகளின் நிலைபற்றி உமாபதியார் கூறுவதாவது:

பூவை மறந்தனள் வெண்டாமரைமயில் புகல்தரு சங்கப்
புலவோர் சொற்
பாவை மறந்தனள் தேச சுபாடித பயனை மறந்தனள் பதுமத்தோ
னாவை மறந்தனள் பொதிய மலைத்தலை நண்ணிய புண்ணிய
முனிவனெனுங்
கோவை மறந்தனள் சேவையர் காவலனார்திரு நாவிற்
குடிகொண்டாள்

முடிவிலே ஒரு சொல்

1. கல்வியில் பெரியவர் கம்பர். சேக்கிழார் பெருமானோ என்னில், "கற்றாரையான் வேண்டேன் ... கற்பனவும் இனி அமையும்" என்ற நிலையை எய்தியவர்.

2. தீஞ்சுவைச் செஞ்சொற்கவி யின்பமே பேரெழிலாட்டியாம் சீதை என்றுரைத்து கவிதைக்கு மேற்பட்டது ஏதுமில்லை என்ற கருத்துடையவர் கம்பர்.

சேக்கிழர் பெருமான் அனுபூதி இப்படிப் பட்டது: "காட்சி அடங்கிக் கருத்தடங்கிச் செவி காணும் கவிதையும் தான் மடங்கி ஆட்சிக்கு அடங்கிய ஆகத்து உணர்வுகள் அத்தனைக்கும் மேல் ஓர் ஆனந்தமோ."

3. அறிவின் சிகரத்தில் அமர்ந்திருப்பவர் கம்பர். அனுபூதியின் உயர் சிகரமே சேக்கிழார் பெருமானின் இயற்கை வாச ஸ்தலம்.

4. சொல்லின் சுக நிலையில் சொக்கும் கவி மலர் பறித்து பலப்பல அலங்கல்கள் வனைந்தவர் கம்பநாடர். சேக்கிழார் பிரானோ என்னில், சொல் பதம் கடந்த சிவ போகத்தைத் தேக்கியுண்டு தேக்கெறிந்து த் திளைத்திருப்பவர்.

5. தமிழில் தோய்வுள்ள யாவருமே கம்பரைத் துய்க்க முடியும். ஆனால் தமிழறிவோடு பல்விதமாயின சாத்திரத்தின் மணமும் தெய்வத் திருமுறை ஞானமும் பெற்றோரே குன்றை முனிவர் பக்கம் வர ஒல்லும்.

6. இதிகாசத்தை விஞ்சி நிற்கும் சிறப்பு உபநிஷத்திற்கு உண்டு. ஷேக்ஸ்பியர் கீர்த்தியை புறங்கண்ட சீர்த்தி மாமுனி மில்டனாருக்கு உண்டு. கம்பரையும் விஞ்சிய புகழ் தெய்வச் சேக்கிழாருக்கு உண்டு.

7. கவிகளின் சக்ரவர்த்தி கம்பர். கவிகளின் தெய்வம் சேக்கிழார் பெருமான். பிரபு சேக்கிழார் அருளிய நூல் ஒன்றே ஒன்றுதான். அதுவே பெரியபுராணம்.

சிவலோக வாயிலைத் திறக்க நமக்கொரு திறவுகோல் நல்குவது பெரிய புராணம். பெரியபுராணத்தை என் என்பேன்!

1. பெரிய புராணம் என்பதே ஓர் பேர் ஆலயம்
2. சிவபெருமான் கொண்ட அருள் நூல் வடிவம்
3. பெரிய புராணம் மோக்ஷ காரிகை.
4. வாழையடி வாழையென வளர் அருள் திருக்கூட்டத்திற்கு என்று அமைந்த சிவப்பிரசாதம் பெரிய புராணம்.
5. எளியேனின் தெய்வமாம் சேக்கிழார் பெருமானின் ஆத்ம ரத்னம்.
6. அடியார்களுக்குச் சரண்புகக் கிடைத்த சிவனார் ஸ்ரீபாதம்.
7. பதிஞானக் கருவூலம்.
8. உவமையிலாக் கலை ஞானம்.
9. உணர்வரிய மெய்ஞ்ஞானம்.
10. எல்லாப் புராணங்களின் அரசு.
11. திருமுறைகளின் மணிமுடி; முடிமணி.
12. உயிர்த்து நிற்கும் சைவ சித்தாந்தம்.
13. உயிரோடு உறவு கொள்ளும் சைவ வேதாந்தம்.
14. ஆகமங்களின் பீடபூமி.
15. முனிபுங்கவர்களின் ஹ்ருதய கமலம்.
16. சைவ சமய சஞ்சீவி.
17. முத்தமிழ்ப் பேழை.

18. என்றும் நின்று அருளும் கற்பகத் தரு.

19. சிவபுண்ணியச் செல்வம்

20. களவு படாத மொழி கொடு அமைந்த தெய்வ மாக்கதை.

21. செவிக்கு இனிமை பயந்து, அந்தக் கரணங்களை த் தூய்மை ஆக்கி, உயிராம் ஆன்மாவிற்கு உறுதி நல்கும் திவ்வியக் கிரந்தம்.

22. ஓதுவாரையும் ஓதக் கேட்பாரையும் சாயுஜ்யத்திற்கு இட்டுச் செல்லும் வேதாகமப் பனுவல்.

23. சிவஞானப் பெட்டகம்.

24. ஆகமாந்த சாரம்.

25. அம்பலவன் அருள்.

26. அம்பிகையின் கருணை.

27. நாமும் அருந்தி மகிழ நமக்குக் கிடைத்த ஞானப்பால்.

28. தேமதுரத் தமிழின் பக்திக் கிரந்தம்.

29. ஸாஸ்வதப் பெருஞ் செல்வம்.

30. அந்தமில் பேரின்பம்.

31. நூல்வடிவ சச்சிதானந்தம்

சேக்கிழார் சென்னி தீண்டும் சிவன் சேவடி போற்றி போற்றி.

15. வீர சைவமும் பெரியபுராணமும்

தமிழ்ச் சைவர் போலவே வீர சைவரும் சமணரிடம் சமரிட நேர்ந்தது. எட்டாம் நூற்றாண்டு முதலே, ராஷ்ட்ரகூடர்களும் கலியாணிச் சளுக்கர்களும் ஆண்ட காலத்தில் சமணம் ஓங்கி நின்றது. சளுக்கியர்களின் ஆட்சியின் முடிவுக் கட்டத்தில் சமணர்கள், சமுதாயத்திலும் அரசாட்சியிலும் தங்கள் பிடியை நெகிழ விட வேண்டி வந்தது. பாசுபத, காளாமுகக் கூட்டத்தாரின் தலைவர்கள் சமணர் பெற்றிருந்த இடத்திற்கு வந்தனர். பாசுபதர்களும் காளாமுகர்களும் வீர சைவருக்கு முன்னோடிகள் என்று சரித்திரம் சாற்றுகிறது. ஆராத்திய அந்தணர்கள் காளாமுக, பாசுபத சமயத்தார்க்கும் வீரசைவருக்கும் இடைப்பட்ட நிலையில் விளங்கி வந்திருக்கின்றனர். இவ்வாராத்தியர் சைவத்தின் ஒரு வகைப் பிரிவினரே. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வீரசைவருக்கு ஆதி குருமாராகச் செயல்பட்டிருக்கின்றனர். இவர்களுடைய கோட்பாடுகளை வீர சைவர் ஏற்றனர். 11, 12 ஆம் நூற்றாண்டுகளில் காளாமுகர்கள் பல மடங்களுக்கும் கோயில்களுக்கும் தலைவராக விளங்கி வந்தனர். காலப்போக்கில் காளாமுகர்களே கர்நாடகத்தில் எல்லா முக்கிய மடங்களுக்கும் கோயில்களுக்கும் அறங்காவலர்களாக இருந்து வந்தனர்.

தமிழகத்திலும், ஆந்திராவிலும் காளாமுகர் செல்வாக்குப் பெற்று விளங்கியிருந்தனர். நாளடைவில் காளாமுகரின் செல்வாக்கு வீர சைவர்களின் கைகளுக்கு மாறியது. திருப்பருப்பதம் எனும் ஸ்ரீ சைலம் ஒரு காலத்தில் காளாமுகத்தின் தலைமைப் பீடமாக விளங்கியது. இத்தலைமை பின்னாளில் வீரசைவருக்குக் கிட்டியது. தம் வாழ்வின் முற்பகுதியில் காளாமுகரைப் பெரிதும் ஆதரித்த தண்டநாயக கேசிமயா, பின்னாளில் மறுமலர்ச்சியில் முகிழ்த்த வீர சைவத்தின் தூணாகவும், பஸவேஸ்வரரின் நெருங்கிய சீடராகவும் மாறினார்.

தத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் வீரசைவம் சக்தி விஸிஷ்டாத்துவித சித்தாந்தம் ஆகும். ஆசிரியர் மல்லதேவரு கூறுவதாவது: "இருபத்து எட்டு ஆகமங்களும், உபாகமங்களும், அல்லமா பிரபு, சென்னபஸவண்ணா, பஸவண்ணர், சித்தராமா போன்ற இறை அனுபவ ஞானிகளின் வசனங்கள், சிவயோகி, சிவாசார்யா, நீலகண்ட சிவாசார்யா, மக்கேய மயிதேவா போன்றோர்

அருளிய நூல்கள் வீரசைவக் கோட்பாடுகளுக்கு ஆதாரபூர்வமான மூலநூல்கள்."

தமிழ்நாட்டில் இரேவண சித்தர் என்ற பெருங் கவிஞர் வாழ்ந்த பதினாறாம் நூற்றாண்டில் வீர சைவம் நன்கு பரவி இருந்தது. இவர் இயற்றிய சிவஞானதீபம் சைவ சித்தாந்த நூல் என்றே கூறலாம். 174 விருத்தப் பாக்கள் கொண்ட பனுவல் இது. 170 பாடல்கள் கூறுவன சைவ சித்தாந்தக் கோட்பாடுகளே. இறுதியில் உள்ள நான்கு பாடல்கள் வீர சைவம் பற்றியவை. இலிங்க தாரணமும், ஏகலிங்க நிஷ்டையும் இந்நூலில் வலியுறுத்தப்படுகின்றன.

வீரசைவப் பெரியோர்கள் இயற்றிய நூல்கள் வசனங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை உருவ வழிபாட்டைக் கண்டிக்கின்றன. அது கண்மூடித் தனமான பழக்கம் என்று அறிவிக்கப்படுகிறது. தீக்ஷா காலத்தில் குரு வழங்கும் இலிங்கமே சீடனால் இஷ்ட லிங்கம் என்று கொள்ளப்படும். இந்த வடிவிலே பரம்பொருள் வழிபடப்பட வேண்டும். ஆலயங்களில் நிறுவப்பட்டிருக்கும் தாவர லிங்கத்தைக் கூட வீரசைவம் கண்டிக்கிறது. ஆனாலும் பஸவேஸ்வரரின் வசனங்கள் யாவுமே கூட சங்கமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சங்கமேஸ்வரரையே துதிப்பனவாகும்.

வீர சைவத்திற்கு அமைந்துள்ள வசனங்கள் பல்லாயிரக் கணக்கில் பல்கியுள்ளன. இவற்றைப் பற்றி ஆங்கிலத்தில் முதன்முதலில் நூல் வரைந்தவர் பேராசிரியர் கே.ஆர்.ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஆவர். இவ்விலக்கியத்தில் ஆங்கிலமறிந்தார் ஆழங்கால் பட உதவியவர் ஏ.கே.இராமாநுஜன் அவர்கள். இவர் மொழிபெயர்ப்பின் தமிழ் ஆக்கத்தைக் கீழே காணலாம்.

"செல்வம் படைத்தோர் சிவனுக்கு ஆலயம் எடுப்பர்.

ஏழை நான் என் செய்ய வல்லேன்!
கால்களே தூண்கள்;
என் காயமே கருவறை;
சிரமே கனகமய கோபுரம்.
நிற்பன வீழும்;
நகர்வன நிலைபெறும்;
கேள் இதனை, கூடல் சங்கமத்து ஈசனே."

இவ்வசனம் கூறும் செய்தி இதுவே. தோன்றியது ஒடுங்கும். நடமாடும் கோயில்களே அடியவர் என்ற வீர சைவக் கருத்து, பண்டே திருமூலரால் அறிவிக்கப்பட்ட ஒன்று.

"படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயின்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே."

சங்கமரே ஆலயம் என்று முதலில் அறிவித்தவரும் திருமூலரே.

"உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணி விளக்கே."

அப்பர் அடிகளும்,

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்

பூசனை ஈசனார்க்குப் போற்றி அவிக் காட்டினோமே" என்று அருளியுள்ளார்.

சிவனடியார்கள் பல்வகைக் குலத்தினர், சாதியினர் என்று முன்பே காட்டியுள்ளோம். திருத்தொண்டத் தொகை இவற்றைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. சைவர்களுக்கு அமைந்த தேவாசிரியன் மண்டபம் போல் வீரசைவர்களுக்கு அமைந்தது அனுபவ மண்டபம். அனுபவ மண்டபத்தார் பட்டியலின் ஒரு பகுதியைக் கீழே தருகிறோம்.

ஜெடார் (ஜேடர்) தாஸிமையா - நெசவாளர்,
சங்கர தாஸிமையா - தையற்காரர்,
மடிவால மாசிதேவர் - வண்ணார்,
மேடார் கேதய்யா - கூடைமுடைவோர்,
அம்பிகர சௌடையா - ஓடக்காரர்,
ஹதபாத அப்பண்ணா - மயிர் வினைஞர்,
தக்கேய பொம்மண்ணா - முரசு அறைவோர்,
திருகாஹி ராமண்ணா - இடையர்,
சங்கத பங்கண்ணா - வரி வசூலிப்பவர்,

கின்னரி பொம்மையா - பொற்கொல்லர்,
ஒக்கலு முட்டையா - உழவர்,
ஜோதர மாதண்ணா - படைவீரர்,
தோஹர காக்கையா - தோல் பதனிடுவார்,
மாதர சன்னையா - கம்மாளர்,
தலாவார காமிதேவா - கிராமப் பணியாளர்,
காடை கண்ணப்பா - வாணியர்,
வைத்ய சங்கையா - மருத்துவர்,
கிராத சங்கையா - வேடர்,
நூலிய சண்டையா - புற்கயிறு திரிப்போர்,
சூஜிகாயகட ராமிதந்தா - ஆடை அலங்காரர்,
மலஹர காயகட சிக்கதேவைய்யா - பழைய சாமான்கள் பழுது பார்ப்பவர், விற்பவர்.
பாஸிகாயகட பஸவப்பா - தச்சர்,
சத்திகேகாயகட ரெம்மவ்வே - சாலியர்,
கொட்டநாட மாரையா - உதிர்ந்த நெல்மணி பொறுக்கி வாழ்ந்தவர்.

மேலும் பலப்பலர்.

பெடகின வசனங்களை அருளியவர் அல்லமா பிரபு. இவை விடுகதைகள் போல் அமைப்பில் இருக்கும். இவை பரிபாஷைச் சொற்களால் இயற்றப்பட்ட, திருமூலரின் சூனிய சம்பாஷணை போன்றவை. அக்க மாதேவியைப் பேராசிரியர் ஏ.கே.இராமாநுஜன் ‘சிவத்துள் சிறந்து ஒன்றானவர்’ என்று வருணித்துள்ளார். இவ்வம்மையாரின் பாடல்கள் காரைக்கால் அம்மையார் அருளிய பாடல்கள் போல் உள்ளத்தை உருக்க வல்லன. பஸவன்னர் தம் வசனங்களில் பெரியபுராண நாயன்மாரைக் குறிக்கின்றார்.

“வேண்டவே விழைகின்றேன்;
வேண்டும் பரிசும் இதுவே;
நின் அடியார் பாதம் நான் கூட வேண்டும்
கூடல சங்கமத்து ஈசனே.”

பஸவன்னரின் இப்பாடல் ஆரூர்ப் பெருமானிடம் நம்பி ஆரூரர் வேண்டியபடி அமைத்திருப்பதைக் காணலாம். இப்பேற்றினையே அப்பர் பெருமானும் “தொண்டருக்குத் தொண்டராம் புண்ணியம்” என்று அருளியுள்ளார்.

வீர சைவம் பற்றி வரைவோர் ஒவ்வொருவரும் சைவ நாயன்மாரைக் குறிக்காமல் போகார். சைவ நாயன்மார் அனைவரையும் வீர சைவர் வணங்கி மகிழ்கின்றனர். கி.பி. 1200இல் ஹரிஹரர் பெரியபுராணத்தைக் கன்னடத்தில் மொழிபெயர்த்தார். பெல்காம் மாவட்டத்தில் அர்ஜுன்வாடாவில் கி.பி.1260இல் வெட்டப்பட்ட கல்வெட்டு ஒன்று இப்படி அமைந்திருக்கிறது.

"1. ஹால பசவ தேவனாகிய நான் நாயன்மார் அறுபான் மூவரின் கமல பாதங்களை வழிபடுகிறவன்.

"2. வீர சைவ சமயத்தை பேரொளியோடு திகழச் செய்த என் முன்னோரான பசவரும் அந்நாயன்மாரை வழிபட்டவரே. எஸ்.எஸ்.பசவன்லாலும், கே.ஆர்.ஸ்ரீநிவாச ஐயங்காரும் வரைந்த "பசவரின் சிந்தனைகள்" (1940) என்ற நூலிலிருந்து, பசவர் பண்டையச் சைவத்திலிருந்தும் தமிழ்ச் சைவ சித்தாந்தத்திலிருந்தும் சில கொள்கைகளை ஏற்றிருக்கிறார் என்பது தெளிவாகிறது.

எஸ்.ஸி. நந்திமத் கூறுவதாவது: "வசன ஆசிரியர்களும் பஸவருக்குப் பின் வீர சைவத்தைப் பேணியவர்களும், தங்கள் கோட்பாடுகளுக்கும், மெய்கண்டாருக்கு முந்தைய தமிழ்ச் சிவனடியார்களுடைய கோட்பாடுகளுக்கும் வேறுபாடு காணவில்லை என்று தோன்றுகிறது. கன்னட வீர சைவ இலக்கியத்தில் தமிழ்ச் சைவ அடியார்களின் சரிதங்கள் மிகுதியாகவே காணப்படுகின்றன. பசவ புராணம் பெரும் அளவில் தமிழ் நாயன்மாரின் வரலாறுகளைத் தன்னகத்தே கொண்டு உள்ளது. கன்னட வசனங்களில் மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் ஆகியோரின் தாக்கமும், அவர்களைப் பின்பற்றி இருத்தலும் வெளிப்படையாகத் தெரிகின்றன. இரு கூட்டத்தினருக்கும் பொதுவானது சிவபக்தி என்னும் மையக்கருத்து. இது, சிறுசிறு வேறுபாடுகளைத் தாண்டி அவர்களை இணைத்திருக்கிறது; இவர்களிடையே ஒரு பாலம் அமைத்திருக்கிறது" (வீர சைவக் கையேடு, இரண்டாம் பதிப்பு, 1942, பக்.7-8).

மேலும் நந்திமத் தம் நூலின் பக்கங்கள் 56-57இல் கூறுவதாவது: "பன்னிரெண்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் எழுந்த ஆதாரபூர்வமான வீர சைவ நூல் ஏதுமில்லை. அப்படி ஒரு நூல் இருந்திருந்தால் அது வீரசைவத்திற்கும் மற்றைய சைவ மரபுகளுக்கும் இடையே, அக்காலத்திற்கும் முன்பு இருந்த தொடர்பைத் துல்லியமாக விளக்கிக் காட்ட உதவியிருக்கும். 12 ஆம் நூற்றாண்டுக்குப் பின் மறுமலர்ச்சி

ஏற்பட்ட போது, சைவ சித்தாந்தம் தன்னுடைய சமயத் தலைவர்கள் என்று போற்றும் அறுபான் மூன்று நாயன்மாரை, வீரசைவம் புராதனர் என்றும் வீர சைவத்தின் தூண்கள் என்றும், வீர சைவர்கள் ஏற்றவும் போற்றவும் செய்தனர். பசவரும், பிற பெரியோர்களும் அருளிய வசனங்களில் அறுபான் மூவர் பற்றிய குறிப்புகள் ஏராளமாக உள்ளன."

மேலும், "வசன சாத்திரத்தின் பல பகுதிகளில் மணிவாசகர் திருவாசகம், சைவப் பெரியோரின் அருளிச் செயல்கள் ஆகியவற்றின் கருத்துகள் மட்டுமின்றி, சொல் அமைப்பும் காணப்படுவதால், தமிழ்ச் சைவத்திலிருந்து வீர சைவம் பெற்ற இரவல் வெளியாகி இருக்கின்றது" என்று நந்திமத் நன்றிப் பண்போடு எடுத்துரைக்கின்றார்.

வீர சைவ வசன ஆசிரியர்கள் தங்கள் எல்லைகளுக்கு உட்பட்டும் அவையிற்றுக்கு அப்பாலும் சென்று, பிற பிரதேச அடியார்களையும் தெரிவு செய்து அவர்களைத் தம் குரு பரம்பரையில் இணைத்துக் கொண்டனர். இக்கருத்தை ஏ.கே.இராமானுஜன் தாம் வரைந்த ஆங்கில நூலான 'சிவனைப் பற்றிய பேச்சு' என்னும் நூலில் 39 ஆம் பக்கத்தில் கூறியுள்ளார்.

பஸவன்னர் சிறியாளர் (சிறுத்தொண்டர்), செங்காளே (திருவெண்காட்டு நங்கை), சிறியாளர் மகனான சீயாளா (சீராளர்), ஸிந்து பல்லா (இயற்பகையார்), சேரமா (சேரமான் பெருமான்), வேடர் (கண்ணப்பர்), நம்பி (நம்பி ஆரூரர்) ஆகியோர் பற்றித் தம் வசனங்களில் கூறியுள்ளார். பஸவன்னர் சிறுத்தொண்டர் மனைவியாரைத் தம்முடை சகோதரி என்று பெருமிதத்தோடு கூறுகின்றார். சிறுத்தொண்டர் காஞ்சியில், பல்லவனுடைய சேனாதிபதியாக விளங்கியவர். ஆனால் பஸவன்னர் அவரைக் காஞ்சி வணிகர் என்று குறிப்பிடுகிறார். செங்காளே (சிறுத்தொண்டரின் மனைவி) அவர் வசனங்களில் நான்கு இடங்களிலும், சேரமான் ஓரிடத்திலும், சீராளர் ஓர் இடத்தில், அவர்க்கு உரிய பெயரோடும், ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் சிறுத்தொண்டர் மகன் என்றும், கண்ணப்பர் ஓர் இடத்திலும், சிறுத்தொண்டர் பத்தொன்பது இடங்களிலும், நம்பி ஆரூரர் இரண்டு இடங்களிலும், இயற்பகையார் 11 இடங்களிலும் குறிக்கப் படுகின்றனர் (1967இல் வெளியான தரபாலு கிரந்தமாலை - 2 என்ற நூலின் அடிப்படையில் கணக்கிட்டு நான் கூறுகிறேன்).

கன்னடவடிவில் ஆக்கப்பட்ட பெரியபுராண நூல்களுக்கான பட்டியலைக் கீழே தருகிறேன்.

ஆண்டு	ஆசிரியர்	நூலின் பெயர்
1200	ஹரிஹரர்	சிவானந்தரகளே. இதன் மறுபெயர் புராதன ரகளே
1400	பீமகவி	பசவ புராணம்
1425	லக்கண்ண தண்டேசா	சிவதத்துவ (சிந்தாமணி)
1470	தொண்டத சித்தலிங்க சிவயோகி	பால்குர்க்கி சோமநாத புராணம்
....	பண்டித ஆராத்தியா	ஞானசாகர நாமாவளி
1500	நிஜகுண சிவயோகி	அறுபத்து மூவர த்ருபதி
1500	சுரங்கா	த்ரிஸஷ்டி புராதகன சரிதா

சென்னைப் பல்கலைக்கழகம் பெரியபுராணத்தை மூலத்தோடு (கன்னட எழுத்தில்) கன்னடத்தில் மொழிபெயர்க்கத் தொடங்கியது. முனைவர் சங்கரகேடிலயா மொழிபெயர்ப்பாளர். இரண்டு தொகுதிகள் வெளிவந்தன. அதோடு இப்பணி நின்று விட்டது. இம்மொழிபெயர்ப்பு 2,326 செய்யுள்களைக் கன்னடத்தில் தந்துள்ளது.

1962இல் வித்துவான் சூரியநாராயண சர்மாவின் தெலுங்கு மொழிபெயர்ப்பு வெளிவந்தது. ஸ்ரீ சிவபக்த சரிதம் என்ற இந்நூல் பெரியபுராணத்தின் சுருக்க வடிவம். 2000 ஆம் ஆண்டில் முனைவர் எம்.சுப்பராவ் தெலுங்கு மொழிபெயர்ப்பு ஹைதராபாதில் வெளிவந்தது. பசவ புராணத்தைப் பால்குருகி சோமநாதர் தெலுங்கில் வரைந்ததை, வெல்சேரு நாராயணராவ் மொழிபெயர்த்தார். இந்நூல் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தால் 1990இல் வெளியிடப்பட்டது. டேவிட் ஷுல்மன் வரைந்த 'திஹங்கிரி காட்' தமிழ், கன்னடம், தெலுங்கு மொழிகளில் வெளியாகியுள்ள சிறுத்தொண்டர் வரலாறுகள் பற்றிய நூல்.

முன்னாள் கேரள அரசின் பிரதம காரியதரிசி கே.பி.கே.மேனோன் பெரிய புராணத்தை மலையாளத்தில் மொழிபெயர்க்கத் தொடங்கினார். இது நூல் வடிவம் பெற்றதாகத் தெரியவில்லை.

பக்தியில் மூடபக்தி, குருட்டு பக்தி ஆகியவையும் இடம்பெறும். இவையிற்றின் ஆதாரத்தில் விசித்திரமான செய்திகள் வெளிப்படும்.

மேலும் கதாநாயகர் பெயர் கெட்டு விடுமோ என்று எண்ணிப் பூசி மெழுகுகின்ற காரியமும் நடைபெறும். பெரியபுராணச் செய்திகள் சிதைவுற்று வழங்கவும் செய்கின்றன. மைசூர் மகாராஜா கிருஷ்ணராஜர் ஒரு சிவபக்தர். 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இவர் வரைந்த சிவதத்துவநிதி நல்ல நோக்கத்தோடுதான் வரையப்பட்டது. ஆனால் இது பிழை மலிந்த நூலாக விளங்குகிறது. இதில் கூறப்பட்ட சில நற்செய்திகள் அபத்தத்தால் கவியப்பட்டுக் கிடக்கின்றன. இவர் அப்பர் அடிகளை ஒரு குயவர் என்கிறார். தில்லை மூவாயிரவரை ஒரு மனிதர் என்கிறார். குங்குலியக் கலய நாயனார் கலாநாதர் என்கிறார். அவர் கையிலிருந்து குங்குலியக் கலயம் ஒரு கதையாக மாறிவிடுகிறது. புனிதவதியார் பூதவதியாகிறார். அவர் ஒரு வைசிய கன்னிப்பெண் என்று வருணிக்கப்படுகிறார். அந்தணர் நீலநக்கர் ஒரு சூத்திரர் என்று காட்டப்பெறுகிறார். ஏயர்கோன் கலிக்காமர் ஒரு பஞ்சமர் ஆகிறார். நரசிங்க முனையரையர் நடமாடும் (புலி) (நிருத்தஸார்தூலா) என்ற பெயர் பெறுகிறார். ஒருவேளை இப்பெயர் கோட்புலியைக் குறிக்கலாம். கூற்றுவ நாயனார் பராந்தகன் என்று பெயர் பெறுகிறார். அதிபத்தர் அதிபக்தர் ஆகிறார். .அவர் அந்தணர் என்றும் வருணிக்கப்படுகிறார். ஐஅடிகள் ஆகிய பல்லவ அரசர் ஓர் இடையராகிறார். ஐஅடிகள் வடமொழியில் பஞ்சபாதர் ஆகி, அகன்ற கால்களை உடையவராகக் காட்சி தருகிறார். இசைஞானியார் ஆண் என்று கருதப்படுகிறார். அவர் கீதானந்தர் ஆகிறார். மேலும் கையில் வீணையுடன் அவர் காட்சி தருகிறார்.

வீர சைவ வரலாறுகளில் நாயன்மார் பற்றிய தகவல்கள் பிழைபட்டு வருகின்றன. என்றாலும் வீரசைவர் கொண்டிருக்கும் நாயன்மார் பக்தி அளவிடுதற்கு அரியது. நாயன்மார்களுக்கு சிலை எடுத்து அடியார் வழிபடுகின்றனர். நஞ்சன்கோடு கோயிலில் அறுபான் மூவர் சிலைகள் அழகுபடுத்தி நிற்கின்றன. தமிழ்நாட்டு வீர சைவரான சிவப்பிரகாசர் இயற்றிய நால்வர் நான்மணிமாலையை விஞ்ச வல்ல நூல் இதுவரையில் வெளிவரவில்லை. இந்நூலை ஓலை நறுக்குகளில் வரைந்து அவற்றிற்கு உருத்திராக்க மாலை வடிவம் தந்து அதை கழுத்தில் அணிந்து கொண்டார் மாதவ சிவஞான யோகிகள்.

தமிழ்ச் சைவரும் வீர சைவரும் இணைந்து பிழையற்ற பெரியபுராணச் செல்வத்தை உலகிற்கு வழங்க வேண்டும் என்பதே அடியார்களின் பிரார்த்தனை.

16. பெரியபுராணத்தில் சமுதாயச் சிந்தனைகள்

எளியேனின் தெய்வமாம் சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணம் ஒரு பென்னம் பெரிய மலைத்தொடர். இதன்பால் 72 மகோன்னதமான சிகரங்கள் உள. இச்சிகரங்கள் அனைத்தையும் ஏறிக் கண்டவர் எவருமிலர் என்றே எண்ணுகிறேன். சில சிகரங்களைச் சென்று அடைய முடியாத தன்மையைக் கண்டு இவையிற்றால் ஆய பயன் ஏதுமில்லை என்பாரும் உளர். ஏறுதலும் கூடாது என்று தடுக்க முயல்வாரும் உளர். யாரறிவார் எங்கள் ஐயன் பெருமையை!

பெரியபுராணம் சைவர் பெற்ற ஒப்பற்ற பனுவல். இதன் அருமை பெருமைகளை அறியாதார் கூற்றுக்களைப் புறத்தே தள்ளி விடுதலே செயத்தக்க நல்வினை. அனைவருமே உறுதிகூட அருளப்பட்ட திப்பிய கிரந்தமே திருத்தொண்டர் புராணம். சைவர் அல்லாதாரும் இதனால் பெரும் பயன் பெறலாம். ஒரு சிலர் அவ்வாறு பயன் பெற்றுள்ளனர். இது இங்ஙனமிருக்க, சைவருள் பலரும் இத்திருமுறையால் பயன் ஏதும் பெறாமல் வறிதே வாழவும் செய்கின்றனர்.

அவர் அவர் வினை வழி அவர் அவர் வந்தனர்;

அவர் அவர் வினை வழி அவர் அவர் அனுபவம்.

பலருக்கும் இந்நூல் தரிசனாதீதமாக இருப்பது ஈசனார் கட்டளை போலும்.

சர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் அமெரிக்காவில் நிகழ்த்திய ஆங்கிலச் சொற்பொழிவுகளில் சிலவற்றைத் தெரிவு செய்து, ஒழுங்காகத் தொகுத்து, அத்தொகுப்பு நூலிற்கு "THE CULTURE OF THE SOUL AMONG WESTERN NATIONS" என்ற மகுடமும் சூட்டி, 1907இல் Myron H.Phelps என்பார் வெளியிட்டார். நூலின் தலைப்புப் பக்கத்தில் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள், 'போஸ்டன் அந்தணர்' என்ற பெயரைப் பெற்ற Emerson என்பாரின் கூற்று ஒன்றைப் பொறித்துள்ளார். அது பின்வருமாறு,

"In Greece, every Stoic was a Stoic, but in
Christendom, where is the Christian?"

[கிரேக்க நாட்டில் தாயிக் என்ற ஒவ்வொரு தத்துவ சாத்திரியும் ஒரு தாயிக்காக விளங்கினார்; கிறித்துவ உலகில் கிறித்துவர் யாண்டு உளர்?"]

கிறித்துவரைப் பற்றிய இவ்வாசகம் சைவருக்கும் பொருந்தும். சைவ உலகில் எங்கே உளர் சைவர்? என்று கேட்கத் தோன்றுகிறது. இது பெரிய கேள்வியே! எனினும் இன்னும் சைவர் என்பார் இல்லாமல் போகவில்லை. சைவப் பயிர் கழனிகளிலும், நல்ல செய்களிலும், பழனங்களிலும், பசிய வயல்களிலும் மண்டிச் செழித்த காலம் மலையேறி விட்டது என்று கூற வேண்டிய நிலை இங்கு இருப்பினும், இன்றுங்கூட இப்பயிருக்கான நாற்றங்கால்கள் அங்கங்கும் இல்லாமல் போகவில்லை. மீளவும் சைவப்பயிர் தழைக்காமல் போகாது.

சமயம், ஆன்மிகம், லௌகிகம், ஆத்திகம், பண்பாடு, பொருளாதாரம் : இவை ஒவ்வொன்றும் செழித்து ஓங்க ஒரு நாட்டிற்கு ஆதாரத் தேவையாக அமைவது கல்வியே. கல்வியில் பெரிய கம்பரும்,

"ஏகம் முதற் கல்வி முளைத்து எழுந்து எண்ணில் கேள்வி
ஆகம் முதற்றின் பணை போக்கிஅருந் தவத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பித் தருமம் மலர்ந்து
போகம் கனிஒன்று பழுத்தது போலும் அன்றே" என்றார்.

பேரரசு ஒன்றைக் கம்பர் ஒரு பெரு மரபாக உருவகிக்கின்றார். அம்மரத்தின் முனையாக விளங்குவது அடிப்படைக் கல்வியே. அதிலிருந்து மனப்பண்பாடு தொடங்குகிறது. முளைத்த அக்கல்வி நீண்டு நிமிர்ந்து வளர்கிறது. அங்ஙனம் வளர்ந்தோங்கிய கல்விக்குக் கேள்வியும் பயிற்சியும் இன்றி அமையாதனவாக அமைகின்றன. கேள்வி என்பது கற்ற கல்வியை அனுபவ ஞானத்தில் வளர்ப்பதாகும். கற்கும் நிலையில்,

"ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்
காற் கூறல்லது பற்றலன் ஆகும்;
அவ்வினையாளனொடு பயில்வகை ஒருகால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்."

இது நன்னூல் சாற்றும் செய்தி.

கல்வியின் அருமை பெருமைகள் இங்ஙனம் பேசப்படுகின்றன. ஆனாலும் ஆசான் எதைச் சாதிக்க முடியும்? எந்த அளவு சாதிக்க முடியும்? என்பன பற்றியும் சிந்தித்தல் வேண்டும்.

மேனாட்டு அறிஞரான முனைவர் ஜான்சன் கூறினார்: "மாணாக்கனின் கற்கும் ஆற்றலை விஞ்சிய வேகத்தில் கற்பித்தல் நடவாது. குதிரையை உகைப்போனின் விரைவு குதிரையின் சக்திக்குக் கட்டுப்பட்டே செயல்படும்." [... "nobody can be taught faster than he can learn. The speed of the horseman must be limited by the power of his horse.]. மேலும் அவர் கூறினார். பட்டி மேயச் செல்லும் எண்ணத்தை மீட்டல் (to recall vagrant inattention), சுருண்டு கிடக்கும் அலட்சியப் போக்கை உசுப்பி விடல் (to stimulate sluggish indifference), ஈனமதித் தவறுகளைச் செவ்வனே திருத்தல் (to rectify absurd misapprehension) என்றுள்ள மூன்று காரியங்களையும் ஆசான் பொறுமையுடன் சாதித்தல் வேண்டும்.

கற்பிக்க முற்படுவோர் ஒன்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளல் வேண்டும். எந்த ஆசானும் மாணாக்கனிடம் இல்லாத அறிவை அவனுக்குப் புகட்டல் முடியாது. இல்லது தோன்றாது என்பது சற்காரிய வாதம். அன்றாடக் காட்சியிலிருந்து ஓர் உண்மையை உணரத் தலைப்படுவோம். அழுக்கேறிய பாத்திரத்தைச் சுத்தம் செய்யப் புளியைப் பயன்படுத்துவர். பாத்திரமும் பளபளக்கும். இப்பளபளப்பு பாத்திரத்திற்கு புளி வழங்கிய கொடை அன்று. உலோகப் பாத்திரத்திற்கு இயற்கையாகவே பளபளப்பு உண்டு. இப் பாளபள்ளியத்தை மாசு மூடும். புளி அம்மாசினை அகற்றும். அவ்வளவுதான்.

மாணவனுக்கு அறிவு உண்டு. அது சுருண்டு கிடக்கும். அச்சுருளை நீக்குவதே ஆசானின் பணி.

Educate என்ற சொல் educere என்ற வேரிலிருந்து பிறந்தது. அதன் பொருள் 'to draw out', 'to lead', 'to unfold' (வெளிக் கொணர்தல், வழிகாட்டல், மடல் அவிழ்த்தல்) என்பதாகும்.

இக்கருத்தை யான் அறிந்த வகையில், முதன் முதலாகக் கூறி அருளியவர் தெய்வச் சேக்கிழாரே. மருள்நீக்கியாரைப் பள்ளியில் சேர்க்க உள்ளனர். இதை வருணிக்க வந்த சேக்கிழார் பெருமான் "... ... புலன் கொளுவ மனம் முகிழ்த்த சுருள் நீக்கி மலர்விக்கும் கலை பயிலத் தொடங்குவித்தார்" என்று அருளியுள்ளார். கல்வியாளர்கள் இதை நன்கு புரிந்து கொண்டு முறையாகச் செயல்பட வேண்டும்.

தெய்வச் சேக்கிழாரின் சமூகச்சிந்தனைகளில் கல்வி சிறப்பிடம் பெறுகிறது. பிள்ளையை எந்த வயதில் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்ற வினாவிற்கு, சேக்கிழார் பெருமான் கூறும் விடை இதுவே: சீராளத் தேவரை

> "வந்து வளர் மூவாண்டில் மயிர்வினை மங்கலம் செய்து
> தந்தையாரும் பயந்த தாயாரும் தனிச் சிறுவர்
> சிந்தை மலர் சொல் தெளிவில் செழும் கலைகள் பயிலத் தம்
> பந்தம் அற வந்தவரைப் பள்ளியில் இருத்தினார்."

சைவ மக்கள் பெற வேண்டிய கல்வி, சைவம் ஏற்றுப் போற்றும் வகையில் அமைதல் வேண்டும். உலகியற் கல்வியை முறையாகப் பயின்ற சைவர், தங்களுக்குரிய சரியை, கிரியை, யோகம் என்றுள்ள மார்க்கங்களில் ஈடுபடவேண்டும். சைவராகப் பிறந்தவர்கள் சைவராக ஒளிர வேண்டும்.

சைவமாம் சமயம்சார் ஊழ் பெறல் அரிது. அப்படியே பெற்றுவிட்டாலும் சைவராக வாழ்தல் அரிதினும் அரிது. நாமமது சைவர் எனக் கொண்டிங்கு வாழ்வார் பலரும் உலோகாயதர்களே. சைவ வாழ்வு சுலபமான வாழ்வு அன்று.

> பல்லூழிக் காலம் பயின்று அரனை அர்ச்சிக்கில்
>
> நல்லூழி சற்றே நகும். இதுவே உண்மை.

சர்வபரித் தியாகத்திற்குச் சமைவாக வாழ்வாரே சைவர். ஒழுக்கச் செல்வர்களே சைவர். நீதி வழுவா நெறிமுறையில் நின்று இயங்குவோரே சைவர். ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் பக்குவம் பெற்றோரே சைவர்.

ஒரு பற்றும் இல்லாதவர் அப்பர் அடிகள் என்று சிவனார் அறிவர். என்றாலும் உலகவர் இவ்வுண்மையை அறிதல் வேண்டும் என்பதற்காகவே அடிகள் உழவாரத் திருப்பணி புரியுமிடத்தில் செம்பொன் நவமணிகள் ஆகியவற்றை ஈசனார் குவித்து வைத்தார். அது கண்டு அடிகள் என்ன செய்தார்?

> செம்பொன்னும் நவமணியும் சேண் விளங்கி ஆங்கு எவையும்
> உம்பர் பிரான் திருமுன்றில் உருள் பருக்கையுடன் ஒக்க
> எம்பெருமான் வாகீசர் உழவாரத்தினில் ஏந்தி
> வம்பலர் மென் பூங்கமல வாவியினிற் புக எறிந்தார்.

புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபாடு இலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்மன் திருப்புகலூர் நாயனார் திருவருளால்
வில்லோடு நுதல் மடவார் விசும்பூடு வந்து இழிந்தார்.

அப்பொழுதும் அப்பர் அடிகள் 'சித்தநிலை திரியாது செய் பணியில் தலைநின்றார்.' ஏகனாகி இறைபணியே புரிந்தார்.

பெரிய புராணம் நமக்கு வழங்குகின்ற சமூகச் சிந்தனைகளில் தலையாய ஒன்று, 'சித்தநிலை திரியாது செய்பணியில் தலை நிற்றலே.' செயத்தக்க பணியும் சிவனார் உகப்பதாக, சிவனடியார் உகப்பதாக அமைதல் வேண்டும்.

சித்தநிலை திரியாது (absolutely undistracted), 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற மகா விரதத்தை நாளும் நாளும் நிறைவேற்றி வருவோரே சைவர் ஆவர்.

சமூகம் எங்ஙனம் செயல்புரிய வேண்டும் என்பதைச் சாத்திரம் நமக்குச் சாற்றுகிறது. நாம் வினைபுரிந்தே தீர வேண்டும். எவ்வகை வினை புரிந்தால் நாம் உறுதி கூட முடியும்? வினைகளை சாத்திரங்கள் இரண்டு வகைகளாக வகுக்கின்றன. அவை மெல்வினை, வல்வினை என்ப. இவை இரண்டுமே, சொல்லுமிடத்துச் சிவதன்மமே. இவ்விரண்டில் நம் மனம் பற்றிய ஒன்றில் சென்று சிவனார் திருவடிகளை அணைவதே வேத ஆகமக் குறிக்கோளாகும். சற்றே எளிதானதும், சாத்திர சம்மதமானதும் ஆகிய பணியில் தொடர்ந்து, படர்ந்து, நின்று இயங்குதல் மெல்வினை இயற்றுதல் எனப்படும்.

சிறுத்தொண்ட நாயனாரது செயல், சண்டீசப் பெருமானது செயல், அரிவாட்டாயரது செயல் மற்றும் இவர் போன்றோரது செயல் வல்வினை என்று போற்றப்படுகிறது. இவையிற்றை நாம் இயற்ற முடியாது. இயற்றவும் வேண்டாம். இயல்வது கரவாமல் பணி செய்தலே சாலும்.

சைவம் விதித்திருக்கும் தியாகங்களைக் கண்டு வெலவெலத்துப் போன வைணவ உரையாசிரியரது காழ்ப்புக்கு எல்லை இல்லை. நம்மாழ்வார் ஓர் அற்புதமான ஆழ்வார். வேதம் தமிழ் செய்த மாறன் குருகூர்ச் சடகோபன் என்று அவர் போற்றப்படுகிறார். வில்லிபுத்தூர் ஆழ்வார், அவரைச் சதுர்மறைப் புரோகிதர் என்று பரவுகிறார். அவர் அருளியது திருவாய்மொழி. வாய்மொழி என்பது வாசகம்.

திருவாய்மொழி என்றால் திருவாசகம் என்று பொருள்படுகிறது. ஆழ்வார் வாக்கு அப்பர் அடிகள் வாக்குப் போலவே ஒளிர்கிறது. அப்பர் அடிகள்,

"பரிதியானைப் பல் வேறு சமயங்கள்
கருதியானைக் கண்டார் மனம் மேவிய
பிரிதியானைப் பிறர் அறியாத தோர்
சுருதியானைக் கண்டீர் தொழற் பாலதே" என்று அருளினார்.

வேதம் தமிழ் செய்த மாறனாரும்,
"அவர் அவர் தமதம தறிவறி வகை வகை
அவர் அவர் இறையவர் என அடி அடைவர்கள்
அவர் அவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவர் அவர் வழி அடைய நின்றனரே" என்றே அருளினார்.

இதற்கு வரையப்பட்ட ஈடு வியாக்கியானம், சிவனார் மீதும், முருகப் பெருமான் மீதும் காழ்ப்பும், காய்மகாரமும் கொண்டு, "ப்ரஜையை அறுத்துத்தா, ஆட்டை அறுத்துத்தா என்று கேட்காத தெய்வம் விஷ்ணு" என்று கூறுகிறது. சிவத்தொண்டர் குடும்பத்தாரது தியாகத்தை இவ்வுரை இவ்வாறு பழித்தும், தெழித்தும், இழித்தும், பரிகசித்துப் பேசுகிறது. இவ்வுரை மேற்கொள்ளும் மிக மட்டமான உத்தியை ஆங்கிலத்தில் Trivialization என்பர். சைவம் போற்றும் தியாகத்தைச் சீரணிக்க முடியாத வைணவரின் வயிற்றெரிச்சலையே இது காட்டுகிறது.

பெரிய புராணம் சாற்றும் ஓர் உண்மையை மறத்தல் ஆகாது. எளியேனுக்குப் பெரிய புராண மகிமையை உணர்த்தியவர் சிவஸ்ரீ சுகப்பிரமம் இராமசாமி சாத்திரியார் என்பவர். இப்பெரியார் ஆண்டுதோறும் ஸ்ரீலங்காவிற்கு விஜயம் செய்து தமிழர் நலம் பெற வேள்வி புரிய உதவியவர். இப்பெரியார் சாற்றிய செய்தி இதுவே. "பெரிய புராணத்தில் அடியவரைச் சோதனை புரிய எழுந்தருளும் பரமேஸ்வரன், 'கேட்டான்' என்ற செய்தி வருமே தவிர, கேட்டுப் பெற்றதைக் கைக்கொண்டு போனான் என்ற வரலாறு வாராது." இம் மகா வாக்கியத்தை மறவாதீர்கள். பரமேச்வரனிடம் இல்லாத பொருள் உண்டா? நம்மிடம் ஒன்றைப் பெற்றுத்தான் அவன் நிறைவு உற வேண்டுமா? கைநிறையத் தின்பண்டங்களைப் பேரனிடம் தந்து விட்டு, பேரன் சுவைக்கும் தின்பண்டத்தை 'எனக்குக் கொஞ்சம் தா' என அன்பு மீதூரத் தாத்தா கேட்பாரே. அதுபோலத்தான், சென்று அடையாத் திருவுடையானான பரமேச்வரனது வேட்டலும் ஆகும்.

"நீ தந்த கரும்பிது;
நீ தந்த சுவையிது;
நினக்கே நிவேதனம் கதிரவா"

என்ற மனப் பக்குவம் சீவனிடத்தில் உள்ளதா என்பதனைச் சோதிக்கவே சிவன் வருகிறான். அடியார் பெற்றுள்ள பக்குவத்தை உலகறியச் செய்யவே பரமேட்டி ஆடி வரும் லீலை இது. சுகப்பிரமம் கூறுவார்: "அடியார்கள் நமக்கு ஆண்டவனை அறிமுகம் செய்து வைப்பர்; ஆண்டவனோ, நமக்கு அடியார்களை அறிமுகம் செய்து வைக்கவே எழுந்தருளுகிறான்." அடியார் செயலை அயலார் அறியார். சிவபிரான் உகக்கும் உறைவிடம் எது? அப்பர் அடிகள் அறைகின்றார். "... பிறர் ஒருவர் அறியா வண்ணம் பெம்மான் என்று எப்போதும் ஏத்தும் நெஞ்சில் செறிந்தானே ..."

தாம் செய்யும் தொண்டினைப் பிரகடனப்படுத்த மாட்டார் அடியார். அன்னாருக்கு உள்ள பக்குவம் பற்றிப் பிறர் அறியார். ஆகவே உணர்த்த உணரும் ஆன்மாக்களுக்கு உண்மையை உணர்த்தவே உமாமகேசன் உவப்புடன் எழுந்தருளுகிறான்.

மாது சொன்ன சூளால் இளமையைத் துறந்த திருநீலகண்டக் குயவனாரின் பெருமையை உலகறியச் செய்யவே சிவயோகியாக சிவன் எழுந்தருளுகிறான். இதை, என் தெய்வமாம் சேக்கிழார் பெருமான்,

"சீலமார் கொள்கை என்றும் திருந்து வேட்கோவர் தம்பால்
வாலிதாம் நிலைமை காட்ட முன்புபோல் மனையில் வந்தார்"

என்று அருளியுள்ளார்.

இல்லையே என்னாத இயற்பகையாரின் பெருமையை உலகறியச் செய்யவே, சிவனார், "தொண்டர் மறாத வண்ணமும் காட்டுவான் வந்தார்."

எந்நிலையிலும் மாஹேச்வர (அடியார்) பூஜை நிகழ்த்த வல்லவர் இளையான்குடி மாறநாயனார் என்பதை உலகறியச் செய்யவே எம்மிறை எழுந்தருளினார்.

"செல்வம் மேவிய நாளில் இச் செயல்
செய்வதன்றியும், மெய்யினால்
அல்லல் நல்குரவான போதிலும்
வல்லர் என்று அறிவிக்கவே

மல்லல் நீடிய செல்வம் மெல்ல மறைந்து
நாள் தொறும் மாறிவந்து
ஒல்லையில் வறுமைப் பதம் புக
உன்னினார் தில்லை மன்னினார்."

அடியார் பெருமையைப் பரவுவதே நம் பரமேட்டியின் தொழில். நம்மிறைவன் பக்த பக்திமான். ஆகவேதான், பெருஞ்சீலம் சிவணிய பத்திமை பூண்ட தில்லை மூவாயிரவர் சிறப்பைச் செவ்வனே சாற்றும் வகையில், "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடி எடுத்து உதவினான் பாடல் வல்லான் ஆன ஆடல் வல்லான்.

பெரிய புராணச் சமூகத்தை நாம் அறிந்து கொண்ட பிறகே, அப்புராணம் சாற்றும் சிந்தனைகள் பற்றி நம்மால் எண்ண முடியும். கவனியுங்கள். பெரிய புராணத்தை என் தெய்வமாம் சேக்கிழார் பெருமான் கி.பி. 1139 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் தேதி ஆதிரை நாள் அன்று அரங்கேற்றத் தொடங்கி, கி.பி.1140 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதி ஆதிரை நாள் அன்று நிறைவு செய்தார். பெரிய புராணத்தில் மூவர் முதலிகள் வரலாறுகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அப்பர் அடிகள் கி.பி.575இல் அவதரித்தார் என்று கணக்கிடலாம். அப்பெருமானும் சம்பந்த சுவாமிகளும் கி.பி.655 அல்லது 656இல் எம்மிறை திருவடிகளை அணைந்தனர் என்று கொள்ளலாம். சம்பந்தப் பெருமான் கி.பி.639 அல்லது 640இல் அவதாரம் செய்திருக்கிறார் எனலாம். சுந்தரமூர்த்தி நாயனாரின் காலம் 7 ஆம் நூற்றாண்டின் முடிவும் 8 ஆம் நூற்றாண்டின் தொடக்கமுமாம்.

தாம் வாழ்ந்த 500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தோர் வாழ்வுகளையும், அக்காலச் சமுதாயத்தையும் நம்பி ஆரூரர் பாடி அருளியுள்ளார். நமி நந்தி அடிகள், காரைக்கால் அம்மையார், திருமூலர், கண்ணப்பர் போன்றோர் காலத்தால் முற்பட்டவர்கள். இவர்களின் சரித்திரங்கள் பெரிய புராணத்தில் காணக் கிடக்கின்றன.

அப்பழைய காலச் சமுதாயம் எப்படி விளங்கிற்று? அக்காலத்தில் நாட்டில் நடைபெற்றது முடியாட்சியே. இந்தியாவிற்கே உரித்தான சாதிகள் சிறப்போடு விளங்கின. தெய்வச் சேக்கிழார், "வீதிகள் விழவின் ஆர்ப்பும் விரும்பினர் விருந்தின் ஆர்ப்பும் சாதிகள் நெறியில் தப்பா தனயரும் அனையில் தப்பா" என்று அருளியுள்ளார். பலவகையான சாதியினரை ஒன்றுபடுத்த ஓர் மந்திரம் இருந்தது. அதன்பேர் பஞ்சாக்ஷரம், திருவைந்தெழுத்து.

"நீதிய புள்ளும் மாவும் நிலத்திருப் புள்ளுமாவும்
ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணி வரத்தாம் அஞ்சும்."

அக்கால மக்கள், வியன் உலகு அனைத்தையும் அமுது என நுகரும் வேத வாழ்வினை அனுசரித்து வந்தனர்.

"மேகமும் களிறும் எங்கும், வேதமும் கிடையும் எங்கும்
யாகமும் சடங்கும் எங்கும், இன்பமும் மகிழ்வும் எங்கும்
யோகமும் தவமும் எங்கும் ஊசலும் மறுகும் எங்கும்
யோகமும் பொலிவும் எங்கும், புண்ணிய முனிவர் எங்கும்."

அந்நாளில் சாதிகள் நெறியில் தப்பாமல் நின்றன. இன்று சாதி ஒழிப்புப் பிரசாரம் கடுமையாக நடைபெற்று வருகிறது. சாதிகளை அழிக்க முடியுமா? இது பற்றி நான் பேச வரவில்லை. ஆனால் ஒரு செய்தியைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று சாதிகளை வளர்ப்பன அரசுகளும் அரசு நிறுவனங்களும், கல்விச் சாலைகளும் அன்ன பிறவுமே.

வேலை பெற மனுச் செய்தால், அம்மனுவில், மனுச் செய்வோன் இன்ன சாதி, இன்ன உட்பிரிவு என்று கூற வேண்டும். இதன் அடிப்படையில்தான் எங்கும் தேர்வு நிகழ்கின்றது. ஆக 'சாதிகளை வளர்ப்பார் யார்' என்பதை நீங்கள் கண்டு கொள்ளுங்கள்.

பெரிய புராணம் சாதிகளை ஒழிக்க வேண்டும் என்று கூறவில்லை. சாதிகளைக் கடக்க வேண்டும் என்பதே இப்புராணம் சாற்றும் மங்கலச் செய்தி. சாதிகள் உலகம் இயங்கப் பயன்படும். குலவிச்சை கல்லாமற் பாகம் படும். ஆனால் சாதி வெறி உலக அமைதியைக் குலைக்கும். சமய வெறி போல் சாதி வெறியும் கடுந் தீங்கு இழைக்கும். மணிவாசகர் பெருமான் அருளுவதாவது:

"சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லல் அறுத்து ஆட்கொண்டு
பேதை குணம் பிறர் உருவம் யான் எனது உரை மாய்த்து
கோதில் அமுது ஆனானை குலாவு தில்லை கண்டேனே."

சேக்கிழார் பெருமான் காட்டிய சமுதாயத்தில் சாதிகள் நெறி பிறழா. தீண்டத் தகாத சாதி என்று சொல்லப் பட்ட சாதியில் அவதரித்த நாயன்மார் மூவரை, தெய்வச் சேக்கிழார் ஐயர் என்றே கூறுகிறார். இம்மூவர் ஆவார்: கண்ணப்பர், நந்தனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர். காளத்தி மலை ஏறும் கண்ணப்பரை,

"நாணனும் அன்பும் முன்பு நளிர் வரை ஏறத் தாமும்
பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல் ஐயர்
நீள்நிலை மலையை ஏறி நேர்படச் செல்லும் ..."
நெறியாளர் என்று காட்டுகிறார் பிரபு சேக்கிழார்.

நந்தனாருக்கு நடராஜன் கட்டளையை அறிவிக்க வந்த தில்லை தீக்ஷிதர்கள்.

"ஐயரே! அம்பலவர் அருளால் இப்போது அணைந்தோம்
வெய்ய அழல் அமைத்து உமக்குத் தர வேண்டி"

என்று விண்ணப்பம் செய்கின்றனர். தீக்குள் விரலை என்ன, முழு மேனியையும் வைத்தால் முக்கண்ணனை எப்போதும் தீண்டும் இன்பத்தை, இத்தீண்டத்தகாதவர் பெறலாம் என்றுதானே பிஞ்சு மதி சூடிய பிஞ்ஞகன் காட்டி அருளியுள்ளான்.

தீண்டத் தகாத சாதியில் அவதரித்த திருநீலகண்ட யாழ்ப்பாணர், தம் மனைவியோடு, சம்பந்தப் பெருமானைத் தரிசிக்க வருகிறார். செய்தி கேட்ட ஆளுடைய பிள்ளையார் அத் திவ்விய தம்பதியை எதிர்கொள்ள வருகிறார். தெய்வச் சேக்கிழார் இதை இப்படி அருளுகிறார். "பெரும் பாணர் வரவறிந்து பிள்ளையார் எதிர்கொள்ள" பாணர் தம்பதியர் "வரும் பான்மை தரு வாழ்வு வந்து எய்த மகிழ் சிறந்தார்," அங்ஙனம் மகிழும் பாணரைப் பார்த்து, பிள்ளையார்: "ஐயர்! நீர் உள மகிழ இங்கு அணைந்த உறுதி உடையோம்" என்று கூறி அவரை வரவேற்கிறார். தம்முடன் திருப்பயணம் மேற்கொண்டு ஒழுகும் பாணர் தம்பதியருக்கு தங்குதற்கு இடம் அமைத்துத் தரும்படி நீலநக்கரை நோக்கி, "நீலகண்டப் பெரும்பாணர்க்கு இன்று தங்க ஓர் இடம் கொடுத்து அருளுவீர்" என்று பணிக்கின்றார். நீலநக்கரும் அத்தம்பதிகட்குத் தம் பதியில், "நடு மனை வேதியின் பாங்கர்" இடம் உதவுகிறார். ஹோம குண்டத்தின் பக்கத்திலே சகோட யாழ்த் தலைவர் தம் துணைவியாரோடு துயில்கிறார். ஆங்கு வேதியில் அறாத செந்தீ வலம் சுழிவுற்று ஓங்கி, முன்னையில் ஒரு படித்தன்றியே ஒளிர, நீலநக்கர் இன் களி மகிழ்வு எய்துகிறார். உலகியலில் சாதிகள் உண்டு. ஆன்ம இயலில் அவை கடக்கப்படும்.

பெரிய புராணம் பென்னம் பெரிய பயங்கரக் காட்சிகளைக் காட்டும். அவையிற்றைக் கண்ட நம்மில் பலர் விதிர்விதிர்த்துப் போவர். இவை சமூகத் தொடர்புடையவை. இவையிற்றில் ஓரிரண்டு காண்பம்.

கோட்புலி நாயனார் போர் புரியப் புறப்படுவதற்கு முன்பு, இறை அமுதுபடிக்கு என்று நெல்லைக் குவித்து, அதை யாரும் சொந்த உபயோகத்திற்குக் கொள்ளுதல் ஆகாது என்று ஆணை விதித்தார். இவ்வாணை திருவிரையாக்கலி என்று போற்றப்பெறும்.

“எந்தையார்க்கு அமுதுபடிக்கு ஏற்றிய நெல் இவை அழிக்கச் சிந்தை ஆற்றா நினைவார் திருவிரையாக் கலி” என்று வந்தனையால் உரைத்து அகன்றார். நிவேத்தியப் பொருள் இறைவனுக்கே உரியது. யாரும் அதைத் தீண்டல் ஆகாது. யூதர்கள் இதை ஊடீசுகூஷஹகூ என்பர். தீண்டிப் பயன்கொள்வார் பெரும் தண்டனைக்கு ஆளாவர்.

நாயனார் அகன்ற சில நாள்களுக்குப் பிறகு கொடும் பஞ்சம் வந்தது. தாங்கற்கரிய வற்கடம் அது. நாயனாரின் உறவினர், வேறு வழியில்லை என்று எண்ணி அவர் வைத்த நெல்லின் கூடு குலைத்தார். மீண்டு வந்த நாயனார் என்ன செய்வார் என்பதனை அவர் எண்ணிப் பார்க்கவில்லை. அவர் திரும்பு முனம் நல்ல காலம் வரும், மீளவும் நெல்லைக் கொடுத்து விடலாம் என்று நம்பினர். சிவன் சொத்து குல நாசம் என்பதை மறந்தனர்.

கோட்புலியார் ஊர் திரும்பியதும் செய்தி கேட்டுத் திகைத்துப் போனார். தம்முடைய பணியாளனான கோட்புலியிடம் அவர் இப்படிக் கூறினார்.

“பதி கொண்ட சுற்றத்தார்க்கு எல்லாம் பைந்துகில் நிதியம்” நான் தருவேன். அவர்களை அழைப்பாயாக.” எல்லோரும் வந்தனர். வந்தவர் அனைவரையும் அவர் தம் வாளால் வெட்டி வீழ்த்தினர்.

“தந்தையார் தாயார் மற்றுடன் பிறந்தார் தாரங்கள்
பந்தமார் சுற்றத்தார் பதியடியார் மதி யணியும்
எந்தையார் திருப்படி மற்றுண்ண இசைந்தார்களையும்
சிந்த வாள் கொடு துணித்தார் தீய வினைப் பவம் துணிப்பார்.”

ஒரு சிறு குழந்தை மட்டும் எஞ்சி நின்றது. பணியாளன் கோட்புலி சொன்னான். “இக்குழந்தை அந்நெல் விளைத்த சோறு உண்டிலது. இதைக் கொல்லாதே அருளல் வேண்டும்.” அப்போது நாயனார், “இக்குழந்தை அந்நெல்லுண்டாள் பால் உண்டது” என்று கூறி அக்குழந்தையை வீசி எறிந்து இரண்டு துண்டாக்கினார். நாயனாரது இச் செய்கையை நம்மால் சீரணிக்க முடியுமா?

ஏறத்தாழ 1,600 ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்ட தண்டனை பற்றி நாம் பேச முற்படும்போது, அந்நாளில் வழங்கி வந்த சட்டம் யாதென்று காண்டல் வேண்டும். 130 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து நாட்டுச் சட்டப்படி, 150க்கும் மேற்பட்ட குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இன்று கொலைக் குற்றத்திற்குக் கூட மரணதண்டனை விதித்தல் கூடாது என்று அந்நாட்டினர் குரல் கொடுக்கின்றனர்.

இப்போது நான் கிறித்துவ, யூத வேதமாகிய பழைய ஏற்பாட்டின் காலத்திற்கு உங்களை இட்டுச் செல்ல உள்ளேன்.

மோசஸ் என்பார்க்கு அடுத்த நிலையில் விளங்கியவர் ஜாஷுவா. மோசஸ் மாண்டதன் பின் இவரே தலைவர் ஆனார். இவர் ஜெரிகோ என்ற நகரைக் கைப்பற்ற வேண்டி வந்தது. அப்போது அவரது ஆண்டவர் அவரிடம் கூறியதாவது: "நான் கூறிய முறையில் சென்று அந்நகரைக் கைப்பற்று. ஆனால் ஒரு நிபந்தனை. அந்நகரில் கிடைக்கும் எப்பொருளையும் எவரும் தமக்கென்று கைக்கொள்ளல் ஆகாது. எல்லாப் பொருள்களும் ஆலயக் கருவூலத்தில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்." இறையருளால் ஜாஷுவா ஜெரிகோவைக் கைப்பற்றினார். ஆனால் அ-சன் (A-Chan) என்பான் சில பொருள்களைத் தனக்கென்று கையடக்கம் செய்து கொண்டான்.

'ஐ' என்னும் நகரைக் கைப்பற்ற எண்ணி, நோட்டம் பார்த்து வர அருமையான ஒற்றர்கள் சிலரை ஜாஷுவா அனுப்பினார். அவர்கள் அனைவரும் எதிரிகளால் கொல்லப்பட்டனர். மனம் ஒடிந்து போன ஜாஷுவா அலறினார், பதறினார், குலைந்து போனார். தம் ஆடையைக் கிழித்துக் கொண்டார். தரை மீது உருண்டு புரண்டார். கலங்கினார்; கலுழ்ந்தார்; தலைமீது மண்வாரித் தூவிக் கொண்டார். அந்நிலையில் அவரோடு ஆண்டவர் இப்படிப் பேசினார்: "கீழே உருண்டு புரளாதே. எழு. உன் மக்கள் பாவம் புரிந்தவர். அதற்கான தண்டனை வழங்கப்பட்டது. ஜெரிகோவில் கிடைத்த பொருள் அனைத்தும் கோயிற் பண்டாரத்தை அடையவில்லை. திருக்கோயில் சொத்து களவாடப்பட்டிருக்கிறது."

ஆண்டவர் இப்படிக் கூறவே ஜாஷுவா விசாரணை நடத்திக் குற்றவாளியான அ-சன் என்பானைக் கண்டுபிடித்தார். அவனுக்கு வழங்கப்பட்ட தண்டனை என்ன தெரியுமா? பழைய ஏற்பாடு கூறுவதைக் கேளுங்கள்: ஜாஷுவாவும், இஸ்ரேல் மக்களும் அ-சனைப்

பிடித்தனர். அவன் களவாடிய வெள்ளி, தங்கம், ஆடை ஆகியவை மீட்கப்பட்டன. அ-சன், அவனுடைய புத்திரர்கள், பெண்கள், அவனது காளைகள் பொதிசுமக்கும் கழுதைகள், ஆடுகள், அவனது கூடாரம் - அவன் உடைமை அனைத்தும் அ-சன் பள்ளத்தாக்கிற்கு கொண்டு வரப்பட்டன. கூடியிருந்த மக்கள் அ-சன் முதலியோரைக் கல்லால் அடித்து நொறுக்கினர்; பிறகு அவர்களை, தீ வைத்துக் கொளுத்தினர்.

இத்தண்டனையை யூதர்களும், கிறித்துவர்களும் இன்றளவும் குறை கூறவில்லை. அப்படியே ஏற்றுக் கொண்டனர். இச் சட்டம் போற்றப்பட்டது. இது அவர்களுக்கு வேத சம்மதமான ஏற்பாடு.

சைவத்தை நாம் புரிந்து கொள்ளுவோம். சைவ சித்தாந்தம் சாற்றும் அற்புதச் செய்தி இதுவே: 'எக்கிரமத்தினாலும் இறை செயல் அருளே என்றும், கோட்புலி புரிந்த கொலை சிவனாரால் ஏற்கப்பட்டது. இத் தண்டனை மூலம் குற்றவாளிகள் சுத்திகரிக்கப்பட்டனர். அதன் விளைவாக அவர்கள் பெற்ற பரிசு என்ன தெரியுமா? கூறுகிறேன். அனைவரையும் கொன்று தீர்த்த கோட்புலிக்கு இறைவனார் காட்சி தந்தார்.

> "அந்நிலையே சிவபெருமான் அன்பர் எதிர் வெளியே நின்று
> 'உன்னுடைய கைவாளால் உறுபாசம் அறுத்த கிளை
> பொன் உலகின் மேல் உலகம் புக்கணையப் புகழோய் நீ
> இந்நிலை நம்முடன் அணைக' என்றே எழுந்தருளினார்."

அடுத்து இயற்பகை நாயனார் சரிதைக்கு வருவோம். தூர்த்த அடியார் வேடத்தில் வந்த சிவபெருமான், நாயனாரின் மனைவியை வேட்டுப் பெற்றார். இது முறையா? ஒரு செய்தியை நினைவிற் கொள்ளுவோம். சிவபெருமானிடம் என்ன இல்லை? சிவனார் பூரணர்; பரிபூரணர்; சம்பூரணர். அவருக்குத் தேவைப்படும் பொருள் உண்டா? தேவையோடு கூடியிருப்பது தேவு ஆகுமா? சிவனார் காம தகனம் செய்த கண்ணுதல். அவர் பெயரை உச்சரித்தாலே காமம் நம்மைவிட்டுப் பெயர்த்து நீங்கும். ஆகவே சிவனாரின் லீலையை அவர் அருள் கொண்டே புரிந்து கொள்ள முடியும்.

இப்புராணத்தில் காணப்படும் இது போன்ற நிகழ்ச்சிகள் மேலை நாட்டு நன்னூல்களிலும் காணப்படும்.

> "... ... ... and that night
> In Gibeoh, when the hospitable door

Exposed a matron to avoid a worse rape" என்று துறக்க நீக்கக் காப்பியம் கூறும்.

வெஸ்ஸந்தர ஜாதகக் கதை இதுபோல் ஒரு நிகழ்ச்சியைக் கூறும். ஆனந்த குமாரசுவாமி அவர்கள் Buddha And The Gospel Of Buddha என்ற நூலில் (பக்கங்கள் 296-298) கூறியிருப்பதைப் பார்வையிடுங்கள். இலிங்க புராணமும் இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஒன்றைச் சித்திரிக்கிறது. இறைவன் லீலை அடியார் தியாகத்தை, தியாக உணர்ச்சியை உலகிற்குப் புலப்படுத்துகின்றது.

"மக்களும் மனைவியும், ஒக்கலும், திருவும்,
பொருள் என நினையாது உன் அருளினை நினைந்து"

என்பர் பட்டினத்துப் பிள்ளை.

"புரி குழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த பெரிய அன்பின் வர குணத் தேவர்" ஒரு மகா பக்தர் ஆவார்.

பெரிய புராணம் எம்போலியரைப் பற்றிப் பேச வரவில்லை. அதீதமான பக்திமான்களைப் பரவ வந்த பார காவியம் அது. இப் பெருமக்களாலே சமூகம் பெருமை உறும். இவர்களைப் போல் ஏனையோர் செயல்பட முடியாது. நம் அறிவெல்லைக்குள் இவர்கள் வாழ்வு அடங்கிவிடவில்லை. இவர்களை விமரிசனம் செய்ய நமக்கு அதிகாரம் கிடையாது.

இறையருளால், பெரிய புராணத்தை நான் முற்றுமாய் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து இருக்கிறேன். இரண்டாம் காண்ட மொழி பெயர்ப்புத் தொகுதியில் 'பெரிய புராணம் ஓத வல்லார் யார்?' என்பதைக் காட்டும் வகையில் ஒரு கட்டுரையும் வரைந்திருக்கிறேன். ஆங்கிலம் வல்லவர்கள் இப்பகுதியைப் படித்துப் பயன் பெறலாம்.

சிறுத்தொண்டர் அம்சத்தை விவிலியம் காட்டும் ஏப்ரஹாமிடத்தும், திருக்குரான் காட்டும் இபுராஹீமிடத்தும் காண முடியும்.

பலப் பல வகையான மக்களைக் கொண்டது ஒரு சமுதாயம். ஒவ்வொரு வகையினரும் ஒவ்வொரு வகையில் அவ்வச் சமுதாயத்தின் வேர்கள் ஆவர். பெரிய புராணச் சமூகம் குயவர் வாழ்வு பற்றியும், நுளையர்களைப் பற்றியும், அந்தணர்களைப் பற்றியும், வணிகர்களைப் பற்றியும் மிக அழகாகப் பேசும். மேலும் வேளாண்குடி மக்கள், ஆநிரை காத்து ஓம்பும் கோவலர், ஆதிசைவர், சிற்றரசர், பேரரசர், சேனாபதிகள்,

சான்றார், சரியை-கிரியை-யோக-ஞான மார்க்கங்களில் ஈடுபட்டிருப்போர், வேடர், செக்கார், புலவர், புரவலர், அமைச்சர், புறச்சமயிகள், மாமாத்திரர், வேள்வி புரிவோர், கோயிற் பணியாளர்கள்: இப்படிப் பலதிறப்பட்டார் சரிதைகளும் பெரிய புராணத்தில் குறிக்கப்பட்டுள்ளன. ஏகாலியர், பாணர், பாடினியர், பஞ்சமர், சூதர் முதலியோர் பற்றியும் பெரிய புராணம் பரக்கப் பேசும். எச்சாதியிலும், எக்குலத்திலும் அடியார் அவதரிக்கலாம். இதை வலியுறுத்துவது பெரியபுராணமே.

பெரிய புராணம் கயிலையில் தொடங்கிக் கயிலையில் நிறைவு பெறுகிறது.

புராணம் என்றால் என்ன? 'பூரணாத் புராணம்' என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எது பூரணமோ, சம்பூரணமோ, பரிபூரணமோ, அது புராணம். இந்த நோக்கில் பெரிய புராணத்தை விஞ்சக் கூடிய புராணம் ஈரேழு பதினான்கு உலகங்களிலும் இல்லை. இது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

காமதகனம் நடைபெற்ற கயிலையில் பன்னூறு ஆண்டுகள் தொண்டு புரிந்து வந்த ஆலால சுந்தரருக்கு காம எழுச்சி உண்டாகுமா? என்றாலும் அப்படி ஒரு நிகழ்ச்சி கண் இமைக்கும் நேரத்தில் நிகழ்ந்து விட்டது. எப்படி? ஏன்? தெய்வச்சேக்கிழார் அருளுகிறார்: மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத், தீதிலா திருத்தொண்டத் தொகை தரப் போதுவார், அனிந்திதை, கமலினி என்ற உமை சேடியர் மேல் மனம் போக்கினார். இது சிவலீலை. இல்லீலையே திருத்தொண்டத் தொகை, அந்தாதி, பெரிய புராணம் ஆகியவை அவதாரம் செய்யக் காரணமாயிற்று. தமக்கு உரிய பெண்டிருடனே சுந்தரர் வாழ்ந்து இல்லறம் நடத்தினார். பிற பெண்டிரை அவர் ஏறெடுத்தும் பார்த்ததில்லை. செங்கோல் அரசன் அருள் உரிமைச் சேனாதிபதியான கோட்புலியார், சுந்தரரிடம் "அடியேன் பெற்ற மக்கள் இவர்; அடிமையாகக் கொண்டருளி கடிசேர் மலர்த்தாள் தொழுதுய்யக் கருணை அளிக்க வேண்டும்" என்று வேண்டினார். அதற்கு நம்பி ஆரூரர், "தொடிசேர் தளிர்க்கை இவர் எனக்குத் தூய மக்கள்" என்று சாற்றியருளினார். மேலும் தம் பெயரைச் சுந்தரர், சிங்கடியப்பன் என்றும் வனப்பகை அப்பன் என்றும் தம் பாடல்களில் பதிவு செய்தார்.

சம்பந்தப் பெருமானால் உயிர்த்து எழுந்த பூம்பாவையை, சம்பந்தர் மணத்தல் வேண்டும் என்ற சிவநேசர் வேண்ட, "நீர் பெற்ற

பெண் விடத்தினால் மாண்டு போனாள்; என்னால் உயிர்ப்பிக்கப்பட்ட இப்பெண் என் மகள் ஆவாள்" என்று ஆளுடைய பிள்ளையார் அருளினார்.

மாது சொன்ன சூளால் திருநீலகண்டக் குயவனார் மட்டுமா இளமையைத் துறந்தார். அவர் மனைவியாரின் துறவு என்ன சாதாரணமாதா? இத்தம்பதியைக் கண்டு காமதகனம் செய்த கண்ணுதற் கடவுளே ஆச்சரியம் கொண்டார் என்று சொல்லத் தோன்றுகிறது. அவர்களைப் பார்த்துச் சிவனார், "வென்ற ஐம்புலனால் மீக்கீர்" என்றல்லவா விளித்து அருளினார். இப்படி ஓர் தம்பதியை உலகு பார்த்ததுண்டா?

தவற்றைக் கடிந்து ஒழுக்கத்தில் நிலைநின்ற இக்குயவர் சிவயோகியாரை விடச் சாலச் சிறந்தவர் என்றல்லவா தில்லைவாழ் அந்தணர் கருதினர். குயவனார் மீது வழக்கிட்டு, தில்லைவாழ் அந்தணர்கள் வந்திருந்த திருந்தவையில் வாதிட்ட சிவயோகியின் சொற்களைச் செவிமடுத்த அந்தணர்கள், சிவயோகியின் வாக்கை அப்படியே நம்பி விடாமல், குயவனாரைப் பார்த்து, "இப்புதியவர் ஏதோ சொல்லுகிறார். நிறையுடைய வேட்கோவரே, நடந்தது என்ன என்று நீர் மொழியும்" என்றல்லவா கூறினர்.

இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை என்பதை நிறுவியவர் இளையான்குடி மாற நாயனாரின் தர்மபத்தினி அல்லரோ?

சிவஞான போதம் கூறுவது என்ன? "மால் அற, நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே!" என்பது தானே. உயிர் போகும் நிலையிலும் 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' என்று நிறுவினாரே மெய்ப்பொருள் நாயனார்.

பெரிய புராணம் என்பது செயலாக்கம் பெற்ற சைவ சித்தாந்தமே. சித்தாந்த வாழ்வை வாழ்ந்து காட்டியவர் நாயன்மார்.

அரன் அடியார் அரனினும் மேம்பட்டவர் என்று சித்தாந்தம் செய்தவர் விறன்மிண்டர்.

குடும்பத்தோடு துலை புகுந்து கொடுத்த வாக்கைக் காப்பாற்றியவர் அமர் நீதியார்.

அடியார் உறும் தீமையைக் களைவதே தமது கடன் என்று காட்டியவர், பரசு பாணியராக விளங்கிய எறிபத்தர்.

திருநீறே அனைத்தும், எந்நிலையிலும் அது தொழற்பாலது என்று நிறுவித் தம் உயிரைத் தியாகம் செய்தவர் ஏனாதிநாதர்.

முக்கண்ணனுக்கே தம் ஒரு கண்ணை ஈந்தவர் கண்ணப்பர்.

இறைவனை இறைவன் தந்த கண்கொண்டு காண்டல் வேண்டும் என்பதே சாத்திரத்தின் சாரமான செய்தி. அடடா, பக்தனையும் பக்தன் தந்த கண் கொண்டு காண்டலே நேரிது என்றல்லவா கண்ணுதல் காட்டியருளினான். இதுவன்றோ காணும் உபகாரமும் காட்டும் உபகாரமும் ஆம்.

தாமும் தம் குடும்பத்தாரும் தொடர்ந்து பட்டினியால் கடும் வேதனை உற்றிருந்த வேளையிலும், தூய கைங்கரியத்தைத் தொடர்ந்து நடாத்தினார் குங்குலியக் கலய நாயனார்.

சவம் தாங்கும் மயானத்துச் சாம்பர் பூசும் சம்புவிற்குத் தம் மகளின் கூந்தலை அடியோடு அரிந்து, அம் மகளின் திருமணநாள் அன்று தந்தவர் மானக்கஞ்சாறர்.

இன்று சிவனாருக்கு அமுது படைக்க முடியாத நிலை வந்ததே என்று, அரிவாளை ஊட்டியில் பூட்டி அறுத்தெறியத் தலைப்பட்டாரே அரிவாட்டாயர்.

குழலில் பஞ்சாக்கரத்தைக் குழைத்து ஈசனாரையே சிலிர்க்கச் செய்தாரே ஆனாயர். இசைவிரும்பும் கூத்தனும், "இந்நின்ற நிலையே நம்பால் அணைவாய்" என்று அருள தாம் காலில் அணிந்திருந்த செருப்போடு சிவலோகம் சேர்ந்தாரே ஆனாயநாயனார்.

ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ் மணக்கும் மதுரையில் அவதரித்த மூர்த்தி நாயனார், தம்முடைய சந்தனச் சாந்து கைங்கரியத்திற்கு முட்டுப்பாடு வந்தபோது, 'தேய்க்கும் கை முட்டாது' என்று கூறி, வட்டம் திகழ் பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார் கட்டும் புறந்தோல் நரம்பு என்பு கரைந்து தேய. அது கண்டு பொறுக்காத சொக்கேசன் அவரை அக்கணமே குணப்படுத்தி, அவருடைய கை யாண்டும் எஞ்ஞான்றும் சந்தன மணம் வீசும்படி அருளினார்.

சுருக்கமாகச் சொல்லுகிறேன். நாயனார் என்பவர் சிவநெறி படர்ந்து தம் கொள்கையில் ஊன்றி நிற்பவர் ஆவார். தம் பணிக்கு முட்டுப்பாடு வரின், உயிர் தரியார். இதுவே நாயனாருக்கும் நமக்கும் உள்ள நெடுவாசி. கொள்கை என்று நாம் எதையும் கொள்ள

மாட்டோம். அப்படியே ஒன்றைக் கொண்டாலும், சாத்தியக் குறைவு நேருங்கால் நெகிழ விட்டு விடுவோம்.

பெருமான் சேக்கிழார் காட்டும் சமுதாயத்தில் எல்லோரும் சிவநெறியில் நிலைத்து நின்றனர் என்று கூற முடியாது. அனைவருக்கும் இந்நிலை சாத்தியமானது அன்று என்றாலும் அசாத்தியம் என்பதையும் சாதித்துக் காட்ட சிலர் இருந்தனர். இன்னமும் அவர் உளர்; என்றும் அப்படிப்பட்ட மகோன்னத மகா புருடர்கள் உளராவர். இவர்களே நாயன்மார்.

காலத்தால் முற்பட்ட மனுநீதிச் சோழர் வரலாறு பெரிய புராணத்தில் பேசப்படுகிறது. பெரும்பாலும் இந் நாட்டு மன்னர்கள் நீதிமான்களாகத் திகழ்ந்தனர். அரசாட்சி எப்போது சிறக்கும்? ராஜநீதி அறிந்த, உணர்ந்த மன்னன் ஆட்சியில் சிறக்கும். தெய்வச் சேக்கிழார் ஒரு முதல் அமைச்சராக விளங்கியவர், ராஜநீதி நன்கு அறிந்தவர். காமாந்தகர் என்பவர் வரைந்த ராஜநீதியை மன்னர்கள் போற்றி வந்தனர். வடமொழியில் அமைந்த இந்நூலை நன்கு பயின்றவர் தெய்வச் சேக்கிழார். அந்நூலின் உயிரான செய்தியை நம் சேக்கிழார் பெருமான் தமிழில் தந்திருக்கிறார். காமந்தகர் கூறியதாவது: "அரசனுக்குள்ள ஆசையாலும், அவனுடைய பரிசனத்தாலும், கள்வராலும், பகைவராலும், அரசனுக்குப் பிரியமானவர்களாலும் ஐந்து விதமான பயம் உண்டு. இவ்வைந்து வகை பயங்களைப் போக்கும் ஆட்சியே நல்லாட்சி."

இதையே தெய்வச் சேக்கிழார்:

"மாநிலம் காவலன் ஆவான் மன்னுயிர் காக்குங்காலை
தான் அதனுக்கு இடையூறு தன்னால், தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத் திறத்தால், கள்வரால், உயிர் தம்மால்
ஆன பயம் ஐந்தும் தீர்த்து அறம் காப்பான் அல்லனோ?"

இப்பாடலுக்கு விளக்கம் தேவையா? அருமந்த அரசாட்சி அரிதோ, மற்று எளிதோ தான்?

நாட்டு மக்கள் - ஆடவராயினும் சரி, பெண்டிராயினும் சரி –, நீதியில் நிலைத்து நிற்க வேண்டும். இதில் பெண்டிருக்கு உள்ள பொறுப்பு மிகப்பெரிது.

இவ்வுலகில் தர்மம் தழைப்பது பெண்களாலே. உத்தமப் பெண்கள் நாட்டின் நல்லுயிர் ஆவர். அந்த அந்த அடியாரும் நாயனார்

ஆம் பேறு பெற உதவியவர் அந்த அந்த நாயனாருக்கும் வாய்த்த மனைவியரே.

தமக்கென்று தனியாக சுகம் தேடுபவர் பெண் ஆகமாட்டார். தம் கணவனுக்கும், தம் மக்களுக்கும், சுற்றத்தார்களுக்கும் ஆவன புரிந்து வாழ்கின்ற பெண்மணிகளாலே இன்றும் தருமம் நிலைத்து நிற்கிறது.

பெரிய புராணம் காட்டும் நல்லறம் இல்லறமே. இவ்வில்லறம் எத்திறத்தது? தெரிந்து கொள்ள, பெரிய புராணத்தை நாட வேண்டும். இல்லாள் என்ற சொல்லுக்கு இணையான ஆண்பாற் சொல் இல்லை. அதே போல் வடமொழிச் சொல்லான கிருஹிணி என்ற சொல்லிற்கும் வடமொழியில் ஆண்பாற் சொல் இல்லை. புனிதவதியாருக்குத் திருமணம் நடைபெற உள்ளது. இல்லான் என்ற சொல்லோடு இணைந்து வரக் கூடிய மூன்று சொல் தொடர்கள் தெய்வச் சேக்கிழாரால் சிருட்டிக்கப் படுகின்றன. அவை இல்லாளன், இல் இறைவன், மனைப்பதி என்பன.

மனைவி எத்தகையவள்? இதற்கான விடை சிறுத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் பெருமானால் அருளப்பட்டிருக்கிறது. திருவெண்காட்டு நங்கையை என் தெய்வமாம் சேக்கிழார் பிரான் இப்படித் தரிசனமாக்கினார். இப்பெருமாட்டி, “பெருகு திரு மனையறத்தின் வேராகி” விளங்குகிறார்.

பத்தினி என்பவள் குடும்ப விருக்ஷத்தின் வேர். வேர் இல்லாமல் மரம் இல்லை. மரத்தின் உயிராக இருப்பது வேர். இந்த வேரின் இருப்பு வெளியில் தெரியாது. கட்டட மாட்சியைக் கண்டு வியப்போர், அஸ்திவாரத்தைக் காணமாட்டார்கள். ஆனால் அஸ்திவாரம் இல்லையேல் கட்டடம் இல்லை.

தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் கூறிய செய்தியை இங்கு கூறுகிறேன். “மனைவி என்பாள் சங்கீதத்திற்குச் சுருதி போல, சுருதி வாத்தியம் துருத்திக் கொண்டு, பாடுவோன் முன் அமையாது. இசைக் கலைஞனின் பின்னால் முறையாக ஒலிக்கும். சுருதி கலைந்தால் தெரியும் சேதி.”

பெண்களாலே சமூகம் செழிக்கும். மானக்கஞ்சாரர் புதல்வி - ஏயர்கோன் கலிக்காம நாயனார் மனைவி - இவரது பெயர் என்ன? நாம் அறியோம். ஆனால் இவரது சாதனை ஒரு நூறு நாயன்மாரின் சாதனைக்குச் சமமானது.

மானி என்னும் மங்கையர்க்கு அரசியின் அவதாரம் நிகழவில்லை என்றால் என்ன ஆகியிருக்கும்? மதுரை சமண் பட்டது போல் தமிழ்நாடு முழுதும் சமண்பட்டுப் போயிருக்கும். கோல் நெறி திருத்தி வாழும் குலச் சிறையாரும் மானியாரும் இணைந்து செயல்பட்டுச் சைவத்தைக் காத்தனர்.

திலகவதியார் அவதாரம் செய்யாவிடில், நமக்கு ஓர் அப்பர் அடிகள் கிடைத்திருக்க மாட்டார். இவரே அப்பர் பெருமானுக்கு ஈன்றாளுமாய், தந்தையுமாய், உடன் தோன்றியவராய்த் திகழ்ந்தார். இச்செய்தியை, வியப்பொடும் நயப்பொடும் அப்பர் அடிகள் இப்படி அருளியுள்ளார்.

"எம்மையார் இலை, யானும் உளேன் அலேன்
எம்மையாரும் இது செய்ய வல்லரே?
அம்மையார் எனக்கு என்று என்று அரற்றினோர்க்கு
அம்மையாரைத் தந்தார் ஆரூர் ஐயரே."

திலகவதியார் வாழ்வில், உலகியல் பார்வையில் ஏதேனும் சுகம் உண்டா? கணவராக வரவேண்டிய கலிப் பகையார், திருமணத்திற்கு முன்பே இறந்து போனார். அவர் இறப்பதற்கு முன்பே, தந்தையார் இறக்க, தாயும் உடன்கட்டை ஏறிவிட்டார். இந்நிலையில் கலிப்பகையார் மாண்ட செய்தி கேட்ட திலகவதியார் தம் உயிரைத் தியாகம் செய்யத் துணிந்தபோது, தம்பியார் பிரார்த்தனைக்கு உடன்பட்டு, தொடர்ந்து வாழ எண்ணி அருளினார். தம்பியாரோ, தமக்கையாரை நீத்து சமண் புகுந்தார். திலகவதியாருக்கு வாழ்வில் என்ன பிடிப்பு இருந்தது? ஒன்றே ஒன்று இருந்தது. அது தம்பியாரின் நல்வாழ்வே. புறச்சமயம் சார்ந்த தம்பியார் மீளவும் சைவஞ்சார்தல் வேண்டும். இதுவே அவர் பிரார்த்தனை. இதற்காகவே தவம் இயற்றி வந்தார். இத்தவம் சற்றேறக்குறைய 30 ஆண்டுகள் தொடர்ந்து நடந்தது. தினமும் சிவனாரிடம் அம்மையார் வைத்த வேண்டுகோள் இதுவே. "தம்பி மருள்நீக்கி மீளவும் சைவம் சார்தல் வேண்டும்." சிவன் அருளால், தாம் இயற்றிய தவத்தால், இதைச் சாதனை புரிந்தார். அது மட்டுமா? சைவ உலகின் தந்தை என்று போற்றற்குரிய நாவரசரை நமக்கு அவர் கொடையாகத் தந்தார்.

சமண் மாசு நீக்கிக் கணவரும் மதுரையும் சைவத்தில் தழைத்தல் வேண்டும் என்று பாடுபட்டவர் மங்கையர்க்கு அரசியார்.

கணவர் தற்கொலை செய்து கொண்டு விட்ட நிலையிலும், இல்லத்திற்கு எழுந்தருளிய சிவனடியாரை முறையாக வரவேற்றுப் போற்றியவர் ஒரு பெண்.

உடல் நாயகன் அஞ்சி ஒதுங்கிய நிலையில், உயிர் நாயகனான சிவனாரைச் சார்ந்து சர்வ பரித் தியாகத்தின் நிரந்தர அடையாளமாக வாழ்ந்து காட்டியவர் ஒரு பெண்.

"உன்னை விட உன் மனைவியே என்பால் அன்பில் மிக்கவள்" என்று நீலகண்டன் நீலநக்கருக்கு அறிவித்தான்.

இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை என்று நிறுவிக் காட்டியவர் இளையான்குடி மாற நாயனாரின் மனைவியார்.

தான் பசித்திருந்தாலும், தன் கணவரும், குழந்தைகளும், சுற்றத்தாரும் பசித்திருத்தல் ஆகாது என்று தாலியைக் கழற்றித் தந்தவர் ஓர் பெண்.

தம் பிள்ளை ஈசனார் மகனார் ஆயினார் என்று உணர்ந்து அப்பிள்ளையை வணங்கி மகிழ்ந்தவர் ஒரு பெண்மணியே.

மகன் இறந்துவிட்ட நிலையிலும், வந்த அடியாருக்கு உணவு படைத்தல் உடனே நிகழ வேண்டும் என்று செயல்பட்டவர் ஒரு பெண்.

தாம் பிறருக்கு வழங்கப் பட்ட நிலையில், மனைப்பதியின் வாக்கே மகேசன் வாக்கு என்று கருதியவர் ஒரு பெண்.

பெரிய புராணம் உத்தமிகளைப் போற்றும் புராணம். பெரிய புராண சமூகத் தீரர்கள் அதீதத்தில் ஆழ்ந்து பொலிந்தவர்கள்.

சேக்கிழார் பெருமானே நமக்குப் பெருமான்.

அவர் அருளிய பெரிய புராணமே நன்னூல்.

பெரிய புராணம் சிவனார் உற்ற நூல் வடிவம்.

அறுபான் மூவரையும் தம் அருட்கரத்தால் சிவபெருமான் அமுக்கிப் பிடிக்க, அதன் விளைவாக நமக்கு தரிசனமாகுபவர் சேக்கிழார் பெருமானே.

பெரிய புராணம் சிவனருள் பிரஸாதம்; தெய்வத்தமிழ் நிலையம்.

பதிஞானப் பண்டாரம்; உவமையிலாக் கலைஞானம்.
உணர்வரிய மெய்ஞ்ஞானம்; புராணங்களின் அரசு.
திருமுறைகளின் கிரீடம்; உயிர்த்து நிற்கும் சித்தாந்தம்.
ஆகமாந்தப் பீட பூமி; சைவ சமயசஞ்சீவி.
தெய்வ மாக்கதை; சைவ மாச் சரிதை.

கேட்போர் செவி வழியாக மதுரமாக நுழைந்து, அந்தக் கரணங்களைத் தூய்மை செய்து, ஆன்மாவிற்கு உறுதி பயக்கும் ஆரணப் பனுவல்.

ஓதுவாரையும், ஓதக் கேட்போரையும் களவு படாக் காலத்திற்கு இட்டுச் சென்று, சிவ சாயுஜ்ஜியம் சாதிக்கும் சங்கர மங்கள மந்திரம்.

மூல பண்டாரம் வழங்குகிறான், வந்து முந்துமினே.

சேக்கிழார் சென்னி தீண்டும் சிவன் சேவடி போற்றி, போற்றி.

17. பெரியபுராணப் பதிப்பு வரலாறு

பெரியபுராணத்தை முதன்முதலில் அச்சில்கண்ட பெருமை மழவை மகாலிங்கையரைச் சாரும். இவர் மதுரைக்குக் கிழக்கிலுள்ள மழவராயனேந்தல் என்னும் ஊரில் பிறந்தவர். வீரசைவ மரபினர். பெரியபுராணம் இவரால் நூதனமாகச் செய்யப்பட்ட உரையுடன் சரஸ்வதி விலாச அச்சுக்கூடத்தில் வீரணத்தோட்டம் கோவிந்த நாயகரால் அச்சிடுவிக்கப்பட்டு, சாலிவாகன சகம் பிலவங்க வருடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அச்சில் வந்த ஆண்டு 1845-1846 ஆகும். பெரியபுராணம் இரண்டு பகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. முதல் பகுதியில் ஆனாய நாயனார் புராணம் வரை பதிப்பிக்கப்பட்டுள்ளது. இப்பதிப்பு 1846இல் வெளிவந்தது. இரண்டாம் பகுதி பின்னர் வெளிவந்ததாகத் தெரிகிறது. இந்நூலுள் உரை செய்தவரைப் பாராட்டி வேதகிரி முதலியாரும், தாண்டவராயத் தம்பிரானும் சாற்றுக் கவிகள் பாடியுள்ளனர்.

இதைத்தொடர்ந்து காஞ்சீபுரம் சபாபதி முதலியார் பெரியபுராணத்தை இரு பகுதிகளாக வெளியிட்டார். முதல் பகுதி 'திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம்' என்னும் பெயருடன் 1859 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இரண்டாம் பகுதி 1862 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இவரது பதிப்பில் பெரிய புராணப் பாடல்கள் 4299 ஆக உள்ளன.

திருமயிலை சுப்பராய ஞானியாரின் பெரிய புராணப் பதிப்பு 1870இல் வெளிவந்தது. இவர் தருமபுர ஆதீனத்துடன் தொடர்பு கொண்டிருந்தவர் என்று அறியப்படுகிறது.

சிதம்பரம் பே.இராமலிங்கம் பிள்ளையின் பதிப்பு 1880 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இப்பதிப்பில் முந்தைய பதிப்புகளில் விடுபட்டிருந்த சில பாடல்கள் ஏட்டுச்சுவடிகளை ஒப்புநோக்கி, பின்னர் சேர்க்கப் பட்டுள்ளதாக பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் பதிப்பு அவர் மறைந்த பின்னர் அவருடைய மாணாக்கர் சதாசிவப் பிள்ளை முயற்சியால் 1884இல் வெளிவந்தது. இந்நூலில் நாவலர் அவர்கள் எழுதிய சூசனம் காரைக்காலம்மையார் புராணம் வரை மட்டுமே உள்ளது. நாவலர்

மறைந்து விட்டதால் அவருடைய சூசனம் நிறைவு பெறவில்லை. முது முனைவர் பண்டிதர் மு.கந்தையா அவர்கள் முயன்று நிறைவு செய்த சூசனம், மலேஷியா குவலாலம்பூர் சைவ சித்தாந்த நிலையம் 1993இல் வெளியிட்ட திருத்தொண்டர் புராணம் - மூலமும் சூசனமும் என்ற நூலில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

1888 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சதாசிவப் பிள்ளையே பெரியபுராண மூலத்தின் இரண்டாம் காண்டத்தை வெளியிட்டார். இதன் மூலபாடம் ஆறுமுக நாவலர் பரிசோதித்த சுவடிகளை அடி ஒற்றியதாகும். முதல் காண்டத்தில் எஞ்சியிருந்த படிகளை இரண்டாம் காண்டத்துடன் இணைத்து ஒரே நூலாக வாசகர்களுக்கு உதவும் வகையில் வெளியிடவும் செய்தார்.

நாவலரின் முதல் காண்டம் 1884இலும், இரண்டாம் காண்டம் 1888இலும் வெளிவந்த பின்னர் முழுப்புராணத்தின் மறு அச்சுப் பதிப்புகள் 1898, 1905, 1910, 1916, 1923, 1928, 1951, 1993 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்துள்ளன.

திருவண்ணாமலை ஆதீனம் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் பெரியபுராணத்தின் இரண்டாம் காண்டத்திற்கு உரையை முதலில் எழுதினார். இரண்டாம் காண்டத்தின் முதல் பகுதி 1885இல் பதிப்பிக்கப்பட்டது. இத் தொகுதியை சென்னை ஜீவரக்ஷாமிர்த அச்சகம் அச்சிட்டு வெளியிட்டது. இரண்டாம் காண்டத்தின் இரண்டாம் பகுதி 1898இல் வெளியானது. ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தின் 234ஆவது பாடல்வரை உரை எழுதியிருந்தார். பிறகு இறைவனடி சேர்ந்துவிட்டார். அதன்பின்னர் பொம்மபுரம் ஸ்ரீ சிவஞான பாலைய தேசிக சுவாமிகள் ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் இராமலிங்க சுவாமி இப்பணியைத் தொடர்ந்து ஏற்று உரையை எழுதி முடித்தார்.

ஆறுமுகத் தம்பிரானின் உரை தமிழ்ச் சைவ அடிப்படையில் அமைந்ததாகும். இவர் வேறுசில நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். திருமுறைகண்ட புராணம், திருத்தொண்டர் புராண சாரம், சேக்கிழார் நாயனார் புராணம், நம்பியாண்டார் நம்பியின் திருவந்தாதி ஆகியவற்றிற்கும் இவர் உரை எழுதியுள்ளார். ஆறுமுகத் தம்பிரானின் பெரியபுராணப் பதிப்பில் திருநாமக்கோவை, திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை, திருநட்சத்திரக்கோவை ஆகியவையும் இடம்பெற்றுள்ளன. இவருடைய தொகுதிகளில் பண்டைய சிறப்பை உணர்த்தும் அழகிய படங்களும் இடம் பெற்றுள்ளன.

சூ.சுப்பராயநாயகரின் பொழிப்புரையோடு கூடிய பெரியபுராணத்தின் முதற்காண்டம் 1893இல் பதிப்பிக்கப்பட்டது. இவர் சென்னை கிறித்துவக் கல்லூரியின் தமிழாசிரியர் ஆவார். இந்நூலை அச்சிட்டவர்கள் சென்னை, ஸ்டார் ஆப் இந்தியா அச்சகத்தார் ஆவர். நாயகர் பதிப்பித்த இரண்டாம் காண்டம் சைவ சமய ஆச்சாரியார்கள் பக்த ஜன சபையாரால் 1896இல் வெளியிடப்பட்டது.

1903ஆம் ஆண்டில் திருமயிலை செந்தில்வேலு முதலியார் அவர்களால் பெரியபுராண மூலம் திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிக மூர்த்திகள் அருளாணையின் வண்ணம் வெளியிடப்பட்டது. இப்பதிப்பின் ஒவ்வொரு புராண இறுதியிலும் புராண விளக்கம் முதலியவை தரப்பட்டுள்ளன.

திரு.வி.கலியாணசுந்தர முதலியாரின் பதிப்பு 1910ஆம் ஆண்டில் வெளியாயிற்று. இதில் பெரியபுராண மூலத்துடன் அரும்பதக் குறிப்புரையும் வசனமும் உள்ளன. இந்நூல் 850 பக்கங்களுக்கு மேல் உள்ளது. சென்னை, உமாபதி குருப்பிரகாச அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு மூன்று ரூபாய் விலைக்கு விற்கப்பட்டது. இதுமுதலில் 1907 முதல் 1910 வரை சஞ்சிகையாக, பகுதி பகுதியாக வெளியிடப்பட்டது. 1910இல் இப்பகுதிகள் முழு நூலுருவம் பெற்றன. இப்பதிப்பின் திருத்தப்பதிப்பு 1934இல் வெளிவந்தது. சென்னை, சேக்கிழார் ஆராய்ச்சி மையம் 1993இல் இந்நூலை மறுபதிப்பு செய்துள்ளது. பதிப்பாசிரியர் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்களாவார்.

காஞ்சீபுரம் ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள் பெரிபுராணத்துக்கு எழுதிய பொழிப்புரை, விசேடவுரை நான்கு பகுதிகளாக 1918 முதல் வெளிவந்தன. சென்னை கணேச அச்சகம் இதனை அச்சிட்டது. 1918இல் வெளிவந்தது தில்லைவாழ் அந்தணர் சருக்கம். இது மட்டுமே ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள் காலத்தில் வெளியிடப்பட்டது. அவருடைய மறைவுக்குப் பின்னர் மற்ற பகுதிகள் அவருடைய மைந்தர் கா.ஏகாம்பரம் பிள்ளையால் வெளியிடப்பட்டன. இலைமலிந்த சருக்கம் 1923இலும், திருமலைச் சருக்கம் 1924இலும், காரைக்காலம்மையார் புராணம் 1935இலும் வெளியாயின. இத்தொகுதிகளுடன் இணைப்பாக புராண சருக்க அகராதியும் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் பகுதிகளும் திருத்தொண்டத்தொகை உரைநடையும் இணைக்கப்பட்டுள்ளன.

பிள்ளை அவர்கள் திருஞானசம்பந்தர் புராணத்தின் முதல் 250 பாடல்களுக்கு வரைந்த உரை நூல் வடிவம் பெற்று வெளிவந்திருக்கிறது.

ஆலால சுந்தரம்பிள்ளை முதலில் தில்லைவாழ் அந்தணர் சருக்கத்தையே முதலாவதாகக் கொண்டுள்ளார். அவர் மைந்தர் கா.ஏகாம்பரம் பிள்ளை திருமலைச் சருக்கத்தை முதலாவதாகக் கொண்டுள்ளார்.

1934ஆம் ஆண்டில் சென்னை, சைவ சித்தாந்த மகா சமாஜம் பெரியபுராணத்தின் சிறந்த பதிப்பைக் கொண்டுவந்தது. இதில் மூலம் மட்டுமே இடம் பெற்றுள்ளது. முதன் முதலாக பாடல்களின் முதற்குறிப்பகராதி இதில் இடம்பெற்றுள்ளது. மு.இராகவையங்கார் தயாரித்த அரும்பொருள் அகராதி இந்நூலில் இடம்பெற்றிருப்பது இதனுடைய தனிச்சிறப்பாகும். கல்வெட்டுச் சான்றுகளை, சென்னை பல்கலைக்கழக, வரலாற்றுப் பேராசிரியர் க.அ.நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் வழங்கியுள்ளார்.

பெரியபுராண உரைப்பதிப்பில் இமாலய சாதனை படைத்தவர் சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார் ஆவார். இவருடைய உரைப்பதிப்பு, ஏழு தொகுதிகளில் வெளியாகியுள்ளது. 1937இல் முதல் தொகுதி வெளியாகியது. இதில் முதல் 550 பாடல்களுக்கான மூலமும், உரையும் உள்ளன. இது 1960, 1975 ஆகிய ஆண்டுகளில் மறுபதிப்புப் பெற்றுள்ளது. இரண்டாம் தொகுதி 1940ஆம் ஆண்டில் வெளியாயிற்று. இதில் பாடல் எண் 551 முதல் 1265 வரை உரை வரையப்பட்டுள்ளது. இத்தொகுதி 1968, 2001 ஆகிய ஆண்டுகளில் மறுபதிப்புப் பெற்றுள்ளது. மூன்றாம் தொகுதியின் முதல் பகுதி 1943இல் வெளியிடப்பட்டது. இதில் பாடல் எண் 1266 முதல் 1694 வரை உரை இடம்பெற்றுள்ளது. இத்தொகுதி 1965இலும் 1999இலும் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. மூன்றாம் தொகுதியின் இரண்டாம் பகுதி 1946இல் வெளியிடப்பட்டது. பாடல் எண் 1695முதல் 1898 வரை இதில் உரையுடன் இடம் பெற்றுள்ளன. இதுவும் மீள் பதிப்பை 1964, 1980 ஆகிய ஆண்டுகளில் கண்டது. நான்காம் தொகுதியில் பாடல்கள் 1899 முதல் 2530 வரை உரையுடன் உள்ளன. இத்தொகுதி 1949இல் வெளியிடப்பட்டு 1971இல் மீள் பதிப்பு செய்யப்பட்டுள்ளது. ஐந்தாம் தொகுதியில் பாடல்கள் 2531 முதல் 3154 வரை உரையுடன் தரப்பட்டுள்ளன. இத்தொகுதி 1950ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டு 1973இல் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆறாவது தொகுதி பாடல் எண் 3155 முதல் 3747 வரை உரையைக் கொண்டுள்ளது. இது 1953இல் பதிப்பிக்கப்பட்டு மீண்டும் 1969இல் மறு பதிப்புப் பெற்றுள்ளது. ஏழாம் தொகுதியில் பாடல் எண் 3748 முதல் 4281 வரை உரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இது 1954இல் பதிப்பிக்கப்பட்டு 1992இல் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.

சிவக்கவிமணியின் உரைச்சிறப்பை விவரிக்க ஒரு தனி நூலே வரையப்பட வேண்டும். இவருடைய உரையரங்கேற்றம் தில்லை ஆயிரக்கால் மண்டபத்தில் 1954 மே, 6,7 தேதிகளில் நடைபெற்றது. உரையாசிரியரும், உரை நூல்களும் யானைமீது ஏற்றப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட நிகழ்வு உரையாசிரியரின் சிறப்பை உணர்த்தும்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் பெரியபுராணத்தின் மூலத்தை மட்டும் 1950இல் வெளியிட்டது. இதன்பின்னர் குமரகுருபர சுவாமிகள் நினைவு பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி ஒன்றைத் தோற்றுவித்து அதனை மீள் பதிப்பு செய்து வருகிறது. இம் மீள்பதிப்புகள் 1964, 1970, 1974, 1982, 1991, 1995, 2002 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்துள்ளன. சி.கே.சுப்பிரமணிய முதலியார் எழுதிய பெரியபுராண வரலாறு என்னும் உரைநடைப் பகுதி இப்பதிப்புகளில் இடம் பெற்றுள்ளது.

திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1970ஆம் ஆண்டில் பெரிய புராணத்தைத் தன்னுடைய பொன்விழாப் பதிப்பாக வெளியிட்டது. இந்நூலுக்குத் 'திருத்தொண்டர்மாக்கதை' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1977இல் வெளிவந்துள்ளது.

சென்னை வர்த்தமானன் பதிப்பகம் 1990 ஆம் ஆண்டில் பெரியபுராணம் மூலத்தையும், பொழிப்புரையையும் ஆறு பகுதிகளாக வெளியிட்டது. இதற்குப் பொழிப்புரை வரைந்தவர் அ.மாணிக்கனார்.

சென்னை, திருமகள் நிலையம் மார்ச், 2004இல் பெரியபுராணம் என்கிற திருத்தொண்டர் புராணம் மூலமும் தெளிவுரையும் என்னும் பதிப்பை நான்கு தொகுதிகளில் வெளியிட்டது. இதன் பதிப்பாசிரியர் வ.த.இராம சுப்பிரமணியம் ஆவார்.

இவ்வாறு காலந்தோறும் பெரியபுராணப் பதிப்புகள் மீண்டும் மீண்டும் வெளியாகி வருகின்றன.

18. பெரியபுராண மொழிபெயர்ப்புகள்

திருத்தொண்டர் புராணத்துக்கு இணையான புராணம் வேறு மதங்களில் இல்லை. இதற்கு இணையான நூல் வேறு மொழிகளிலும் இல்லை. வடமொழியிலிருந்து, பல்வேறு புராணங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆனால் தமிழிலிருந்து வடமொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட பெருமை பெரியபுராணத்துக்கே உண்டு. இந்நூல் ஒன்றே வடமொழியில் மூன்று பெயர்ப்புகளுடன் ஒளிர்கின்றது. 'சிவரகசியம்' ஒன்பதாம் அம்சத்தில் பெரியபுராணத்தின் முழு மொழிபெயர்ப்பும் காணப்படுகிறது. 'அகஸ்திய பக்த விலாசம்' என்றும், 'சிவபக்தவிலாசம்' என்றும் வடமொழியில் பெரியபுராணத்தை மொழி பெயர்த்தமைந்த இந்நூலானது சிற்சில மாற்றங்களைக் காட்டுகிறது. இந்நூல் 1907இல் வெளிவந்துள்ளது. 'உபமன்யு பக்த விலாசம்' என்ற பெயரில் பெரியபுராணம் வடமொழியில் சீனிவாச கவி என்பவரால் பதினாறாம் நூற்றாண்டில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதனுடைய இரண்டாம் காண்டம் முதன் முதலில் 1913ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பெற்றது. முதல் காண்டத்தின் மொழிபெயர்ப்பு 1915ஆம் ஆண்டில் தனித்தொகுதியாக பதிப்பிக்கப்பெற்றது. இப்பதிப்பு சிறப்பாக அமைந்துள்ளது. இப்பதிப்பில் பொருத்தமான தேவாரப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. வடமொழியில் கூறப்பட்ட பெயர்களுக்கு நிகரான தமிழ்ப் பெயர்களும் கூறப்பெற்றுள்ளன.

உபமன்யு பக்தவிலாசம் பற்றிய கல்வெட்டு ஒன்று காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் கோயிலில் அமைந்திருக்கும் நடராஜர் ஆலயத்தின் கிழக்குச் சுவரில் கி.பி.1532இல் வெட்டப்பட்டுள்ளது. இம்மொழி பெயர்ப்பு நூலையும் 'சிவபக்த விலாசம்' என்றே குறிப்பிடுகின்றனர். விஜயநகரப் பேரரசரான கிருஷ்ண தேவராயருக்குப் பிறகு அரசுக் கட்டிலில் அமர்ந்த அச்சுதராயரே இம்மொழிபெயர்ப்பை, சீனிவாசகவி என்பார் மூலம் சாதித்திருக்கிறார். இக்கவிஞரின் அருஞ்செயலைப் போற்றி அச்சுதராயர் அவருக்கு மனையும் நிலமும் வழங்கியதை அக்கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது. இச்செய்தியை முனைவர் இரா.நாகசாமி தாம் வரைந்த 'பொய்யிலி மாலை' (1996) என்ற நூலில் பதிவு செய்திருக்கிறார்.

ஆங்கில மொழியில் பெரியபுராணத்தின் உரைநடைச் சுருக்கத்தை முதன்முதலில் வரைந்தவர் ஜே.எம். நல்லசாமிப் பிள்ளையவர்கள். 1924இல் இதன் முதல் பகுதியை அவருடைய மகன் ஜே.என். இராமநாதன் அவர்கள் தமிழ்ப்பல்கலைக்கழக நூற்பதிப்பு வரிசை எண்.4 என்பதாக வெளியிட்டார். சென்னை வெஸ்டர்ன் கம்பெனியால் அது அச்சிடப்பட்டது. ஜே.எம்.நல்லசாமிப் பிள்ளை அவர்கள் காலத்திலேயே வெளிவந்த இந்நூலில் 45 நாயன்மாரின் வரலாற்றுச் சுருக்கம் அடங்கியுள்ளது. இந்நூலின் விரிவான பதிப்பு ஜே.எம்.சோமசுந்தரம் அவர்களால் 1955இல் வெளியிடப்பட்டது. இந்நூலில் டாக்டர் ஜி.யு.போப் எழுதிய திருஞான சம்பந்தர், நம்பி ஆரூரர், சண்டேசுவர நாயனார் ஆகியோரின் வாழ்க்கை வரலாறும் இணைக்கப்பட்டுள்ளது. தாராசுரம் கோவிலில் இடம்பெற்றுள்ள பெரியபுராண சிற்பத் தொகுதிகளின் புகைப்படங்களும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

தஞ்சையைச் சேர்ந்த சார்பு நீதிபதி கே.எஸ்.ராமசாமி சாஸ்திரியார் அவர்களால் 1927இல் ‘சைவசமய ஆசாரியர்களின் வாழ்வு’ (Life of Saiva Samaya Achariyars) என்ற ஒரு சிறு நூல் வெளியிடப்பட்டது. அதில் சைவ நால்வரைப் பற்றிய வரலாறு உள்ளது. 1932இல் அவருடைய மற்றொரு தொகுதியில் மற்ற நாயன்மாரின் வாழ்க்கை வரலாறுகள் இடம் பெற்றுள்ளன. இந்நூல்களை மொழிபெயர்ப்பு நூல்கள் என்று சொல்ல முடியாவிட்டாலும், ஆங்கிலத்தில் வெளிவந்த பெரியபுராணச் சுருக்க நூல்கள் என்று கூறலாம்.

சுவாமி சிவானந்தர், ‘அறுபத்து மூன்று நாயன்மார் அடிகள்’ (Sixty three Nayanmar Saints) என்ற நூலை 1962இல் வெளியிட்டார். அது சில மீள் பதிப்புகளும் பெற்றது. இந்நூலில் அறுபத்து மூன்று நாயன்மாரின் வரலாறுகளும் இடம் பெற்றுள்ளன.

1970இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், யோகி சுத்தானந்த பாரதியாரின் ‘சைவத்தின் பேரிதிகாசம்’ (The Grand Epic of Saivism) என்ற நூலை வெளியிட்டது. இதுவும் பெரியபுராணச் சுருக்கப் பதிப்பே. 1988ஆம் ஆண்டில் ஜி.வன்மிகநாதன் பிள்ளை அவர்கள் பெரியபுராணத்தின் சுருக்கமான ஆங்கில மொழிபெயர்ப்பை சென்னை இராமகிருஷ்ண மடம் மூலம் வெளியிட்டார். இதில் பெரியபுராணத்தின் பல பாடல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இதில் பெரியபுராணம் புதிய அணுகுமுறையில் விவரிக்கப்பட்டுள்ளது.

இதே ஆண்டில் மு.அருணாசலம் அவர்கள் திருச்சிற்றம்பலம், காந்தி வித்தியாலயம் மூலமாக 'சைவ அடியார்கள்' (The Saiva Saints) என்ற ஆங்கில நூலை வெளியிட்டார். இந்நூலில் நாயன்மாரின் வரலாறுகள் கதைகளாகக் கூறப்பட்டுள்ளன.

டாக்டர் ஜி.யு.போப் அவர்களால் முன்னரே எழுதப்பட்ட பேயார், கண்ணப்பர், சண்டேஸ்வரர், சம்பந்தர், நம்பி ஆரூரர் வாழ்க்கை வரலாறுகள் தருமையாதீனத்தைச் சேர்ந்த அகில உலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தால் 'The Five Nayanmars' என்ற நூலாக 1987இல் வெளியிடப்பட்டது. இதன் பதிப்பாசிரியர் டி.என்.இராமச்சந்திரன்.

1987இல் பெரியபுராண புஷ்பாஞ்சலி (Periyapurana Pushpanjali) என்று ஒரு நூலை சென்னை நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ் வெளியிட்டனர். இந்நூலில் ஜே.எம்.நல்லசாமிப் பிள்ளை, ஜி.வன்மீகநாதன், ஜீ.யு.போப் ஆகியோரின் எழுத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

எஸ்.சாமிநாதன் என்பார் 1991இல் 'ஸ்ரீமத் பெரியபுராணம்' என்ற ஆங்கில நூலை சுருக்கப் பதிப்பாக வெளியிட்டார். இவர் குற்றாலம் மௌன-சுவாமி மடத்தில் துறவு பெற்றுத் தலைவரானார்.

திருவண்ணாமலையிலிருந்து ஸ்ரீ இராமநாராயணன் என்பவர் 1992இல் ஆர்.ரங்காச்சாரி என்பவரால் உரைநடையில் மொழிபெயர்க்கப்பட்ட பெரியபுராண ஆங்கில நூலை வெளியிட்டார். இதை மூலநூலின் முறையான மொழிபெயர்ப்பு என்று சொல்லலாம்.

பெரியபுராணத்தின் 4281 பாடல்களையும் ஆங்கிலத்தில் பாடல் வடிவில் மொழிபெயர்த்து முதன் முதலில் வெளியிட்டது தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகமாகும். இதனை மொழிபெயர்த்தவர் டி.என். இராமசந்திரன். இந்நூல் இரு பகுதிகளாக வெளிவந்தது. முதல் பகுதி 1990ஆம் ஆண்டிலும், இரண்டாம் பகுதி 1995ஆம் ஆண்டிலும் வெளிவந்தன. இம்மொழி பெயர்ப்பு நூலில் விரிவான முன்னுரைகளும், குறிப்புரைகளும் இடம் பெற்றுள்ளன.

சித்திரப்பெரியபுராணம், அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்களால் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் படங்களுடனும், கதைச்சுருக்கங்களுடன் 1991ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. படங்களை வரைந்தவர் ஓவியர் ராஜம் அவர்கள்.

தமிழ் மொழியில் டாக்டர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்களும், ஆங்கில மொழியில் டாக்டர்.பிரேமா நந்தகுமார் அவர்களும், இந்தி மொழியில் டாக்டர் ரவீந்தர்குமார் அவர்களும் எழுதியுள்ளனர். இந்நூலை மார்கன் ஏகாம்பரம் அவர்கள் தென்னாப்பிரிக்க தமிழர்களுக்காக மறுபதிப்பு செய்து வெளியிட்டுள்ளார். மார்கன் ஏகாம்பரம் குழந்தைகளுக்குப் பெரியபுராணம் என்று கே.எம். வெங்கட்ராமையா ஆங்கிலத்தில் எழுதிய நூலையும் தென்னாப்பிரிக்காவில் வெளியிட்டு உள்ளார்.

2000ஆம் ஆண்டில் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமம் வெளியிட்ட சிவபக்த விலாச ஆங்கில மொழிபெயர்ப்பு லிங்கேஸ்வர ராவ் என்பவரால் செய்யப்பட்டது.

பெரியபுராணத்தின் ஜெர்மன் மொழிபெயர்ப்பு டபிள்யூ.எச்.சோமரஸ் அவர்களால் வரையப்பெற்று 1925ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. (Sivaitisehe Heibigeulegenden -Periya Puraana and Tiruvathavuzar Purana ensdem Tamil utersetzi). மாணிக்கவாசகர் வரலாறும் இந்நூலில் இடம் பெற்றிருக்கிறது. இந்நூல் பெரியபுராணத்தின் சுருக்க வடிவம்.

கன்னடமொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பெரியபுராணத்தின் முதல் பகுதி 1974ஆம் ஆண்டிலும் இரண்டாம் பகுதி 1980ஆம் ஆண்டிலும் சென்னைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டன. இதன் மொழிபெயர்ப்பாளர் டாக்டர் ஒ.சங்கர்கேடிலயா அவர்கள். இவ்விரண்டு பகுதிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட பாடல்களின் எண்ணிக்கை 2369. மூன்றாம் பகுதி இன்னும் வெளிவரவில்லை. வர வாய்ப்பில்லை என்று தோன்றுகிறது.

மலாய் மொழியில் பெரியபுராணத்தின் சுருக்கப் பதிப்பு 2000ஆவது ஆண்டில் பர்சத்துவன் இந்து பல்கலைக்கழகத்தால் மலேசியாவில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலிலும் மாணிக்கவாசகர் வரலாறு சேர்க்கப்பட்டுள்ளது.

தெலுங்கு மொழியில் பெரியபுராணம், வித்துவான் வி.சூரியநாராயண சர்மா என்பவரால் 'ஸ்ரீ சிவ பக்த சரிதம்' என்னும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு உரைநடையாக 1962இல் வெளியிடப் பட்டுள்ளதாக மு.அருணாசலம் அவர்கள் குறிப்பிட்டு உள்ளார்கள்.

1995இல் பெரியபுராணம் டாக்டர் சுப்பராவ் என்பாரால் தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டது. இது மீண்டும் 2000 ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்நூல் ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஹைதராபாத்தில் அச்சடிக்கப்பட்டது.

கேரள மாநிலத்தின் முன்னாள் தலைமைச் செயலரான கே.பி.கே.மேனன் என்பவர் பெரியபுராணத்தை மலையாள மொழியில் மொழிபெயர்த்திருப்பதாக அறியப்படுகிறது.

தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் 1952இல் விருபாட்ச கவி என்பவர் மராத்தி மொழியில் சுருக்கி எழுதிய பெரியபுராணத்தை 'பக்தவிலாஸ்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. இந்நூலின் பதிப்பாசிரியர் சரஸ்வதிமகால் நூலகர் வி.சீனிவாசாச்சாரி ஆவார்.

உலகெங்கும் உள்ள மொழிகளில் பெரியபுராணம் மொழிபெயர்க்கப்பட்டால் சைவத்தின் பெருமையும், அறுபத்து மூன்று நாயன்மாரின் சிறப்பும் உலகத்தாரால் அறியப்படும் என்பது ஒருதலை. இதுவரை வந்துள்ள மொழிபெயர்ப்புகள், பெரியபுராணம் தொடர்பான பிறமொழிக் கட்டுரைகள் இன்ன பிறவற்றின் பட்டியல் கிடைக்கப்பெற்ற தகவல்களுடன் கீழே தரப்படுகிறது.

1. 1903 : Sekkilar, Zehme, S., Ditamulische sing pre dight Nebstec. anh: Legendeu des Grossen Purana, die in heidn. Singpredigten zum vortrage Kunmen. Eine missions studie, Leipzig: Verbagder.

2. 1908 : Evangelical Lutheran Mission, 32 pp. Nanda the Pariah Saint in Rambles in Vedanta, B. Rajam Iyer, Thompson.

3. 1908 : A short sketch of Saiva Saints by Kanchipruam Hayavadana Rao, Madras, T. Kandaswami Nayakar and Co., 15 pp.

4. 1910 : Saint Appar (Sri Vagisa Deva), A Sketch of His Life and Philosophy, Saiva Samaya Abhivriddhi Saba, Palamkotta, 48 pp.

5. 1914 : Sekkilar 12th c. A translation of the greatness of Piety in King Manu by Datlaji Ram.

6. 1920 : Biography of Tirugnanasambanthar by S.Sabaratnam.

7. 1923 : Nanda : The Pariah who overcame caste by A.Madhaviah, The Indian Publishing House Ltd., Madras, Pages V " 88.

8. 1923 : Texte Zur Gottes mystic des Hinduimus ... Jena : Diedesrichs : Z.V.(Die Religion des alten Indian. Contents : 1. Dic Hymnen des Manikkavasaga (Tiruvasaga) 2. Sivaitische Heibigenlegende (Periya Purana and Tiruvatavurar Purana) W.H. Schomerus.

9. 1924 : Kannappa and Markandeya by Thiruvengadathiyangar, M.A., L.T., C.Coomaraswamy Naidu & Sons, Madras,.

10. 1924 : St. Sekkizhar's Periya Puranam, Part I, by J.M. Nallaswami.

11. 1925 : Sivaitshe ta (Religiose Stimnander Volther) H.W.Schomerus, 305 pp.

12. 1928 : Tirumangai Alvvar and Tirugnanasambandar, Longmans.

13. 1928 : Nanda by G. Ratnam Pillai.

14. N.D. : Nanda the Pariah Saint by C.S. Rangaswamy Aiyangar.

15. 1931 : Indien und des Christentum, Schomerus, H.W., Teill, Bucchandbug des Weisenhauses, Halle.

16. 1934 : St. Appar - His Life and Teachings by M.S. Purnalingam Pillai.

17. 1945 : Lord Siva and His Worship, Swami Sivananda.

18. 1948 : Die Sivaitishe Fromming Keit der tamulischen Evanngoliteratur, Lehmann Arno, Heimats dieustrealag, Berlia, 79 pp.

19. 1952 : Karaikal Ammear, Patronne de la ville de Karaikal, By Lambeyat, Bertrand, Public par Caañemouga Rajacanabady, Joseph Power Press, Karaikal, 27 pp.

20. 1955 : A re-dition of St. Sekkizhar's Periya Puranam Part I, by J.M. Nallaswami (with additions), edited by J.M. Somasundaram.

21. 1956 : Karaikkalammaiyar, Geuvres iditees et traduites by Karavelan's (Leou Saint Jean), Introduction par J. Filliozat, Institute Francais d' Indologie, Pondicherry xiv " 53 pp.

22. 1961 : The Saints of India by T.M.P. Mahadevan.

23. 1962 : Sixty three Nayanmar Saints by Swami Sivananda.

24. 1963 : The Four Saiva Saints by K.M. Venkataramaiah.

25. 1967 : Life of Marranarr rendered with English verse by S.M. Ponniah, Kuala Lumpur, Malaysia Arul Neri Tamil Kazhakam.

26. 1970 : The Grand Epic of Tamil Saivism by Yogi Suddhananda Bharati.

27. 1971 : Women Saints of Tamil Nadu by M. Arunachalam.

28. 1977 : Harijan Saints of Tamil Nadu by M. Arunachalam.

29. 1977 : Saints of India by Anna.

30. 1977 : Glimpses of Tamil Culture based on Periya Puranam by Nambi Arooran.

31. 1979 : The Story of Saiva Saints by K.M. Venkataramaiah.

32. 1979 : A study of St. Tirugnanasambandar by Dr. P. Soundara.

33. 1982 : Pearls from Periya Puranam by Venkatesa Natarajan.

34. 1983 : Appar by G. Vanmikanathan.

35. 1984 : Karaikkal Ammaiyar by Dr. Sasivalli.

36. 1985 : Periyapuranam - Condensed English version by G.Vanmikanathan.

37. 1985 : The Saiva Saints by M. Arunachalam.

38. 1983 : Tirugnanasambandar (Philosophy and Religion) by Dr.P.S.Somasundaram.

39. 1986 : Saint Nandanaar by A.Padmanaban, I.A.S.

40. 1987 : G.U. Pope's Five Nayanmar, edited by T.N. Ramachandran, International Institute of Saiva Siddhanta Research, Dharmapuram.

41. 1987 : The vision of Siva in Periya Puranam by Ratna Ma Navaratnam.

42. 1988 : Slaves of the Lord by Vidhya Dehejia.

43. 1989 : Hinduism edited by O'Flaherty.

44. 1989 : Siva-bhakti by Dr. R. Nagaswami.

45. 1990 : Religion and Mysticism in the Periya Puranam by R.Gopalakrishnan.

46. 1990 : Pioneers of Mysitic Literature of South India by Dr.G.T.Gopalakrishnan Nayudu.

47. 1990 : St. Sekkizhar's Periya Puranam Part I - Translated by T.N.Ramachandran, Tamil University, Thanjavur.

48. 1995 : St.Sekkizhar's Periya Puranam Part II - Translated by T.N.Ramachandran, Tamil University, Thanjavur.

49. 1995 : Periya Puranam (Telugu Translation) M. Subba Rao, Hyderabad.

50. N.D. : Ten Tamil Saints by M.S. Purnalingam Pillai.

51. N.D. : Periya Puranam in Telugu, Sri Sivabhakta Charitamu, P.Suryanarayana Sarma, Madras.

52. N.D. : Periya Puranam in Kannada, A.S. Kedilaya, Sarana Sahitya, Bangalore.

53. 2002 : Sivabhaktavilasam, Lingeswara Rao, Sri Ramamasraman, Tiruvannamalai

19. பெரியபுராணப் பாடல்களில் இடைச்செருகல்கள்

காலத்தால் முற்பட்ட, பலராலும் போற்றப்பட்ட காவியங்களில் இடைச்செருகல்கள் காணப்படுகின்றன. வடமொழி இராமாயண பாரதங்களில் இடைச்செருகல்கள் பல உள என்பது ஆய்வாளர்களின் கருத்து. கம்பராமாயணத்தில் ஏராளமான இடைச்செருகல்கள் உண்டு. சுத்தப் பதிப்பாக கம்பராமாயணத்தைக் கொண்டு வந்த பெருமை மர்ரே எஸ்.ராஜம் அவர்களுக்கு உண்டு. அரும்பாடுபட்டு பல தமிழ் நூல்களின் மூலங்களைப் பிழையேதும் இல்லாமல் மிக அழகாகப் பதிப்பித்து வெளியிட்டார் இப்பெரியார். இவர் வெளியிட்ட கம்பராமாயணத்தில் ஒவ்வொரு காண்டத்தின் முடிவிலும் மிகைப்பாடல்கள் என்ற தலைப்பில் இடைச்செருகல்கள் அனுபந்த முறையில் காட்டப்பட்டிருக்கின்றன.

பெரியபுராண இடைச்செருகல்களை வெள்ளிப்பாட்டு என்று சுட்டும் மரபு ஒன்று உண்டு. வெள்ளிப் பாட்டு என்பது தருமபுர வெள்ளியம்பலத் தம்பிரான் இயற்றியவை என்பர். இது சரியான கருத்து அன்று. 1996இல் 'பொய்யிலி மாலை' என்ற ஓர் ஆராய்ச்சி நூல் வெளிவந்தது. இந்நூலை யாத்தவர் தொல்லியல் துறையில் ஒரு தனிச்சிறப்போடு விளங்கி வரும் பெரியவர் முனைவர் இரா.நாகசாமி அவர்கள்.

மேற்சொன்ன நூலில் "சம்ஸ்கிருதத்தில் பெரியபுராணம்' என்ற ஒரு பயனுள்ள ஆய்வுக்கட்டுரை இடம்பெற்றுள்ளது. இக்கட்டுரையில், காஞ்சி ஏகாம்பர நாதர் கோயிலில் கிழக்குச் சுவரில் "விஜயநகரப் பேரரசன் கிருஷ்ணதேவ ராயனுக்கு அடுத்து ஆண்ட அச்சுதராயன் காலத்தது (அக்கல்வெட்டு). கி.பி. 1532 ஆம் ஆண்டு ஸ்ரீநிவாச கவி என்பவர் இந்த 'சிவபக்த விலாஸம்' என்ற நூலை இயற்றியிருக்கிறார். அதற்காக அரசன் அவரைப் பாராட்டி மனையும் நிலமும் ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக்கு அருகில் கொடுத்துச் சிறப்பித்து இருக்கிறான். கல்வெட்டு சமுஸ்கிரதத்தில் உள்ளது ... இதனடியில் சிவபக்த விலாஸம் என்ற நூல் தமிழ் அறுபத்து மூவர் புராணத்தின் சமுஸ்கிரத மொழிபெயர்ப்பு என்ற செய்தி அடிக்கோடிட்டு அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்."

உபமந்யு பக்த விலாசம் என்ற வடமொழி நூல் பெரியபுராணத்தின் மொழிபெயர்ப்பே. "செய்யுளுக்குச் செய்யுள் மொழிபெயர்ப்பாக இருக்கிறது" என்று நாகசாமி அறுதியிட்டுக் கூறியுள்ளார். இதற்கான சில எடுத்துக்காட்டுகளையும் நாகசாமி தந்து உதவியுள்ளார். வடமொழி நூல் 1532 ஆம் ஆண்டு வெளியாயிற்று.

மாலிக் காபூர் படையெடுப்பால் தமிழ்நாடு, குறிப்பாகக் கோயில்கள் சீர்குலைக்கப்பட்டன. தமிழ்நாட்டு நாகரிகம், கலாச்சாரம் சின்னாபின்னமாக்கப்பட்டன. நெடுங்காலத்திற்குப் பிறகு தமிழ்நாட்டை ஆட்சிபுரியவந்த விஜயநகர மன்னர்கள் அரும்பாடுபட்டுப் பழைய பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றிற்குப் புத்துயிர் அளித்தனர். இம்மன்னர்களும் இவர்களுடைய பிரதிநிதிகளும் தமிழ் அறியாதவர்கள். அரிய தமிழ் நூல்களை வடமொழியிலும், தெலுங்கிலும் மொழிபெயர்க்க ஆவன செய்தனர். இக்கால கட்டத்தில்தான் பெரியபுராணம் வடமொழி ஆக்கம் பெற்றது.

பெரியபுராணத்தில் இடைச்செருகல்களாக நுழைந்து விட்ட பாடல்களை வெள்ளிப் பாடல் என்று கூறும் மரபு பற்றி மேலே குறிப்பிட்டிருக்கிறேன். வெள்ளிப் பாடல் என்றால் வெள்ளையான, உள்ளீடு அற்ற பாடல் என்று பொருள் கொள்ளல் வேண்டும். இடைச்செருகலை வெள்ளி அம்பலவாணர் தம்பிரான் மீது சுமத்துவது பெரிய பாவமாகும்.

நாகசாமி அவர்கள் தம் நூலில், இடைச்செருகல்கள் என்று காட்டப்படும் பாடல்களை வெள்ளி அம்பலவாணர் தம்பிரான் சுவாமி செய்திருக்கவே முடியாது என்று நிறுவியுள்ளார். 1532இல் வெளிவந்த, வடமொழியில் அமைந்த உபமந்யு பக்த விலாஸத்தில், இன்று இடைச்செருகல்கள் என்று காட்டப்பட்டுள்ள பாடல்களும் இடம்பெற்றிருக்கின்றன. தம்பிரான் சுவாமிகள் ஏறத்தாழ நூறு ஆண்டுகள், காலத்தால் பிற்பட்டவர். ஆகவே அவர்மீது பழி சுமத்துவது பெரும் பாவம். வெள்ளிப்பாடல் என்ற தொடருக்கு என்ன பொருள் என்று மேலே நான் கூறியிருப்பதை நினைவில் கொள்ளுங்கள்.

சேக்கிழார் பெருமான் காலத்திற்கு இருநூறு அல்லது முந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இடைச்செருகல்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். அதாவது இடைச்செருகல் 1532 ஆம் ஆண்டிற்கு முன்னமேயே நிகழ்ந்திருக்கின்றன. பழைய சுவடிகள் எல்லாவற்றிலும் இடைச்செருகல்கள் ஏறிவிட்டன என்று கூற முடியாது. சில சுவடிகளில் இடைச்செருகல்கள் காணப்படவில்லை.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை வசம் இருந்த சுவடியில் இடைச்செருகல்கள் இருந்திருக்கின்றன. குறிப்பாக, கண்ணப்ப நாயனார் புராணத்தில் இவை இடம்பெற்றிருந்தன. அப்பாடல்களும் சுவை கூடியவையாகவே மகாவித்துவானால் கருதப்பட்டது. ஆகவே அவர் ஒரு சமயம் கண்ணப்ப நாயனார் புராணத்தைப் பாடஞ் சொல்லுங்கால், அந்நேரம் படிக்கப்பட்ட சுவடியில் அப்பாடல்கள் இல்லாமற் போகவே, அவர் துணுக்குற்றார். இப்பாடல்கள் பற்றிய விவரம் இங்கே தருகிறேன்.

சிவக்கவிமணி அவர்கள் உரை எழுதிப் பதிப்பித்த பெரியபுராணத்தில் 806 ஆம் பாடல் பின்வருமாறு: "அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு" என்றும், "அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவு" என்றும் "அவனுடைய செயல் எல்லாம் நமக்கு இனியவாம்" என்றும் "அவனுடைய நிலை இவ்வாறு அறிநீ" என்று அருள் செய்வார்.

இப்பாடலை அடுத்து வரும் ஐந்து பாடல்கள் இடைச்செருகல்கள் என்று துணிந்த சிவக்கவிமணி, அவையிற்றை மூலபாடமாகச் சேர்க்கவில்லை. என்றாலும் இதற்காக புராண முடிவில் அநுபந்தம் ஒன்று சேர்த்திருக்கிறார். அதை அப்படியே கீழே தருகிறேன்.

"806 ஆம் பாட்டின் கீழ் சில பிரதிகளில் கீழ்வரும் இவ்வைந்து பாட்டுக்களும் காணப்படுகின்றன. இவை வெள்ளிப் பாடல்கள் என்னும் இடைச் செருகல்களாம் என்பது பல பெரியோர்களின் துணிபு. பல பிரதிகளில் இவை காணப்படவில்லை. ஆதலின் பல பதிப்புகளிலும் இவற்றைப் புராணத்திற் சேர்த்துப் பதிக்காமலே விடுத்தனர். தி.க.சுப்பராயச் செட்டியார் பதித்த கண்ணப்ப நாயனார் உரைப் பதிப்பில் இப்பாடல்களைச் சேர்க்காது முடித்து, இறுதியில் இவற்றை மூல பாடமாக மட்டும் 'வெள்ளிக் கவிகள்' என்று தலைப்பிட்டு அச்சிட்டு "இவ்வைந்து செய்யுள்களும் சேக்கிழார் நாயனார் அருளிய செய்யுள்கள் அல்லாமையால் அவற்றோடு சேர்க்காமலும் பொருள் எழுதாதும் விட்டனம்" என்று குறிப்பும் எழுதியுள்ளார். இவை பற்றி 806 உரையின் கீழ் எழுதிய அடிக்குறிப்பும் காண்க."

சிவக்கவிமணியின் அடிக்குறிப்பு பின்வருமாறு:

"806இன் கீழ் பொருப்பினில் வந்து என்பது முதலிய ஐந்து பாடல்கள் சில பிரதிகளில் காணப்படுகின்றன. பல பிரதிகளில் அவை

இல்லை. மேலும் கண்ணப்ப தேவர் திருமந்திரத்தில் நக்கீரர் அருளிய பொருள்களை அவை அப்படியே கைக்கொண்டு மொழிந்து கொண்டன என்பது பின்னர் அவ்வவற்றின் கீழ்த் தந்துள்ள பகுதிகளால் இனிது விளங்கும். சரித ஆதரவாகக் கொள்ளுதலன்றி இவ்வாறு பிறர் பொருளை எடுத்தாளுதல் சேக்கிழார் மரபன்று. அன்றியும் அவற்றின் பல பொருள்கள் முன்னர் உரைக்கப்பட்டன. ஓரிடத்துரைத்த உவமை முதலியவற்றை ஆசிரியர் கூறியது கூறல் என்னும் குற்றம் படப் பின்னும் கூறுகிறார். அல்லாமலும் அவற்றின் வாக்கும் போக்கும் ஆசிரியருடையவற்றினின்றும் வேறுபடுகின்றன. இன்னும் பார்க்கின் அவை இல்லாமலேயே சரிதம் தொடர்ந்து செல்லுகின்றதும் காணலாம். காஞ்சிபுரம் சபாபதி முதலியார், ஆறுமுகத் தம்பிரானார் முதலிய ஆசிரியர்கள் அவற்றை வெள்ளிப்பாடல்கள் என்றே கொண்டனர். இவை பற்றி எனது சேக்கிழார் என்ற நூலில் இடைச்செருகல்கள் என்ற பகுதியில் பொதுவாய் உரைத்தனவும், 212-213 ஆம் பக்கங்களிற் கண்டனவும் பார்க்க. இக்காரணங்களால் அவை இடைச்செருகல்கள் என்று அறியப்படுதலின் இங்கு பதிப்பிக்கப் படவில்லை. ஆயினும் சில பிரதிகளிற் காணப்படுவதால் இப்புராண இறுதியில் குறிப்புக்களுடன் பதிப்பிக்கப்பட்டன.''

அவ்வைந்து பாடல்களையும் கீழே தருகிறோம்.

"பொருப்பினில் வந்து அவன் செய்யும் பூசனைக்கு முன்பு என்மேல்
அருப்புறு மென் மலர் முன்னை யவை நீக்கு மாதலால்
விருப்புறும் அன்பெனும் வெள்ளக்கால் பெருகிற்று என் வீழ்ந்த
செருப்படி என் இளம் பருவச் சேயடியிற் சிறப்புடைத்தால்;
உருகிய அன்பு ஒழிவின்றி நிறைந்த அவன் உருவென்னும்
பெருகிய கொள்கல முகத்தில் பிறங்கி யினிது ஒழுகுதலான்
ஒரு முனிவன்செவி உமிழும் உயர்கங்கை முதல் தீர்த்தப்
பொரு புனலின் எனக்கவன் தன் வாயுமிழும் புனல் புனிதம்.

இம்மலை வந்து எனையடைந்த கானவன் தன் இயல்பாலே
மெய்ம்மலரும் அன்பு மேல் விரிந்தன போல் விழுதலால்
செம்மலர் மேல் அயனொடு மால் முதல் தேவர் வந்து புனை
எம்மலரும் அவன்தலையால் இருமலர்போல் எனக்கு ஒவ்வா.

வெய்ய கனற் பதங்கொள்ள வெந்துளதோ எனும் அன்பால்
நையும் மனத்து இனிமையினில் நையமிக மென்றிடலால்
செய்யு மறை வேள்வியோர் முன்புதரும் திருந்து அவியின்
எய்யும் வரிச் சிலையவன்தான் இட்ட ஊன் எனக்கு இனிய

மன் பெருமாமறை மொழிகள் மாமுனிவர் மகிழ்ந்து உரைக்கும்
இன்பமொழித் தோத்திரங்கள் மந்திரங்கள் யாவையினும்
முன்பிருந்து மற்றவன்தன் முகம் மலர அகம் நெகிழ
அன்பில் நினைந்து எனையல்லால் அறிவுறா மொழி நல்ல.''

கண்ணப்பரை வியந்து ஆதி சங்கர பகவத் பாதர் அருளிய சுலோகம் பின்வருமாறு:

''மார்கா வர்த்தித பாதுகா பசுபதேர் அங்கஸ்ய கூர்ச்சயதே
கண்டுசம்பு நிஷே சனம் புரரிபோர் திவ்யபிஷேகயதே
கிஞ்சித் பக்ஷித மாம்ஸசேஷ பேளம் நவ்யோப ஹாரயதே
பக்திஹ் கிம்ந கரோதி வனசரோ பக்தவதம் சயதே.''

இப்பாடலின் போந்த பொருள்: ''கானில் திரிந்து தேய்ந்த செருப்பு, பசுபதி தலைமேல் இட்ட தருப்பை ஆயிற்று; வேடன் உமிழ்ந்த நீர் திரிபுராந்தகருக்கு மஞ்சனம் ஆயிற்று; அவன் சுவைத்துப் பிறகு தந்த கையளவு மாமிசம், தூய புதுவதான நிவேத்தியம் ஆயிற்று. பக்தியால் ஆகாதது என்ன? வனசரன் பக்தருக்கெல்லாம் நாதன் ஆனான்.''

பஞ்சானனனுக்கு இப்படி ஒரு பஞ்சகம் உருவாகி பெரியபுராணத்தில் கோக்கப்பட்டு விட்டது.

சேக்கிழார் பெருமான் புராணம் பாடியவர் உமாபதியார். இவர் சந்தான குரவரா அல்லரா என்பது பற்றி இன்று சர்ச்சை எழுப்பப்பட்டிருக்கிறது. அது பற்றி இங்கு நான் ஏதும் கூறவில்லை. இவர் அருளிய புராணம் காலத்தால் தொன்மையானது. சேக்கிழார் பெருமான் அருளிய நூலில் இடைச்செருகல்கள் நுழைவதற்கு முன்பே வரையப்பட்டது என்பது தெளிவு. இப்புராணத்தில் வரும் ஒரு பாடல் பற்றி மட்டும் இப்போது காண்பம்.

''காண்டம் இரண்டா வகுத்துக் கதைப் பரப்பைத் தொகுத்து
கருதரிய சருக்கங்கள் பதின்மூன்று நிலையிட்டு
ஈண்டுரைத்த புராணத்தின் திருவிருத்த நாலா
யிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்றாக அமைத்துச்

சேண்டகைய திருத்தொண்டர் புராணமெனப் புராணத்
திருமுறைக்குத் திருநாமஞ் சீர்மைபெற அமைத்திட்டு
ஆண்டகைமை பெற எழுதி மைக்காப்புச் சாத்தி
அழகுபெற கவளிகையும் அமைத்து அதில் வைத்ததன் பின்"

என்ற இப்பாடல் திருத்தொண்டர் புராண வரலாறு, பாடல் 53 ஆகும்.

சிவக்கவிமணி அவர்களிடம் இருந்த ஏட்டுப்பிரதி ஒன்றின் இறுதியில் காணப்பட்ட வெண்பாவை அவர் வெளியிட்டிருக்கிறார். அவர் வரைந்த சேக்கிழார் என்னும் நூலின், பக்கம் 209இல் (1954, நான்காம் பதிப்பு) இப்பாடல் காட்டப்பட்டிருக்கிறது. அது வருமாறு:

"கொண்டலணி தண்டலைசூழ் குன்றைநகர்ச் சேக்கிழார்
ஒண்டரணி யோருய்ய வோதினார் - கொண்ட புகழ்
என்றதொரு நாலா யிரத்திரு நூற் றைம்பத்து
மூன்று திருவிருத்தமும்."

ஆக, சேக்கிழார் பெருமான் பாடிய பாடல்கள் 4,253 ஆகும். இன்று வெளிவரும் பதிப்புக்களில் 4,286 பாடல்கள் காணப்படுகின்றன. முப்பத்து மூன்று பாடல்கள் இடைச்செருகல்கள் என்று கொள்ளுவதில் தவறில்லை. ஆனால் அவை யாவை? என்று காண்பதில் சிரமம் உண்டு.

பெரியபுராணத்தில் ஊறித் திளைத்த சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியாரைத் தமிழுலகம் என்றும் போற்றவே செய்யும். அவர் எழுதிய பெரியபுராண உரையைக் காஞ்சி மகா சுவாமிகள், இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய பாடியம் என்று போற்றியுள்ளார். சிவக்கவிமணியைப் பின்பற்றி இடைச்செருகல்கள் இன்னின்ன பாடல்களாக இருக்கக்கூடும் என்று பார்ப்போம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெயரால் வெளிவந்த பெரியபுராணம் அவர் வாழ்நாளில் வெளியிடப்படவில்லை. 1884 ஆம் ஆண்டு சதாசிவப் பிள்ளையவர்கள் ஒரு பதிப்பை வெளியிட்டார். காரைக்கால் அம்மையார் புராணத்தோடு இப்பகுதி நிறைவு பெறுகிறது. எஞ்சிய பகுதி 1888இல் வெளிவந்தது. நாவலர் பெயரால் வெளிவந்த பெரியபுராணப் பதிப்பில் 4,286 பாடல்கள் காணப்படுகின்றன.

சிவக்கவிமணி அவர்கள் காலத்திலேயே அச்சுப் பதிப்புக்களிலே ஒரு பதிப்பில் காணப்பட்ட சில பாடல்கள் மற்றப் பதிப்பிற் காணப்படவில்லை. இதுவரை வெளிவந்திருக்கும் ஒவ்வொரு

பதிப்பையும் பரிசோதித்து பாடல்களின் தொகையைக் கணக்கிட்டு, பட்டியல் இடப்பட வேண்டும்.

இப்போது மிகைப் பாடல்கள் யாவை என்று அறிய முயலுவோம். சேக்கிழார் பெருமான் பாடல்களில் தோய்ந்துள்ளார். அவையிற்றின் பெருமையை நன்கு உணர்வார்கள். இலக்கண விளக்கப் பரம்பரையைச் சார்ந்த அன்பர் ஒருவர் விறன் மிண்ட நாயனாருக்குப் பெருமை சேர்க்க எண்ணி ஏறத்தாழ 16 பாடல்கள் பாடியிருந்தார். இவை சேக்கிழார் பெருமான் அருளிய பாடல்கள் என்று சிலரால் கருதப்பட்டன. நல்லவேளையாக இவை பெரியபுராணப் பதிப்புக்களில் இடம்பெறவில்லை.

சேக்கிழார் பெருமான் பல சொல்லக் காமுறார்; பயனில கூறமாட்டார். கூறியது கூறல் என்று குற்றத்திற்கு அவர் ஆளானது இல்லை. இத்தகு சிறப்புக்களை எல்லாம் சிவக்கவிமணி அவர்கள் தம்முடைய உரையில் அங்கங்கும் எடுத்துக்காட்டியுள்ளார். இவையிற்றைத் தொகுப்பதும் ஒரு பயனுள்ள பணி.

ஒரு பாட்டு இடைச்செருகலா என்பதை அது இடம்பெறும் சூழல், அது சாற்றும் செய்தி, அதனுடைய நடை முதலியவை காட்டி விடும்.

பெரியபுராணம் ‘உலகெலாம்’ என்று தொடங்கி ‘உலகெலாம்’ என்று முடிகிறது. இது இந்நூலுக்கு உரிய ஒரு பெருமை. ஆனால் இன்று பல பதிப்புக்களில் காணப்படும் கடைசிப்பாடல் இப்படி அமைந்துள்ளது.

“வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விளங்கிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறிதாந் தழைத்து ஓங்குக
தெய்வவெண் திருநீறு சிறக்கவே.”

காசிமடம் வெளியிடும் பதிப்புகளில் இப்பாடல் இடம்பெறவில்லை. இதுபோற்றற்குரியது.

ஏயர்கோன் கலிக்காமர் புராணத்தில்,

“ஆண்ட நம்பி யுடன்வந்த அன்பரோடும் புறத்தணைந்து
நீண்ட மதிட்கோபுரங் கடந்து நின்ற மாளிகை வீதியிற்போந்து
பூண்ட காதல் மிகுதியினால் புனை மங்கல தூரியம் ஒலிப்ப

ஈண்டு புகழ்க் கோட்புலியார் மாளிகையை எய்தி
யுள்ளணைந்தார்."

சாரமற்ற பாடலிது. இப்பாடலையும் காசிமடப் பதிப்பு நீக்கியிருக்கிறது.

கண்ணப்பர் புராணத்தில் ஐந்து பாடல்கள் மிகைப் பாடல்கள் என்பதை முன்னமேயே காட்டியுள்ளேன்.

கலிய நாயனார் புராணத்திலே,

"பீடுகெழும் பெருந்தெருவும் புத்தருடன் பீலி அமண்
வேடமுடை யவர் பொருள் போல் ஆகாச வெளிமறைக்கும்
ஆடுகொடி மணிநெடுமாளிகை நிரைகள் அலைகமுகின்
காடனைய கடல் படப்பை என விளங்குங் கவின் காட்டும்"

என்ற பாடல் இரண்டாம் பாடலாக வருகிறது. காசி மடப் பதிப்பிலும் இப்பாடல் இடம்பெறுகிறது. ஆறுமுகத் தம்பிரான், ஆறுமுக நாவலர் ஆகியோர் பதிப்புகளிலும் இப்பாடல் இடம்பெறுகிறது. என்றாலும் ஆறுமுகத் தம்பிரான், "இப்பாடல் பழைய ஏட்டுப் பிரதிகளிற் காணப் படாமையால் வெள்ளி பாடல் என்னும் வேற்றுப்பாடல் என்பார்" என்ற குறிப்பும் தந்திருக்கிறார். ஆகவே இது இடைச்செருகல் என்று கொள்ளத்தக்கது.

காஞ்சிபுரம் சபாபதி முதலியார், ஆறுமுகத்தம்பிரான் ஆகிய இருவரும், திருமலைச்சிறப்பு எட்டாவது பாடலாகிய "காதில் வெண் குழையோன்" என்ற பாட்டை, இது "வெள்ளி பாடல்" என்றே கூறியுள்ளார்கள். இப்பாடலும் இடைச்செருகலே.

ஆனாய நாயனார் புராணத்தில் 19 ஆவது "நீல மாமஞ்ஞை யோங்க" என வரும் பாடல் அந்த இடத்தில் அமைதி பெறவில்லை என்று சிவக்கவிமணி கருதுகிறார். அவர் கூறுவதாவது: "அதற்கு முன்னும் பின்னும் தொடர்ந்து கொச்சகக் கலிப்பாவினால் சரிதத்தைச் சொல்லிப் போகும் கதைப் போக்கிலே இந்த தன்னந் தனியனான அறுசீர் விருத்தம் பொருட் பொலிவும், பொருத்தமும், சொற்பொலிவுமின்றி உட்புகுந்து கொண்டதாகவே தோன்றுகின்றது. முத்தி பெறும் நாளிலே ஆனாய நாயனாரை அலங்கரித்து 'நிரை காக்க புறம் போதச்' செய்த சேக்கிழார் பெருமான் அவ்வாறு போதுகின்ற செலவின் இடையிலே இடத்திற்கு ஏற்காத இடைப்பிறவரலாய்க்

குறுக்கிட்டு கார்ப்பருவ நல்லாளை ஆடரங்கில் ஆட வைத்திருக்க மாட்டார் என்பதும் ஒரு கருத்து."

திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் (99, 100, 101) மூன்று பாடல்கள் மிகைப் பாடல்கள் எனக் கொள்ளத்தக்கவை. அவை வருமாறு:

"அருமறை அந்தணர் மன்னும் இருக்கையான
ஆகுதியின் புகை அடுத்த அம்பொன் மாடப்
பெரு மறுகு தொறும் வேள்விச் சாலை எங்கும்
பெறும் அவிப்பாகம் கொடுக்கும் பெற்றி மேலோர்
வருமுறைமை அழைக்கவிடு மந்திரம் எம்மருங்கும்
வானவர் நாயகர் திருவேகம்பர் முன்றில்
திருமலி பொற் கோபுரத்து நெருங்கும் எல்லாத்
தேவரையும் அணித்தாகக் கொண்டு செல்லும்"

"அரசர் குலப் பெருந்தெருவும் தெற்றி முற்றத்
தாயுதங்கள் பயிலும்வியல் இடமும் அங்கண்
புரசை மதக் கரிகளொடு புரவி ஏறும் பொற்புடைய
வீதிகளும் பொலிய எங்கும்
விரைசெய் நறுந் தொடையலங்கல் குமரர் செய்யும்
வியப்புறு செய் தொழில்கண்டு விஞ்சை விண்ணோர்
நிரை செறியும் விமானவூர்திகளின் மேலும்
நிலமிசையும் பல முறையும் நிரந்து நீங்கார்"

"வெயிலுமிழும் பன்மணிப் பூண்வணிக மாக்கள் விரவுநிதி
வளம்பெருக்கும் வெறுக்கை மிக்க
வயின் நிலவுமணிக்கடைமா நகர்கள் எல்லாம்
வனப்புடைய பொருட் குலங்கள் மலிதலாலே
கயிலைமலையார் கச்சி ஆலயங்கள் கம்பமு
மேவிய தன்மை கண்டு போற்றப்
பயிலுமுருப் பலகொண்டு நிதிக்கோன் தங்கப்
பயில் அளகா புரிவகுத்த பரிசு காட்டும்."

இங்கு எண்சீர் விருத்த யாப்பு பொருத்தமாக இல்லை என்பது சிவக்கவிமணியின் கருத்து. "அவிப்பாகம் கொடுக்கும்" என்ற தொடர் சேக்கிழார் நடைக்கு ஒத்தததாக அமையவில்லை. சொற்போக்கிலும் வேறுபாடு காணப்படுகிறது.

சண்டேசுர நாயனார் புராணம் பாடல் 4இல் "... மறையோர் ஈந்த அவியுணவின் பாக நுகர" என்று வருகிறது. கண்ணப்பர் புராணம் 147 ஆம் பாடலில் "எண்ணிறந்த கடவுளர்க்கு இடும் உணவு கொண்டு ஊட்டும்" என்று வருகிறது. இங்கெல்லாம் ஒளிரும் சொற்பொலிவு கண்கூடு.

மேலும் சில காரணங்களைக் காட்டி, மேலே காட்டப்பட்ட மூன்று பாடல்களும் சிறப்பாக அமையவில்லை என்பதைச் சிவக்கவிமணி நன்கு புலப்படுத்துகிறார்.

அடுத்து அப்பர் அடிகள் புராணத்தில் 356 ஆவது பாடல் இடைச்செருகலாகத் தோற்றுகிறது.

"வெங்கதிர்ப் பகல் அக்கடத்திடை வெய்ய வன்கதிர் கைபரந்து
எங்கு மிக்க பிளப்பில் நாகர்தம் எல்லை புக்கு எரிகின்றன
பொங்க முற்றெறு பாலை வெந்நிழல் புக்க சூழல் புகும்பகல்
செங்கதிர்க் கனல் போலும் அத்திசை திண்மை மெய்த்தவர்
நண்ணினார்."

இப்பாடல் அப்பர் பெருமானது கயிலை யாத்திரையின் இடையில் இடையீடு இட்டு வருணனையினால் குறுக்கிடக் காண்கிறோம் என்கிறார் சிவக்கவிமணி. சரிதப் போக்கிற்கு இக்குறுக்கீடு தேவையில்லை.

திருஞானசம்பந்தர் புராணத்தின் 466 ஆம் பாடல் மிகைப்பாடலாகத் தோற்றுகிறது. அப்பாடலைக் காண்பம்.

"மற்றவர்தம் பெருங்கேண்மை மகிழ்ந்து கொண்டு
மாலயனுக்கு அரியபிரான் மருவுதானம்
பற்பலவும் சென்று பணிந்தேத்திப் பாடிப் பரமர்
திருத்தொண்டர் குழாம் பாங்கின் எய்தக்
கற்றவர் வாழ் கடல் நாகைக் காரோணத்துக்
கண்ணுதலைக் கைதொழுது கலந்த ஓசைச்
சொற்றமிழ் மாலைகள் பாடிச் சிலநாள் வைகித் தொழுது
அகன்றார் தோணிபுரத் தோன்றலார் தாம்."

முன்பின் தொடர்பையும், யாப்பமைதி, பொருள் அமைதி, இட அமைதி ஆகியவற்றையும் வைத்துப் பார்க்கும் போது மேற்சொன்ன பாடல் சேக்கிழார் அடிகளது பாடலாகத் தோற்றவில்லை.

பெரியபுராணத்தின் பாடல் 705 "பாண்டி மாதேவியார்" என்று தொடங்குகிறது. இப்பாடலுக்கு முன்னும் பின்னும் உள்ள பல பாடல்கள் கலி நிலைத்துறைப் பாக்கள். இப்பாடல் மட்டும் காரணமில்லாமல் தனி எண்சீர் விருத்தமாக நிற்கின்றது. துருத்திக் கொண்டு நிற்கும் இப்பாடல் மிகைப் பாடலே.

இதுபோலவே, இப்புராணத்தில் "மால் பெருக்கும்" என்று தொடங்கும் 715 ஆம் பாடலும், "கருகிய மாசுடை யாக்கைத் தீயோர்" என்று தொடங்கும் 716 ஆம் பாடலும் ஐயப்பாடு உள்ளனவாய்த் தெரிகின்றன. இவைகளின் போக்கு வேறுபடுகின்றது. மேலும் 718 ஆம் பாடலிலே "கருத்தொழிந் துரை மறந்தனன் கௌரியர் தலைவன்" என்று அடிகள் அருளியிருப்பவும் 716 ஆம் பாட்டு, "ஒருவரும் இங்கு இரு மருங்கும் இராதுபோம் என்று அமணரைப் பார்த்து உரைத்து அரசன் உணர்வு சோர்ந்தான்" என்று அவ்வரசனுக்கு மீண்டும் உணர்வும் பேச்சும் சோர்வும் கொடுக்கின்றது.

மேலும் இதே புராணத்தில் 734, 735 ஆகிய பாடல்கள் நேரிதாகச் செல்லும் போக்கிலே குறுக்கிட்டு, அறுசீர் ஆசிரியமும், கொச்சகக் கலிப்பாவாகவும் மாறி மாறி வருகின்றன. மேலும்,

"ஒன்று நீர் அஞ்ச வேண்டா உணர்விலா அமணர் தம்மை
இன்று நீர் உவகை எய்த யாவரும் காண வாதில்
வென்று மீனவனை வெண்ணீறணிவிப்பன் விதியா லென்றார்"

என்று சம்பந்தர் அருளியதாகக் கூறப்படும் இப்பாட்டுக்குப் பின்னர்

"ஆவதும் அழிவு மெல்லாம் அவர் செயல் அமணராகும்
பாவ காரிகளை நோக்கும் பழுதுடன் நீங்க வெல்லச்
சேவுயர் கொடியினார்தந் திருவுள்ளம் அறிவேன் என்று
பூவலர்பொழில் சூழ்சண்பைப் புரவலர் போது கின்றார்" (736)

என்று வரும் பாடல் பொருள் செறிந்த பாடல். பாடல்களை ஒப்புநோக்கி உண்மை தெளிக.

மேலும் இதே புராணத்தில் 812 ஆவதாகக் காட்டப்படும் பாடல் "கார்கெழு பருவம்" என்று தொடங்குகிறது. இதுவும் அடிகள் அருளிய பாடல் அன்று என்று தெரிய வருகிறது. இப்பாடல் இல்லாமலேயே சரிதை தெளிவாகச் செல்லுகிறது.

இதுபோன்றே சரியாகச் சரிதை செல்லும் போது இடையே புகுந்து விட்ட ஒரு பாடலை ஏயர்கோன் கலிக்காம நாயனார்

புராணத்தில் காணலாம். இப்புராணத்தில் 122 ஆவது பாடல் "காட்டு நல் வேள்விக் கோலம்" என்று தொடங்குகிறது. படித்த அளவிலேயே இது இடைச்செருகல் என்ற எண்ணம் தோன்றுகிறது. எவ்விதப் பொருள் அமைதியும் இதன் பாலில்லை.

சாக்கிய நாயனார் புராணம் கொச்சகக் கலிப்பாவால் ஆயது. ஆனால் இப்புராணத்தின் ஏழாம் பாடல் - 'எல்லாம் உடைய ஈசனே' என்று தொடங்குவது -, தனி அறுசீர் விருத்தமாய் வந்து உள்ளே நுழைந்து விட்டது.

சேக்கிழார் அடிகள் தெய்வக் கவிஞர். அடிகள் ஒரு சரிதையையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ ஒருவகைச் செய்யுளால் பாடி அருளத் தொடங்கினால், வேறு பொருட் பேதம் வராத வரையில், அதே வகை யாப்பமைதியுள்ள செய்யுள்கள் கொண்டே தலைக்கட்டுவார். இது அடிகளது இயல்பு. இவ்வாறு சரிதை நடக்குங்கால் வேறுவகைச் செய்யுள் இடையில் வருமானால் அதனை ஆராய்ந்து தெளிய வேண்டிய கடப்பாடு நமக்கு உண்டு. இப்படி ஓர் அற்புதச் செய்தியை சிவக் கவிமணி அறிவித்துள்ளார். இப்பார்வை கொண்டே பெரியபுராணத்தை ஓத வேண்டும். இந்த அடிப்படையில், மூர்த்தி நாயனார் புராணத்தில், "பன்முறை உயிர்கள் எல்லாம்" என்று தொடங்கும் 29ஆவது பாடல், "இவ்வகை பலவு மெண்ணி" என்று தொடங்கும் 30 ஆவது பாடல் ஆகிய இவ்விரண்டும் அடிகளால் அருளப் பட்டவை அல்ல என்று துணியலாம்.

முழுநீறு பூசிய முனிவர் புராணத்தின் முதல் ஐந்து பாடல்களும் ஐயப்பாட்டிற்கு உரியன. அடிகள் பாடிய பாடலுக்கு இவை உரைபோல் அமைக்கப் பட்டிருக்கின்றன. முழுநீறு பூசிய முனிவர் புராணத்தில் திருநீற்றைப் பற்றிய வரலாறுகளை யெல்லாம் தொகுத்து விரித்து கூறுவது அவசியமாயின் இதைப் போலவே பத்தராய்ப் பணிவார் புராணத்தில் பத்தியைப் பற்றியும், பரமனையே பாடுவார் புராணத்தில் பாடல்களின் வகை விரிவுகளையும், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் புராணத்தில் சித்தம் பற்றியும், திருவாரூர்ப் பிறந்தார் புராணத்தில் திருவாரூர் வரலாறுகளையும், அங்குப் பிறந்த, பிறக்கும் உயிர்வகைகளைப் பற்றியும், திருமேனி தீண்டுவார் புராணத்தில் திருமேனிகளின் வகை தொகைகளைப் பற்றியும் விரித்துத் தெய்வச் சேக்கிழார் பேசியிருக்க வேண்டாமா? இப்படி ஒரு கேள்வியைச் சிவக்கவிமணி எழுப்புகிறார்.

பல சுவடிகளில் இப்போது அச்சுப் பதிப்பில் காணப்படுகின்ற பரமனையே பாடுவார் புராணத்துப் "புற மூன்றும் செற்றான்" என்ற முதற்பாட்டும், திருவாரூர்ப் பிறந்தார் புராணத்து "அருவாகி யுருவாகி" என்ற முதற்பாட்டும், பூசலார் நாயனார் புராணத்து "அன்றினார் புரமெரித்தார்" என்ற முதற்பாட்டும் இல்லை. இம்மூன்று பாட்டும் ஐயப்பாட்டிற்கு உரியவை.

பெரியபுராணத்தில் இடைச்செருகல்கள் காணப்படுகின்றன. எந்த எந்தக் காலத்தில் இவை நேர்ந்தன என்று கூற முடியவில்லை.

முடிவுரை

பெரியபுராணம் என்பது அநுபவ சைவ சித்தாந்தம் என்று தொடக்கத்திலேயே அறிவித்திருக்கிறேன். இது வகையில் தனி ஓர் ஆய்வு நூல் எழுதப்பட வேண்டும். இங்கு மிகச் சுருக்கமான விளக்கமே தரப்படுகின்றது.

மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தெய்வச் சேக்கிழாரை 'சகல ஆகம தெய்வச் சைவர்' என்று போற்றியுள்ளார். சகல சைவ ஆகமங்களிலும் துறை போகியவர் சேக்கிழார் பெருமான். இவர் வரைந்த பெரியபுராண அரங்கேற்றத்திற்குப் பிறகே மெய்கண்ட சாத்திரங்கள் தோன்றின. சிவஞானபோதத்தின் மணிமுடி சூத்திரமான பன்னிரெண்டாம் சூத்திரத்திற்கான விளக்கம் பெரியபுராணம். முறையாகச் சொன்னால் பெரியபுராண சாரத்தையே ஒரு சூத்திரமாக வடித்து இச்சூத்திரம் அமைக்கப் பட்டிருக்கிறது.

சாத்திர நூல்கள் வீடு காதலிப்போருக்காகவே அருளப்பட்டவை. பண்டை நல் தவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி செய்யும் தொண்டரைச் சிவபெருமானே தூய கதியில் சேர்ப்பான். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது கண்ணப்பர் சரித்திரம். பக்தியில் அவரை விஞ்சக் கூடிய அடியார் எவருமிலர். கண்ணப்பரைப் போற்றாத அடியார் எவருமிலர். ஆதிசங்கர பகவத் பாதர் கண்ணப்பரை எண்ணி எண்ணி நெகிழ்ந்து போகிறார். மணிவாசகரும் கண்ணப்பர் அன்புக்கு ஈடான அன்பு எங்கும் இல்லை என்ற கருத்துடையவர். கண்ணப்பர் புராணம் சைவ சித்தாந்தப் பெட்டகம். நுட்பமான சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இதில் மலிந்து கிடக்கின்றன.

காளத்தி மலையைத் தரிசித்த அளவில், திண்ணனாருக்கு இறை அனுபவம் உதயமாகிறது.

"செழுந் தண் பாற்கடல் திரைபுரைவித்து
உவாக் கடல் தெள்ளு நீர் உள்ளகந் ததும்ப
வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்"

கண்ணப்பரிடம் விளைந்தது. மேலும் "இன்பத்தேன் பாய்ந்து நிரம்பிய அற்புதமான அமுத தாரைகள்" கண்ணப்பர் எற்புத் துளை தோறும் ஊறித் ததும்பின. திண்ணனாரும், "நாணனே தோன்றும்

குன்றில் நண்ணுவோம்" என்று கூற, நாணனும், "காண நீ போதின் நல்ல காட்சியே காணும்" என்றான். இதுவே சிவஞானபோதத்தில் "காணும் கண்ணுக்குக் காட்டும் உளம் போல் காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்" என்று சூத்திர உருப்பெற்றது.

நாணன் கூறுவான்:

"சேணுயர் திருக்காளத்தி மலைமிசை எழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவர் இருப்பர், கும்பிடலாம் ..."

'கோணமில்' என்ற சொற்றொடர் இருவினை ஒப்பைச் சூசிப்பிக்கின்றது. ஒரு பால் கோடாது துலை ஒத்து நிற்கும். அப்போது கர்மசாமியம் உதிக்கும். இக்கோணமில் நிலை உற, திண்ணனார் மலை ஏறுகிறார். இவ்விருவினை பற்றிய குறிப்பு திண்ணனார் வேட்டை ஆடிய போதே சேக்கிழாரால் சுட்டப்பட்டது.

"பல துறைகளின் வெருவர லொடு பயில் வலையற நுழைமா
உலமொடு படர்வன தகையுற உறுசினமொடு கவர்நாய்
நிலவிய இருவினைவலையிடைநிலை சுழல்பவர் நெறிசேர்
புலனுறு மனனிடை செய்தபொறிகளின் அளவுளவே."

திண்ணனார் எப்படி மலை ஏறுகிறார்? அவரை உந்திச் செலுத்தியது எது? சேக்கிழார் பெருமான் அருளுகிறார்:

"முன்பு செய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன் பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
என்பு நெக்குருகி உள்ளத்தெழு பெரு வேட்கையோடும்"

"நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத்தாமும்
பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர்
நீள் நிலை மலையை ஏறிநேர்படச் செல்லும் போதில் ..."

தத்துவாதீதக் கடவுளை அடைய தத்துவங்களைக் கடத்தல் வேண்டும். இதையே சேக்கிழார் பெருமான், 'பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம் ஏறி' என்று குறிக்கின்றார்.

கண்ணப்பர் 'நீள் மலை ஏறி நேர்படச்' சென்றார். இங்கு அமைந்த சொல்லாட்சி அற்புதமானது, அதி அற்புதமானது. 'வல்வினை இன்றே' என்ற நிலை அடையப்பட்ட போது அனைத்தும் நேர்பட நடக்கும்.

“கருத்தனாய்ப் பாட மாட்டேன் காம்பன தோளி பங்கா
ஒருத்தரால் அறிய ஒண்ணாத் திருவுடைய சோதி
திருத்தமாந் தில்லை தன்னுள் திகழ்ந்த சிற்றம்பலத்தே
நிருத்தம் நான் காண வேண்டி நேர்பட வந்தவாறே”

என்பது வாகீச வேதம்.

“தெளிவு குருவின் திருமேனி காண்டல்” என்பர் திருமூலர். தெளிவு என்பது நிச்சய புத்தி. ஏகனாகி இறைபணி நிற்பார்க்கு முதற்கண் வேண்டப்படுவது தெளிவு. சிவனாரைத் தரிசிக்க விழைகிறார் திண்ணனார். அந்த நிலையிலேயே தெளிவு அவரை நாடி வருகிறது. சிவனாரும் “தெளிவு பெற்ற மதியினாய் வா, வா, வா” என்று அவரை வரவேற்கிறார். கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடுதல் என்பதே விதிக்கப்பட்ட முறை. உண்மையில், காளத்தி மலையின் சாரலைத் திண்ணனார் எய்த வரும்போதே தெளிவு பெற்று விட்டார்.

“அளிமிடை கரை சூழ் சோலை அலர்கள் கொண்டு அணைந்த
ஆற்றின்
தெளிபுனல் இழிந்து சிந்தை தெளிவுறும் திண்ணனார் தாம்
களிவரு மகிழ்ச்சி பொங்கக் காளத்தி கண்டு கொண்டு
குளிர்வரு நதி ஊடு ஏகிக் குலவரைச் சாரல் சேர்ந்தார்.”

திண்ணனார் காளத்தி அப்பரைக் காணச் சென்ற காலம் உச்சிக் காலம். பன்னிற ஒளி காட்டும் படிகம் தன்னிறம் மட்டுமே காட்டுங் காலம். இருவினை ஒப்புக்கான காலம்.

“கதிரவன் உச்சி நண்ணக் கடவுள் மால் வரையின் உச்சி
அதிர்தரும் ஓசை ஐந்தும் ஆர்கலி முழக்கங் காட்ட”

என்று இதனைச் சேக்கிழார் பெருமான் வருணிக்கின்றார். துலை ஒத்து நிற்குங் காலமே உச்சிக்காலம், “பொன்னும் மெய்ப்பொருளும்” என்று வரும் சுந்தரர் பதிகத்தில், நம்பி ஆரூரர் சிவனை “உச்சிப் போதன்” என்றே போற்றுகிறார். இவ்வுச்சி வேளையில் “அதிர்தரும் ஓசை ஐந்தும்” கேட்கப்படுகின்றது. இத்தொடரால் திருவைந்தெழுத்து உபதேசம் சுட்டப்படுகிறது. திண்ணனார் ‘சிவாயநம’ எனப்பெற்றார். முன்பு திண்ணனார் விளைத்த தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான அன்பினைத் தோற்றுவிக்க உள்ளது. அருள்நந்தியார் சொற்களைக் கொண்டு நாம் வருணிக்கத் தலைப்படுவோம். கண்ணப்பர், பண்டை

நல் தவத்தால் தோன்றி பரமனைப் பத்தி செய்யும் தொண்டர். அவர் படர வேண்டிய தூநெறியை சிவனாரே வகுத்துக் காட்டுவர்; கூடவே அழைத்தும் செல்லுவர்.

திண்ணனார் பெற்ற இருவினை ஒப்பு, மலபரிபாகம் ஆகியவை சிவலீலையில் நிகழ்த்தப்பெற்றன. இனி அவருக்கு நிகழவுள்ள சத்தி நிபாதம் பற்றிக் காண்பம்.

"திங்கண்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருள்திரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டு அகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொலிவில் அன்பு உருவம் ஆனார்."

இப்படி ஒரு தெய்விக வேதகம் நிகழ்ந்தது. அதாவது, திண்ணனார் காளத்தி அப்பரைக் காண்பதற்கு முன்னமேயே, காளத்தி அப்பர் தம் அருள் திருப்பார்வையைத் திண்ணனார் மீது பதித்து விட்டனர். சக்ஷு தீக்ஷை நடந்தேறி விட்டது. இதனால் திண்ணனாரின் பவச் சார்பு பெயர்ந்து நீங்கி விட்டது. மலமாயை தன்னொடு வல்வினையும் ஒழிந்தன. சிவஞான போத உதாரண வெண்பா (75), கூறுவது இதுவே: "பரன் உணர்வினால் உணரும் மெய்த்தவரை மேவா வினை." திண்ணனார் அன்பு உருவம் ஆனார். தெய்வச் சேக்கிழாரின் இவ்வன்பு உருவ வருணனை முற்றுமாகத் திருவாசகத்தைத் தழுவுகின்றது.

"நெடிது போது உணர்த்து நின்று நிறைந்தெழு மயிர்க்கால் தோறும்

வடிவெலாம் புளகம் பொங்கமலர்க் கண்ணீர் அருவி பாய
'அடியனேற்கு இவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ' என்று
படியிலாப் பரிவு தானோர் படிவமாம் பரிசு தோன்ற ..."

விளங்குகிறார் திண்ணனார்.

"வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்"

என்கின்றது திருவாசகம். மேலும்,

"என்பு நைந்து உருகி நெக்கு நெக்கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாத என்று அரற்றி

உரை தடுமாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண்களிகூர நுண்துளி அரும்பச்

சாயா அன்பினில் "தழைப்பவர்" ஆகினார் திண்ணப்பர். "அடியனேற்கு இவர்தாம் இங்கு அகப்பட்டார் அச்சோ" என்று அவர் அரற்றுகிறார். அடடா, திண்ணப்பர் பெற்ற பேற்றினை யார் பெறுவார் அச்சோவே!

இறைவனை வாரிக் கொண்டு விழுங்கினேன் என்றார் நம்மாழ்வார். திருமூலரோ,

"அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருவ இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே" என்றனர்.

இத்தகு பேறே திண்ணனாரும் பெற்றனர். காளத்தி அப்பரைக் கண்ட அக்கணம் தொட்டு, அவர் ஏகனாகி இறைபணி நின்றனர். அல் உறங்கார் பகல் வேட்டையாடுவார். வேட்டையாட வந்த திண்ணனார் சிவானந்தத் தேட்டையில் திளைக்கின்றார். ஈறிலா ஈசனார் மாறிலா அன்பின் திருநாமம் கண்ணப்பர்.

பெரிய புராணத்தின் ஒரு தனிச்சிறப்புப் பற்றிய செய்தியைக் கூறி என்னுரையை நிறைவு செய்கிறேன். பெரிய புராண அவதாரத்திற்குப் பிறகு தேவாரப் பாடல்களைப் பெரிய புராண உதவியின்றி கற்க முடியாது. கானடா நாட்டில் பிறந்து, இங்கிலாந்தில் குடியேறி, தமிழால் ஈர்க்கப்பட்டு, பத்தொன்பது வயதில் தமிழ்நாட்டிற்கு வந்து, பல காலம் இங்கு வாழ்ந்து, சைவ சித்தாந்தம் பயின்று, திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் புலவர் போப் ஐயர். அவர் கூறுவது யாதெனில் சைவ சித்தாந்தம் அறியார் திருவெம்பாவையின் அந்தரங்கத்தை அறியவே முடியாது.

இன்று நம்மிடையே ஒரு பிரெஞ்சு நாட்டு அறிஞர் உளர். பிரான்சு நாட்டில் பிறந்து, செந்தமிழ்த் தென் புதுவைக்கு வந்து, அங்கு தங்கி தமிழ் பயின்று, திருமுறைகளை ஓதி மகிழும் அன்பர் அவர். அவர் பெயர் ஃப்ரான்ஸிஸ் குரோ என்பதாம். பண்டித வித்துவான் தி.வே.கோபாலையர் பதிப்பித்த திருஞான சம்பந்தர் தேவாரத்திற்கு ஒருமுன்னுரை வரைந்துள்ளார். அது பிரெஞ்சு மொழியில் உள்ளது.

அதற்கான அற்புத ஆங்கில ஆக்கமும் அந்நூலில் இணைக்கப்பட்டிருக்கின்றது. அதிலிருந்து ஒரு பகுதியைக் கீழே வரைந்து இவ்வுரையை நிறைவு செய்கிறேன்.

“பெரியபுராணம் என்பது ஒரு தன்னிகரற்ற நினைவுச் சின்னம். அதனுடைய பன்முகத்த நுண்மாண் நுழைபுலம் இந்தியச் சான்றாண்மையின் சிகரத்தை எட்டிப் பிடித்திருக்கிறது. இதில் அற்புதக் கிரந்தங்கள் நேர்த்தியாக நினைவூட்டப் பட்டிருக்கின்றன. மேலும் புராணக் காதைகள், உண்மை நிகழ்ச்சிகள், பாத்திரப் படைப்புகள் ஆகிய அனைத்துமே ஒரு புனிதமான பணிக்கென்று பயன்படுத்தப் பட்டுள்ளன. தேவாரப் பாடல்களைத் தம் பாக்களின் இழையாகவும் அவையிற்றினின்றும் சற்றும் பிறழாமல் சேக்கிழார் அடிகள் பயன்கொண்டிருப்பது அவருடைய வலிமையைக் காட்டுகின்றது. இவ்வாறு, பல்வேறு இழைகளின் ஊடு வரலாறு, புராணக் காதைகள், புனைவு ஆகியவை ஊடு இழைகளாகப் படர்ந்து உள்ளன. முடிவாக, உன்னத உண்மை, தேவாரப் பாடல்களின் கருத்தோட்டம் என்பன பின்னிப் பிணைந்து, பிரிக்க முடியாதபடி சேக்கிழார் அடிகளின் படைப்பில் படர்ந்திருக்கின்றன. அடிகள் முற்றுமாகத் தேவாரத்தில் தோய்ந்து அத்துவிதப் பட்டிருக்கிறார். சேக்கிழார் அடிகளுக்குப் பின்னர் வந்த அனைவருமே தேவாரப் பனுவல்களை அவர் காட்டிய வழியே தான் அறிய முடியும்.”

சேக்கிழார் அடிகள் சென்னி தீண்டும் சிவன் சேவடி போற்றி, போற்றி!

பின்னிணைப்பு

பெரியபுராணப் பெண்டிர் போற்றிக் கலிவெண்பா

வே.இரமணன்

அறிமுகவுரை

"ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன், அன்புருகேன்,
பூமாலை புனைந்தேத்தேன், புகழ்ந்துரையேன், புத்தேளிர்
கோமான்! நின் திருக்கோயில் தூகேன், மெழுகேன், கூத்தாடேன்,
சாமாறே விரைகின்றேன், சதுராலே சார்வானே!"

என்ற திருவாசக வரிகள் பெரியபுராணப் பெண்டிரைக் குறிப்பால் உணர்த்துவதாக நான் அறிகின்றேன்.

ஆமாறு (இயன்ற வகையால், பரசமயிகள் நாப்பணிருந்து) அகங்குழைந்து அன்பால் உருகியவர் மானியார்; பூமாலை புனைந்தவர் சங்கிலியார்; புகழ்ந்துரைத்தவர் பேயார்; திருக்கோயிலைத் தூகி மெழுக்கியவர் திலகவதியார்; திருமுன் கூத்தாடியவர் பரவையார்; இங்ஙனம் யாதொரு சதுரையும் பற்றாது சாமாறு விரைகின்ற என் போலிகட்கு வழிதான் யாதோ? என்று வெருவுற்றிருந்த எனக்குத் திருவருளால், குருநாதரை அடியொற்றி இப்பெண்டிர் அனைவரையும் போற்றவேண்டும் என்ற பேராசை உண்டாயிற்று. அதனைத் திருவொற்றியூர் அம்மை தன் பேரருள் நிறைவேற்றித் தந்தது - இக்கலிவெண்பாவின் வடிவில். இவ்வளவில், முன்னதாகப் பாடலை ஒருமுறை படித்துவிட்டுத் தொடர்ந்து இவ்வுரையைப் படிக்குமாறு வேண்டுகிறேன்.

திருத்தொண்டத்தொகையில் கண்டுள்ள வரிசைப்படி பெரியபுராணம், நாயன்மார் சரிதங்களைப் பாடுகின்றது. அதுபோலவே பெரியபுராணத்தில் இப்பெண்டிர் தோன்றும் வரிசைப்படியே கலிவெண்பாவில் துதிக்கப்பட்டுள்ளனர். எடுத்துக்காட்ட, அப்பூதி அடிகளாரின் துணைவியார் மற்றும் மங்கையர்க்கரசியார் ஆகிய இருவரும் அப்பரடிகள் புராணத்திலேயே

பேசப்பட்டுவிடுவதால், திலகவதியாரைத் தொடர்ந்து இவர்கள் போற்றப்பட்டுவிடுகின்றனர். பெண்டிர் யாரையும் விட்டுவிடாமல் இருக்கவும், பெரியபுராணத்தைத் தொடர்ந்து படிக்கும் பாவனை ஏற்படவும் இவ்வரிசை புராணத்துள் போற்றப்படாமல், ஏயர்கோன் புராணத்துள் அவர் தோன்றும் இடத்தில் துதிக்கப்பட்டுள்ளார். பாடலில் இவர் போற்றப்பட்டமைக்கான காரணத்தை நோக்க இங்ஙனம் வைத்தமையின் பொருத்தம் விளங்கும். கஞ்சாறர் புராணத்துள் இவர் போற்றப்படவில்லை யாயினும், குறிக்கப்பட்டுள்ளார்.

உலகன்னையாகிய திருவருட்சத்தியார் கலிவெண்பாவின் முதல், இடை, கடைகளில் குறிக்கப்பட்டு, இடையில் (திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில்) துதிக்கப்படுகிறார்; இவரைச் சேர்த்து எண்ணாமல், இவர் வடிவமாகவே துதிக்கப்படும் மானுடப் பெண்டிரின் எண்ணிக்கை 51 ஆகும். தனிப்பெண்களே இங்ஙனம் துதிக்கப்படுகின்றனர். பரவை நாச்சியாரின் தோழிப் பெண்கள் 'சால நுடங்கிடையார் கூற' என்ற இடத்தும், அரசுறுப்பாகச் சேரமானுக்கு அமைந்த 'தேவிமார்' உள்ளிட்ட ஏனைய குழுப்பெண்கள் "மிக்குவளர் தோகை விரிவடிவாய்" என்ற இடத்தும் குறிக்கப்படுகின்றனர். தனிப் பெண்டிருள் பெரியபுராணத்துள் பெயர் குறிக்கப்பெறும் பெண்கள், தத்தை நீங்கலாக, இங்கும் பெயர் குறிக்கப்படுகின்றனர். தந்தையின் புகழ் போற்றப்படுவதால் அவர் பெயர் ஒளிந்ததோ, அறியேன். பன்னலமும் உடையோராயினும், ஒவ்வோர் பெண்ணிடத்தும் ஒவ்வோர் நலமே பாராட்டப் படுகின்றது. இவருள் சிலர் திருவடி துதிக்கப்படுகின்றது (அநிந்திதை, மனுவேந்தன் மனைவி, சடங்கவி மகள், பரவை, இயற்பகை மனைவியார்) ஏனையோர் தவம், புண்ணியம், தகவு, நிறை முதலிய நலன்கள் போற்றப்படுகின்றன. முந்தை உணர்வு குன்றாமல் மண்ணில் பிறக்க உள்ளமையால் அநிந்திதையாரின் பாத 'இணை' துதிக்கப்படுகின்றது. இதனொடு பொருந்த, சங்கிலியாரின் பழ அடிமை போற்றப்படுகின்றது. திருத்தொண்டரால் ஒறுக்கப்பட்டுத் தம் குற்றத்தின் நீங்கிய பெண்டிரும் (கலிக்கம்பன் மனைவி, கழற்சிங்கர் தேவி) போற்றப்படுகின்றார்; திருத்தொண்டரின் திருக்கண்நோக்கத்துள் அகப்பட்டோரும் போற்றப்படுகின்றனர் (மூலன் என்ற இடையனின் மனைவி). தேவராட்டி மட்டும் விடப்பட்டுள்ளாள்,

"தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலு
ம்மாறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின"

என்ற மறைமொழிக் கேற்பத் திண்ணனின் தேவுமாலைத் தீர்த்து உலகியலுக்குத் திருப்ப முயன்றமையும், காடுபலி ஊட்டும் முகத்தான் சிறு தெய்வ வணக்கஞ் செய்தமையும், போற்றற்குரியன அல்ல என்பதால் மூலன் மனைவியின் அறியாமை துதிக்கப்பட்டமை போலத் தேவராட்டியின் தோல்வி துதிக்கப்படல் ஆகாது. ஆயினும் 'அடங்கலும்' ஈசன் திருவுள்ளத்திற்கு ஏற்பவே அமையும் என்ற நியதிப்படி தேவராட்டியும் 'தோகை' என்ற சொல்லால் குறிக்கப்பட்டதாகக் கொள்ளலாம்; தோகையுடன் சேர்ந்தே கரும்பின் வடிவம்; ஆயின், தோகையில் தித்திப்பு இல்லை. பெண்டிர் அனைவரும் இறைவியின் வடிவம் என்ற மார்க்கண்டேய புராணக் கருத்துடன் முரண்படாமையும் காண்க. கரும்பின் (அம்மையின்) அணி உருவாகிய ஐம்பத்தொருவரும் ஒவ்வோர் காரணம் பற்றிப் போற்றப்பட்டுள்ளனர். இவருள்,

1. மனைவி இன்றிச் சோமயாகம் வேட்க முடியாது என்பதாலும், திரு அம்பரில் சோமாசி மாறனாரின் மனைவியார்க்குத் திருவுருவம் வைத்துத் திருவிழா எடுக்கப்படுவதாலும், பெரிபுராணத்துள் இவரை நேரிடையாகக் குறிக்காவிடினும், ஊகத்தால் இவரைக் கலிவெண்பாவுள் கொண்டுள்ளோம்.

2. இங்ஙனமே சிறப்புலியார் அங்கிவளர்த்தமை சிறப்பாகப் புராணத்துள் பேசப்படுவதாலும், திரு ஆக்கூர்த் தலவரலாறு மரபு பற்றியும் சிறப்புலியாரின் மனைவியாரையும் துதித்துள்ளோம்.

3. காழிக் கணநாதர் அன்பு நிலவும் மனைவாழ்வினர் என்று புராணத்துள் காணப்படுவதாலும், அலகிலாத் தொண்டர்க்கு அறிவளித்த அவர், தம் இல்லத் துணையைக் கொண்டே பெண் அடியார்களைப் பல்வகைத் தொண்டில் ஈடுபடுத்தி இருப்பார் என்ற ஊகத்தாலும் காழிக் கணநாதனின் காதல் துணையும் போற்றப்படுகின்றனர்.

4. பண்டை நாளிலும் அந்தணர் அனைவரும் அக்னிஹோத்ரிகள் அல்லர்; சிறப்புலியாரைச் சிறப்பித்ததுபோல்

முருகனை 'அங்கிவேட்டார்' என்று சிறப்பிக்கவில்லை. ஆளுடைய பிள்ளையாரின் திருமணத்தில் திருவருட் சோதியில் நம்பாண்டார் நம்பி உள்ளிட்டோர் தத்தம் மனைவியருடன் புகுந்தமை பேசப்படுகிறது. அக்னிஹோத்ரிகள் எங்குச் சென்றாலும் மனைவியுடன் அக்னியையும் எடுத்துச் செல்வது விதி. இவ்விதிக்கு இயைய நீல நக்கர் போன்றோரின் மனைவியர் இன்றியமையாமை பற்றித் திருமணத்திற்கு வந்திருந்தனர். இங்ஙனமன்றி, முன்செய் புண்ணியம் ஒன்றே காரணமாக முருகனின் மனைவி வந்திருந்தமையால், அவர்தம் புண்ணியம் போற்றப்படுகின்றது.

5. திருத்தொண்டருள் ஏனையோரில் பெரும்பாலாரும் (புகழ்ச்சோழர், புகழ்த்துணை முதலானோர்) இல்லறத்தாரே என்றாலும் அவர்தம் மனைவியார் பெரியபுராணத்துள் நேராகக் குறிக்கப்படாமையால் கலிவெண்பாவிலும் "மிக்குவளர் தோகை விரிவடிவாய்" என்ற தொடரில் அவர்களைக் குறிப்பாகவே காண வேண்டும். நிற்க.

பெரியபுராணப் பெண்டிரைப் பிரித்துத் தனியாகப் போற்றுதல் 'திருத்தொண்டத் தொகை' என்ற மரபை மீறிய செயல் ஆகாதோ? எனின் ஆகாது. வினைப்பற்றின் வேரைத் தங்கள் முனைப்பின்றியே அவர்கள் எறிந்த வீரமும், அவர்கள் பெண்மையுமே இங்குப் போற்றப்படுவதால் திருத் தொண்டர்களிடமிருந்து அவர்களைப் பிரித்து எண்ணிப் போற்றியதாகக் கருத ஒண்ணாது.

பெண்ணைத் துன்புறுத்துவதும், மட்டமாக எண்ணுவதும், வெறும் போகப் பொருளாகவே மதிப்பதும் ஆகிய குற்றங்களை, இக்கலிவெண்பாவை நாடோறும் பாராயணஞ் செய்வதால், ஒருவர் களைந்து, எவ்விடத்தும், எப்பொருளிலும் நீக்கமறச் சத்தியும் சிவமுமாய் உள்ள பரதத்துவத்தின் திருவருளுக்குப் பாத்திரமாகலாம் என்று நான் நம்புகிறேன்.

பெரியபுராணப் பெண்டிர் போற்றிக் கலிவெண்பா

- வே.இரமணன்

பாயிரம்

பெரிய புராணத்துப் பெண்டிர்கலி வெண்பா
உரிய வகையால் உணர்த்தி - இரமணற்(கு)
ஆதிபுரி என்றும் அகலா(து) அருள் பொழியும்
மாதரசே நல்கும் மனத்து.

○

கோள் உடை யாரைக் குருவடி வாகி வந்(து)
ஆள்உடை நாயகி அம்புயத் - தாளிடை

அன்பமர் அந்தமில் சீராள் அநிந்திதை
இன்பமர் பாத இணைபோற்றி! - துன்பமர்

பாசப் பிணிபோக்கும் வாசக் குழல்மாலைத்
தேசக் கமலினியார் தேன்போற்றி! - மாசில்

மனுவேந்தன் முத்தை மணிவயிற்றால் ஈன்ற
கனகத்தின் காற்பவழம் போற்றி! - தினகரனாய்த்

தென்திசைத் தோன்றும் சிவனார் திருநிழல்வந் து)
ஒன்(று) இசை ஞானி உதரப்பேர் - மன்றிசைகூர்

பாதரசம் வேய்ந்த பளிங்கின் பயன்போற்றி!
மாதரசாய் மன்றல் தடைப்படினும் - மேதினியில்

சுந்தரனை எண்ணிச் சுகமாய்ச் சிவலோகம்
முந்துறுசன் மார்க்க முதல்காட்டும் - சந்தச்

சடங்கவியார் தையல் சரண்போற்றி! சால
நுடங்கிடையார் கூற நுணங்கி - அடங்காத

ஆசையால் 'எம்பிரான் அன்பரோ!' என்றயரும்
பாசப் பரவை பதம்போற்றி! - ஈசன்

திருநீல கண்டத் திருநாமம், காமக்
கருநீலம் கண்டித்தல் காட்ட - வருநீல

கண்டமன் னாள்புலவிச் சூள்போற்றி! கம்பித்துட்
கொண்டு தெளிந்து குருமொழி ஏற்(று) - 'அண்டர்பிரான்,

'அஞ்சற்க!' என்றாள் அடிபோற்றி! ஆரிருளில்
எஞ்சாதே ஈசன் அடியாரைச் - செஞ்சாலி

வித்தாலும் கைம்மை வினையாலும் வெவ்வேறாய்
மெய்த்தாயின் ஊட்ட விரைந்தாளின் - சித்தம்

இருந்த நிலைபோற்றி! தத்தனைஒத்(து) ஈசன்
புரிந்தேவ அந்தப் புரம்போம் - மருந்தின்

பொறைபோற்றி! நல்லூர்ப் புனிதனடி போற்றி
இறையோ(டு) இனியதுலை ஏறிச் - சிறகடித்துச்

சென்று சிவனுலகம் சேர்ந்தாள் செயல்போற்றி!
பின்றைநாள் பிஞ்ஞகனார் கண்மலரோ(டு) - ஒன்றலாம்

பூமுத்தம் வாய்முத்தம் பூண்டாள் புகழ்போற்றி!
ஏமுற்ற மங்மல நூல் தாலிகொடுத் - தே, முற்ற

நெற்கொள்ள நேர்ந்தாள் நிறைபோற்றி! நெய்யாட்டிப்
பொற்குன்ற வில்லார் புனைநூலாய் - மற்குன்றில்

மஞ்சுதழைத் தன்ன மலர்க்கூந்தல் தந்துதவும்
பிஞ்சுயிர்த்தாள் பெண்மை நலம் போற்றி! - அஞ்சேந்தி

அன்றுதடுத் தன்னமெலாம் சிந்தி அயருங்கால்
மென்றுதின்னக் கேட்டாள் மிறைபோற்றி! - ஒன்றிஉளம்

கள்ளக்கம் பன்தழீஇக் ‘கச்சிவாழ் வார்க்குவரம்
‘விள்’ என்றாள் அன்னை விறல்போற்றி! - அள்ளூற்றே

அங்கணனைப் பாலாட்டி அந்தணனைக் காலோட்டும்
தங்கத்தைத் தந்த பவித்திரையார் - பொங்கு

தகப் போற்றி! தாவில் தயாதன்ம மூல
மகப்பெற்ற மாதினியார்ப் போற்றி! - மிகப் பற்றின்

நாவுக் கரசாக்கி நன்னீ றளித்தளித்த
சேவைத் திலகவதி சீர் போற்றி! - மூவா

மருந்தொத்தான் நஞ்சால் மடியப் ‘பெரியோர்
அருந்தத்தான் ஒவ்வார்’ என் றஞ்சி - விரைந்து, பாய்ப்

பெய்தருத்தப் புக்காள் பிழைபோற்றி! பேரமர்க்கண்
மைதிருத்து நல்லார் வளமதுரை - உய்திபெற

ஏடிட்டார் வைகையுள்; எண்ஆயி ரம்சமணும்
சாடிட்டார்; தென்னவனைச் சாய்நிமிரப் - பாடிட்டார்

ஆனாலும், ‘பிள்ளை’ என் றஞ்சி அகம்குழையும்
மானியார் தாயன்பின் மாண்போற்றி! - ஊனார்

வனப்புதறும் யோக வளம்பெற்ற பேயார்
முனைப்பின்றி முன்கனிகொண் டேக - நினைப்பித்த

ஈசரருள் போற்றி! ‘இவர்தெய்வம்’ - என்றுதொழும்
மாசில் வணிகன் மனை போற்றி! - தேசத்துள்

அம்மை திருநாமம் ஆதி இடப்பெற்ற
நன்மைப் புனிதவதி தாள்போற்றி ! - ‘தம்மை

இளங்குழவி' என்றெண்ணி எச்சில் துமிந்தாள்
உளம்கிளர்ந்த ஓகையது போற்றி! - விளங்கவள்தன்

வேதிவலம் கொள்ளும் மத'கசூ ளாமணியார்
நாதவலம் போற்றி! நளிர்பூசை - நாதருக்குச்

செவ்வன் முடித்தமுது செய்துபள்ளி கொள்கென்றார்
எவ்வம்இல் சிந்தை இதம்போற்றி! - நவ்வியவர்

முத்திப்பால் ஊட்ட முகப்பார்க்(கு) அதன்முன்னர்
பத்திப்பால் ஊட்டும் பகவதியார் - ஒத்த

தவம்போற்றி! தண்ணார் தமிழ்விரகர் சார்பால்
பவம் போற்றும் பாச்சிலான் பெண்ணாய்- அவம்பாற்றப்

பெற்றாள் பெறல்போற்றி! பேர் அளியின் பாணரைப்
பெற்றதிருத் தாயர்உத ரம் போற்றி! - சுற்றமா

வள்ளலே நல்க மணங்கூர் வணிகமகள்
உள்ளல் உணர்த்தும் முறைபோற்றி! - ஒள் அழகை

ஈசன் அடியார் அருச்சனையால் ஈன்றசிவ
நேசர் மனையார் நிறைபோற்றி! - தேசம்

பிறந்தார் பெறும்பயனைப் பிள்ளைவாய்க் கேட்பப்
பிறந்த பூம் பாவை பேர் போற்றி! - நிறந்திகழும்

ஞானம்தன் கைபிடிக்க நன்றிபுரி நற்றவத்தின்
தேனுந்து பூவின் திறல்போற்றி! - ஆனந்தப்

பாலால் அலம்பி, வெண் பட்டால் துடைத்(து) அரனார்
சீல மகனார் திருவடியைக் - கோலம்செய்

நம்பாண்டார் நம்பி மனையார் நலம்போற்றி!
வம்பாண்டார் வாயில் வகுப்ப, நீள் - அன்பாண்ட

கண்ணி, புகலூர்த் திருமுருகன் கைகோக்கும்
புண்ணியம் செய்புண் ணியம்போற்றி! - பண்ணமர் சொல்

சிங்கடியார் சேரும் தொடை போற்றி! மற்றொன்றில்
மங்கை வனப்பகையார் மாண் போற்றி! - தங்கிப்

புவியில் சிவலோகப் புற்றமுதைப் புன்கட்
செவியில் சிலநாள் ஆ ரூரன் - தவியா

அயில வழிவைத்த சங்கிலி ஆ ராமை
பயிலும் பழ அடிமை போற்றி! - மயலற்றே

'ஏற்ற வகையால் கொடும்' என் றிசை தாயர்
தேற்றமது போற்றி! திகைத்து, வாழ் - வாற்றலராய்ப்

போகத் துணிந்தும் புலவர் பிரான் ஒல்லை
ஏக எதிரேற்ற ஏயர்கோன் - பாகின்

பதம்சார் அறப்பாங்கு போற்றி! பசுக்கட்(கு)
இதம்சார் இடையர் அருட்கண் - முதம் சேர

ஆஉற்ற இன்னலும் அற்றாள், அரும் சுற்ற
மா மற்றும் இல்லாள் மயல்போற்றி! - தேமுற்ற

சோலைத் திருஅம்பர்ச் சோமயா கத்தலைவி
மாலைக் குழற்பரவை மாண்தோழி, - மேலைச்

சிவம்சார்ந்தார் யாரா கினும்தாழ்ந்தார்ச் சேர்ந்த
தவம் சார்ந்தாள் தன்சரணம் போற்றி! - அவம் சாரா(து)

'அங்கணர்' என்(று) அன்பர்க்(கு) அமுதூட்டி நாள்தோறும்
அங்கிவளர்(து) அஞ்செழுத்தும் ஓதல் அறாத் - துங்கச்

சிறப்புலியார் சீர்மனையார் சேவடிகள் போற்றி!
'அறப்பெற்றேன் நாதன்உயிர்' என்றே - பெறற்கரிய

மைந்தன் சமைத்தளித்தும் மாதவரை ஊட்ட, அம்
மைந்தனையே மீளழைக்க வல்லாராய்ச் - சிந்தை

தலைவர் பணிநின்ற வெண்காட்டு நங்கை
தலைமைத் தனித்தொண்டு போற்றி! - மலைவிலரை

முன்வர வேற்று முகமன் மொழிந்(து) 'எண்ணப்
பின் வரும்' என்றுடையார் பேரிடர் தீர் - மின்வருமெண்

சந்தனமாம் தையல் கடன் ஆற்றும் சால்பதனால்
உய்ந்த(து) உணர்த்தும் நெறி போற்றி! - வந்த

அலகிலாத் தொண்டர்க்(கு) அறிவளித்தே அன்பின்
நிலவு மனைவாய்மை நேர்ந்த - உலகு புகழ்

காழிக் கணநாதன் காதல் துணைபோற்றி!
வீழும் அடியார் திருவேடம் - வாழி,

கலிக்கம்பன் கைவாளால் கற்றுத்தன் குற்றம்
விலக்கி விடுபட்டாள் போற்றி! - ஒலிக்கும்

கடல் ஓவா(து) ஒற்றிக் கடவுட்குத் தொண்டு
விடல் ஆகா(து) என்று தனை விற்க - உடனாம்

கலியர் கலிதீர் களிபோற்றி! சரல
மெலியர் மடவார் சிலகால்; - வலிய

இருவர்தண் டத்தால் இதறிந்து தேற
உரியர் பெறும் உறுதி போற்றி! - அரியதிருக்

கூத்தர் கொடுத்தருளும் கோச்செங்கண் சிங்கத்தைக்
காத்துயிர்த்துத் தந்த கமலவதி - ஏத்தும்

மறைவாய்மைத் தாய்மை மகிமைக்குச் சான்றாய்ப்
பறைய வரும்பரிசு போற்றி! - இறையில்

மகவிழந்த தன்துயரம் மாற்றி, மலர்ந்தே
தகவுடையார் தாளில் பணியும் - புகழாள்

'அடங்கலும் ஈசன் அருள்' என்(று) அறிந்தாட்(கு)
அடங்கலும் நன்றாதல் போற்றி! - விடங்கொள்

வினைப்பற்றின் வேர்அறுக்கும் மெல்இயலார் வீரம்
முனைப்(பு) அற்று மூண்டதிறம் போற்றி! - எனப் போற்ற,
140

அக்கரம்போல் ஐம்பத் தொருவர் அணி உருவாய்
மிக்கு வளர் தோகை விரிவடிவாய் - முக்கண்

திருஒற்றித் தித்திக்கும் செங்கரும்பே நல்கும்
ஒருபற்(று) இலாத உணர்வு 141

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

திருவாவடுதுறைப் புராணம்	250.00
இலக்கிய இதழ்கள்	110.00
இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் - தொகுதி 3	60.00
மகாவித்துவான் ரா. ராகவையங்கார்	30.00
சித்தாந்தச்செல்வர் க. வெள்ளை வாரணனார்	25.00
தமிழில் பிற துறைக் கோட்பாட்டாய்வுகள்	25.00
வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை	25.00
இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி	35.00
தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின்தமிழ்த்தொண்டும்மொழியியல்பங்களிப்பும்	25.00
இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும்	40.00
பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும்	80.00
தமிழெனப்படுவது	115.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியியல்	105.00
வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்	70.00
தொல்லியல் நோக்கில் சங்ககாலம்	45.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி.500 வரை)	45.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி.501 - கி.பி.900)	70.00
பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்	35.00
திருமணம் செல்வக்கேசவராய முதலியார்	30.00
அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார்	55.00
சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார்	40.00
மூதறிஞர் மு. இராகவையங்கார்	40.00
ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு	30.00
தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை	50.00
அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா	50.00
ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார்	45.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1	80.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2	85.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3	95.00
திராவிட மொழி இலக்கியங்கள்	180.00
நாவல்கலையியல்	50.00
சங்கரநமச்சிவாயர்	60.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	40.00
அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி	60.00
சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்	30.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் இலக்கியம்	100.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00

539 **பெரியபுராணம் திருமுறைகளின் கவசம்** ***55.00***